
# 2003 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 9</u>

**18.01.2003** பிராமண ஜென்மத்தின் நினைவுகள் மூலமாக சக்திசாலியாகி எல்லோரையும் சக்திசாலியாக்குங்கள்!

**13.02.2003** தற்காலத்தில் தனது இரக்கமுள்ள மற்றும் வள்ளல் தன்மையான சொரூபத்தை வெளிப்படுத்துங்கள்!

**28.02.2003** சேவையின் கூடவே தற்போது சம்பன்னமாவதற்கான (முழுமை) திட்டத்தையும் தீட்டுங்கள், கர்மாதீத் நிலையை முழு மூச்சாக இருங்கள்! (சிவ ஜெயந்தி)

**17.03.2003** இந்த ஆண்டு ஸ்வமானில் (சுய ஆன்மீக கௌரவம்) இருக்க வேண்டும். மரியாதை கொடுக்க வேண்டும், அனைவருக்கும் உதவி செய்பவராக ஆக வேண்டும் மேலும் சக்திசாலி ஆக்க வேண்டும்!

**17.10.2003** முழு ஆண்டும் சந்துஷ்டமணியாகி எப்பொழுதும் திருப்தியாக இருக்க வேண்டும். அனைவரையும் திருப்தி படுத்த வேண்டும்!

**15.11.2003** மனதை ஒரு நிலைப்படுத்தி, ஏகாக்ரதா சக்தியின் (ஒருமுகப்படுத்தும்) மூலம் பரிஸ்தா ஸ்திதியினை அனுபவம் செய்க!

**30.11.2003** சீசன் நான்கு பாடங்களின் அனுபவத்தின் ஆதாரத்தில் அதிகாரியாகி பிரச்சினைகளை சமாதானமாக மாற்றுங்கள்!

**15.12.2003** பாபாவை பிரத்யட்சம் (வெளிப்படுத்த) செய்ய சாதாரணத்தன்மையை அலௌகீகத்தில் மாற்றம் செய்து தரிசனமளிக்கும் மூர்த்தி ஆகுங்கள்!

**31.12.2003** இந்த ஆண்டு நிமித்தம் மற்றும் பணிவுடையவராகி, சேமிப்புக் கணக்கை அதிகரியுங்கள் மேலும் அகண்ட மகாதானி ஆகுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## 18.01.2003 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண ஜென்மத்தின் நினைவுகள் மூலமாக சக்திசாலியாகி எல்லோரையும் சக்திசாலியாக்குங்கள்!

இன்று நாலா பக்கங்களிலும் சிநேகமுள்ள எல்லா குழந்தைகளின், சிநேகமுடன் கூடிய இனிமையிலும் இனிமையான நினைவுகள், வித விதமான பேச்சுக்கள், சிநேக முத்துக்களாலான மாலைகள், பாப்தாதாவிடம் அமிர்தவேளைக்கு முன்பே வந்து சேர்ந்து விட்டது. குழந்தைகளின் சிநேகம் (அன்பு) பாப்தாதாவையும் கூட, சிநேக கடல் அடக்கி கொள்கிறது. ஒவ்வொரு குழந்தையிடமும் சிநேக சக்தி, பிரிக்க முடியாத அளவுக்கு உறுதியாக இருப்பதைப் பார்த்தார். இந்த சிநேக சக்தி ஒவ்வொரு குழந்தையையும் சகஜயோகி ஆக்கிக் கொண்டிருக்கிறது. சிநேகத்தின் ஆதாரத்தில், எல்லா ஆகர்ஷணங்களிலிருந்தும் (கவர்ச்சி) விலகியிருந்து, முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவிடமிருந்து அல்லது விசேஷ ஆத்மாக்களிடமிருந்து (நியாரா மற்றும் பியாரா) விலகிய நிலையின் அன்பான சிநேகத்தின் அனுபவம் இல்லை என்று சொல்லக்கூடிய குழந்தை ஒருவரைக் கூட பார்க்கவில்லை. ஒவ்வொரு பிராமண ஆத்மாவுக்கும் பிராமண வாழ்கை, ஆதி கால சிநேக சக்தியின் ஆதாரத்திலேயே கிடைத்திருக்கிறது. பிராமண வாழ்க்கையில், இந்த சிநேக சக்தி, வரதானமாகி முன்னேறச் செய்து கொண்டிருக்கிறது. ஆதலால் இந்த நாள் விசேஷமாக தந்தை மற்றும் குழந்தைகளுக்கிடையே உள்ள சிநேகத்தின் நாளாகும். ஒவ்வொருவரும், தங்களுடைய உள்ளத்தின் சிநேக முத்துக்களாலான மாலைகள் அதிக அளவில் பாப்தாதாவுக்கு அணிவித்தார்கள் மேலும் சக்திகள் இன்றைய தினம் அமிழ்ந்திருக்கின்றன ஆனால் சிநேக சக்தி வெளிப்படையாகவே தெரிகிறது. பாப்தாதாவும் கூட குழந்தைகளினுடைய, சிநேக கடலில், அன்பில் மூழ்கியிருக்கின்றார்.

## 2003 அவ்யக்த முரளி

இன்றைய தினத்தை நினைவு நாள் என்று கூறுகிறீர்கள் நினைவு நாள் பிரம்மாபாபாவின் நினைவு நாள் மட்டுமல்ல, பாப்தாதா பிராமண ஜென்மம் எடுத்தவுடனேயே ஆதி முதல் இன்று வரையிலும் என்னென்ன நினைவுகளை நினைவு படுத்தியிருக்கின்றார் என்பதை இன்றும் சதா காலமும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார். இந்த நினைவுகள் என்னும் மாலையை நினைவு செய்தால், மிகப் பெரிய மாலையாகி விடும். எல்லாவற்றிலும் முதலாவது நினைவு எல்லோருக்கும் என்ன கிடைத்தது? முதலாவது பாடம் நினைவிருக்கிறதல்லவா? நான் யார்? இந்த நினைவு தான் புதிய ஜென்மம் கொடுத்தது. (உள்ளுணர்வு) விருத்தி, திருஷ்டி, ஸ்மிருதியில் மாற்றம் ஏற்படுத்தியது. இந்த மாதிரியான எண்ணங்கள் நினைவுக்கு வந்ததுமே ஆன்மீக குஷியின் பிரகாசம் கண்களில், முகத்தில் வந்து விடுகிறது. நீங்கள் எண்ணங்களை நினைவு செய்கிறீர்கள் ஆனால் பக்தர்கள் மாலையை ஜபிக்கிறார்கள். ஒரு நினைவு கூட அமிர்தவேளையிலிருந்து கர்மயோகியாகும் வரையிலும், அடிக்கடி நினைவிலிருந்தால், நினைவு சக்தி சொரூபமாக்கி விடுகிறது. ஏனென்றால், எப்படி நினைவோ, அது இயல்பாகவே சக்தியாகி விடுகிறது. ஆதலால் இன்றைய நினைவு நாளுடன் கூடவே, சக்தியளிக்கும் நாள் என்றும் சொல்லப்படுகிறது. பிரம்மாபாபா எதிரில் வந்ததுமே, தந்தையின் திருஷ்டி பட்டதுமே, ஆத்மாக்களில் சக்தி வந்து விடுகிறது. எல்லோருக்கும் அனுபவம் இருக்கிறது. சாகார (ஸ்தூலம்) ரூபத்தில் பார்க்கும் போதும், அவ்யக்த ரூபத்தின் பாலனையிலிருக்கும் போதும், முதலில் அவ்யக்த ஸ்திதியை அனுபவம் செய்கிறீர்கள். ஒரு நொடியில் உள்ளத்திலிருந்து பாப்தாதா என்று சொன்னதுமே சக்தி இயல்பாகவே வந்து விடுகிறது. ஆதலால் அந்த சக்தியுள்ள ஆத்மாக்களாகி இருப்பவர்கள் இப்போது மற்ற ஆத்மாக்களையும் தனது சக்தியின் மூலம் சக்திசாலியாக்குங்கள்? ஊக்கம் உள்ளதா? சக்தியற்றவர்களை சக்திசாலி ஆக்க வேண்டுமல்லவா? பாப்தாதா நாலா பக்கங்களிலும், பலவீனமான ஆத்மாக்களை சக்திசாலியாக்குவதற்கான ஆர்வம் நன்றாக இருப்பதை பார்த்தார்.

சிவராத்திரி புரோகிராம், விமரிசையாக தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள். எல்லோருக்கும் ஆர்வம் இருக்கிறதல்லவா? இருக்கிறதா, ஆர்வம்? ஆர்வம் இருந்தால் போதும், இந்த

சிவராத்திரியில், அற்புதத்தை நிகழ்த்திக் காட்டுவார்கள். யாருக்கு ஆர்வம் இருக்கிறதோ, அவர்கள் கை உயர்த்துங்கள். இந்த அற்புதத்தின் மூலமாக, பிரச்சினைகள் தீர்ந்துபோய் விடும். ஆஹா! சக்திசாலி ஆத்மாக்களே, ஆஹா! என்ற வெற்றி முழக்கம் உண்டாகட்டும். எல்லா ஜோன்களிலும் (மண்டலம்) புரோகிராம் தயார் செய்திருக்கிறார்கள் அல்லவா? பஞ்சாபும் கூட செய்திருக்கிறதல்லவா? நல்லது. தவித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள், தாகத்துடன் இருக்கும் ஆத்மாக்கள், அசாந்தியிலுள்ள ஆத்மாக்கள், இப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு ஆசி (அஞ்சலி) வழங்குங்கள். இன்னும் உங்களுடைய சகோதர, சகோதரிகள் இருக்கின்றார்கள். ஆதலால் உங்களுடைய சகோதரர்கள் மீது உங்களுடைய சகோதரிகள் மீது, இரக்கம் வருகிறதல்லவா? இந்தக் காலத்தில், ஆபத்தான நேரத்தில் பரமாத்மாவை நினைவு செய்வதைப் பார்க்கிறீர்கள்; ஆனால் சக்திகளை, தேவதைகளிலும் கூட கணேஷ் (விநாயகர்), ஹனுமான் மற்றும் இதர தேவதைகளையும் அதிகமாக நினைவு செய்கிறார்கள் என்றால் இவர்கள் யார்? நீங்கள் தானே? உங்களை தினந்தோறும் நினைவு செய்கிறார்கள். கிருபாளு, தயாளு, கருணைக் காட்டுங்கள் என்று கூக்குரல் இடுகிறார்கள். கொஞ்சம் சுகம், சாந்தியின் ஒரு துளி தாருங்கள். இவ்வாறு உங்களிடமிருந்து ஒரு துளிக்கு தாகமுடையவர்களாக இருக்கிறார்கள். ஆதலால் துன்பத்தில் இருக்கும், தாகத்தில் இருக்கும் ஆத்மாக்களின் குரல், ஹே, சக்திகளே! ஹே, தேவர்களே! கேட்கவில்லையா? என்கிறார்கள். கேட்கிறதா? பாப்தாதா எப்போது இந்தக் குரலைக் கேட்கின்றாரோ அப்போது சக்திகளின், தேவர்களின் நினைவு பாப்தாதாவுக்கு வருகிறது. ஆகவே, தாதிகள் நல்ல புரோகிராம்கள் செய்திருக்கிறார்கள். பாபாவுக்குப் பிரியமானதாக இருக்கிறது. நாளை முதல் நினைவு நாள் என்றால் சதா காலத்திற்கும் நினைவு நாள். இருந்தாலும், இன்றைய நாள் நினைவு மூலமாக எல்லா சக்திகளையும் பிராப்திகளையும் விசேஷமாக அடைந்திருக்கிறீர்கள். இனி நாளை முதல் சிவராத்திரி வரையிலும், பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளுக்கும் என்ன கூறுகின்றார் என்றால் இந்த விசேஷ தினத்தில் ஒரு லக்ஷியம் கொள்ள வேண்டும் அதாவது எவ்வளவு முடியுமோ, அந்த அளவுக்கு, ஆத்மாக்களுக்கு, மனம் மூலமாகவும், பேச்சின் மூலமாகவும் சம்மந்தம் மற்றும் தொடர்பில் இருப்பவர்களுக்கு எந்த ஒரு விதி மூலமாகவும், அவசியம் செய்தி சொல்ல வேண்டும். உங்களுடைய புகார்களை விட்டு

விடுங்கள். விநாஷம் எப்போது ஆகும் என்ற தேதி இன்னும் தெரியவில்லையே என்று குழந்தைகள் நினைக்கிறார்கள். இந்தப் புகாரை எந்த நேரத்திலும் தீர்க்க முடியும் ஆனால் உடனே செய்து விடமுடியாது. ஏனெனில் எங்களுக்கு இது வரை யாரும் செய்தி சொல்லவில்லையே என்ற புகார் யாரிடமிருந்தும் வராமலிருக்க வேண்டும். இல்லையேல் இவர்களு .டைய நிந்தனைக்கு ஆளாக நேரிடும். நாம் கூட ஏதோ கொஞ்சம் செய்கிறோம். இதன் காரணமாக ஆஹா, பிரபு என்று சொல்லும் அளவுக்குத்தான் இருக்கிறது. ஆகையால் அவர்களும் கொஞ்சம் ஆஸ்தி பெற்றுக் கொள்ளட்டும். அவர்களுக்கும் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். ஒரு துளி மூலமாகமாவது, அவர்களுடைய தாகத்தை தணியுங்கள். தாகமுள்ளவர்களுக்கு, ஒரு துளி கூட மிக்க மகத்துவம் உடையதாகி விடுகிறது. இந்த புரோகிராம் தானே! நாளை முதல் பாப்தாதாவும் கூட பச்சைக்கொடி அல்ல, முரசு கொட்டுவார். ஹே, திருப்தியான ஆத்மாக்களே! எல்லா ஆத்மாக்களுக்கும், செய்தி சொல்லுங்கள், செய்தி சொல்லுங்கள் என்று முரசொலி எழுப்புவார். குறைந்தபட்சம், சிவராத்தி அன்று தந்தையின் ஜென்ம தினத்தன்று எங்களுக்கு செய்தி கிடைத்து விட்டது என்று முக மகிழ்ச்சியோடு சொல்கின்ற மகிழ்ச்சி எனும் இனிப்பை வழங்குங்கள். இந்த தில்குஷ் (மனதிற்கு மகிழ்ச்சி தரும்) மிட்டாய் பற்றி எல்லோருக்கும் சொல்லுங்கள், சாப்பிடச் செய்யுங்கள். சாதாரண சிவராத்திரி கொண்டாட வேண்டாம். கொஞ்சம் அற்புதம் நிகழ்த்திக் காட்டுங்கள். ஆர்வம் உள்ளதா? முதல் லைனில் அமர்ந்திருப்பவர்களுக்கு இருக்கிறதா? நாலா பக்கமும் இந்தப் புகை பரவட்டும். சிவராத்திரிக்கு இவ்வளவு மகிமை இருக்கிறதா? என்றாவது குறைந்தபட்சம் புரிந்து கொள்ளட்டும். நம்முடைய தந்தையின் ஜென்ம தினம் என்பதை அறிந்து மகிழ்ச்சியுடன் கொண்டாடட்டும். நல்லது. எத்தனை பேர் இங்கே அமர்ந்திருக்கிறார்களோ, இவர்களெல்லாம் நாலா பக்கமும் அவரவர் தேசத்திற்கு, திரும்பிப் போகப் போகிறீர்கள். போகத்தான் வேண்டும் ஆனால் இங்கு எத்தனை பேர் இருக்கிறார்கள் (12-13 ஆயிரம் அமர்ந்திருக்கிறார்கள்) நல்லது. யாரெல்லாம் அமர்ந்திருக்கிறார்களோ, மதுபன் வாசிகளும் கூட கேட்பார்கள். நாங்கள் எங்கே செய்தி சொல்ல வேண்டும் என்று, இந்தக் காலத்தில் மதுபனுக்கு அருகாமையிலும் கிராமங்கள் நிறைய இருக்கின்றன. மலைக்கு மேலேயும், கீழேயும் கூட நிறைய ஜனங்கள் இருக்கிறார்கள்.

குறைந்தபட்சம், ஒரு ஆத்மாவையாவது தன்னுடையவராக்குங்கள். செய்தி நிறையப் பேருக்குச் சொல்லத்தான் வேண்டும் ஆனால் ஒரு ஆத்மாவாவது தன்னுயை ஆஸ்தியைப் பெறுவதற்கு லாயக்குடையவர்களாகச் (தகுதி) செய்யுங்கள். எல்லோரும் ஒருவர் இன்னொருவரை தயார் செய்தால் 9-லக்ஷம் முடிந்து விடும். சம்மதம் தானே! செய்வீர்களா? அல்லது பேசுவதோடு சரியா? சும்மா, கை உயர்த்தக் கூடாது, மனப்பூர்வமாகச் செய்ய வேண்டும். செய்ய வேண்டுமல்லவா? (நாராயணனிடம் கேட்கின்றார். (பிரம்மாபாபாவின் லௌகீகக்க குழந்தை) செய்ய வேண்டும் தானே? ஆகவே பாப்தாதா எதைச் சொன்னாரோ, அந்த 9-லக்ஷம் லிஸ்ட் இருக்க வேண்டும். இப்படி ஆகி விடுமல்லவா? ஆதலால் அடுத்து வரும் சீசனில் பாப்தாதா இந்த நல்ல செய்தியைக் கேட்க விரும்புகின்றார். 6-லக்ஷம் அல்ல, 9-லக்ஷம் ஆகி விட்டது என்ற நல்ல செய்தி. இதை விடவும் அதிகமாகி விட்டது என்றாலும் சரிதான். சக்திகள், டீச்சர்கள் எப்படி இருக்கிறீர்கள்? சௌகரியமாக இருக்கிறீர்களா? டீச்சர்களோ, கங்கணம் (வளையல்) தயார் செய்ய வேண்டும். பஞ்சாப் மற்றும் ராஜஸ்தானைச் சேர்ந்த டீச்சர்கள் கை உயர்த்துங்கள். டீச்சர்கள் நிறைய பேரை தயார் செய்ய முடியும் ஆனால் மற்றவர்களும் செய்யும் படியாக பிரேரணை கொடுக்க வேண்டும். நல்லது. டீச்சர்கள் எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்? ஒவ்வொருவரும் கூட 9-பேரை தயார் செய்தால், 9-லக்ஷம் ஆகி விடும். என்ன நினைக்கிறீர்கள்? அடுத்து வரும் சீசன் வரையிலும், இந்த நல்ல செய்தி கிடைக்குமல்லவா? ஆமாவா, நிர்வயர் (மதுபன் சீனியர் பிரதர்) சொல்லுங்கள். கிடைப்பார்களா? ஆகுமா? இது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. 6-லக்ஷம் இருக்கிறது. இன்னும் 3-லக்ஷம் வேண்டும் அவ்வளவு தான். ஆகி விடும். செய்து தான் ஆக வேண்டும் என்று தைரியம் வைத்தல் மட்டும் போதும். என்ன சொல்கிறீர்கள்? செய்யத்தான் வேண்டும் என்று சொல்லுங்கள். சங்கல்ப சக்தி, மிகப் பெரிய சக்தி. பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய சங்கல்பம் என்ன தான் செய்ய முடியாது! ஒவ்வொருவரும், தன்னுடைய சிரேஷ்ட சங்கல்பத்தை நினைவில் வைக்க வேண்டும்.

அமிர்த வேளையில் மெஜாரிட்டியினருக்கு, நினைவும், ஈஸ்வரிய பிராப்தி பற்றிய நஷாவும் மிக நன்றாக இருக்கிறது ஆனால் கர்மயோகி ஸ்திதியை அமிர்தவேளையில் இருக்கின்ற நஷாவோடு ஒப்பிட்டுப்

பார்க்கும்போது, வித்தியாசமாக இருக்கிறது. காரணமென்ன? கர்மம் செய்யும்போது ஆத்ம உணர்வு மற்றும் கர்ம உணர்வு இரண்டுமே இருக்கிறது. இதற்கான விதி என்னவென்றால், கர்மம் செய்யும்போது, நான் ஆத்மா, எப்படிப்பட்ட ஆத்மா, இதெல்லாம் தெரியும் விதவிதமான ஆத்மாக்களுக்கான ஸ்வமான் கிடைத்திருக்கிறது. இப்படிப்பட்ட ஆத்மா செய்விப்பவர் என்ற நிலையிலிருந்து இந்த கர்ம இந்திரியங்கள் மூலமாக கர்மம் செய்பவன். இந்த கர்மேந்திரியங்கள் வேலைக்காரர்கள் ஆனால் வேலைக்காரர் மூலமாக, கர்மம் செய்விக்கக்கூடிய, செய்விப்பவன், நியாரி (விலகியிருப்பவன்) லௌககீகத்திலும் கூட, டைரக்டர் தன்னுடைய கூட்டாளிகள் மூலம், நிமித்தமாக சேவை செய்பவர்கள் மூலமாக சேவை செய்விக்கிறார். எப்படிச் செய்ய வேண்டுமென்று வழிகாட்டுகின்றார். இப்படி கர்மம் செய்து கொண்டிருக்கும்போது, நான் டைரக்டர் என்பதை மறந்து விடுகின்றார். தன்னை செய்விக்கும் சக்திசாலி ஆத்மா என்பதும், இதை புரிந்து கொண்டு காரியங்களை செய்யுங்கள். இந்த ஆத்மா மற்றும் சரீரம், இவற்றில் ஒன்று செய்பவர் (சரீரம்), இன்னொன்று செய்விப்பவர் (ஆத்மா) -இந்த நினைவு அமிழ்ந்து போய்விடுகிறது. உங்கள் எல்லோருக்கும் பழைய சகோதரர்களுக்கும், தெரியும். பிரம்மபாபா ஆரம்பத்தில் என்ன பயிற்சி செய்தார்? ஒரு டைரியை பார்த்தீர்கள் அல்லவா? முழு டைரியிலும் ஒரே விதமான வார்த்தை தான் இருந்தது. நானும் ஆத்மா, யசோதாவும் கூட ஆத்மா தான், இந்தக் குழந்தைகளும் ஆத்மாக்களே, ஆத்மாக்கள், ஆத்மாக்கள்..... இந்த அஸ்திவாரத்தை சதா பயிற்சி செய்து கொண்டேயிருந்தார். அதாவது நான் யார்? இது தான் முதல் பாடம். இதனுடைய அப்பியாசம் அடிக்கடி செய்து கொண்டேயிருக்க வேண்டும். சோதிக்க வேண்டும். நான் ஆத்மா தானே என்று வெறுமனே நினைக்கக் கூடாது. பயிற்சி செய்ய வேண்டும். ஆத்மாவாகிய நான், செய்விப்பவராகி, கர்மம் செய்வித்துக் கொண்டிருக்கிறேன் என்று அனுபவம் செய்ய வேண்டும். செய்பவர் வேறு, செய்விப்பவர் வேறு. இப்படி வெவ்வேறானவராக இருக்கின்றார். இந்த கர்மேந்திரியங்கள். வேலைக்காரர்கள் என்ற அனுபவம் பிரம்மாபாபாவுக்கு இருந்தது என்பதையும் கேள்விப்பட்டேன். தினந்தோறும் இரவில் கச்சேரி நடந்ததல்லவா? (அன்றைய தினம், ஆத்மாவின் நிலை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதைப் பற்றி, ஒவ்வொருவரும் சபையில் கூறுவது தான் கச்சேரி என்று

கூறப்படுகிறது) அதாவது எஜமானனாகி, இந்த கர்மேந்திரியங்களாகிய, வேலைக்காரர்களைப் பற்றிய நிலையைக் கேட்பார்கள் அல்லவா? இந்த மாதிரியாக பிரம்மாபாபா இந்த அப்பியாசம் என்ற அஸ்திவாரத்தை நன்றாக உறுதியாக்கினார் (பக்கா). யாரெல்லாம் கடைசியிலும் கூட, கூடவே இருந்தார்களோ, அவர்களுக்கு, பாபா சரீரத்தில் இருந்து கொண்டிருந்தபோதும், இங்குமங்கும் சென்று கொண்டிருந்தபோதும் அசரீரி ஸ்திதி அனுபவம் ஆனது. கர்மக்கணக்கையும் முடிக்க வேண்டியதாயிருந்தது, இருப்பினும் சாட்சியாக இருந்து செய்தார். தான் (சுயம்) கர்மக்கணக்கின் வசமாகாமலும் இருந்தார். தான் கர்மக்கணக்கை முடித்துக் கொண்டிருக்கிறேன் என்ற அனுபவம் மற்றவர்களுக்கு ஏற்படாத வகையில் செய்து முடித்தார். பிரம்மாபாபா அவ்யக்தமாகிக் கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரிந்ததா? இல்லை. தெரியவில்லை. ஆகவே, இவ்வளவு நியாராவாக, சாட்சியாக, அசரீரியாக அதாவது கர்மாதீத் நிலையை வெகு காலம் பயிற்சி செய்து கொண்டிருந்தார். இதன் காரணமாக, கடைசியில், அதே சொரூபம் அனுபவம் ஆனது. இப்படி, வெகு கால அப்பியாசம் சரியான நேரத்தில் உதவியாக இருந்தது. கடைசி நேரத்தில் தேக அபிமானத்தை விட்டு விடுவோம் என்று நினைக்காதீர்கள். முடியாது. வெகு காலத்து அசரீரி நிலை, தேகத்திலிருந்து விடுபட்டிருக்கும் நிலை, செய்விப்பவர் என்ற ஸ்திதி அனுபவத்தில் இருக்க வேண்டும். கடைசி காலம் என்பது, இளமைப் பருவத்தினருக்கும், முதியோருக்கும், ஆரோக்கியமாக இருப்பவர்களுக்கும், நோயாளிகளுக்கும், வேறு யாராக இருந்தாலும், எந்த நேரத்திலும் வர முடியும். ஆதலால் சாட்சியாக இருக்கும் அனுபவம் வெகு நாள் அனுபவமாக வேண்டும் என்பதில் கவனம் செலுத்துங்கள். எப்படிப்பட்ட இயற்கையினால் உண்டாகும் ஆபத்துக்கள் வந்தாலும், இந்த அசரீரியாக இருக்கும் ஸ்திதி, உங்களுக்கு எளிதாக விலகியிருக்கவும் (நியாரா) தந்தைக்கு அன்புடையவராக (பியாரா) இருக்கவும் உதவியாயிருக்கும். ஆதலால் வெகு காலம் என்ற வார்த்தையை பாப்தாதா கோடிட்டு காட்டுகின்றார். என்ன ஆனாலும் சரி, முழு நாளில் சாட்சி நிலை, செய்விப்பவன் என்ற நிலை, அசரீரியாக இருக்கும் நிலையின் அப்பியாசத்தை அடிக்கடி செய்யுங்கள். அப்போது தான், கடைசி மூச்சிலும் கூட ஃபரிஸ்தா ஸோ தேவதை என்பது நிச்சயிக்கப்பட்டு விடும். பாபா சமானமாக ஆக வேண்டுமானால், பாபா நிராகாரமாகவும், ஃபரிஷ்தாவாகவும்

இருக்கின்றார். பிரம்மாபாபா சமானமாக ஆக வேண்டும், அதாவது ஃபரிஷ்தா ஸ்திதியில் இருக்க வேண்டும். எவ்வாறு ஃபரிஷ்தா ஸ்திதியை, சாகார ரூபத்தில் பார்த்தீர்களோ, பேசுவதைக் கேட்டாலும், பேசினாலும், காரிய விவகாரத்தில் ஈடுபட்டிருந்தாலும், பாபா சரீரத்தில் இருந்தாலும் நியாராவாக இருக்கின்றார் என்பது அனுபவம் ஆகியது. காரியம் செய்வதை விட்டுவிட்டு, அசரீரி நிலையிலிருப்பது என்பது கொஞ்ச நேரத்திற்குத்தான் முடியும்; ஆனால் காரியம் செய்து கொண்டிருக்கும்போது, நேரம் எடுத்துக் கொண்டு அசரீரியாக, பவர்புல் ஸ்திதியில் இருக்கும் அனுபவம் செய்து கொண்டேயிருங்கள். நீங்கள் எல்லோரும் ஃபரிஷ்தாக்கள். தந்தை மூலமாக இந்த பிராமண வாழ்க்கையை ஆதாரமாக வைத்து, செய்தி சொல்வதற்காக காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஃபரிஷ்தா என்றால் தேகத்தில் இருந்தாலும் நியாரா (சரீரத்திலிருந்து விலகியிருக்கும் நிலை) இந்த உதாரணத்தை பிரம்மாபாபாவிடம் பார்த்தீர்கள். இப்படியெல்லாம் இருப்பது சாத்தியமில்லை என்பது அல்ல. கண்ணால் பார்த்தீர்கள். அனுபவமும் செய்தீர்கள். யாரெல்லாம் நிமித்தமாக இருக்கின்றார்களோ, விஸ்தாரமாக இருக்கிறது ஆனால் எவ்வளவு பிரம்மாபாபாவின் புதிய ஞானம், புதிய வாழ்க்கை, புதிய உலகைப் படைக்கின்ற பொறுப்பு இருந்தபோதிலும், அவ்வளவு இப்போது யாருக்குமில்லை. ஆதலால் எல்லோருடைய லக்ஷியமும் பிரம்மாபாபா சமானமாக ஆக வேண்டும் அதாவது ஃபரிஷ்தா ஆக வேண்டும் என்பது. சிவபாபா சமானமாக ஆகவேண்டும், அதாவது நிராகார ஸ்திதியில் நிலைத்திருக்க வேண்டும். கஷ்டமாக இருக்கிறதா என்ன? பாப் (தந்தை) மற்றும் தாதாவிடம் (பிரம்மாபாபா) அன்பு இருக்கிறதல்லவா? யாரிடம் அன்பு இருக்கிறதோ, அவரைப் போல ஆகவேண்டும். பாபா சமானமாக ஆகியேத் தீர வேண்டும் என்ற சங்கல்பம் எப்போது இருக்கிறதோ, அப்போது கஷ்டம் இருக்காது. அடிக்கடி கவனம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். சாதாரண வாழ்க்கை அல்ல. சாதாரணமாக வாழ்க்கை நடத்துபவர்கள் ஏராளமாக இருக்கின்றனர். பெரிய, பெரிய காரியங்கள் செய்பவர்கள் கூட நிறைய பேர் இருக்கிறார்கள் ஆனால் உங்களைப் போல காரியம் செய்பவர்கள், பிராமண ஆத்மாக்களாகிய உங்களைத் தவிர, வேறு யாராலும் செய்ய முடியாது. ஆதலால் நினைவு நாளாகிய இன்று, பாப்தாதா சமானமாவதில் சமீபத்தில் வாருங்கள். சமீபத்தில் வாருங்கள் என்று

வரதானம் அளிக்கின்றேன். எல்லோரும் எல்லைக்குட்பட்ட விஷயத்திலிருந்து சங்கல்பமானாலும், பேசுவதனாலும், கர்மம் செய்வதானாலும், சம்மந்தம், தொடர்புகள் ஆனாலும் விலகியிருங்கள். தன்னுடைய மனம் எனும் படகை, இந்த எல்லைக்குட்பட்ட லௌகீக விஷயங்களிலிருந்தெல்லாம் விடுவித்துக் கொள்ளுங்கள். இப்போதிருந்தே, வாழ்க்கையில் இருக்கும்போதே, விடுதலையாகி (முக்தி) இவ்வாறு ஜீவன்முக்த், அலௌகீக அனுபவம் அதிக காலம் செய்யுங்கள். நன்று.

நாலா பக்கங்களிலிருந்தும் வந்திருக்கின்ற குழந்தைகளின் கடிதங்கள் அதிகமாக வந்து சேர்ந்திருக்கின்றன. மேலும் மதுபன் வாசிகளின் கோபத்திலிருந்து விடுதலையாகியிருக்கும் (குரோத் முக்த் ரிப்போர்ட்) ஆகிய சமாச்சாரங்கள் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்திருக்கின்றன. இந்த தைரியத்தைப் பார்த்து, பாப்தாதா குஷி அடைகின்றார். மேலும் இனிமேலும் சதா முக்த் நிலையிலிருப்பதற்காக, பொறுமை சக்தியை கவசமாக அணிந்து கொண்டேயிருக்க வேண்டும். இதன் மூலம் யார், எந்த விதமாக நடந்து கொண்டாலும், நீங்கள் சதா பாதுகாப்பாக இருப்பீர்கள்.

இவ்வாறு எல்லா திட சங்கல்பதாரி, சதா ஸ்மிருதி சொரூப ஆத்மாக்களுக்கு, சதா எல்லா சக்திகளையும் வேண்டிய நேரத்தில் காரியத்தில் பயன்படுத்தக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, எல்லா ஆத்மாக்கள் மீதும் கருணை உள்ளம் உடைய ஆத்மாக்களுக்கும், சதா பாப்தாதா சமான் ஆக வேண்டும் என்ற சங்கல்பத்தை சாகார ரூபத்தில் (நடைமுறையில்) கொண்டு வரக்கூடிய இப்படிப்பட்ட மிக மிக மிக அன்பாகவும் விலகியிருக்கும் குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

பஞ்சாப் சேவாதாரிகளுடன் நேர்முகம்: பஞ்சாப்காரர்களும் கூட, தங்களுடைய பேகத் சேவையின் பார்ட் மிக நல்ல முறையில் செய்தார்கள். பாப்தாதா மிகவும் மகிழ்ச்சியடைகின்றார். ஒவ்வொரு ஜோனும் மிகுந்த ஆர்வம், உற்சாகத்துடன் சேவையில் கோல்டன் சான்ஸ் நடைமுறையில் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். பஞ்சாப்காரர்களுக்கு பஞ்சாப் என்ற பெயரே நதிகளின் ஆதாரத்தில்

வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் நதிகளைத்தான் புனிதமானது என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் பஞ்சாப்காரர்கள், எல்லோருக்கும் செய்தி சொல்வதில் நம்பர் ஒன் ஆக இருக்கிறீர்கள் அல்லவா? நதிகளோ பெருக்கெடுத்து ஓடிக் கொண்டு தான் இருக்கின்றன. இதுபோல பஞ்சாப் செய்தி அளித்துக் கொண்டே முன்னேறிச் சென்றுக் கொண்டேயிருக்கின்றார்கள். நிறைய புரோகிராம் நன்றாகச் செய்திருக்கிறீர்கள் அல்லவா? எல்லோருக்கும் நல்ல ஆர்வம் உள்ளது என்பதை பாப்தாதா கேள்விப்பட்டார். ஆரம்ப ஸ்தாபனைக்கான ஸ்தானம் ஆதலால் சக்தி அதிகமாக இருக்கிறது. ஆதலால் உங்களுடைய நிமித்த சந்திரமணி குழந்தைக்கு பஞ்சாப் சிங்கம் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. ஆதலால் எல்லோரும் சிங்கங்கள் தானே! பலவீனமானவர்கள் இல்லையல்லவா? பாண்டவர்கள் பலவீனமானவார்களா? சக்திசாலிகள் தானே! ஆம் என்று சொல்லுங்கள். ஒவ்வொரு பஞ்சாப் சிங்கமும், வேட்டையாடுவதில் கெட்டிக்காரர்கள் என்பது பாப்தாதாவுக்குத் தெரியும். சிங்கம் வேட்டையாடுவதில் கெட்டிக்காரத்தனமுடையதல்லவா? அப்படியானால் நீங்கள் எவ்வளவு கெட்டிக்காரர்கள்? அடுத்து வரும் சீசனில் எல்லோரையும் விட அதிகமான எண்ணிக்கை பஞ்சாப் கொண்டு வரும் ஆதலால் முன் கூட்டியே நல்வாழ்த்துக்கள். நல்லது. ஒவ்வொருவரையும் பார்த்து, பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. வாஹ் மேரே சர்வீஸபுள் பச்சே வாஹ் (ஆஹா என்னுடைய சேவாதாரி குழந்தைகளே, ஆஹா) பாண்டவர்களும் கூட ஆஹா, ஆஹா என்று சொல்லும் படியாகவே இருக்கிறார்கள். சக்திகளும் அப்படித்தான். இப்போது வாஹ் பாபா வாஹ் என்று முரசு கொட்டுங்கள். எல்லோரும் ஆஹா! எங்களது தந்தையே ஆஹா! என்று சொல்லட்டும். சரிதானே! தைரியம் இருக்கிறதா? தைரியமும் இருக்கிறது மேலும் பாப்தாதாவின் கோடி மடங்கு உதவியும் இருக்கிறது. சரிதானே பாருங்கள் பெயரே அச்சல். இன்னொரு சகோதரி பிரேம். எங்கே பிரேம் (அன்பு) இருக்கிறதோ அங்கு அச்சல் (ஆடாத அசையாத உறுதியாயிருக்கும் நிலை) இருக்கும்போது அதில் எல்லாமே வந்து விடுகிறதல்லவா? வேறு என்ன தான் வேண்டும். பிரேம் (அன்பு) வேண்டும் அச்சல் (உறுதியான) ஸ்திதி வேண்டும். இனி வேறு என்ன வேண்டும்? இவ்வாறு நிமித்தமாயிருக்கும் பெயரைக் கூறுகின்றேன். எல்லோருடைய பெயரும் மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது.

எதிரில் நின்று கொண்டிருப்பதால், இருவருடைய பெயரையும் கூறுகின்றேன். மற்றபடி எல்லோருமே ஒவ்வொரு ரத்தினம், பாப்தாதாவின் மன சிம்மாசனத்தின் அதிகாரி. சரிதானே!

டபுள் ஃபாரினர்ஸ்: டபுள் பாரினர்ஸ்களிடம் டபுள் நஷா இருக்கிறது. ஏன் டபுள் நஷா? ஏனென்றால், எப்படி பாபா தூர தேசத்தைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ, அது போல நாங்களும் கூட தூர தேசத்திலிருந்து வந்திருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். பாப்தாதா டபுள் விதேஷி குழந்தைகளிடம் ஒரு விசேஷத்தைப் பார்த்தார். தீபத்தின் மூலம் தீபமேற்ற அநேக தேசங்களில் பாப்தாதாவின் ஒளி வீசிக் கொண்டிருக்கும் தீபங்களின் தீபாவளி கொண்டாடினார்கள். இப்போதும் கூட 35-தேசங்களிலிருந்து வந்திருக்கிறார்கள் என்றால் இன்னும் வராமல், வர இருப்பவர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்? டபுள் விதேஷிகளிடம் செய்தி அளிக்க வேண்டுமென்ற ஆர்வம் நன்றாக உள்ளது. ஒவ்வொரு குரூப்பிலும் 30-40 தேசங்களிலிருந்து வருவதை பாப்தாதா பார்க்கின்றார். நல்வாழ்த்துக்கள், சதா, தானும் கூட (சுயம்) பறந்து கொண்டேயிருங்கள். ஃபரிஷ்தாவாகி பறந்து பறந்து, செய்தி அளித்துக் கொண்டேயிருங்கள். நல்லது. 35-தேசங்களைச் சார்ந்த உங்களை மட்டும் பாப்தாதா பார்க்கவில்லை. இன்னும் மற்ற தேசங்களில் இருப்பவர்களும் உங்களுடன் சேர்ந்திருப்பதை பார்க்கின்றார். நம்பர் ஒன், பாபா சமானமாக ஆகப்போகிறவர்கள் இல்லையா? நம்பர் ஒன்னா? நம்பர் வாரா? நம்பர் ஒன். நம்பர் வார் அல்ல. நம்பர் ஒன் ஆகுதல் என்றால், ஒவ்வொரு சமயத்திலும் வெற்றியடைபவர்கள் (வின்). யார் வெற்றி (வின்) அடைபவர்களோ, அவர்கள் ஒன்னாக இருக்கிறார்கள். ஆதலால் இப்படித்தானே! மிகவும் நல்லது. வெற்றியாளர்கள் மேலும் சதா வெற்றியடைபவர்கள். நல்லது. எல்லோருக்கும், எங்கெங்கு செல்கின்றீர்களோ, அங்கு நினைவூட்ட வேண்டும். அதாவது எல்லா டபுள் ஃபாரினர்ஸ்களும் நம்பர் ஒன் ஆகவேண்டும் என்று கூறுங்கள் நல்லது. எல்லோருக்கும் நினைவுகளைத் தவேண்டும் மேலும் சிவராத்திரி இங்கே கொண்டாடுகிறீர்கள் ஆனால் செய்தி அளிக்க முடியுமல்லவா? ஆதலால் எவ்வளவு பேர் இருக்கிறீர்களோ, இதை விட டபுள் எண்ணிக்கை அடுத்த சீசனில் இருக்க வேண்டும். ஆகுமா? ஆக வேண்டும். நல்லது.

பாப்தாதா எல்லா மாதர்களுக்கும், கோபாலுக்குப் பிரியமான மாதார்களுக்கு, நிறைந்த மனதுடன் அன்பு நினைவுகளை அளிக்கின்றார். மேலும் பாண்டவர்கள், குமாரர்களானாலும், குடும்பத்தினரானாலும், பாண்டவர்கள் பாண்டவ பதியுடன் இருக்கிறார்கள். இப்படி கூட்டாளிகளாக இருக்கின்ற பாண்டவர்களுக்கு பாப்தாதா மிகுந்த அன்பு நினைவுகளைத் தருகின்றார். டீச்சர்ஸ் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பார்க்கவில்லை என்று, அப்படியல்ல. பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றேன்.

**டீச்சர்களுடன்:** டீச்சர்கள் தங்களுடைய தோற்றத்தின் மூலமாகவே, பாப்தாதாவை சாட்சாத்காரம் செய்விப்பவர்களாக இருக்கின்றார்கள். பாப்தாதாவையும் தங்களுடைய வருங்காலத்தையும் கூட தங்களுடைய தோற்றத்தின் மூலமாக பிரத்யக்ஷம் செய்யக் கூடிய சேவை விசேஷமாக டீச்சர்களினுடையது. ஒவ்வொருவருடைய தோற்றமும் சதா கண்காட்சி போன்றது. கண்காட்சியின் சித்திரங்கள். தானாகவே தன்னுடைய அறிமுகத்தைக் கொடுக்கின்றன. ஆகவே உங்களுடைய தோற்றம், இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும்போதே ஒரு கண்காட்சி தான். மேலும் ஒவ்வொருவருக்கும் இயற்கையாகவே நினைவுபடுத்திக் கொண்டேயிருங்கள். புரிந்ததா? 100-பிராமணர்களை விட உத்தமமான குமாரிகளுக்கு மிக அதிக அளவு அன்பு நினைவுகள். நன்று.

குழந்தைகளுடன்: குழந்தைகளில்லையேல் அழகிருக்காது. வீட்டின் அலங்காரம் பாப்தாதாவின் அலங்காரம் குழந்தைகள் தான். குழந்தைகளை பாப்தாதா ராஜாக் குழந்தை ரூபத்தில் பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் ராஜா குழந்தை, அப்படித்தானே! அப்படித் தானே குழந்தைகளே! ராஜா குழந்தையா? பிரஜை குழந்தையா? மிக்க நன்று, குழந்தைகளைப் பார்த்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இனி குழந்தைகள் அற்புதம் நிகழ்த்திக் காட்ட வேண்டும். குழந்தைகளும் கூட, தன்னுடைய கூட்டாளிகளான குழந்தைகளைத் தயார் செய்ய வேண்டும். செய்வீர்கள் அல்லவா? நல்லது.

தாதிமார்களுடன்: இந்த நாளில் என்ன நினைவுக்கு வருகிறது? வில்பவர் கிடைத்தது அல்லவா? வில்பவர் வரதானம் இருக்கிறது. மிக நல்ல பார்ட் செய்தீர்கள். இதற்கு வாழ்த்துக்கள். எல்லோருடைய ஆசிகளும் உங்களுக்கு நிறைய இருக்கிறது. உங்களைப் பார்த்துத்தான் எல்லோரும் குஷி அடைகிறார்கள். பேசினாலும் சரி, பேசாவிட்டாலும் சரி. உங்களுக்கு ஏதாவது ஆனால் தங்களுக்கு ஏற்பட்டதாக நினைக்கிறார்கள். இவ்வளவு அன்பு இருக்கிறது. எல்லோருக்கும் இருக்கிறது. எல்லோரிடமிருந்தும் நிறைய அன்பு இருக்கிறது. நம்முடைய அன்பு அனைவரை விட அதிகமான அன்பு ஆகும். இந்த அன்பு தான், எல்லோரையும் நடத்திக் கொண்டிருக்கிறது. தாரணை குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரி, அன்பு நடத்திக் கொண்டிருக்கிறது. மிகவும் நல்லது.

ஈஷு தாதியுடன்: இவரும் கூட கணக்கை முடித்து விட்டார். பரவாயில்லை இவருடைய சகஜ புருஷாரத்தம், சகஜமாக கணக்கை முடித்து விட்டது. சகஜமாகவே ஆகி விட்டது. ஓய்வு எடுத்து, எடுத்து சரியாகிப்போனது. விஷ்ணுவின் படுக்கை போல ஓய்வு கிடைத்தது. நல்லது. இருந்தாலும் சாகாரத்தில் இன்று வரையிலும் யக்ஞ ரக்ஷகராக இருக்கிறீர்கள். யக்ஞ ரக்ஷகராக இருப்பவருக்கு ஆசிகள் நிறைய கிடைக்கின்றன. எல்லா தாதிகளும் பாப்தாதாவுக்கு அருகாமையில் இருக்கிறார்கள். சமீப ரத்தினங்கள் மேலும் மற்றவர்களுக்கு தாதிகள் விலைமதிக்க முடியாதவர்கள். கூட்டாளிகளும் நன்றாக இருக்கிறார்கள். தாதிகளின் கூட்டு முயற்சியானது இவ்வளவு காலம் யக்ஞத்தை ரக்ஷகராக இருந்து பாதுகாத்து வந்தது. இனி மேலும் பாதுகாத்துக் கொண்டேயிருப்பீர்கள். இந்த ஒற்றுமை தான் எல்லா வெற்றிக்கும் ஆதாரம். பாபா இடையில் இருக்கின்றார். இந்த விஷயத்தில் மிகவும் கவனம் கொடுத்திருக்கிறீர்கள். நல்லது. எல்லோரும் நன்றாக இருக்கிறீர்கள்.

மோகினி சகோதரியிடம்: உடல் நலம் நன்றாக இருக்கிறதா? உங்களிடமும் தைரியம் நன்றாக இருக்கிறது. நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். வருகிறது, வந்தது போல சென்றும் விடுகிறது. இதுவும் சக்தி தான்.

மனோகர் தாதியிடம்: பிரகிருதியை (சரீரம்) நடத்த தெரிந்து கொண்டுவிட்டீர்கள். பழைய மோட்டாரை இடையிடையே பிடித்துத் தள்ள வேண்டியதாயிருக்கிறது ஆதலால் தள்ளிக் கொண்டிருக்கிறீர்கள். மிகவும் நன்றாக தள்ளிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் கூட இருப்பதே எல்லாவற்றிலும் வெற்றி. நல்லது. நினைவு நாளை எல்லோரும் பார்க்கின்றீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 13.02.2003 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தற்காலத்தில் தனது இரக்கமுள்ள மற்றும் வள்ளல் தன்மையான சொரூபத்தை வெளிப்படுத்துங்கள்!

இன்று வரத்தை வளங்கும் பாபா தனது ஞான வள்ளல் வள்ளல், குண வள்ளல், பரமாத்மா செய்தியை வழங்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் மாஸ்டர் வள்ளலாகி ஆத்மாக்களை பாபாவின் இருகில் கொண்டு வருவதற்காக உளப்பூர்வமாக முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். உலகத்தில் அநேக விதமான ஆத்மாக்கள் இருக்கின்றார்கள். சிலருக்கு ஞான அமிர்தம் வேண்டும், வேறு சில ஆத்மாக்களுக்கு சக்தி வேண்டும், குணம் வேண்டும், குழந்தைளாகிய உங்களிடம் அனைத்து கஜானாக்களும் மிக அதிகமாக உள்ளன. ஒவ்வொரு ஆத்மாக்களுடைய ஆசைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவர், நாளுக்கு நாள் சமயம் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரம் சமீபமாக வந்து கொண்டிருக்கும் காரணமாக இப்பொழுது ஆத்மாக்கள் ஒரு புதிய துணையை நாடிக் கொண்டிருக்கின்றனர். ஆத்மாக்களாகிய நீங்கள் அந்த புதிய உதவியைத் தருவதற்கு நிமித்தமாக இருக்கின்றீர்கள். பாப்தாதா குழந்தைகளினுடைய உற்சாகம் ஆர்வத்தை கண்டு குஷியடையகிறார்.

ஒரு புறம் அவசியம் உள்ளது. மறுபுறம் உற்சாகம் ஆர்வம் இருக்கிறது, அவசியம் மற்றும் தேவையான சமயத்தில் அப்பொருள் ஒரு சொட்டாக இருந்தாலும் அதற்கு மிகுந்த மகத்துவம் உண்டு. ஆக, இந்த சமயத்தில் நீங்கள் கொடுக்கும் செய்திக்கும் மிகுந்த மகத்துவம் உண்டு.

தற்சமயத்தில் குழந்தைகளாகிய உங்களின் இரக்க சிந்தனை மற்றும் வள்ளல் தன்மையின் சொரூபம் வெளிப்படும் சமயமாக உள்ளது. பிராமண ஆத்மாக்களாகிய உங்களின் அனாதி சொரூபத்தில் கூட வள்ளல் தன்மையின் சம்ஸ்காரம் நிறைந்திருக்கிறது. எனவே கல்ப விருட்ச படத்தில் நீங்கள் அம்மரத்தின் வேர் குதியில் தென்படுகின்றீர்கள். ஏனெனில் வேர் மூலமாகவே முழு விருட்சத்திற்கும் அனைத்தும் (சத்து) சென்று அடைகின்றன. உங்களின் ஆதி சொரூபம், தேவதா ரூபம் அதனுடைய பொருளாவது தேவ் அதாவது கொடுக்கக் கூடியவர்கள். உங்களது மத்திய கால சொரூபம் பூஜிக்கத்தக்க விக்ரகங்கள். ஆக மத்திய சமயத்திலும் பூஜிக்கதக்க ரூபத்தில் நீங்கள் வரதானம் கொடுக்கக் கூடியவர்கள், ஆசீர்வாதம் வழங்க கூடிய வள்ள சொரூபதாரிகள். ஆக ஆத்மாக்களாகிய உங்களின் விசேஷ சொரூபமே வள்ளல் தன்மை தான். ஆக இப்பொழுது கூட பரமாத்மாவினுடைய செய்தியாளர்களாகி உலகத்தில் பாபாவை வெளிப்படுத்தும் செய்தியை பரப்பிக் கொண்டிருக்கிறீர்கள். ஆக ஒவ்வொரு பிராமண குழந்தையும், தான் அனாதி, ஆதி வள்ள தன்மையின் சம்ஸ்காரம் ஒவ்வொருவரிடம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் சதா வெளிப்படுகின்ற ரூபத்தில் இருக்கின்றனவா என்று சோதித்துப் பாருங்கள். வள்ளல் தன்மையுடைய சம்ஸ்காரங்கள் நிறைந்த ஆத்மாக்களுடைய அடையாளம் அவர்கள் ஒருபோதும் யாராவது எனக்குக் கொடுத்தால் தான் நான் கொடுப்பேன், யாராவது முதலில் செய்தால்தான் நான் செய்வேன் என்று எண்ணத்தில் கூட சிந்திப்பதில்லை. நிரந்தரமாக திறந்த பொக்கிஷமாக இருக்கின்றன. ஆக பாப்தாதா நாலா புறத்திலுமுள்ள குழந்தைகளின் வள்ளல் தன்மையான சம்ஸ்காரத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். என்ன பார்த்திருப்பார். நம்பர் பிரகாரமாக இருக்கத்தான் செய்கின்றனர். ஒருபொழுதும் இது இருந்தால் தான் நானும் இதைச் செய்வேன் என்று எண்ணாதீர்கள். வள்ளல் தன்மை நிறைந்த சம்ஸ்காரம் உடையவர்களுக்கு அனைத்து தரப்பிலிருந்தும் உதவி, ஒத்துழைப்பானது தானாக கிடைத்து

விடுகிறது. வெறும் ஆத்மாக்களின் மூலம் மட்டுமல்ல இயற்கையும் கூட சமயத்திற்கு ஏற்றார்போல் உதவியாளர்களால் விடுகிறது. யார் சதா வள்ளல் தன்மையுடன் இருக்கிறார்களோ அந்த புண்ணியத்தினுடைய பலன் சரியான சமயத்தில் உதவி, சரியான நேரத்தில் வெற்றி அந்த ஆத்மாக்களுக்கு மிக எளிதி கிடைத்து விடுகிறது. இது ஒரு சூட்சுமமான கணக்கு. எனவே சதா வள்ளல் தன்மையின் சம்ஸ்காரத்தை வெளிப்படையாக வைத்திருங்கள். புண்ணியத்தினுடைய கணக்கு ஒன்றுக்கு 10-மடங்கு பலனை தருவதாகும். ஆக நாள் முழுவதிலும் சோதித்து பாருங்கள் -சங்கல்பத்தின் மூலம், வாணியின் மூலம், சம்மந்த தொடர்பின் மூலம் புண்ணிய ஆத்மாவாகி புண்ணியத்தினுடைய கணக்கை எவ்வளவு சேர்த்து வைத்துள்ளீர்கள்? மன சேவையும் கூட புண்ணியத்தினுடைய கணக்கை அதிகரிக்கிறது. சொல்லின் மூலம் பலஹீனமான ஆத்மாக்களை மகிழ்ச்சியில் கொண்டு வருகிறது, தொந்தரவில் இருக்கும் ஆத்மாக்களை சுய நிலையின் உணர்வில் கொண்டு வருவது, குழம்பிப் போன ஆத்மாக்களை தங்கள் சொல்லின் மூலமாக உற்சாகம், ஆர்வத்தில் கொண்டு வருவது, சம்மந்தம், தொடர்பின் மூலம் ஆத்மாக்களை தனது சிரேஷ்டமான தொடர்பு, துணையின் அனுபவத்தை செய்விப்பது, இந்த விதியின் மூலமாக புண்ணியத்தினுடைய கணக்கை சேமிக்க முடியும். அரைக்கல்பம் புண்ணியத்தினுடைய பலனை அனுபவிக்கும் அளவு இந்த பிறவியில் புண்ணியத்தினுடைய கணக்கை சேமிக்கிறீர்கள். மேலும் அரைக் கல்பம் உங்களுடைய ஜட உருவம் (விக்கிரகம்) பாவமான ஆத்மாக்களை வாயுமண்ட சூழ்நிலை மூலம் பாவத்திலிருந்து விடுதலை அளிக்கின்றீர்கள். பதீத பாவனி ஆகிறீர்கள். ஆக, பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் சேமிப்பு புண்ணியக் கணக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

பாப்தாதா தற்சமயத்தில் குழந்தைகளினுடைய சேவையின் உற்சாகம், ஆர்வத்தைப் பார்த்து குஷியடைந்து கொண்டிருக்கிறார். பெரும்பாலான குழந்தைகளிடம் சேவையின் உற்சாகம் நன்றாக உள்ளது. அனைவரும் தம் தம் தரப்பிலிருந்து சேவையினுடைய திட்டங்களை நடைமுறையில் கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர். இதற்காக பாப்தாதா உளப்பூர்வமாக வாழ்த்துக்களை வழங்குகிறார். மிக நன்றாக

செய்து கொண்டிருக்கின்றனர். அனைத்திலும் நல்ல விஷயம் யாதெனில் அனைவரது எண்ணங்களும், நேரமும் மிகவும் (Busy) சுறுசுறுப்பாகி விட்டது. ஒவ்வொருவருக்கும் இந்த இலட்சியம் இருக்கிறது, நாலா புறங்களிலுமுள்ள சேவையின் மூலம் புகார்களை பூர்த்தி செய்ய வேண்டும். தாதி கூறுகின்றார் 9-லட்சம் வேண்டும் என்று. மூன்று நாலு இடங்களிலிருந்து லட்சம் லட்சமாக வந்தால் என்னவாகும். 6-லட்சம் ஏற்கனவே உள்ளது. இன்னும் 3-லட்சம் வேண்டுமல்லவா! ஆக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இவ்வளவு செய்தியை பரப்பிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய உற்சாகம் நன்றாக இருப்பதை பாபா கேள்வியுருகிறார். வெளிநாடுகளிமும் நல்ல நல்ல நிகழ்ச்சிகள் செய்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு இடத்தினுடைய முறையும் அவரவர்களுக்குரிய வகையில் வித்தியாசமாக உள்ளது ஆனால் சேவையினுடைய உற்சாகம் அனைவரிடமும் காணப்படுகிறது. ஆக, 9-லட்சம் என்ன? இன்னும் அந்த 3-லட்சம் அதிகரிப்பது பெரிய விஷயமா? முதலில் இந்த பெருங்காரியத்தை குஜராத் எடுத்திருக்கிறது. நன்றாக செய்திருக்கின்றார்கள். குஜராத்தில் எத்தனை கிளைகள் உள்ளன. (200-சென்டர்கள், 1000-உபகிளைகள்) ஒவ்வொரு சென்டரிலிருந்தும் 10-10 ஆத்மாக்கள் வந்து விட்டால் மொத்தம் எத்தனை ஆகி விடும்? இதைப்போல் டில்லி இருக்கிறது, மும்பை இருக்கிறது மெட்ராஸ் இருக்கிறது, மெட்ராஸ்காரர்களோ பறப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். மற்றபடி கல்கத்தா இருக்கிறது, ஹைதராபாத் இருக்கிறது, வெளிநாடு இருக்கிறது. 3-லட்சம் என்ன பெரிய விஷயம்! பெரிய விஷயமா? டீசசர்கள் கூறுங்கள். பெரிய விஷயமா? சரி, 9-லட்சம் ஆகி விட்டது அல்லவா? என்ன கை அசைக்கவில்லை? பாண்டவர்கள் கையை அசைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பிராமணர்களின் உறுதியான எண்ணங்களில் மிகவும் சக்தி இருக்கிறது. பிராமணர்கள் திட சங்கல்பம் செய்து விட்டால் எதுதான் முடியாது. அனைத்தும் நடந்தேறி விடும். யோகத்தில் ஜுவாலா ரூபத்தை மட்டும் அடைந்து விடுங்கள். எப்பொழுது யோகம் ஜுவாலா (வெளிச்சம்) ரூபம் ஆகி விடுகிறதோ அப்போது ஜுவாலையின் பின்னால் ஆத்மாக்கள் தானே வந்து விடுவர். ஏனெனில் வெளிச்சம் கிடைத்ததால் அவர்களுக்கு வழியும் தெரிந்து விடும். இப்பொழுது யோகம் செய்து கொண்டுதான் இருக்கிறீர்கள் ஆனால் யோகத்தில் ஜுவாலா ரூபம் தேவைப்படுகின்றது. சேவைக்காக

ஊக்கம், உற்சாகம், நல்லபடி அதிகரித்துக் கொண்டிருக்கிறது ஆனால் யோகத்தில் ஜுவாலா ரூபம் தேவை. இப்போது அதைக் கீழ்கோடிட்டு (அன்டர்லைன்) வலியுறுத்த வேண்டும். உங்களுடைய திருஷ்டியில் யாரேனும் எதிரில் வந்தால் ஏதாவது ஒரு அனுபவத்தை அடைந்து விட வேண்டும். அப்படியாகப்பட்ட பொலிவு உங்கள் திருஷ்டியில் வர வேண்டும். வெளிநாட்டு குழந்தைகள் பாப்தாதாவிற்கு காலத்தின் அறைகூவல் (கால் ஆப் டைம்) என்ற சேவை செய்து காட்டினார்கள். அந்த சேவையினுடைய விதிமுறை நன்றாக உள்ளது. அதன் மூலமாக சிறு சிறு கூட்டங்களை மிக அருகாமையில் கொண்டு வந்தீர்கள். இதே போன்றே ஒவ்வொரு மண்டலமும் (ஜோன்) ஒவ்வொரு சென்டரும், தனித்தனியாக சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். இருந்தபோதிலும் அனைத்து தரப்பினரையும், துறையினரையும் சேர்க்க வைக்கும் ஒரு சேவையைக் கொண்டு வாருங்கள். பாப்தாதா கூறுகிறார், செய்து முடித்தவைகள் மிகவும் பரவலாக உள்ளன ஆனால் செய்து முடித்த சேவையிலிருந்து தகுதியான ஆத்மாக்களின் கூட்டத்தை தேர்ந்தெடுங்கள். மேலும் அந்த கூட்டத்தை அடிக்கடி சென்று பார்த்து அருகாமையில் கொண்டு வாருங்கள். அவர்களுக்கும் சேவையில் உற்சாகம் அதிகரிக்கும்படி செய்யுங்கள். பாப்தாதா அத்தகைய ஆத்மாக்களுக்கு இப்பொழுது சக்தி வாய்ந்த பராமரிப்பை செய்ய வேண்டும். இது கூட்டமாக இருக்கும் பொழுது கிடைக்காது. தனித்தனியாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு பராமரிப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. கூட்டத்தில் வருகின்றபோது ஒருவர் மற்றவரைப் பார்த்து உற்சாகத்தில் வருகிறார்கள். இதை இவர் செய்கின்ற பொழுது நான் கூட செய்ய முடியும். நான் சேய்வேன் என்ற உற்சாகம் பிறக்கிறது. பாபா சேவையின் வெளிப்படையான பிரத்யட்ச பலனாக அந்த கூட்டத்தைக் காண விரும்புகிறார். நல்ல விதமாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரும் தன்னுடைய துறைனருக்கு, தன்னுடைய பகுதியில், தன்னுடைய மண்டலத்தின், தன்னுடைய சென்டரின் சேவையை புரிந்து வருகிறார்கள். பாப்தாதா சந்தோஷம் அடைகிறார். இப்போது கொஞ்சம் அருகாமையில் கொண்டு வாருங்கள். இல்லற வாழ்க்கையில் இருப்பவர்களுடைய உற்சாகம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து இருக்கிறது. வெளிநாட்டவர்கள் இரு விதமான சேவைகளை புரிந்து கொண்டே தன்னுடைய முயற்சியிலும் கவனம் செலுத்துகிறார்கள். இதைப் பார்த்து பாப்தாதா சந்தோஷம் அடைகிறார்.

பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் தற்சமயம் வெளிநாட்டில் நிலவுகின்ற சூழ்நிலையைப் பார்த்து பயந்து விடவில்லையே! நாளை என்ன நடக்குமோ, நாளை என்ன நடக்கப்போகிறதோ, என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கவில்லையே! நாளை நல்லது தான் நடக்க இருக்கிறது, நல்லது மேலும் நல்லதே நடக்கும். எவ்வளவுக்கு எவ்வளவு உலகத்தில் கலகங்கள் அதிகரிக்கிறதோ அவ்வளவு பிராமணர்களாகிய உங்களின் நிலை ஆடாது இருக்கும். அப்படித்தானே! இரட்டை வெளிநாட்டுகாரர்கள் கலக்கமுறுகிறீர்களா? அல்லது ஆடாதவர்களாக இருக்கிறீர்களா? கலக்கம் அடையவில்லை அல்லவா! யார் ஆடாது இருக்கிறார்களோ, அவர்கள் கைகளை உயர்த்துங்கள். சலனம் அடையவில்லையே! நாளை ஏதாவது நடந்து விடும் அப்போது கூட அசையாத ஒருவராக இருப்பீர்கள் அல்லவா? என்ன நடக்குமோ, ஒன்றும் நடக்கப் போவதில்லை. பிராமணர்களாகிய உங்கள் மீது பரமாத்மாவின் நிழற்குடையிருக்கிறது. எவ்வளவு வாட்டர் புரூப் (water-proof) உள்ள பொருள்களின் மீது எவ்வளவு தண்ணீரை விட்டாலும், அது தண்ணீர் ஒட்டாமல் வாட்டர் புரூப் ஆகவே இருக்கும். அது போன்றே எவ்வளவு தான் கலக்கம் வந்தாலும் பிராமண ஆத்மாக்கள் பரமாத்ம குடையின் உள் எப்போதும் பாதிக்காதவர்களாக இருப்பார்கள். கவலையற்ற அரசர்கள் தானே நீங்கள் அல்லது கொஞ்சம் கொஞ்சம் கவலை இருக்கிறதா? என்ன ஆகுமோ? அப்படியில்லை, கவலையற்றவர்கள் நீங்கள். சுயராஜ்ய அதிகாரியாக ஆகி கவலையற்ற இராஜாக்களாக ஆகி, ஆடாத அசையாத இருக்கையில் செட் ஆகி விடுங்கள். இருக்கையை விட்டு கீழே இறங்கி வந்து விடாதீர்கள். கலக்கமுறுவது என்றால் இருக்கையில் செட் ஆகாமல் இருப்பது. யார் இருக்கையில் செட்டாகியிருக்கிறார்களோ, அவர்கள் கனவில் கூட கலக்கமுற மாட்டார்கள் (அப்செட்).

மாதாக்கள் என்ன நினைக்கிறீர்கள்? இருக்கையில் செட்டாக இருப்பது அமர்வது வருகிறதா? கலக்கமுறுவதில்லையே? பாப்தாதா இணைந்திருக்கிறார், எப்பொழுது சர்வ சக்திவான் உங்களுடன் இணைத்திருக்கிறாரோ உங்களுக்கு என்ன பயம்? நான் தனியாக இருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டால் கலக்கத்தில் வருவீர்கள். இணைந்திருந்தால் எவ்வளவு தான் கலக்கங்கள் வந்தாலும் நீங்கள் அசையாதவர்களாக இருப்பீர்கள், சரிதானே தாய்மார்களே! சரி தானே!

இணைந்து தானே இருக்கிறீர்கள், தனியாக இல்லையே! பாப்தாதாவினுடைய பொறுப்பாளிகள் எப்பொழுது நீங்கள் இருக்கையில் செட்டாகி இருக்கிறீர்களே அப்போது தந்தையினுடைய பொறுப்பாளிகளாக இருக்கிறீர்கள். கலக்கமுறுவது என்பது உங்களுடைய பொறுப்பாகி விடுகிறது.

ஆத்மாக்களுக்கு நற்செய்திகளின் மூலமாக, அனுபவத் துளிகளைக் கொடுத்துக் கொண்டிருந்தால் வள்ளல் சொரூபத்தில் நிலைத்திருப்பீர்கள் வள்ளலாக ஆவதின் புண்ணியத்தின் பலன் சக்தி கிடைத்துக் கொண்டிருக்கும். நடக்கும்பொழுதும் அங்கு இங்கு போகும்போதும் தன்னை செய்விக்கும் ஓர் ஆத்மா; இந்த கர்மேந்திரியங்கள் செய்து கொண்டிருக்கும் வேலையாட்கள் -இந்த ஆத்மாவினுடைய உணர்வு அனுபவம் எப்பொழுதும் மேலோங்கி இருக்கட்டும். நான் ஓர் ஆத்மா தானே என்று இருந்து விடாதீர்கள். ஞாபகம் எப்பொழுதும் மேலோங்கி இருக்க வேண்டும். ஆழ்ந்த நிலையில் இருக்கின்ற ரூபம் வெளிப்படையாக வருகின்றபொழுது போதை, நஷா, குஷி, அடுத்து ஆள்கின்ற கட்டுப்படுத்தும் சக்தி வரும். சந்தோஷம் கூட வரும். ஏன்? சாட்சியாக இருந்து கர்மத்தை செய்விக்கிறீர்கள். எனவே அடிக்கடி சோதித்துப் பாருங்கள். நான் செய்விப்பவனாக இருந்து காரியங்களை செய்து கொண்டிருக்கின்றேனா? எப்படி ராஜா தன்னுடைய வேலையாட்களை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறாரோ, ஆணையிடுவதன் மூலம் செய்விக்கிறாரோ, அதே போன்று ஆத்மா செய்விப்பவரின் சொரூப ஞாபகத்தில் இருந்தால் அனைத்து கர்மேந்திரியங்களும் உங்கள் ஆணையின் கீழ் வந்து விடும். மாயாவின் ஆணையில் இராது, உங்களுடைய ஆனையின் கீழ் வந்து விடும். அவ்வாறு இல்லையெனில் செய்விக்கும் ஆத்மா கவனம் இல்லாமல் இருக்கிறது என எண்ணிக் கொண்டு மாயா ஆணையிட ஆரம்பித்து விடும். அவ்வப்போது சங்கல்ப சக்தி, அவ்வப்போது வார்த்தைகளின் சக்தி, மாயாவின் ஆணைப்படி சென்று விடுகிறது. எனவே எப்பொழுதும் ஒவ்வொரு கர்மேந்திரியங்களையும், தன்னுடைய ஆணையின்படி செலுத்துங்கள். நான் விரும்பவில்லை, அதுவாகவே நடந்தேறி விட்டது என்று கூறக்கூடாது. எதை விரும்புகிறீர்களோ அது தான் நடக்க வேண்டும். இப்பொழுதிலிருந்தே ராஜ்ய அதிகாரியாக ஆகின்ற

சுபாவத்தை நிரப்பிக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் அங்கு கூட ராஜ்யத்தை செய்வீர்கள். சுயராஜ்ய அதிகாரியின் இருக்கையை விட்டு எப்பொழுதும் கீழே வந்து விடாதீர்கள். கர்மேந்திரியங்கள் கட்டளைக்குக் கீழ்படிந்து நடந்தால் ஒவ்வொரு சக்தியும் உங்களுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கும். எந்த சக்தி எந்த சமயத்தில் தேவையோ, அந்த சமயத்தில் அது ஆஜராகி விடும். வேலை முடிந்த பிறகு நீங்கள் பொறுமை சக்தியை வா என்று கட்டளையிட்ட பிறகு அது தாமதமாக வருவது என்பது கூடாது. ஒவ்வொரு சக்தியும் உங்கள் கட்டளையின் கீழ் இருக்கும். ஏனெனில் இந்த ஒவ்வொரு சக்தியும் பரமாத்மாவினுடைய கொடுப்பினை (தந்தது) ஆகும். ஆக, பரமாத்மா தந்தை தந்தது உங்களுடையது ஆகி விடும். உங்களுடையதை எப்படி வேண்டுமாகிலும் உபயோகியுங்கள். எப்பொழுது வேண்டுமாகிலும் உபயோகியுங்கள். இந்த மாதிரி அனைத்து சக்திகளும் உங்கள் அதிகாரத்தின் கீழ் இருக்கும். அனைத்து கர்மேந்திரியங்களும் உங்களுடைய கட்டளைக்குக் கீழ் இருக்கும். இதுவே சுயராஜ அதிகாரி, மாஸ்டர் சர்வ சக்திவான் என்று அழைக்கப்படுகிறது. அப்படி இருக்கிறீர்களா பாண்டவர்களே? மாஸ்டர் சர்வ சக்திவானாகவும் இருப்பது, மேலும் சுயராஜ்ய அதிகாரியாகவும் இருப்பது. என்னை அறியாமலேயே வாயிலிருந்து வெளி வந்து விட்டது என்று கூறக்கூடாது. யார் ஆர்டர் கொடுத்தது? எப்படி வெளி வந்தது? பார்க்க விரும்பவில்லை தான் ஆனால் பார்த்து விட்டேன், செய்ய விரும்பவில்லை ஆனால் செய்து விட்டேன், இப்படியெல்லாம் யாருடைய கட்டளைப்படி நடக்கிறது? இதனை அதிகாரி நிலை என்று சொல்வதா? அல்லது அடிமை நிலையா? ஆக அதிகாரியாகுங்கள், அடிமையாக அல்ல.

எல்லோரும் வந்து சேர்ந்து விட்டனர். இந்த ஒட்டு மொத்தமான கூட்டத்திற்காக! எவ்வளவு ஆவலாக இருக்கிறது. பாபாவிற்கும் குழந்தைகளின் இந்த கூட்டம் மிக நன்றாக இருக்கிறது. தனது குடும்பத்தினரை பார்ப்பதற்குண்டான வாய்ப்பும் கிடைக்கிறது. எங்களது பெரிய குடும்பத்தை சென்று பார்த்து வந்தேன் என்று யாருக்கும் சொல்லாம் தானே! மதுபனில் அனைத்திற்கும் தீர்வு கிடைக்கிறது. தண்ணீர் கிடைத்ததா? சாப்பிடுவது, உறங்குவது, சந்திப்பது, எல்லாம் கிடைத்ததா? எப்படி மதுபனில் அனைவரும் மிகவும் குஷியாக

இருக்கிறீர்களோ அவ்வாறே சதா குஷியாகவும், சந்தோஷமாகவும் இருக்சி வேண்டும். ஆன்மிக ரோஜாக்களல்லவா! நாலா புறமும் பாருங்கள், அன்று மலர்ந்த ஆன்மீக ரோஜா மலர்களாகவே தெரிகின்றனர். காய்ந்து போன மலர்கள் அல்ல மலர்ந்து விரிந்த ரோஜாக்கள். ஆக சதா இவ்வாறு குஷியுடன், மலர்ந்த முகத்துடன் இருக்க வேண்டும். உங்கள் முகத்தைப் பார்த்து பிறர், மிகவும் குஷியாக இருக்கிறீர்களே, உங்களுக்கு அப்படி என்ன கிடைத்துள்ளது என்று கேட்க வேண்டும். ஒவ்வொருவருடைய முகமும் பாபாவினுடைய அறிமுகத்தை தரட்டும். எப்படி சித்திரங்களும் உருவங்களும் அறிமுகத்தைத் தருகின்றனவோ அப்படி உங்களுடைய முகம் பாபா கிடைத்துள்ளார் என்கிற அறிமுகத்தை தரட்டும். நல்லது. அனைவரும் நலமாக இருக்கிறீர்களா? வெளிநாட்டிலிருந்தும் வந்திருக்கிறார்கள். இங்கு மிக நன்றாக இருக்கிறது அல்லவா! (மோகினி சாகோதரி, நியூயார்க்) குழப்பமான விசயங்களை கேட்பது இங்கு இல்லையல்லவா! மிக நல்லது. எல்லோரும் ஒன்றாக வந்து சேர்ந்து விட்டீர்கள். மிக நல்லது. இரட்டை வெளிநாட்டினர் போதையில் (நஷா) இருக்கிறார்கள். உண்மையிலேயே போதை இருந்தால், தான் இரட்டை வெளிநாட்டினர் என்கிற அளவுக்கு போதை இருக்கிறதா! சுயராஜ்ய அதிகாரி மற்றும் விஷ்வ அதிகாரி இரட்டை நஷா! பாப்தாதாவிற்கும் மிக நன்றாக இருக்கிறது. ஏதேனும் குரூப்பில் இரட்டை வெளிநாட்டவர்கள் இல்லை என்றால் நன்றாக இருப்பது இல்லை. உலகத்திற்கே தந்தையானவர் இல்லையா! அப்படியானால் உலகத்தின் ஆத்மாக்கள் வேண்டுமல்லவா! தாய்மார்கள் இல்லையென்றாலும் அதில் ஒரு கலகலப்பு இருக்காது, பாண்டவர்கள் இல்லை என்றாலும் ஜொலிப்பு குறைந்து போகிறது. எந்த சென்டரில் பண்டவர்களே இல்லாது வெறும் தாய்மார்கள் மட்டும் இருந்தால் அது நன்றாக இருக்குமா? அதே போல் சக்திகள் இல்லாது வெறும் பாண்டவர்கள் மட்டும் இருந்தால் அந்த சென்டர் அழகாக இருக்காது. இருபாலாரும் தேவை. குழந்தைகளும் வேண்டும். எங்கள் பெயரை ஏன் எடுப்பதில்லை என்று குழந்தைகள் கேட்கிறார்கள். குழந்தைகள் இருப்பதும் அழகுதான்.

சேவை -மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேஷ்: சேவையும் மிக அருகில் வருவதற்கான ஒரு வாய்ப்பு. அப்படியில்லாது, குரூப்பில் வரும்பொழுது விசேஷமாய் தாதிமார்களின் சந்திப்பு கிடைக்காது.

சேவையில் வந்தீர்கள் என்று சொன்னால் விசேஷமாய் தாதிமார்கள் சந்திக்கிறார்கள் இல்லையா! நல்லது. மகாராஷ்டிராகாரர்கள் எழுந்திருங்கள். மகாரஷ்டிராவில் உதவிக் கரங்கள் அதிகம். ஆகவே எப்படி பெயரோ அப்படியே எண்ணிக்கையும் மகா அதிகமாக உள்ளது. மகாராஷ்டிராவும் வாய்ப்பை எடுத்துக் கொண்டிருக்கிறது என்கிற செய்தியையும் பாப்தாதாவும் கேள்வியுற்றார். இவ்வளவு சென்டர்கள் மூலம் இந்த 3-லட்சம் பூர்த்தியாக வேண்டும். மகாராஷ்டிராவும் செய்து கொண்டிருக்கிறது, குஜராத்தும் செய்து கொண்டிருக்கிறது. பஞ்சாப்பும் செய்து கொண்டிருக்கிறது. அப்படியானால் 3-லட்சம் பூர்த்தியாகி விடும். மேலும் வேறு பலரும் செய்து கொண்டிருக்கின்றனர். 3-லட்சம் என்பது பெரிய விஷயமல்ல. 3லட்சத்தை பூர்த்தி செய்து விடுவீர்கள் தானே! பஞ்சாப், செய்வீர்களா? குஜராத்தும் செய்வீர்களா? மேலும் பிறர் செய்து கொண்டிருக்கின்றனர். அடுத்த சீசன் வரும்போது 9-லட்சம் பிராமணர்கள் ஆகி விட்டனர் என்கிற சந்தோஷ செய்தி பாப்தாதாவிற்கு கிடைக்க வேண்டும். இப்பொழுது 9-லட்சம், 9-கோடி வரை செல்ல வேண்டும். நல்லது. சத்யுக ஆரம்பத்தில் 9-லட்சம் பேர் இருப்பார்கள், திரோதா யுகத்தில் அது அதிகரிக்குமா? அல்லது அதிகரிக்காதா? ஆக தயார் செய்ய வேண்டுமல்லவா, மிக நல்லது. மகராஷ்டிரா சதா மகான் ஸ்திதியில் ஸ்திரமாக இருக்க கூடியவர்கள். நல்லது.

போபால்: போபாலில் கூட விருத்தி ஆகிக் கொண்டிருக்கிறது அல்லவா! 3-லட்சத்தில் போபால் எவ்வளவு சேர்க்கும் (50000-போபால் கொண்டு வருமா?) நல்வாழ்த்துக்கள். மிகவும் நல்லது. அதில் என்ன பெரிய விஷயம். விஷ்வ கல்யாணகாரி என்றால் 50000ம் பேருக்கு ஏன் மங்களம் செய்விக்க மாட்டோம், ஆகி விடும். மிகவும் நல்லது, வாய்ப்பினை (சான்ஸ்) எடுத்துள்ளீர்கள். எனவே சான்ஸ்லர் ஆகி விட்டீர்கள். தாய்மார்கள்கூட பாண்டவர்களும், ஆகி விட்டீர்கள். மிகவும் நல்லது. வாய்ப்பினை எடுத்துக் கொள்வது என்பது எப்பொழுதுமே முன்னால் இருக்க வேண்டும். ஒவ்வொரு விஷயத்தின் வாய்ப்பினை எடுப்பதில் தவறான காரியத்தில் அல்ல, நேரான காரியத்தில்! போபால் கூட ஆதியில் இருந்து மிக நன்றாக நிமித்தமாகியுள்ளது. பாப்தாதா ஒவ்வொரு மண்டலத்திற்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறா சதா விருத்தி அடைந்து கொண்டேயிருங்கள்.

போக்குவரத்துத் துறை: மிக நல்லது. போக்குவரத்து துறையினர் அனைவரையும் விமானத்தின் மூலம் உயரே பறக்கச் செய்யக் கூடியவர்கள். விமானம் இங்கு வரைக்குத்தான் பறக்கு ஆனால் நீங்களோ பரந்தாமம் வரைக்கும் பறக்க செய்வீர்கள். மூன்று லோகங்கள் வரை சுற்றி வரச் செய்யக்கூடியவர்கள் போக்குவரத்து துறையினர். நல்லது. ஒவ்வொரு துறையினர் அவரவர் வர்க்கத்தினரை எழுப்புவதில் மிகவும் உற்சாகம் ஆர்வத்தோடு இருக்கின்றனர். போட்டியும் போடுகின்றனர். பாண்டவர்கள் பாப்தாதாவிற்கு ஒரு காட்சியை காண்பித்தனர். அது எது? இந்த சாந்தி வனத்தினுடைய காட்சியை பார்த்தோம், ஒவ்வொரு வர்க்கத்தினரும் அவரவர் வர்க்கத்தினருக்கு மேஜைகள் போட்டு ஒருவர் மற்றொருவரோடு போட்டியிட்டு நாங்கள் முன்னே, நாங்கள் முன்னே, நாங்கள் தான் முன்னே என்று போட்டியிடுகின்றனர். (அவரவர்கள் சித்திரங்கள், புத்தகங்கள், பிரதிகளை விநியோகித்துக் கொண்டிருக்கின்றனர்). பாப்தாதா முக்கியமாக டிவியில் பார்த்தார். மேஜைகளை அலங்கரித்து வைத்துள்ளனர். நல்லது. உற்சாகம், ஆர்வம் மிக நன்றாக உள்ளது ஆனால் போட்டியில் பொறாமை கூடாது. போக்குவரத்து வர்க்கமும் மிக நல்ல உற்சாகம் ஆர்வத்தில் இருக்கின்றனர். நவீன திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். நல்லது. பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி.

பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் வர்க்கம்: அறிவியல் மற்றும் பொறியலார், நீங்கள் மிக நல்ல திட்டம் தீட்டியிருக்கிறீர்கள். எப்படி தற்கால அறிவியில் மிக வேகமாக போய்க் கொண்டிருக்கிறதோ, அதே போன்று நீங்களும் விரைவாக திட்டம் தீட்டுங்கள். அப்போது மிக சீக்கிரமாக ஸ்தாபனையின் கட்டிடமும் தயாராகி விடும். அப்பொழுது தானே விநாசம் ஆகும். ஸ்தாபனை காரியத்தின் கட்டிடம் மிக சீக்கிரமாய் தயார் ஆகட்டும். பொறியிலாரும் செய்யக்கூடும். அறிவியல்காரர்களும் செய்யக்கூடும். இப்பொழுது மிக வேகமாக ஏதேனும் திட்டம் போடுங்கள். திருஷ்டி கொடுங்கள். அந்த திருஷ்டியின் மூலம் சிருஷ்டி மாறிப் போகட்டும். அப்படித்தானே! கடைசி நேரத்தில் உங்களின் ஒரு வினாடி திருஷ்டி கூட அற்புதங்களைச் செய்யும். கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டி வராது. அப்படிப்பட்ட ஏதேனும் ஒரு புதுமையைக் கண்டு பிடியுங்கள். நல்லது. வர்க்கத்தின் சேவை நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. நல்லது.

குஜராத் மிக நன்றாக (ஜம்ப்) தாண்டியிருக்கிறது. (குஜராத்தில் பிப்ரவரி 23'ல் 1-லட்சம் பேர் கலந்து கொள்ளும் விசாலமான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கின்றனர்). குஜராத்தினுடைய டீச்சர்கள் மற்றும் பாண்டவர்கள் எழுந்திரியுங்கள். மிகக் குறைவாக வந்துள்ளனர். ஏற்பாடு செய்து கொண்டிருப்பார்கள் போலும்! நல்லது. இப்பொழுது அனைவரும் குஜராத்தை பின்பற்றுவார்கள். ஒருவர் மற்றொருவரை பார்த்து உற்சாகம் வரக்கூடும். நல்லது, அமர்ந்து கொள்ளுங்கள். மிகவும் நல்லபடியாக தைரியம் வைத்துள்ளீர்கள். அவ்வாறு தைரியம் கொண்டதற்காக பாப்தாதாவும் முன்னதாகவே குஜராத்திற்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

நல்லது. இப்பொழுது ஒரே வினாடியில் நிராகாரி ஆத்மவாகிய நிராகார பாபாவின் அன்பு நினைவில் மூழ்கிப்போய் விடுங்கள். (பாபா டிரில் செய்விக்கிறார்).

நாலா பக்கங்களிலுமுள்ள அனைத்து சுயராஜ்ய அதிகாரி, சதா சாட்சி நிலையின் சீட்டில் செட்டாகி இருக்கக்கூடிய அசையாது உறுதியான ஆத்மாக்கள், சதா, வள்ளல் தன்மையும், நினைவில் மூலம் அனைவருக்கும் ஞானம், சக்தி, குணத்தை வழங்கக் கூடிய, இரக்கமுள்ள ஆத்மாக்களுக்கு, சதா தனது முகத்தின் மூலம் பாபாவை வெளிப்படுத்தக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா குஷி நிறைந்த குஷியிலேயே மூழ்கிப்போன ஆத்மீக ரோஜாக்களுக்கு, ஆன்மீக ரோஜா குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

தாதிகளுடன்: இந்த ஜுவாலையின் மூலமே விநாச ஜுவாலை சக்தியுடன் கிளம்பும். இப்பொழுது நிகழ்ச்சிகள் செய்கின்றனர். பிறகு யோசிக்க ஆரம்பித்து விடுகின்றனர். யோகத்தால் விகர்மங்கள் விநாசம் ஆகும். பாவ கர்மங்களினுடைய பாரம் எரிந்து சாம்பலாகும், சேவையில் புண்ணியத்தினுடைய கணக்கு சேமிக்கப்படுடும். ஆக புண்ணியத்தினுடைய கணக்கை சேமித்து வருகிறீர்கள் ஆனால் முந்தைய ஒரு சில சம்ஸ்காரங்களுடைய பாரம் யோக ஜுவாலையின் மூலமே கருகிப்போகும். சாதாரண யோகத்தால் அல்ல. இப்பொழுது என்ன நடக்கிறது என்றால், யோகம் செய்கிறார்கள், ஆனால் பாவம்

பொசுங்கும் அளவுக்கு ஜுவால ரூபம் இருப்பதில்லை, எனவே சிறிது நேரம் முடிந்து போகிறது பிறகு மீண்டும் வெளி வந்து விடுகிறது. எனவே இராவணனைப் பாருங்கள், எரிக்கிறார்கள், பிறகு எலும்புகளையும் நீரில் கரைக்கிறார்கள் முற்றிலும் கரைந்து போகட்டும் என. கடந்த கால பலஹீனமான சம்ஸ்காரங்கள் முற்றிலும் அழிந்து போகட்டும் என்று, ஆனால் அவ்வாறு அழிவதில்லை. இறக்கின்றனர், ஆனால் கருகிப் போவதில்லை, இறந்த பிறகு மீண்டும் உயிர் வந்து விடுகிறது ஆனால் சம்ஸ்கார மாற்றத்தின் மூலமே உலக மாற்றம் ஏற்படும். எப்பொழுது சம்ஸ்காரங்களின் லீலையே நடக்கிறது. சம்ஸ்காரம் இடையிடையே வெளி வருகிறது அல்லவா. பெயர் விலாசமே இல்லாதவாறு அழிந்து போக வேண்டும். சம்ஸ்கார மாற்றம் என்றால், இது தான். விசேஷமாக, கோடிட்டு வைக்க வேண்டிய விஷயம். சம்ஸ்காரம் மாற்றம் இல்லையென்றால் வீணான சங்கல்பங்களை ஈர்க்கின்றனர். வீணான சமயங்களும் இருக்கின்றன. வீணான நஷ்டமும் ஏற்படுகிறது ஆனால் அப்படி நடக்கக் கூடாது. (காலம் செய்விக்குமா, அல்லது சுயம் தனது புருஷார்த்தமா) இரண்டும் சேர்ந்து செய்யும். காலமும் சுயம் தனது பருஷார்த்தம் செய்விக்கும். சம்ஸ்கார சந்திப்பின் மகான் நாட்டியம் மகிமை செய்யப்படுகிறது. அந்த ஞாபகார்த்தத்தில் உள்ள மகா நாட்டியம், அந்த சம்ஸ்காரங்களின் சந்திப்பின் மகா நாட்டியமாகும். இப்பொழுது நாட்டியம் ஏற்படுகிறது ஆனால் மகா நாட்டியம் நடைபெறவில்லை. (அந்த மகாநாட்டியம் ஏன் நடைபெறுவதில்லை?) கீழே கோடிடப் படவில்லை, திடத்தன்மையில்லை, சோம்பேறித்தனம், விதவிதமாய் உள்ளது. நல்லது. நீங்கள் அனைவரும், சரிதானே!

தாதிஜியோடு: சரியாக சோதனை நடந்தேறியதா, அனைத்தும் ஓ.கே. தானே. சரியாகத்தான் இருக்கும். பிறகும் மிக நன்றாக செல்வீர்கள். அனைவரது ஆசீர்வாதம் உங்களை நன்றாக்கி விடுகிறது. உங்களுடைய சரீரத்தினுடைய வயது கணக்கின்படி பார்த்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சி தான். இந்த சமயத்தில் கூட இவ்வளவு சேவை செய்கின்றனர், இவ்வளவு இங்கு அங்கு அலைகின்றனர், இதுவும் கூட நிச்சயிக்கப்பட்ட ஒன்றுதான். அவ்வாறு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள் தான்! நல்லது. ஓம் சாந்தி.

✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻
✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻

## 28.02.2003 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சேவையின் கூடவே தற்போது சம்பன்னமாவதற்கான (முழுமை) திட்டத்தையும் தீட்டுங்கள், கர்மாதீத் நிலையை முழு மூச்சாக இருங்கள்! (சிவ ஜெயந்தி)

இன்று சிவ தந்தை தனது சாலிக்கிராம் குழந்தைகளோடு, தனது மற்றும் குழந்தைகளின் அவதார ஜெயந்தியை கொண்டாட வந்திருக்கிறார். இந்த அவதார ஜெயந்தி எவ்வளவு அற்புதமானது! நாலா புறங்களிலுமுள்ள அனைத்து குழந்தைகள் ஓடி ஓடி வந்து சேர்ந்திருக்கிறார்கள். தந்தையினுடைய ஜெயந்தி மற்றும் தங்களுடைய ஜெயந்தியை கொண்டாடுவதற்காக தந்தை மற்றும் குழந்தைகளின் ஜெயந்தி அதாவது அவதார நாள் ஒரே தினமாக உள்ளது. தந்தை மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் ஒரே நாளில் எவ்வளவு ஆச்சரியம் இது! ஆக, இன்று நீங்கள் அனைவரும் சாலிக்கிராம் குழந்தைகள். பாபாவிற்கு வாழ்த்துக்களை வழங்கு வதற்காக வந்திருக்கிறீர்களா? அல்லது பாபாவிடமிருந்து வாழ்த்துக் களைப் பெறுவதற்காக வந்திருக்கிறீர்களா? கொடுப்பதற்கும் வந்திருக்கிறீர்கள், எடுப்பதற்கும் வந்திருக்கிறீர்கள். கூடவே இருப்பதினுடைய அடையாளம் குழந்தைகளாகிய நீங்கள் மற்றும் தந்தையிடையே மிக மிக அன்பு, சிநேகம் உள்ளது. எனவே பிறப்பும் கூடவே அமைந்துள்ளது. மேலும் ஒன்றாக இணைந்தே முழு பிறவியில் வாழ்கிறீர்கள் அதாவது துணையோடு இருக்கிறீர்கள். இந்தளவிற்கு அன்பை பார்த்திருக்கிறீர்களா! தொழிலும் கூட தந்தைக்கும் குழந்தைக்கும் உலக மாற்றம் செய்யக் கூடிய ஒரே தொழிலாக இருக்கிறது. மேலும் உறுதிமொழியும் என்னவாக இருக்கிறது. பரந்தாமம், இனிமையான வீடு இரண்டிற்கும் கூடவே

ஒன்றாக செல்வீர்களா, அல்லது முன் பின் செல்வீர்களா? கூடவே செல்ல வேண்டும் அல்லவா! ஆக, இப்படிப்பட்ட அன்பு, சிநேகம் உங்களிடமும் தந்தையிடமும் உள்ளது. தந்தையும் தனியாக ஏதும் செய்ய முடியாது, குழந்தைகளும் அவர் இல்லாது ஒன்றும் பண்ண முடியாது. எனவே தான் பிராமாணர்களாகிய உங்களைப் படைப்பதற்கு பிரம்மாபாபாவினுடைய ஆதாரத்தை எடுத்துக் கொண்டார், பிராமணர்கள் இல்லாது தந்தையும் ஒன்றும் செய்ய முடியாது. எனவே இந்த அலௌகீக அவதார பிறந்த நாள் அன்று தந்தை குழந்தைகளுக்கும், குழந்தைகள் தந்தைக்கும் பத்மாபதம் பல கோடி முறை வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர். நீங்கள் தந்தைக்கு கொடுக்கிறீர்கள். தந்தை உங்களுக்குத் தெரிவிக்கிறார். அமிர்தவேளையில் இருந்து அதற்கு முன்னரும் கூட குழந்தைகளின் வாழ்த்துக்கள், சிலர் கடிதங்கள் மூலமாக, சிலர் வாழ்த்து மடல் மூலமாக, உள்ளத்தின் இனிமையான கீதங்கள் பாபாவிற்கு கிடைத்துள்ளன. மேலும் நாலா பக்கத்திலிருந்தும் வந்திருக்கக் கூடிய உள்நாட்டு, வெளி நாட்டு குழந்தைகள் சூட்சுமமாய் பாப்தாதாவிற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் இப்பொழுது பார்க்கிறார். அவை வந்து அடைந்த வண்ணமாய் இருக்கின்றன. குழந்தைகளிடமும் பாபாவின் சிநேக ஒலி வந்தடைகிறது. குழந்தைகளுடைய உள்ளத்து அன்பொலி பாபாவைச் சென்று சேர்கிறது. நாலா பக்கங்களிமுள்ள குழந்தைகள் குஷியில் ஆடிக் கொண்டிருக்கின்றனர், ஆஹா பாபா, ஆஹா பாபா! என்று. சாலிக்கிராம் ஆத்மாக்களாகிய நம்முடைய பாக்கியம் ஆஹா என்கிற பாடல்களை பாடிக் கொண்டிருக்கின்றனர். இந்த உங்களின் பிறந்த நாளில் ஞாபகார்த்தம் துவாபர யுகத்தில் இருந்து பக்தர்களும் கொண்டாடி. வருகின்றனர். பக்தர்களும் பாவனையில் குறைந்தவர்கள் அல்ல, ஆனால் பக்தர்கள் பக்தர்களே, குழந்தைகள் அல்ல. அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிறார்கள். நீங்கள் முழு கல்பத்தில் ஒரே ஒரு முறை அவதாரத்தின் மகத்துவத்தை கொண்டாடுகிறீர்கள். அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் விரதம் எடுக்கிறார்கள். மேலும் விரதம் வைக்கவும் செய்கிறார்கள், நீங்கள் ஒரே ஒரு முறை விரதத்தை எடுத்துக் கொள்கிறீர்கள். உங்களை அவர்கள் காப்பியடித்து இருக்கின்றனர் ஆனால் உங்களுடைய மகத்துவம், மற்றும் அவர்களுடைய நினைவார்த்தத்தின் மகத்துவத்தில் வித்தியாசம்

உள்ளது. அவர்களும் பவித்திரத்தாவின் விரதத்தை மேற்கொள்கின்றனர் ஆனால் ஒரே ஒரு நாளுக்காக மட்டும் ஒவ்வொரு ஆண்டும் விரதம் மேற்கொள்கின்றனர்; ஆனால் நீங்கள் அனைவரும் திவ்ய பிறவி எடுத்த நாளில் இருந்து விரதம் மேற்கொண்டு வருகிறீர்கள். வெறும் பிரம்ச்சரியம் மட்டும் அல்ல, முழுமையான தூய்மையின் விரதத்தை எடுத்துள்ளீர்களா? பாண்டவர்கள் சம்பூர்ண தூய்மையின் விரதத்தை எடுத்துள்ளீர்களா, அல்லது வெறும் பிரம்மச்சரியம் மட்டும் போதுமா? பிரம்மச்சரியம் என்பது அஸ்திவாரம், ஆனால் வெறும் பிரம்மச்சரியம் மட்டும் போதாது, கூடவே மேலும் நான்கும் உள்ளன. அந்த நான்கிற்கும் (கோபம், லோபம், மோகம், அகங்காரம்) சேர்த்து விரதம் எடுத்துள்ளீர்களா? அல்லது ஒன்றே ஒன்றிற்கு மட்டும் தான் எடுத்துள்ளீர்களா, சோதித்துப் பாருங்கள். கோபம் கொள்வதற்கு அனுமதி உள்ளதா? இல்லை தானே? கொஞ்சம் கொஞ்சம் கோபப்பட வேண்டி வந்து விடுகிறது அப்படியா? படலாமா? செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பாண்டவர்கள் சொல்லுங்கள். கோபப்பட வேண்டியதில்லை தானே? சரி, பாப்தாதா பார்க்கிறார், கோபம் மற்றும் அதன் கூட இருக்கும் பிற துணைகள், மகா பூதத்தை தியாகம் செய்தாகி விட்டது, ஆனால் இப்படி இல்லத்து தாய்மார்களுக்கு பெரிய பிள்ளைகள் மீது அவ்வளவு மோகம் இருக்காது, ஆனால் பேரன் பேத்திகளிடம் மிகவும் மோகம் இருக்கும், சின்ன சின்ன குழந்தைகள் மிகவும் அன்புக்குரியவர்களாக இருப்பார்கள். ஆக பாப்தாதா என்ன பார்க்கின்றார், குழந்தைகள் ஐந்து விகாரங்களாகிய இந்த மகா பூதங்கள் இவைகளோடு அன்பு அவ்வளவாக இல்லை, ஆனால் இந்த விகாரங்களின் குஞ்சு குட்டிகளாகிய சிறு சிறு அம்சங்கள், வம்சங்கள் அவைகளோடு இன்னும் கூட கொஞ்சம் கொஞ்சம் அன்பு உள்ளது. அப்படித் தானே! அவ்வப்போது அந்த மாதிரி அன்பு ஏற்பட்டு விடுகிறது இல்லையா தாய்மார்களே! இரட்டை வெளிநாட்டினருக்கு கோபம் வருவதில்லையே! அனேகர் மிக மிக புத்திசாலித்தனமாக பேசுகின்றனர். என்ன பேசுகிறார்கள் சொல்லட்டுமா? சொல்லவா? இப்பொழுது கூறினால் அவைகளை இன்றே விட்டு விட வேண்டும்? தயாரா? விட்டு விடுவீர்களா, அல்லது பைலில் (கோப்பு) மட்டும் காகிதங்களை சேர்த்து வருவீர்களா? எப்படி ஒவ்வொரு ஆண்டும் செய்கிறீர்களோ, அப்படி உறுதிமொழியின் பைலில் பாபாவிடம் மிக பெரியதாய் உள்ளது. இப்பொழுது கூட இந்த ஆண்டின்

உறுதிமொழியின் மற்றுமொரு காகிதத்தை பைலில் சேர்த்து விடுவீர்களா? அப்படி இல்லை தானே! முடிவாக முடித்து விடுவீர்களா, அல்லது பைலில் கிடப்பாக போட்டு விடுவீர்களா? என்ன செய்யப் போகிறீர்கள். டீச்சர்கள் சொல்லுங்கள். என்ன செய்யப் போகிறீர்கள். இறுதியா! கை உயர்த்துங்கள். வெறும் உறுதிமொழி எடுத்தால் மட்டும் போதாது. பாப்தாதா பிறகு சற்று ரூபத்தை மாற்றி (சற்று கண்டிப்புடன்) காண்பிப்பார், சரியா? இரட்டை வெளிநாட்டினர்கள் இறுதியாக முடித்து விடுவீர்களா? கை உயர்த்துங்கள். யார் முடிக்கப் போகிறீர்களோ அவர்களை டி.வியில் படம் எடுங்கள். கையை பெரிதாக உயர்த்துங்கள், சின்னதாக அல்ல, நல்லது. சரி. இப்போது கேளுங்கள், குழந்தைகள் மற்றும் தந்தையின் விஷயங்கள் எப்படி இருக்கும்? பாப்தாதா புன்சிரிக்கின்றனர். பாபா கூறுகிறார், கோபம் ஏன் செய்தீர்கள்? பதிலாக கூறுகிறார்கள், நான் கோபிக்கவில்லை, ஆனால் கோபிப்பதற்கு தூண்டப்பட்டேன். இதில் பாபா என்ன சொல்வார்? பிறகும் கூட என்ன சொல்கிறார்கள், பாபா நீங்களே இங்கு இருந்தீர்களானால், உங்களுக்கும் கூட அம்மாதிரி (கோபம்) வந்து விடும், இப்படி இனிமையாக பேசுகின்றனர். அப்புறம் கூறுகிறார்கள், நிராகாரத்தில் இருந்து இந்த உலகத்தில் ஒரு உடலை எடுத்து வாழ்ந்து பாருங்கள், அப்போது தெரியும் என்கிறார்கள். இப்படிப்பட்ட இனிமையான குழந்தைகளைப் பார்த்து பாபா என்ன சொல்வார்? இருப்பினும் பாபா கருணை உள்ளமாக, இருந்து தான் ஆக வேண்டியுள்ளது. பாபா கூறுகிறார், இப்பொழுது மன்னித்து விடலாம், ஆனால் மேற்கொண்டு செய்யக் கூடாது, ஆனால் இதற்கு நல்ல நல்ல பதில் தருகின்றனர்.

ஆக, தூய்மை பிராமணர்களாகிய உங்களின் அனைத்திலும் மேலான அலங்காரமாகும். எனவே உங்களது உருவங்களை (சிலைகளை) எவ்வளவு அலங்காரம் செய்கிறார்கள்! இது தூய்மையினுடைய நினைவார்த்த அலங்காரமாகும். சம்பூர்ண பவித்திரத்தாவாக இருக்க வேண்டும். ஏதோ பெயருக்கு பவித்திரத்தா, மாத்திரம் பவித்திரம் கிடையாது. முழுமையான பவித்திரத்தா பிராமணர்களாகிய உங்கள் வாழ்க்கையின் அனைத்திலும் மேலான பெரிய சொத்து ஆகும். கௌரவம் மற்றும் பெர்சனாலிட்டியும் ஆகும். எனவே பக்தர்களும் ஒரு நாள் பவித்திரத்தாவின் விரதம் மேற்கொள்கின்றனர். இது உங்களையே அவர்கள் காப்பியடிக் கிறார்கள். அடுத்து உண்பது, குடிப்பது,

இவைகளில் விரதம் மேற் கொள்கின்றனர். உணவு வகைகளிலும், விரதம் அவசியமாகிறது. ஏன்? பிராமணர்களாகிய நீங்களும் உணவு வகைகளில் உறுதியாக விரதம் எடுத்துள்ளீர்கள் இல்லையா? அனைவரிடமும் முதலில் மதுபன் வருவதற்காக பாரம் பூர்த்தி செய்யும்போது நிரப்பு கிறீர்கள் இல்லையா? உணவு வகைகளில் தூய்மையாக இருக்கிறீர் களா? என்று எழுதி வாங்குகிறீர்கள் இல்லையா? ஆக, உணவு வகைகளில் விரதம் உறுதியாக இருக்கிறதா? மிக உறுதியாக இருக்கிறதா? அல்லது அவ்வப்போது பலஹீனம் ஏற்பட்டு விடுகிறதா? இரட்டை வெளிநாட்டினர் என்றால் டபுள் மடங்கு உறுதியாக இருக்குமல்லவா? ஆக, இரட்டை வெளிநாட்டினர், டபுள் உறுதியாக உள்ளீர்களா? அல்லது எப்பொழுதாவது களைத்துபோகும்போது இன்று மட்டும் கொஞ்சம் சாப்பிட்டுக் கொள்ளலாம், என்று நினைக்கிறீர்களா? கொஞ்சம் இம்மாதிரி தளர்ந்து போகிறீர்களா? உணவு வகைகளில் உறுதி நிலையாக உள்ளதா? எனவே பக்தர்களும் கூட உணவு வகைகளில் இன்று விரதம் மேற்கொள்கின்றனர். மூன்றாவது விரதம் கண்விழிக்கும் விரதம். இரவு முழுவதும் கண்விழிக்கிறீர்கள் இல்லையா? பிராமணர்களாகி நீங்களும் அஞ்ஞான உறக்கத்திலிருந்து விழித்தெழுவதற்கான விரதத்தை மேற்கொள்கிறீர்கள். இடையிடையே அஞ்ஞான நித்திரை வருவதில்லை தானே! பக்தர்கள் உங்களை பின்பற்றுகிறார்கள், நீங்கள் பக்காவாக இருக்கிறீர்கள், எனவே தானே அவர்கள் உங்களை பின்பற்றுகிறார்கள். ஒருபொழுதும். அஞ்ஞானம் அதாவது பலஹீனம், சோம்பேறித்தனம், அதாவது அலட்சியம் என்ற உறக்கத்தில் உறங்குவதில்லையே! அல்லது கொஞ்சம் கொஞ்சம் கண் சொக்கி விழுந்தால் பரவாயில்லையா? உறக்கத்தில் தலை தொங்கி கவிழ்கிறதா? இம்மாதிரி அமிர்த வேளையிலும் தூங்கி வழிகின்றனர் ஆனால் நமது ஞாபகார்த்தத்தில் பக்தர்கள் என்னென்ன காப்பி அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிப் பாருங்கள். அவர்கள் மிக உறுதியாக இருக்கின்றார்கள். என்ன ஆனாலும் சரி, ஆனால் விரதத்தைக் கைவிடுவதில்லை, இன்றைய நாளில் பக்தர்கள் விரதம் வைக்கின்றார்கள், உண்பது, குடிப்பது இவைகளில் கூட நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள். பிக்னிக் செய்வீர்களா? கேக் வெட்டுவீர்கள் இல்லையா? ஏனென்றால் நீங்கள் பிறவி எடுத்தலிருந்து விரதம்

மேற்கொண்டு வருகிறீர்கள். எனவே இன்றைய நாளில் பிக்னிக் செய்வீர்கள்.

பாப்தாதா இப்பொழுது குழந்தைகளிடமிருந்து என்ன விரும்புகிறார், அதை நீங்களும் அறிவீர்கள்! மிகவும் நல்ல நல்ல சங்கல்பம் கூட செய்கிறீர்கள். அந்த சங்கல்பங்களை கேட்டு கேட்டு குஷி அடைகிறார்கள். சங்கல்பம் என்னவோ செய்கிறீர்கள் ஆனால் பிறகு என்ன நடக்கிறது? சங்கல்பம் ஏன் பலஹீனமாகி விடுகிறது? அதை விரும்பவும் செய்கிறீர்கள், ஏனெனில் பாபாவோடு மிகுந்த அன்பு இருக்கிறது. பாப்தாதாவோடு அனைத்துக் குழந்தைகளுக்கும் உளப்பூர்வமான அன்பு உள்ளது என்பதை பாபாவும் அறிவார். மேலும் அன்பில் அனைவரும் 100-சதவிதம் என்ன? அதையும் விட அதிகமாக அன்பு உள்ளது மேலும் அன்பைப் பொருத்த அளவில் அனைவரும் பாஸ் தான் பாபாவும் ஒத்துக் கொள்கிறார் ஆனால் என்னவென்றால் இந்த ஆனால் என்கிற வார்த்தை வருகிறது. வருகிறதல்லவா? பாண்டவர்களே, இந்த ஆனால் உங்களுக்கும் வருகிறதா? இடையிடையே இந்த ஆனால் வந்து விடுகிறது. இல்லையென்று சொல்ல மாட்டேன் என்கிறார்கள். அப்படியானல் இருக்கிறது என்று அர்த்தம். பாப்தாதா ஒரு விஷயத்தைக் கவனித்துள்ளார்கள், பெரும்பாலோர் செய்த உறுதிமொழியில் பலஹீனமாவதற்கு ஒரே வார்த்தை யோசித்துப் பாருங்கள், அந்த வார்த்தை என்னவென்று தெரிகிறதா? டீச்சர்களே சொல்லுங்கள். பார்க்கலாம் அது என்ன வார்த்தை, பாண்டவர்கள், அந்த வார்த்தை என்ன வென்று சொல்லுங்கள் பார்க்கலாம். அந்த ஒரு வார்த்தையானது நான்! அபிமான ரூபத்தில் கூட இந்த நான் வருகிறது. பலஹீனப்படுத்துவதிலும் நான் என்பது வருகிறது. நான் சொன்னது, நான் செய்தது, நான் புரிந்து கொண்டது, அதுவே சரி, நான் சொன்னது தான் நடக்க வேண்டும். இது அபிமானத்தின் நான் என்பதாகும். நான் என்பது முழுமையாக பூர்த்தியாகவில்லை என்றால் உள்ளம் உடைந்து போகிறது. என்னால் செய்ய முடியாது, நான் முன்னே செல்ல முடியாது, மிகவும் கஷ்டமானது இந்த பாதை முதலியன, இந்த தேக அபிமானத்தின் நான் மாறி விட வேண்டும். ஆக நான் என்பது எனது சுவமானத்தையும் நினைவூட்டுகிறது. மேலும் தேக அபிமானத்தையும் கொண்டு வருகிறது. நான் என்பது உள்ளத்தையும் சோர்வடையச் செய்கிறது.

மேலும் நான் அக மகிழ்வையும் தருகிறது. இந்த அபிமானத்தின் அடையாளம் என்னவென்று தெரியுமா? எவரிடமேனும் தேக அபிமானத்தின் அம்ச அளவாவது இருக்குமேயானால் அதனுடைய அடையாளம் எப்படி இருக்கும்? அவர்கள் தனது அபிமானம், அவமானத்தை பொறுத்துக் கொள்ள முடியாது. இது சரியில்லை என்று எவரேனும் சொன்னால், கொஞ்சம் பனிவாகி விடுங்கள். அவமானம் ஏற்படும். இது அபிமானத்தின் அடையாளமாகும்.

பாப்தாதா வதனத்தில் புன்சிரிக்கின்றனர், குழந்தைகள் இங்கங்கு சொற்பொழி ஆற்றுகின்றனர். சிவராத்திரியில் நிறைய சொற்பொழிவாற்றுகின்றனர். பாப்தாதாவிற்கு குழந்தைகளின் கருத்து நினைவுக்கு வருகின்றது. அதில் அவர்கள் கூறுகின்றனர், சிவராத்திரியில் கிடாவை பலியிடுகின்றனர், அது மே, மே (நான், நான்) என்று கத்துகிறது. அது போன்றே இந்த சிவராத்திரியில் நீங்களும் பலியிட்டு விடுங்கள். இதை கேட்டு பாபா மிகவும் புன் சிரிக்கின்றார், ஆக இந்த நான் என்பதை நீங்களும் பலி கொடுத்து விடுங்கள். அவ்வாறு பலியாக்க முடியுமா? பாண்டவர்கள் செய்ய முடியுமா? இரட்டை வெளிநாட்டினர் செய்ய முடியுமா? முழு அர்ப்பணமா? அல்லது அரை குறை அர்ப்பணம் தானே. முழு அர்ப்பணம் தானா! இன்று பாப்தாதா கொடி முன்னால் இவ்வாறு உறுதிமொழி எடுக்கச் செய்வார். இன்று உறுதி செய்து விட்டு அப்புறம் அதனை பைலில் சேர்த்து விட வேண்டும். அம்மாதிரி செய்விக்க மாட்டார். என்ன நினைக்கிறீர்கள் தாதிமார்களே இன்று அம்மாதிரி உறுதிமொழி செய்ய வைக்கட்டுமா? முடிவாக உறுதி மொழிப்படி நடப்பார்களா, அல்லது இதையும் பைலில் போட்டு விடுவார்களா? சொல்லுங்கள். தைரியமிருக்கிறதா? கேட்பதிலேயே மூழ்கிப் போய்விட்டனர், கையை தூக்க மாட்டேன் என்கிறார்கள், நாளையே ஒன்றும் ஆகி விடப்போவதில்லை அல்லவா? நாளை மாயை வரும், உங்களைச் சுற்றி சுற்றி வரும். உங்களோடு மாயாவிற்கும் அன்பு உள்ளது அல்லவா? ஏனெனில் இந்நாட்களில் அனைவரும் மிகவும் கோலாகலமாக சேவையினுடைய திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அவ்வளவு சுறுசுறுப்பாக சேவை செய்கிறீர்கள் என்றால், முழு முடிவின் (கடைசி விநாச காலம்) காலத்தை மிக அருகாமையில் கொண்டு வருவதாகும். வெறும் சொற்பொழிவு மட்டும் ஆற்றி வருகிறோம் என்பது கிடையாது. இறுதி

நேரத்தையும் அருகாமையில் கொண்டு வருகிறீர்கள். சேவை மிக நன்றாக செய்கிறீர்கள். பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகிறார், ஆனால் சமயம் அருகாமையில் வந்து கொண்டிருக்கிறது, நீங்கள் கொண்டு வருகிறீர்கள் இம்மாதிரி ஒன்றரை லட்சத்தை கூட்டம் சேர்த்தோம் இது சமயத்தை அருகில் கொண்டு வருவதாகும். இப்போது குஜராத் இதனை செய்து முடித்தது. மும்பை அடுத்து செய்யும். மேலும் சில மண்டலங்கள் செய்ய இருக்கின்றன. ஒரு லட்சம் இல்லாவிட்டாலும் சரி, 50-ஆயிரம் ஆனாலும் சரி, எப்படியோ செய்தியை கூறுகிறீர்கள். செய்தியின் கூடவே முழுமையின் ஏற்பாட்டையும் செய்யுங்கள். விநாசத்தை அழைக்கிறீர்கள் என்றால் நீங்கள் தயாரா? சீக்கிரம் சீக்கிரமாய் பிரதயக்ஷம் ஏற்படும் அளவு அம்மாதிரி திட்டம் தீட்டுங்கள் என்று தாதி கேள்வி எழுப்பினார். பிரத்யக்ஷதா என்பது ஒரு வினாடியின் விஷயமாகும் ஆனால் பிரத்யக்ஷதாவின் முன்னால் பாபா கேட்கின்றார், ஸ்தாபனம் செய்யக் கூடியவர் தயாரா, திரையை விலக்கட்டுமா? அல்லது சிலர் காதணியை மாட்டிக் கொண்டிருக்கிறார்கள், சிலர் தலைவாரிக் கொண்டிருக்கிறார்கள், அப்படி என்றால் தயாரா? எப்பொழுது இது முடிவடையும்? நாள் குறித்து சொல்லுங்கள். இப்போது நாள் குறித்தீர்கள் இல்லையா? இந்த மாதத்திற்குள்ளாகவே செய்தியை தர வேண்டும் அம்மாதிரி அனைவரும் தயாரா? குறைந்தபட்சம் 16,000-பேராவது தயாரா? 9-லட்சத்தை விடுங்கள். 16-ஆயிரமாவது தேறுமா? தயாரா? கை தட்டட்டுமா? சும்மா அப்படியே ஆம் என்று தலை ஆட்டக் கூடாது. எவெரடியாகுங்கள். பாப்தாதாவும் கை கொடுப்பார். கை தட்டுவார், இயற்கை தனது வேலையை ஆரம்பிக்கும். அறிவியலார் தங்கள் வேலையை ஆரம்பித்து விடுவர். எதில் தாமதம். எல்லாம் ரெடியா? 16-ஆயிரம் தயாரா? ஆகி விடும். (பாபா உங்களுக்குத்தான் எல்லாமே தெரியுமே) இந்த மாதிரி பதில் எல்லாம் பூசி மெழுகுவது போல் ஆகும். 16-ஆயிரம் பேர் ரெடி என்று ரிப்போர்ட் வர வேண்டும். முழுமையான பவித்திரத்தாவின் மூலம் முழுமை பெற வேண்டும். பாப்தாதாவிற்கு கைதட்டுவதற்கு ஒன்றும் நேரம் ஆவதில்லை. தேதியை சொல்லுங்கள். (பாபா நீங்களே சொல்லுங்கள்). எல்லோரிடமும் கேளுங்கள். எப்படி ஆகிலும் ஆகித்தான் தீர வேண்டும் ஆனால் ஏற்கனவே கூறியது போல் நான் என்னும் வார்த்தையில் முழு மாற்றம் வேண்டும். அப்பொழுது தான் பாபாவின் கூடவே செல்ல

முடியும். இல்லையென்றால் பின்னால் தான் செல்ல வேண்டும். எனவே பாப்தாதா இப்பொழுது கதவை திறப்பதில்லை, கூடவே சேர்ந்து செல்ல வேண்டுமல்லவா?

பிரம்மாபாபா அனைத்து குழந்தைகளிடமும் கேட்கிறார், வாசலை திறப்பதற்கான தேதியைக் கூறுங்கள். வாசலை திறக்க வேண்டுமல்லவா? திரும்பி செல்ல வேண்டுமல்லவா? இன்று கொண்டாடுவது என்றால் (சம்பூர்ணம்) ஆவது என்பதாகும். வெறும் கேக் மட்டும் கட் பண்ணினால் போதாது, நான் என்பதையும் (ஆணவம்) முடிக்க வேண்டும். யோசித்து பார்க்கிறீர்களா, அல்லது யோசித்து முடித்து விட்டீர்களா? ஏனெனில் பாப்தாதாவின் அருகில் பாப்தாதாவிடம் அமிர்த வேளையில் அனைவரின் விதவிதமான எண்ணங்கள் வந்து சேர்கின்றன. ஆக உங்களுக்குள் ஆலோசனை செய்து முடிவான தேதி பாபாவுக்கு கூற வேண்டும். எது வரை நாள் குறிக்கப்படவில்லையோ அதுவரை எந்த காரியமும் நடைபெறாது. முதலில் மகாரதிகள் உங்களுக்குள் நாளை குறியுங்கள். பிறகு உங்களை அனைவரும் பின்பற்றுவர். பின்பற்றக்கூடியவர்கள் தயாராக இருக்கிறார்கள், மேலும் உங்களுடைய தைரியத்தினால் மேலும் அவர்களுக்கு பலம் கிடைத்து விடும். எப்படி என்றால் இப்போது கூட உற்சாகம் ஆர்வத்தை ஊட்டினீர்கள். தயாராகி விட்டார்கள் இல்லையா, அம்மாதிரி சம்பன்னம் ஆவதற்கான திட்டத்தையும் தீட்டுங்கள். கர்மாதீத் நிலையை அடைந்தே தீர வேண்டும் என்ன ஆனாலும் சரி, ஆகியே தீர வேண்டும். விஞ்ஞானிகளினுடைய ஒலியும், விநாசம் செய்யக்கூடியவர்களுடைய ஒலியும் பாபாவினுடைய காதில் வந்து சேர்கின்றன. அவர்களும் கேட்கிறார்கள், ஏன் இன்னும் தடையாக உள்ளது, அட்வான்ஸ் பார்ட்டியினர் அவர்களும் கேட்கின்றனர், தேதி குறித்துக் கொடுங்கள், தேதியைக் குறியுங்கள் என்கின்றனர். பிரம்மாபாபாவும் கூறுகின்றார், தேதியைக் குறியுங்கள். ஆக இதற்கான மீட்டிங் கூட்டுங்கள். மற்றப்படி என்னென்ன சேவை செய்கிறீர்களோ அதில் பாபாவிற்கு முழு திருப்தி. ஒவ்வொருவரும் செய்கின்றனர். வெளிநாட்டுக்காரர்களும் செய்கின்றனர். பாரத தேசத்திலும் அனைத்து மண்டலங்களைச் சார்ந்தவர்களும் செய்கின்றனர், இல்லறத்தில் இருப்பவர்களும் செய்கின்றனர். எல்லோரும் செய்கின்றனர், அதற்கு எமது நல்வாழ்த்துக்கள். சேவைக்காகவும் நல்வாழ்த்துக்கள்.

இப்பொழுது இந்த அற்புதத்தை செய்து காண்பியுங்கள். தாதிமார்களுக்கு முக்கியமாக கூறுகின்றனர், மூத்த சகோதரர்களுக்கும் முக்கியமாக கூறுகின்றனர். அடுத்து வரும் சிவராத்திரியில் அற்புதம் (கமால்) மற்றும் பிரம்மாண்டம் (தமால்) இரண்டும் சேர்ந்தே நடக்க வேண்டும். சரியா? முன்னால் வரிசையில் அமர்ந்திருக்கும் டீச்சர்களே சரியா? மீட்டிங் செய்வீர்கள் தானே! பாப்தாதாவிற்கு இப்போது தேதி வேண்டும். ஆகி விடும், செய்து கொண்டிருக்கிறோம் இந்த மாதிரியெல்லாம் பூசி மெழுகக் கூடாது. இம்மாதிரி நிறைய கேட்டாகி விட்டது. முதலில் குழந்தைகள் தேதியை கொடுக்கட்டும். பிறகு பாபா இறுதி முடிவு செய்வார். பாப்தாதா கூறுகின்றார், அடுத்த சிவராத்திரியில் அற்புதம் மற்றும் பிரம்மாண்டம் இரண்டும் நடக்க வேண்டும். இப்பொழுதே தயார் செய்ய வேண்டும். டீச்சர்களே சம்மதமா? இரட்டை வெளிநாட்டினரே சம்மதமா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்களே சம்மதமா? பாண்டவர்களே சம்மதமா? (சரிங்க பாபா). வாழ்த்துக்கள். அனைவருக்கும் வாழ்த்துக்கள் ஆனால் உலகில் மிகவும் துக்கமாக இருக்கின்றனர். பாப்தாதாவிற்கு இத்தனை துக்கத்தில் அவர்கள் ஆழ்ந்திருப்பதைக் காணப் பொறுக்கவில்லை. முதலில் சக்திகளாகிய உங்களுக்கு தேவதா ரூபத்தில் இருக்கும் பாண்டவர்களுக்கு இரக்கம் வர வேண்டும். எவ்வளவு தூரம் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறார்கள், இப்பொழுது அவர்களுடைய அழைக்கும் குரல் உங்களுடைய காதுகளில் ஒலிக்க வேண்டும். காலத்தின் அரை கூவல் என்ற நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்பாடு செய்கிறீர்கள் இல்லையா! தற்போது பக்கதர்களின் அழைப்பையும் கேளுங்கள். இப்போது துக்கமானவர்களின் கூப்பாட்டிற்கு செவி மடுங்கள். சேவையில் நம்பர் நன்றாக உள்ளது. இதனை பாப்தாதாவும் கூட இதற்கு சான்றிதழ் வழங்குகின்றார். உற்சாகம் ஆர்வம் நன்றாக உள்ளது. குஜராத் நம்பர்-1 எடுத்துக் கொண்டுள்ளது. அந்த முதல் நம்பருக்கு வாழ்த்துக்கள். இப்பொழுது கொஞ்சமாவது அவர்களது கூப்பாட்டைக் கேட்டுத்தான் பாருங்களேன். பாவம் அவர்கள், மிகவும் கூக்குரல் இடுகின்றனர். அன்போடு அழைக்கின்றனர். இங்கு அங்கு அலைபாய்கின்றனர். விஞ்ஞானிகளும் கத்துகின்றனர். எப்பொழுது செய்யட்டும், எப்பொழுது செய்யட்டும் (விநாசத்தை) என்று அழைத்துக் கொண்டிருக்கின்றனர். இன்றைக்கு கேக் வெட்டிக் கொள்ளுங்கள், ஆனால் நாளையிலிருந்தாவது இவர்களின் கூக்குரலை கேட்க வேண்டும்.

கொண்டாடுவது என்பது சங்கமயுகத்தில், சுகமான காலத்தில் தான். ஒரு புறம் கொண்டாட வேண்டும். மறுபுறம் ஆத்மாக்களை தயார் செய்ய வேண்டும். நல்லது. ஆக என்ன கேட்டீர்கள். உங்களுடைய பாடல் -துக்கமானவர்கள் மீது இரக்கம் காட்டுங்கள். உங்களைத் தவிர வேறு எவரும் இரக்கம் காண்பிக்க முடியாது. எனவே தற்போது காலத்தின் பிரமாணம் இரக்கத்தின் மாஸ்டர் கடலாக ஆகுங்கள். சுயம் தன் மதும் இரக்கம், அந்நிய ஆத்மாக்களின் பொருட்டும் இரக்கம். இப்பொழுது இந்த சொரூபத்தின் கலங்கரை விளக்கமாகி, விதவிதமான ஒளிக்கிரணங்களை அளித்து வாருங்கள். முழு உலகத்தின் எப்பிராப்தியும் இல்லாத ஆத்மாக்களுக்கு பிராப்தி என்னும் அஞ்சலியின் கிரணங்களை வழங்குங்கள். நல்லது.

இரட்டை வெளிநாட்டினருடன்: இரட்டை வெளி நாட்டினரைப் பார்த்து பாப்தாதாவிற்கு இரட்டை குஷி ஏற்படுகிறது. ஏன்? இரட்டை வெளிநாட்டினர், இரட்டை அற்புதம் செய்து காண்பித்துள்ளனர் என்பதைப் பார்த்து இவ்விஷயத்தில் பாபாவிற்கு மிகுந்த குஷி ஏற்படுகிறது. என்ன ஒரு அற்புதத்தை காண்பித்துள்ளனர். இந்த குரூப்பில் கூட மரத்தின் விதவிதமான கிளைகள் போன்று வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்துள்ளனர். இப்பொழுது கூட 60-நாடுகளில் இருந்து வந்திருக்கின்றனர். மேலும் இன்னும் கூட வர இருக்கின்றனர். விதவிதமான மரங்களின் கிளைகள் ஒன்றாக இணைந்து சந்தன மரமாக ஆகியுள்ளனர். ஒரே ஒரு மரத்தின் கிளைகளாக மாறி விட்டனர் அல்லது தனித்தனியா? அடுத்த அற்புதம் யாதெனில் விதவிதமான பல்வேறு நாடுகளின் கலாச்சாரம் ஒரே கலாச்சாரமாக மாறி விட்டது. வெளிநாட்டு கலாச்சாரம் அல்ல, பாரதத்தின் கலாச்சாரமும் அல்ல, ஆனால் ஒரே பிராமண கலாச்சாரத்தில் வந்து விட்டனர். இப்பொழுது எந்த கலாச்சாரத்தில் இருக்கிறீர்கள். வெளிநாட்டு கலாச்சாரமா, அல்லது பிராமண கலாச்சாரமா? ஆக அந்த ஒரே கலாச்சாரம் ஒரே சந்தன மரமாக மாறி விட்டது. ஆக இரட்டை அற்புதத்தைப் பார்த்து பாப்தாதாவிற்கு இரட்டை குஷி ஏற்படுகிறது. 60-நாடுகளின்நினைவு இருக்கிறதா? அல்லது ஒரே ஒரு மதுபன் நினைவுக்கு வருகிறதா? நீங்கள் அனைவரும் மதுபன் வாசிகள் தானே! எனவே பாப்தாதாவிற்கும் இரட்டை குஷி ஏற்படுகின்றது. உங்கள் அனைருக்கும் கூட மிகுந்த குஷி தானே! எத்தனை குஷி. சதா குஷியாக இருங்கள். சந்தோஷமாய்

வாழுங்கள். பிறருக்கும் குஷியின் மூலம் வாழ்த்துக்களைத் தெரிவித்து வாருங்கள். இப்பெரிய சபை நன்றாக இருக்கிறது. இது அகில உலக சபையாக உள்ளது. ஆக உங்கள் அனைவருக்கும் பாப்தாதா அலௌகிக பிறவியின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், நல்லது.

இம்முறை சேவை செய்த கர்னாடகத்தாருடன்: நல்லது. இந்த சேவையின் பொன்னான வாய்ப்பு, குடும்பத்தாருடன் மிக அருகில் வருவதற்கான ஒரு வாய்ப்பு கிடைத்தது. சேவையில் வந்திருக்கிறீர்கள் என்றால் அனைவருடைய பார்வையும் எதன் மீது வருகிறது. கர்நாடகத்தார் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, அனைவருக்கும் கர்நாடகத்தின் நினைவு வருகிறது. உங்களுக்கு நினைவின் ஆசீர்வாதம் கிடைக்கிறது. தற்போது கர்நாடகத்தின் மீது பாப்தாதாவிற்கு ஒரு சிரேஷ்டமான ஆசை உள்ளது. அதனை இப்பொழுது முழுமையாக செய்து முடிக்கவில்லை, அது என்ன என்று கூறட்டுமா? டீச்சர்களே! சொல்லி விடவா? கர்நாடகத்தில் பாப்தாதா பார்த்துள்ளார், அநேக வாரிசு குழந்தைகள் ஆக முடியும். எவ்வளவு வாரிசு தரமானவர்கள் இருக்கின்றனர். இன்னும் ஒரு சில இடங்களிலும் (பிற மண்டலங்களிலும்) இருக்கிறார்கள், அந்த விஷயத்தை பற்றி இப்பொழுது பேசவில்லை, கர்நாடகத்தினுடைய பூமியிலிருந்து வாரிசுகள் நிறைய வரலாம். வெறும் கை தட்டினால் மட்டும் போதாது, அம்மாதிரி செய்து காண்பிக்க வேண்டும். நல்ல நல்லவர்கள் இருக்கின்றனர். பாப்தாதாவினுடைய பார்வை அவர்கள் மீது படுகின்றது ஆனால் டீச்சர்களுடைய பார்வை அவர்கள் மீது படவில்லை போலும், பாண்டவர்கள் கேட்டீர்களா, இன்னும் நிறைய உருவாக முடியும். பாப்தாதாவிற்கு மூலை முடுக்குகளிலெல்லாம் முழு யக்ஞத்தையும் கர்நாடக வாரிசுகள் நடத்த முடியும். என்ன புரிந்தீர்கள்? இப்பொழுது உருவாக்குங்கள். அவ்வாறு நிறைய உருவாக முடியும் அந்த அளவிற்கு கவனம் தரப்படவில்லை அவ்வளவு தான். பொதுவான சேவையில் மூழ்கி விட்டனர். தனிப்பட்ட சேவை மற்றும் மன சேவை இவை இரண்டின் அற்புதங்களின் வாயிலாக வாரிசுகள் உருவாக முடியும், பாலனை வேண்டும். இந்த பொறுப்பை முழுவதுமாக எடுத்துக் கொள்ளுங்கள், நாங்கள் சகயோகியாக இருப்போம் என்று தாதிக்குக் கூறுங்கள். பிறரையும் செய்விப்போம், நாங்களும் இருப்போம். நல்லது.

பார்க்கலாம். 6-மாதத்தில் (மூன்று தாதிகளும் கர்நாடகத்திற்கு வரட்டும்) தாதிமார்கள் வந்து விடுவார்கள், முதலில் நீங்கள் வாரிசுகளை உருவாக்குங்கள். தாதிமார்கள் வருவார்கள், சில வாரிசுகளை நீங்கள் தயார் படுத்துங்கள், பிறகு தாதிகளை கூப்பிடுங்கள். வந்து விடுவார். என்ன திட்டம் தீட்ட விரும்புகிறீர்களோ அதை செய்யுங்கள் ஆனால் வாரிசுகள் உருவாக்க முடியும். பாலனை கொடுக்க வேண்டி வரும். டீச்சர்கள் வாரிசுகளை எப்படி உருவாக்குவது என்பதை பற்றிய வகுப்பை கேட்டுச் செல்லுங்கள். இந்த வகுப்பு செய்விக்க வேண்டும். என்ன நினைக்கிறீர்கள். இது நடக்க கூடுமா? நல்லது. 6-மாத காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது, பார்க்கலாம். எங்கிருந்து அதிகமான மைக்குள் வெளி வருகின்றன என்று பார்ப்போம். ஏற்பட்டே ஆக வேண்டும். நேரம் முடிவடையும் தருணம் அனைவரும் கட்டாயம் வெளி வருவார்கள்தான், கேட்டீர்களா? வெறும் தலையை மட்டும் அசைக்கக் கூடாது. செய்து காண்பிக்க வேண்டும். கர்நாடகக்காரர்கள் பொதுவாக நன்கு தலை அசைக்கக் கூடியவர்கள். பார்ப்பதற்கு நன்றாக உள்ளது. நல்ல தரம் அதிகம் உள்ளது. நல்லது.

**ஸ்பார்க் குரூப்:** உங்களுடைய மீட்டிங் மூலம் நீங்களே உங்கள் உங்கள் இடத்தில் முன்மாதிரியாக சமயத்தை அருகாமையில் கொண்டு வருவதற்கு முன்மாதிரியாக ஆகி விடுங்கள். இம்மாதிரி திட்டங்களைத் தீட்டுங்கள். இம்மாதிரி திட்டங்களை தீட்டுகிறீர்கள் இல்லையா? வரயிருக்க கூடிய காலத்தில் என்ன தயார் செய்கிறீர்கள்? பாப்தாதா இம்மாதிரி ஜாடையாக கூறுகிறார், எந்த வித பிரச்சனைகளையும் எதிர்கொள்ள சகஜ விதியானது முதலில் ஒருமுகப்படுத்தும் சக்தி (ஏகாக்கிரத்தா) அவசியம். மனம் ஒருமிக்க வேண்டும். இவ்வாறு ஒருமித்த நிலையில் இருக்கும் சக்தியின் மூலமாக அருமையான முறையில் நிர்ணயம் செய்ய முடியும். எனவே தான் நீதி மன்றத்தில் கூட தராசு வைத்திருக்கிறார்கள். நிர்ணயம் செய்வதினுடைய அடையாளம் தராசு. எனவே ஒருமித்த நிலை என்பது நடுவில் முள் வடிவில் காண்பிக்கப்பட்டுள்ளது. எந்த விதமான பிரச்சனைகள் வந்தாலும் சரி, நாலா புறங்களிலும் குழப்பம், போராட்டங்கள் இருப்பினும் தற்சமயத்தில் மனதினுடைய ஒருமிக்கும் சக்தி மனதை எங்கே நிலை நிறுத்த வேண்டுமோ அங்கே நிறுத்தப்பட வேண்டும். எந்த விதமான பரஸ்திதியில் (பாதக சூழ்நிலை) எந்த சக்தியை காரியத்தில்

கொண்டு வர வேண்டுமோ, பொறுமை சக்தியின் மூலமாக திட தன்மை என்பது தானாகவே வந்து விடுகிறது. இந்த திடத் தன்மையானது வெற்றிக்கான சாவியாகும். ஆக இவ்வாறு ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்து பிறருக்கும் பிரேரணையைக் கொடுத்து வாருங்கள். சரிதானே நல்லது. ஒவ்வொரு வர்க்கமும் தனது சேவையில் முன்னேற்றத்தில் உற்சாகம், ஆர்வத்தோடு இருப்பது நன்றாய் இருக்கிறது. அனைத்தும் நன்றாகவே நடக்கும். வெவ்வேறு கிளைகளில் விதவிதமான நல்ல நல்ல காரியங்களின் ஈடுபட்டு வருகின்றனர். திட்டங்கள் தீட்டுகின்றனர். வெற்றி என்பது நிச்சயம் உண்டு, நல்லது.
அனைத்து இனிமையிலும் இனிமையான தாய்மார்களுக்கு குமாரிகளுக்கு குறிப்பாக பாப்தாதாவினுடைய ஆசீர்வாதம் நிறைந்த அன்பு நினைவுகள். தாய்மார்கள் கிளைகளின் அலங்காரம் ஆவார்கள். தாய்மார்கள் இல்லாது அலங்காரம் நடக்க முடியாது. சென்டரிலும் மதுபனிலும் அவர்களாலேயே அழகு. குறிப்பாக தாய்மார்களை முன்னேற்றுவதற்காகவே பாபா வர வேண்டியிருந்தது. தாய்மார்களை எழும்ப சொன்னால் முழு ஹாலும் எழுந்து விடும் போல் இருக்கிறதே. (அவ்வளவு அதிகம் பேர்), எனவே அமர்ந்தே இருங்கள். இன்று பாண்டவர்களும் குறையவில்லை, பாதிக்கு பாதி இருக்கின்றனர். நல்லது. வெற்றியினுடைய ஞாபகார்த்தம் பாண்டவர்களுக்கே உரியது. சக்திகளினுடைய மகிமை சக்தி கொடுப்பதில் உள்ளது. பாண்டவர்களுடைய பெயரே வெற்றியினுடைய நினைவு ஊட்டுகின்றது. எனவே ஒவ்வொரு பண்டவர்களும் தங்களது நெற்றியில் வெற்றியின் திலகத்தை சதா நினைவில் வைத்திருங்கள். நல்லது. குழந்தைகளும் இருக்கின்றனர். அவர்கள் தங்கள் பெற்றோர்களை ஞானத்தில் கொண்டு வந்திருக்கின்றனர். மிக நல்லது. குடும்பத்தினுடைய மங்களத்திற்கு குழந்தைகள் நிமித்தமாக இருக்கின்றனர். குழந்தைகளும் கூட தியாகம் செய்துள்ளனர். அர்பணமாகி உள்ளனர். நல்லது.

அனைத்து டீச்சர்களும் பாப்தாதாவினுடைய வலது கரங்கள். அதற்காக பாண்டவர்கள் பாபாவின் இடது கை அல்ல. பாண்டவர்களும் வலது கரங்கள். இடது கரங்கள் வேறு பல. நீங்கள் அனைவரும் வலது கரங்கள். டீச்சர்கள் இப்பொழுது சாட்சாத்கார் மூரத் ஆக வேண்டும். இப்பொழுது இந்த நான் என்பதை முழுமையாக அர்ப்பணம்

செய்வீர்களேயானால் சாட்சாத்காரம ஆரம்பமாகி விடும். இந்த நான் என்கிற திரை முன்னால் வந்து விடுகிறது. இந்த திரை விலகி விட்டது என்றால் ஒவ்வொருவர் மூலமாகவும் சாட்சாத்காரம் ஏற்படும். அப்பொழுது சாட்சாத் பாபா வந்து விட்டார், வந்து விட்டார் என்கிற பேரிகை ஒலிக்கும். சாட்சாத்காரம் திவ்விய திருஷ்டி மூலமாக அல்ல. சாட்சாத் ரூபத்தின் சாட்சாத்காரம் ஏற்படும். அனைவருடைய வாயிலிருந்தும் ஒரே ஒரு வார்த்தை வெளி வரும். இது சாட்சாத் பாபாவே! இப்படிப்பட்ட ஏற்பாட்டை செய்து வருகிறீர்கள் இல்லையா!

நல்லது. சர்வ சாட்சாத் பாபா மூரத் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா உற்சாகம் ஆர்வத்தில் இருக்க கூடிய, பாபாவின் சமீப ஆத்மாக்களுக்கு, சதா அனைத்து அடிகளையும் பாபாவிற்குச் சமமாக எடுத்து வைக்ககூடிய குழந்தைகளுக்கு, நாலா புறங்களிலுமுள்ள பிராமண பிறவியின் வாழ்த்துக்குரிய குழந்தைகளுக்கு, சதா ஏகாக்கிரதா (ஒருமுகப்படுத்தும்) சக்தி நிறைந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் பத்மாபதம் மடங்கு பிறவிகளுக்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள் மற்றும் நமஸ்காரம்.

**67**வது திரிமூர்த்தி சிவ ஜெயந்தி தினத்தன்று அன்பு அவ்யக்த பாப்தாதா தனது மலர் கரங்களால் சிவ கொடியை ஏற்றினார் மற்றும் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார். இன்றைய தினம் அனைவருக்கும் தனது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார் மேலும் பெற்றுக் கொண்டார். மேலும் கொடியேற்றினார் ஆனால் உலக உருண்டையின் மேல் அனைத்து ஆத்மாக்களும் இருந்து கொண்டு உங்கள் அனைவரது முகத்தில் பாபாவின் முகத்தை காண வேண்டும். அந்த நாள் இப்பொழுது வர வேண்டும். துணியால் ஆன கொடி நிமித்தமானது ஆனால் ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் பாபாவின் முகம் தென்பட வேண்டும். அப்படிப்பட்ட கொடியை ஏற்ற வேண்டும். இந்த நாளையும் மிக மிக சீக்கிரமாக வெகு விரைவில் கொண்டு வர வேண்டும், கொண்டு வந்தே தீர வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 17.03.2003 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த ஆண்டு ஸ்வமானில் (சுய ஆன்மீக கௌரவம்) இருக்க வேண்டும். மரியாதை கொடுக்க வேண்டும், அனைவருக்கும் உதவி செய்பவராக ஆக வேண்டும் மேலும் சக்திசாலி ஆக்க வேண்டும்!

இன்று பாக்கிய விதாதா (வள்ளல்) பாப்தாதா பக்கங்களிலுமுள்ள ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் பாக்கியத்தின் மூன்று ரேகைகளைப் பார்க்கின்றார். ஒன்று பரமாத்மா பாலனையின் பாக்கியவான் ரேகை, இரண்டாவது, சத்தியமான ஆசிரியர் அளிக்கக் கூடிய சிரேஷ்டமான படிப்பின் பாக்கியவான் ரேகை, மூன்றாவது ஸ்ரீமத்படி நடப்பதால் பிரகாசிக்கக்கூடிய ரேகை. நாலா பக்கமும் உள்ள குழந்தைகளின் நெற்றியில் இந்த மூன்று ரேகைகளும், மிக நன்றாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. நீங்கள் எல்லோரும் கூட உங்களுடைய மூன்று பாக்கிய ரேகைகளையும் பார்க்கின்றீர்கள் அல்லவா? எப்போது, பாக்கிய விதாதா, குழந்தைகளாகிய உங்களுடைய தந்தையாக இருக்கின்றாரோ, அப்போது உங்களைத் தவிர சிரேஷ்ட பாக்கியம் வேறு யாருக்குக் கிடைக்க முடியும்! உலகில் கோடிக்கணக்கான ஆத்மாக்கள் இருக்கின்றார்கள் என்பதை பாப்தாதா பார்க்கின்றார் ஆனால் அந்தக் கோடிக்கணக்கில், ஆறு லக்ஷம் உள்ள இந்த குடும்பம் எவ்வளவு சிறியது? கோடியில் சிலர் என்று ஆகி விட்டதல்லவா! அவ்வாறு ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையில், இந்த மூன்று விஷயங்களான, பாலனை (வளர்ப்பு), படிப்பு, மற்றும் சிரேஷ்ட வழி (மத்), மிகவும் அவசியம் ஆனால் இந்த பரமாத்மா பாலனையோடு ஒப்பிடுகையில், தேவ ஆத்மாக்கள் மற்றும் மனித ஆத்மாக்கள் காட்டுகின்ற வழி பாலனை, படிப்பு, ஆகியவற்றில் இரவு பகல் வேறுபாடு இருக்கின்றது. எந்த ஒரு பாக்கியம் எண்ணத்தில் கூட

இல்லையோ அப்படிப்பட்ட பாக்கியத்தை அடைந்து விட்டோம் என்று ஒவ்வொருவருடைய உள்ளமும் பாடுகின்றது. நான் அடைந்து விட்டேன் என்று அடைந்து விட்டீர்களா? அல்லது அடைய வேண்டுமா? என்ன சொல்கிறீர்கள்? அடைந்து விட்டீர்கள் தானே! தந்தையும் கூட இப்படிப்பட்ட குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். குழந்தைகள் கூறுகின்றனர் ஆகா! போதும். இதே பாக்கியத்தை நினைவில் மட்டும் வைத்தால் போதாது, சதா நினைவு சொரூபத்தில் இருக்க வேண்டும். அநேக குழந்தைகளின் சிந்தனைகள் மிக நன்றாக இருக்கின்றன ஆனால் சிந்தனை சொரூபமாக ஆகக் கூடாது. நினைவு சொரூபமாக ஆக வேண்டும். நினைவு சொரூபத்தின ஆதாரத்தில் சக்திசாலி சொரூபம் இருக்கும் சிந்தனை சொரூபம், சக்தி சொரூபம் அல்ல.

பாப்தாதா குழந்தைகளின் பற்பல லீலைகளைப் பார்த்து புன்முறுவல் செய்து கொண்டேயிருக்கின்றார். ஒரு சிலர் சிந்தனை சொரூபத்தில் இருக்கின்றனர். நினைவு சொரூபத்தில் (ஸ்மிருதி சொரூப்) சதா இருப்பதில்லை. சில சமயம் சிந்தனை சொரூபம். சில சமயம் நினைவு சொரூபம். யார் நினைவு சொரூபத்தில் இருக்கிறார்களோ, அவர்கள் நிரந்தரமாக இயற்கையான சொரூபத்தில் இருக்கின்றார்கள். யார் யோசனை சொரூபத்தில் இருக்கின்றார்களோ, அவர்களுக்கு கடின முயற்சி செய்ய வேண்டியதாயிருக்கின்றது. இந்த சங்கமயுகம் கடினமாக முயற்சி செய்ய வேண்டிய யுகம் அல்ல. எல்லா பிராப்திகளையும் அனுபவம் செய்யக்கூடிய யுகம். 63-பிறவிகள் கடின முயற்சி செய்தீர்கள் ஆனால் இப்போது, செய்த முயற்சியின் பலனை அடைய வேண்டிய யுகம், அதாவது நேரம்.

தேக அபிமான நினைவில் இருப்பதற்கு கடினமாக முயற்சி செய்தீர்களா? நான் இன்னார், நான் இப்படிப்பட்டவன் என்ற எண்ணம் வருவதற்கு ஏதாவது கடினமாக முயற்சி செய்தீர்களா? இயற்கையாகவே இருந்ததல்லவா! இயற்கையாக இருக்கிறதல்லவா! (தேக அபிமான குண சுபாவம்). இந்த தேக அபிமான சுபாவம் எவ்வளவு தூரம் உறுதியாக ஆகியிருக்கிறதென்றால், ஆத்ம அபிமானியாக ஆக வேண்டிய இந்த நேரத்திலும் கூட, அநேக குழந்தைகளை தேக அபிமான சுபாவம், அதன் பக்கமாக கவர்ந்திழுக்கின்றது. நான் ஆத்மா! நான்

ஆத்மா! நான் ஆத்மா! என்று சிந்திக்கின்றார்கள். இருந்தாலும் அடிக்கடி தேக அபிமானத்தில் வசப்பட்டு விடக்கூடிய அளவுக்கு, அது இயற்கையான சுபாவமாகவே ஆகி விட்டது. ஆதலால் பாப்தாதா கூறுகின்றார். இப்போது மறு பிறவி எடுத்துள்ள இந்த வாழ்க்கையில் ஆத்ம அபிமானியாக அதாவது ஆத்ம அபிமானி ஸ்திதியும் கூட அந்த அளவுக்கு இயல்பானதாக ஆகி விட வேண்டும். நான் ஆத்மா, நான் ஆத்மா என்று முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இருக்கக் கூடாது. உதாரணமாக குழந்தை பிறந்து, சற்று புரிந்து கொள்ளக்கூடிய அறிவு வளர்ந்ததும் (வயது) நீ யார்? யாருடைய குழந்தை என்று சொல்லித் தருகிறார்கள். அதுபோல, எப்போது நீங்கள் பிராமண ஜன்மம் எடுத்தீர்களோ, அப்போது பிறவி எடுத்தவுடனேயே, என்ன அறிமுகம் கிடைத்தது? நீங்கள் யார்? என்ற ஆத்மா பாடம் தெளிவாக அறிமுகப்படுத்தப்பட்டதல்லவா? ஆதலால் இந்த முதலாவது அறிமுகம் இயல்பாகவே, இயற்கையானதாகவே, ஆகி விட வேண்டும். இயற்கையான குணம், நிரந்தரமாக இருக்கும். நினைவுக்குக் கொண்டு வர வேண்டியதிருக்காது. இவ்வாறு பிராமண குழந்தையும் இந்த நேரத்தின் கணக்குப்படி, ஆத்ம அபிமானி நிலையுடைவர்களாக, இயல்பாகவே ஆகி விட வேண்டும். அநேக குழந்தைகளுக்கு நினைக்க வேண்டிய அவசியமில்லாமலேயே நினைவு சொரூபமாகவே இருக்கின்றனர். இப்போது நிரந்தரமாகவே இயல்பான நினைவு சொரூபம் ஆகியே தீர வேண்டும். கடைசியில் எல்லா பிராமண குழந்தைகளும் எதிர் கொள்ள வேண்டிய, கடைசி பேப்பர் (சோதனைத்தாள்), நஷ்ட மோஹா, ஸ்மிருதி சொரூபம் என்ற சிறிய பேப்பர் தான்.

ஆகவே, இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? அங்கே குழந்தைகள் கேட்கின்றார்கள். இந்த ஆண்டு என்ன விசேஷ லட்சியம் வைக்கலாம்? என்று அதற்கு பாப்தாதா கூறுகின்றார்: சதா ஆத்ம அபிமானி, ஸ்மிருதி சொரூப பவ! ஜீவன்முக்தி கிடைக்கத்தான் போகிறது ஆனால் இதற்கு முன்பாக, முதலில் கடின முயற்சியிலிருந்து முக்தி அடையுங்கள். இந்த ஸ்திதி, நேரத்தை அருகாமையில் கொண்டு வரும். மேலும் உலகிலுள்ள உங்களுடைய எல்லா சகோதரர்களையும், சகோதரிகளையும், துக்கம், அசாந்தியிலிருந்து விடுவிக்கும். உங்களுடைய இந்த ஸ்திதி, ஆத்மாக்களுக்கு முக்திதாமினுடைய

வாசலைத் திறக்கும். அப்படியானால், உங்களுடைய சகோதர, சகோதரிகள் மீது இரக்கம் வரவில்லையா! எத்தனை ஆத்மாக்கள் நாலா பக்கங்களிலும் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய முக்தி, எல்லோருக்கும் முக்தி கிடைக்கச் செய்யும். இதனை சோதனை செய்யுங்கள் - இயற்கையான நினைவும், சக்திசாலி சொரூபம் எவ்வளவு தூரம் ஆகியிருக்கின்றீர்கள்? சக்தி சொரூபம் ஆகி விட்டால், வீணானவற்றிலிருந்து எளிதாக, முடிவுக்குக் கொண்டு வந்து விடும். அடிக்கடி கடின முயற்சி செய்ய வேண்டியதிருக்காது.

இப்போது இந்த ஆண்டில் பாப்தாதா, குழந்தைகள் மீதான அன்பின் காரணமாக குழந்தைகள் எந்த ஒரு பிரச்சினைக்காகவும், கடின முயற்சி செய்வதை பார்க்க விரும்பவில்லை. பிரச்சினை முடிந்து விட்டது. சமாதான சக்தி சொரூபம். எனன இது முடியுமா? நடக்குமா என்று தாதிகள் கூறுங்கள்? டீச்சர்ஸ் கூறுங்கள் நடக்குமா? பாண்டவர்கள் என்ன நினைக்கிறார்கள், நடக்குமா? பிறகு ஏதாவது காரணம் சொல்லக் கூடாது. இது இப்படி இருந்தது, அது அப்படி இருந்தது, அப்படி நடந்திருக்காவிட்டால், இப்படி நடந்திருக்காது என்று. பாப்தாதா நிறைய விளையாட்டுக்களைப் பார்த்து முடித்து விட்டார். இனிமையான விளையாட்டு. என்ன நடந்தாலும் சரி, இமயத்தை விட பெரிதானாலும், நூறு மடங்கு பிரச்சினை சொரூபமானாலும் உடல் மூலமாகவோ, மனம் மூலமாகவோ, மற்ற மனிதர் மூலமாகவோ இயற்கை மூலமாகவோ, பிரச்சினைகள் வந்தாலும், இப்படிப்பட்ட தடைகள், உங்களுடைய சுய ஸ்திதி முன்பாக ஒன்றுமே இல்லை. மேலும் சுய ஸ்திதிக்கான சாதனம் -சுவமானம். இந்த சுவமானம் இயல்பாகவே இருக்க வேண்டும். நினைவுக்குக் கொண்டு வரும்படியாக இருக்கக் கூடாது. அடிக்கடி கடின முயற்சி செய்யும்படியாகவும் இருக்கக் கூடாது. அதாவது, இல்லை, இல்லை. நான் சுயதர்சன சக்ரதாரி. நான் கண்ணின் மணி (நூரே ரத்தினம்) நான் பாபாவின் மனசிம்மாசனத்தில் அமர்ந்திருக்கக் கூடிய அதிகாரி (தில்தக்த் நஷீன்) அப்படியே தான் இருக்கிறேன்! வேறு யாரோ, ஆகப்போகிறீர்களா, என்ன? கல்பத்திற்கு முன்னர் யார் ஆனார்கள்? ஆகியிருந்தால், நீங்கள் தான் ஆனீர்கள். நீங்கள் தான் ஆகியிருந்தீர்கள். இப்போதும் ஒவ்வொரு கல்பத்திலும் நீங்கள் தான் ஆவீர்கள். இது நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பாப்தாதா எல்லோருடைய முகங்களையும் பார்க்கின்றார். கல்பத்திற்கு முன்னர்

பார்த்த அதே முகங்கள்! அவர்களே தான். அவ்வாறானால் நிச்சயமாகியிருக்கிறதல்லவா? உங்களுக்கு பாஸ் சர்டிபிகேட் கிடைத்து விட்டதல்லவா? வாங்க வேண்டுமா? கிடைத்து விட்டதல்லவா? கிடைத்து விட்டதா? வாங்க வேண்டுமா? கல்பத்திற்கு முன்பு கிடைத்திருந்தது. இப்போது கிடைக்காதா என்ன? இதே நினைவு சொரூபமாக ஆகி விடுங்கள் சர்டிபிகேட் கிடைத்து விட்டது. மதிப்புடன் தேர்ச்சி பெற்றவரானாலும் சரி (Pass with honour), வெறும் தேர்ச்சி பெற்றவராக (Pass) இருந்தாலும் சரி, இந்த வித்தியாசம் இருக்கும் ஆனால் நாங்கள் தான். பக்கா தானே! அல்லது ரயிலில் பயணம் செய்து கொண்டிருக்கும் போதே மறந்து போய்விடுமா? விமானத்தில் பறந்து சென்று கொண்டிருக்கும் போது மறந்து போய்விடுமா? இல்லை.

பாருங்கள். இந்த ஆண்டு சிவராத்திரியை மிகுந்த ஆர்வம். உற்சாகத்துடன் கொண்டாட வேண்டும் என்று திட சங்கல்பம் செய்திருந்தீர்கள். அப்படியே கொண்டாடினீர்கள் அல்லவா! திட சங்கல்பம் வைத்தது அப்படியே நடந்து விட்டதல்லவா! இது எந்த விஷயத்தின் காரணமாக, இப்படி வியக்கத்தக்க முறையில் நடந்தேறியது?' ஒற்றுமை, மற்றும் உறுதி! 67-புரோகிராம் செய்ய முடியும் என்று நினைத்தீர்களா? ஆனால் இதை விட அதிகமாக அநேக குழந்தைகள் செய்து முடித்ததை பாப்தாதா பார்த்தார். இது சக்தி சொரூபத்தின் அடையாளம். ஆர்வம், உற்சாகத்தின் பிரத்யக்ஷ பிரமாணம். நாலா பக்கமும் இயல்பாகவே செய்து முடித்து விட்டீர்கள் அல்லவா? இந்த மாதிரியே, எல்லோரும் சேர்ந்து ஒருவருக்கொருவர் தைரியம் கொடுத்து, இந்த சங்கல்பம் செய்யுங்கள். இப்போது சமயத்தை சமீபமாக கொண்டு வரத்தான் வேண்டும். ஆத்மாக்களுக்கு முக்தி கிடைக்கும்படி செய்ய வேண்டும் ஆனால், எப்போது நீங்கள் சிந்திப்பதை, நினைவு சொரூபத்தில் கொண்டு வருகிறீர்களோ, அப்போது தான் நடக்கும்.

வெளிநாட்டிலும், பாரதத்திலும் கூட (சிநேக மிலன்) அன்பு சந்திப்பு மீட்டிங் நடக்க இருப்பதாக, பாப்தாதா அறிகின்றார் ஆனால் அந்த மீட்டிங்கில், சேவை செய்யும் திட்டம் பற்றி மட்டும் முடிவு எடுக்கக் கூடாது. செய்ய வேண்டும் கூடவே சமநிலை (சுயம் + சேவை) இருக்கும்படியாக திட்டம் போட வேண்டும். எல்லோரும் மாஸ்டர் சர்வ

சக்திவான்கள் ஆகி பறந்து முன்னேறிச் செல்லும்படியாக, ஒருவருக்கொருவர் உதவி செய்பவர்களாக ஆகுங்கள். பொதுவாகப் பார்க்காதீர்கள், உதவி செய்யுங்கள். சுவமானில் இருங்கள் மரியாதை கொடுத்து உதவி செய்பவராக (சகயோகியாக) ஆகுங்கள். ஏனெனில் யாருக்காகவானாலும், நீங்கள் மனதார மரியாதை செய்தீர்களானால், அது மிகப் பெரிய புண்ணியம். ஏனென்றால், பலவீனமான ஆத்மாக்களுக்கு, ஆர்வம், உற்சாகம் கொடுத்து முன்னேறுவதற்கு உதவி செய்தால், எவ்வளவு பெரிய புண்ணியம்! கீழே விழுந்து விட்டவர்களை, மேலும் கீழே தள்ளக் கூடாது. கட்டித் தழுவ வேண்டும். அதாவது ஸ்தூலமாகக் கட்டித் தழுவுவதல்ல, கட்டித் தழுவுதல் என்றால் பாபா சமானமாக ஆக்க வேண்டும். உதவி செய்ய வேண்டும்.

இந்த ஆண்டு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்கள் அல்லவா? என்னென்ன செய்ய வேண்டும்? போதும். மரியாதை கொடுங்கள். சுவமானில் இருங்கள் சக்திசாலியாகி, சக்திசாலியாக்க வேண்டும். பலவீனமான ஆத்மா, பலவீனமாகவே இருக்கின்றனர். அவர்களுடைய பலவீனத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தால், உதவி செய்பவர்களாக எப்படி ஆக முடியும். உதவி செய்தால், ஆசிர்வாதம் கிடைக்கும். எல்லாவற்றையும் விட சகஜமான முயற்சி ஒன்று இருக்கின்றது. வேறு எதுவும் செய்ய முடியாவிட்டாலும் கூட சகஜமான இந்த முயற்சி செய்யுங்கள். அதாவது ஆசீர்வாதம் கொடுங்கள். ஆசீர்வாதம் பெறுங்கள். மரியாதை கொடுங்கள். மகிமைக்குரியவர்களாக ஆகுங்கள். மரியாதை கொடுப்பவர்கள் தான், எல்லோருக்கும் மரியாதைக்குரியவர்கள் ஆகின்றார்கள். மேலும் இப்போது எவ்வளவு மரியாதைக்குரியவர்களாக ஆகின்றார்களோ, அவ்வளவு ராஜ்ய அதிகாரியாக, பூஜ்ய ஆத்மாவாக ஆகின்றார்கள். கொடுத்துக் கொண்டேயிருங்கள். பெற வேண்டும் என்பதல்ல. பெறுவது, கொடுப்பது என்பது வியாபாரிகளின் வேலை ஆனால் நீங்களோ வள்ளலின் குழந்தைகள். மற்றபடி பாப்தாதா நாலா பக்கமுள்ள குழந்தைகளின் சேவையைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். எல்லோருமே நன்றாக சேவை செய்கிறார்கள் ஆனால் இப்போது முன்னேற்றம் அடைய வேண்டும் அல்லவா? பேச்சு மூலமாக எல்லோரும் நல்ல சேவை செய்தார்கள், சாதனங்கள் மூலமாகவும் நல்ல சேவை செய்து நல்ல ரிசல்ட் கொண்டு வந்திருக்கிறார்கள். அநேக ஆத்மாக்களின்

புகார்களையும் நீக்கி விட்டார்கள். கூடவே, காலத்தின் தீவிர கதியைப் பார்த்து, பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். அதாவது ஒரு சில ஆத்மாக்களுக்கு மட்டும் சேவை செய்தால் போதாது, உலகிலுள்ள எல்லா ஆத்மாக்களுக்கும் முக்தி தாதாவாகுவதற்கு (முக்தி அளிக்கும் வள்ளல்) நீங்கள் தான் நிமித்தமாக இருக்கின்றீர்கள். ஏனென்றால், பாப்தாதாவுக்கு நீங்கள் தான் துணைவர்களாக இருக்கின்றீர்கள். ஆதலால் காலத்தின் வேகத்திற்கேற்ப, இப்போது ஒரே சமயத்தில் மூன்று சேவைகளை ஒன்றாகச் செய்ய வேண்டும்.

ஒன்று பேச்சு, இரண்டாவது சுய சக்திசாலி ஸ்திதி, மூன்றாவது ஆன்மீக அதிர்வலைகள். (ருஹானி வைப்ரேஷன்) எங்கே சேவை செய்தாலும், சகஜமாக கவர்ந்திழுக்கும்படியாக, ஆன்மீக அதிர்வலைகளின் பிரபாவத்தை உண்டாக்குங்கள். பாருங்கள். இப்போது இந்த கடைசிப் பிறவியிலும் கூட, உங்கள் எல்லோருடைய ஜட சித்திரங்களுக்கும் எவ்வளவு தொண்டு செய்கிறார்கள்! என்ன, வாய் மூலம் பேசுகின்றீர்களா? பக்தர்களுடைய பாவனைக்கு சகஜமாக பலன் கிடைக்கும்படியாக வைப்ரேஷன் அப்படிப்பட்டதாக இருக்கின்றது. அவ்வாறு வைப்ரேஷன் சக்திசாலியாக இருக்கட்டும். வைப்ரேஷனில், சர்வ சக்திகளின் கிரணங்கள் பரவட்டும். வாயுமண்டலமே மாறட்டும். வைப்ரேஷன் எப்படிப்பட்ட பொருள் என்றால், மனதில் முத்திரை பதித்து விடுகிறது. உங்களுக்கு இந்த அனுபவம் இருக்கிறதல்லவா! எந்த ஒரு ஆத்மாவின் மீது, உங்கள் மனதில் நல்லது அல்லது கெட்டது வைப்ரேஷன் இருந்தால், அது எவ்வளவு நேரம் பாதிப்பை, மாறுதலை உண்டாக்குகிறது. வெகுநேரம் ஆகிறதல்லவா! நீக்க வேண்டுமானாலும், நீங்குவதில்லை. யாராவது ஒருவருடைய கெட்ட வைப்ரேஷன் இருந்தால், அது இலகுவாக விலகி விடுகிறதா? ஆகவே உங்கள் எல்லோருடைய சர்வ சக்தி கிரணங்களின் வைப்ரேஷன் முத்திரை பதிக்கும் வேலை செய்யும். பேச்சு மறந்து விடும் ஆனால் வைப்ரேஷன் முத்திரை எளிதாக நீங்கி விடாது. அனுபவம் இருக்கிறதல்லவா? இருக்கிறதல்லவா அனுபவம்?

குஜராத், பாம்பே எப்படிப்பட்ட ஆர்வம், உற்சாகம் காண்பித்தார்களோ அதற்கு பாப்தாதா நூறு மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். ஏன்? இதில் என்ன விசேஷம் இருக்கிறது? எதற்காக வாழ்த்து

தெரிவிக்கின்றார்? இருவரிடமும் ஒற்றுமை மற்றும் உறுதி என்ற விசேஷம் இருந்தது. எங்கே ஒற்றுமை மற்றும் மன உறுதி இருக்கின்றதோ, அங்கே ஒரு ஆண்டுக்குப் பதில், ஒரு மாதம் ஒரு ஆண்டுக்குச் சமமாக ஆகி விடுகிறது. குஜராத்- பாம்பே கேட்டீர்களா?

குஜராத்: குஜராத்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.இந்தி முறை சேவை இவர்களுடையது. குஜராத் 4500-பேர் இருக்கின்றீர்கள். எல்லோருக்கும். வாழ்த்துக்கள். முதலில் உங்களுக்கு டீச்சர்களுக்கு மட்டுமல்ல, உங்களுடைய சகயோகம் இல்லாவிடில் டீச்சர்ஸ் என்ன செய்ய முடியும்? ஆதலால் குஜராத்திலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் இந்த முறை சேவைக்கான கோல்டன் சான்ஸ், இரண்டுக்கும் சேர்த்து வாழ்த்துக்கள். சேவைக்கும் வாழ்த்துக்கள். இதே மாதிரி சதா சுய உன்னதியிலும், சேவையின் முன்னேற்றத்திலும், ஒருவர் சொன்னால், மற்றவர் ஏற்றுக் கொண்டு இப்படி ஒற்றுமை மற்றும் உறுதி மூலமாக முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள். நன்று.

மும்பை: மும்பைகாரர்கள் எழுந்து நில்லுங்கள். மும்பை சிவாஜி பார்க்கில், ஏறக்குறைய 75-80 ஆயிரம் பேர் கூடியிருந்தார்கள். நல்வாழ்த்துக்கள் கிடைத்து விட்டது. பாப்தாதா இருவருக்கும் மிக மிக மகாராஷ்டிரா, பாம்பே, ஆந்திரபிரதேஷ் எல்லோருக்கும் எல்லா பிராமண குடும்பத்தினரின் மற்றும் பாப்தாதாவின் மனமார்ந்த ஆசிகள். குஜராத், மகாராஷ்டிராவைச் சேர்ந்த அனைவருக்கும் உரித்தாகட்டும். இந்த மனதின் ஆசிகள், சதா மனதில் ஆர்வத்தையும், உற்சாகத்தையும் கொடுத்துக் கொண்டேயிருக்கும். பாண்டவர்களே, சரிதானா? எல்லோருமே மிக நன்றாகச் சேவை செய்தார்கள். எல்லோருடைய சகயோகத்தின் மூலமாக லட்சம் பேர் என்ற நிகழ்ச்சி வெற்றிகரமாக நடந்து முடிந்தது. நன்று.

தொழில் மற்றும் வர்த்தகம்: பாப்தாதா வியாபாரிகளுக்கு விசேஷமான சங்கல்பம் தருகின்றார். ஏனென்றால் வியாபாரிகளிடம் தான் வாடிக்கையாளர்கள் வாங்குவதற்காக வந்து கொண்டேயிருப்பார்கள். இவர்களைத் தேடிப் போக வேண்டிய அவசியமில்லை. வந்து கொண்டேயிருப்பார்கள். யார், யாரெல்லாம் சம்பந்தத்தில்

வருகின்றார்களோ, அவர்களுக்கு குறைந்தபட்சம் செய்தி கொடுக்கிறீர்கள். ஒவ்வொரு வியாபரம் மற்றும் தொழிற்சாலையில் உள்ளவர்கள். தங்கள் தங்களுடைய விசிட்டிங் கார்டு தயார் செய்திருப்பீர்கள். இதில் மிக நல்ல விதத்தில் சுருக்கமாக ஞானத்தைப் பற்றிய சுலோகன் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும். முகவரி இருக்கட்டும். மேலும் இரண்டு வரிகளில் அழைப்பு இருக்கட்டும். இந்த விதமாக எல்லோரும் விசிட்டிங் கார்டு தயார் செய்திருக்கிறீர்களா? யார் தயார் செய்திருக்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். இவ்வளவு பேர் தயார் செய்யவே இல்லை. வியாபாரிகள் வீட்டில் இருந்தபடியே சேவை செய்ய முடியும். உங்களிடம் தொடர்ந்து சம்பந்தத்தில் வந்து கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களிடமிருந்து எங்களுக்கு நீங்கள் சமாச்சாரம் (செய்தி) சொல்லவே இல்லையே என்ற புகார் வரக்கூடாது. ஆதலால் அழகான கார்டு அவசியம் தயாரிக்க வேண்டும். அதைப் பார்த்து விட்டு, குப்பைத் தொட்டியில் போட்டு விடாதபடிக்கு தங்களிடம் பத்திரமாக வைத்துக் கொள்ளும்படி அவ்வளவு அழகானதாக கார்டு தயார் செய்ய வேண்டும். வியாபாரிகளுக்கு வியாபரம் செய்யத் தெரியுமல்லவா? கெட்டிக்கார பிஸினஸ்காரர்கள் என்றால், வந்த எந்த ஒரு வாடிக்கையாளரும் வியாபாரம் செய்யாமல் போய் விடாமல் வியாபாரம் செய்பவர்கள் தான். நீங்கள் பகவானிடம் வியாபாரம் செய்யாமல், துணி மட்டுமே வியாபாரம் செய்கிறீர்கள். பொருள் தான் வியாபாரம் செய்கிறீர்கள். ஆதலால் வியாபாரிகள் நிறைய ஆத்மாக்களுக்கு சகயோகியாக ஆக்க முடியும். பிறகு சகயோகியிலிருந்து, படிப்படியாக யோகியாகவும் ஆகி விடுவார்கள். ஆதலால் இப்படிப்பட்ட சகயோகிகளின் லிஸ்ட் ஒவ்வொவரும் இந்த ஆண்டு தயார் செய்ய வேண்டும். ஒவ்வொரு வியாபாரிகளும், எத்தனை பேருக்கு செய்தி கொடுத்தீர்கள்? எத்தனை ஆத்மாக்களை சகயோகி ஆக்கினீர்கள்? எத்தனையோ ஆத்மாக்களை சகயோகிகளாக ஆக்கியிருக்கிறீர்கள். சரி தான். இன்னும் செய்வீர்கள். சரி என்று தாதி சொல்கிறார் அல்லவா? எண்ணிக்கையை இன்னும் அதிகப்படுத்துங்கள். ஒவ்வொரு வியாபாரியும் எண்ணிக்கை அதிகரிக்க முடியும். சரி தானே? இனி பாப்தாதா ரிசல்ட் பார்ப்பார். பாப்தாதாவுக்கு தெரியவா போகிறது என்று நினைத்து விடாதீர்கள். பாப்தாதா பார்க்கின்றார். வதனத்தில் அமர்ந்து கொண்டே, பார்க்க முடியும். கேட்க வேண்டிய அவசியம் இல்லை. வியாபாரிகள் அதிசயம் செய்து காட்டுவீர்கள் அல்லவா?

ஆதலால் நல்லது. இப்போது பாப்தாதா என்ன சொல்கின்றார் என்றால், யார் நல்ல விதமாக வேலை செய்கிறீர்களோ, அவர்களுடைய வாயில் நறுமணமுள்ள இனிப்பு (குலாப்) மேலும் பாப்தாதா கூறுகின்றார், பிஸினஸ்மேன் வாயில் குலாப் ஜாமுன் வாயில் விழுந்து விட்டதா? நல்லது. அமருங்கள்.

**விளையாட்டுக்காரர்களின் வர்க்கம்:** விளையாட்டு அவசியம் தான். நீங்கள் என்ன விளையாட்டு விளையாடுகிறீர்கள்? விளையாட்டைப் பார்கிறீர்களா? ஆடவும் செய்கிறீர்களா? எல்லோருமே பார்க்கிறார்கள். இந்தக் காலத்தில் எல்லோரும் பார்ப்பதில் ஈடுபாடுடையவர்களாக இருக்கிறார்கள். பாப்தாதாவுக்குத் தெரியும். நல்லது. இதுவும் அவசியமாகத்தான் இருக்கிறது. ஏனென்றால் இன்று ஆத்மாக்களுக்கு டென்ஷன் அதிகம். ஆகவே விளையாட்டு விமர்சனம் தேவையாக இருக்கிறது. வெளிநாட்டில், ஒரு குழந்தை, குழந்தைகளுக்காக ஒரு மிக நல்ல விளையாட்டைக் கண்டுபிடித்திருப்பது. பாப்தாதாவுக்குத் தெரியும். யார் செய்தது? பாப்தாதாவுக்கு சமாச்சாரம் கிடைத்தது. பாப்தாதாவுக்குப் பிரியமானதாகவும் இருந்தது. எல்லோருக்கும் காட்ட வேண்டும். ஆகவே விளையாட்டு துறையினர் ஒரு புதுமையான விளையாட்டைக் கண்டுபிடியுங்கள் அது விளையாட்டாகவும் இருக்க வேண்டும். அதே சமயம் அந்த விளையாட்டில் ஞானமும் இருக்க வேண்டும். யாராவது கோர்ஸ் கொடுக்க வேண்டுமானாலும் விளையாட்டாக இருக்க வேண்டும். நல்ல கண்டு பிடிப்பு. வாழ்த்துக்கள். இதுபோல, ரம்மியான புரோகிராம் செய்யுங்கள். பேச்சு எல்லோருமே நிறைய கேட்டிருக்கிறார்கள் ஆனால் புதுமையாக ஏதாவது செய்யும்போது, விரும்பாவிட்டாலும் கூட, தானாகவே வருவார்கள். இந்த விதமாக உங்கள் சகோதர, சகோதரிகள் விழிப்புணர்வை அடையட்டும். மற்றபடி, நல்ல திட்டமெல்லாம் தயார் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். பாப்தாதாவுக்கு, இந்த குழந்தைகளின் பிளான் பிடித்தமானதாக இருக்கின்றது. ஆதலால் இந்த ஆண்டு, புதுமையான பொருட்களைத் தயார் செய்யுங்கள். முன்பெல்லாம் கண்காட்சி நடத்தும்போது. ஸ்டால்களில், புதுப்புது விதமாக தயார் செய்து வைத்திருந்தது பாப்தாதா அறிவார். இதைப் பார்த்த மக்கள் தாங்களாகவே மற்றவரிடம் நீங்களும் சென்று பாருங்கள் என்று கூறுவார்கள். ஆதலால் இப்படி ஏதாவது ஒரு கண்டுபிடிப்பு அவசியம்

சரிதானே! இதற்கு பொறுப்பாளராக சசி சகோதரி இருக்கின்றார். கெட்டிக்காரர்தான். செய்வார். நன்று வாழ்த்துக்கள்.

<u>கல்வித்துறை</u>: கல்விக்கு மகத்துவம் இருக்கிறது. அரசாங்கமும் கூட கல்வி வளர்ச்சியில் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள். இதன் காரணமாக எல்லோருமாகச் சேர்ந்து, இவர்களுக்கு நிறைய புரோகிராம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றாலும் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும். இந்த வர்க்கத்திலிருந்து (கல்வியாளர்கள்) அதிக ஆத்மாக்கள் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. நன்று.

வெளிநாட்டிலிருந்து 125-பேர் மீட்டிங்கில் வந்திருக்கிறார்கள்: நீங்கள் என்ன அதிசயம் செய்து காட்டப் போகிறீர்கள்? பாப்தாதாவுக்கு இவ்வளவு மிகப் பிரியமான செல்லமான சேவாதாரி குழந்தைகள் ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்றால் என்ன சேவை செய்து அழகூட்டப் போகிறீர்கள்? ஏதாவது புதுமையாகச் செய்வீர்கள் இல்லையா? நல்லது. எல்லோருமாகச் சேர்ந்து ஒரு நல்ல ஜுவாலா ரூப் புரோகிராம் செய்யுங்கள் சாதாரண பிளான் அல்ல. ஜுவாலா ரூப் பிளான் செய்யுங்கள் எல்லோரும் ஜுவாலா ரூப் ஆகி விடட்டும். சுயம் உங்களுக்குள், ஜுவாலா ரூப் பிளான் செய்யுங்கள். எல்லோரும் ஜுவாலா ரூப் ஆகி விடட்டும். சுயத்தில், ஜுவாலா சொரூபம், சேவையில் சுருக்கத்தில் புரிந்து கொள்ளும்படி ஏதாவது கண்டுபிடியுங்கள். ஏனென்றால், தற்போது எல்லாவற்றையும் விட மிக கடினமான பிரச்சினை நேரம் தான். ஆதலால், விருத்தி மூலமாகவோ, திருஷ்டி மூலமாகவோ, வைப்ரேஷன் மூலமாகவோ, குறுகிய நேரத்தில் என்று இங்கே சென்றால் ஏதாவது கிடைக்கும் என்று நம்பிக்கையோடு வரும்படியாக, புதிய பிளான் செய்யுங்கள். காந்தம் தன் பக்கம் இழுப்பது போன்ற பிளான் செய்யுங்கள். போதும் போகலாம் என்று நினைத்தாலும் கூட, செல்ல முடியாத அளவுக்கு காந்தம்போல கவரும்படியாக புரோகிராம் இருக்க வேண்டும். இப்படிச் செய்தீர்களானால், தூரமாக விலகியிருப்பவர்களும் கூட சமீபமாக வந்து விடுவார்கள். டபுள் விதேஷிகள் இப்படிப்பட்ட பிளான் செய்யுங்கள். உங்களிடம் நிமித்தமாக உள்ள தாதிகள், தீதிகள் மிகவும் கெட்டிக்காரர்கள். பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல. பாருங்கள் இங்கே 5-பாண்டவர்கள் நிற்கிறார்கள். இந்த ஐந்து பேரும் என்ன செய்தார்கள்? அக்ஷோஹினி சேனையை முறியடித்து விட்டார்கள்.

ஆதலால் பாண்டவர்களும் ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல. ஒவ்வொரு பாண்டவரும் ஒரு மகான். ஆதலால் அதிசயம் செய்து காட்டுவீர்கள் தானே?' எப்படி வேண்டுமானாலும் சரி விருத்தி, திருஷ்டி, திட சங்கல்பம் இப்படி ஏதாவது பிளான் செய்யுங்கள். தாதிகள், தீதிகள் அனைவரும் நலம் தானே! டபுள் ஃபாரினர்ஸ் இந்திய டீச்சர்களுக்கு குறைந்தவர்கள் அல்ல. நிறைய எண்ணிக்கையில் இருக்கிறார்கள். ஆகவே, அதிசயம் நடந்து முடிந்து விட்டது என்றே எடுத்துக் கொள்ளலாம். நல்லது. நீங்கள் முதலில் பிளான் போடுங்கள், பிறகு இந்தியாவில் நடக்கவிருக்கும் மீட்டிங்கில், அந்தப் பிளானை, மேலும் ரத்தினங்களைப் பார்ப்பார்கள். நீங்கள் ஆற்றின் படித்துறையைக் கட்டி முடியுங்கள். அதில் முத்தும், வைரங்களும், இந்தியாவில் நடக்கும் மீட்டிங்கில் பதிப்பார்கள். பதிப்பீர்கள் தானே! மீட்டிங்கில் பதிப்பார்கள். வாழ்த்துக்கள். பாப்தாதா சாகார ரூபத்தில் நேரில் பார்த்துப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றார். வெளிநாட்டில் இவ்வளவு பேர் தயாராகி விட்டார்கள். பாருங்கள். எத்தனை டீச்சர்கள் தயாராகி விட்டார்கள். இவர்களும் கூட விசேஷமான டீச்சர்கள். மற்றவர்கள் இன்னும் அதிகம் பேர் இருக்கிறார்கள். ஆகவே பாப்தாதா டபுள் விதேஷி சேவாதாரி குழந்தைகளைப் பார்த்து மிக மிக மிக மிக மகிழ்ச்சியடைகின்றார். நாம் எதற்காக கை தட்ட வேண்டும் என்று இவர்கள் நினைக்கிறார்கள் மற்றவர்கள் தட்டட்டுமே! வாழ்த்துக்கள் நீங்கள் தானே தெரிவிக்க வேண்டும்! நல்லது, நன்றாகக் கை தட்டுங்கள்.

**76-தேசங்களிலிருந்து டபுள் விதேஷிகள் வந்திருக்கின்றனர். குமாரர்களின் ரிட்ரீட் நடந்தது:** குமார்கள் நல்ல அடையாளம் காட்டியிருக்கிறார்கள். யூத் குரூப் ஏதாவது புது பிளான் செய்திருக்கிறார்களா அல்லது இப்போது தான் யோசித்துக் கொண்டிருக்கிறார்களா? நீங்களும் கூட பிராமண பரிவாரத்திடமிருந்து பிராமண உலகினரின், உலக கோப்பையைப் பெறுங்கள். இப்போது தில்லிக்காரர்கள் யூத் புரோகிராம் பிளான் செய்யவில்லை. தில்லிக்காரர்கள் எழுந்திருங்கள். தில்லிக்காரர்களையும், உலக முழுவதிலுமுள்ள குமார்களையும் ஒன்று சேர்த்து, தேர்ந்தெடுத்து, பிராமண உலகினரிடமிருந்து உலகப் கோப்பையைக் கொடுக்கச் செய்ய வேண்டும். செய்ய வேண்டுமல்லவா? தைரியம் இருக்கிறதல்லவா? பிளான் தயார் செய்யுங்கள். செய்ய முடியுமா? பிரதம மந்திரி, குடியரசு

தலைவர். இளைஞர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். தற்சமயம் உலகத்தில் ஒரு கிரிக்கட் விளையாட்டு மட்டும் நடக்கவில்லை. மற்ற விளையாட்டுகளும் நடக்கின்றன. கலவரமாகவும், இன்னொரு பக்கம் அமைதியாகவும் இருக்கிறது. ஒரு பக்கம் இரண்டும் முழு வேகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. கலவரமும் முழு வீச்சில் நடக்கிறது. அமைதி ஸ்திதியிலிருப்பவர்களும் உறுதியாக இருக்கிறார்கள். ஆதலால் வாயுமண்டலத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிளான் தயார் செய்யுங்கள். இதற்காக மீட்டிங் செய்வீர்கள் இல்லையா? அந்த மீட்டிங்கில் இந்த பிளான் தயாராக வேண்டும். மிக நல்லது. தில்லிக்காரர்களே! குமார்களே! நீங்களும் யோசியுங்கள். நீங்களும் கூட பிளான் தயார் செய்ய வேண்டும். இதைப் பற்றிப் பேசுங்கள். தில்லிக்காரர்களும் பிளான் தயார் செய்யட்டும். அற்புதம் நிகழ்த்திக் காட்ட வேண்டும். வெற்றி உங்களுக்குத்தான் நன்று.

அகமதாபாத் டிரெயினிங்கில் உள்ள குமாரிகள் வந்திருக்கின்றனர்: குமாரிகள் என்ன நினைக்கிறார்கள்? குமாரிகள் மிகவும் அதிருஷ்டசாலிகள். சரண்டர் ஆனார்கள். தீதி என்று அழைக்கப்படுபவர்கள் ஆகி விட்டார்கள். பாருங்கள் எவ்வளவு பாக்கியம் உங்களுக்கு, டீச்சர் ஆனவுடன் பாப்தாதாவின் முரளி படிப்பதற்கு ஆசனம் கிடைக்கிறது. குருவின் ஆசனம் கிடைக்கிறது. பாப்தாதா டீச்சர்களை குருபாயி என்றே கூறுகின்றார். ஆகவே, இப்படி ஆவீர்கள் அல்லவா? இப்போது பயிற்சி நடந்து கொண்டிருக்கிறதா அல்லது முடிந்து விட்டதா? முடிந்து விட்டது. இப்போது சென்டரில் இருக்கிறார்கள். வாழ்த்துக்கள். எப்படிப்பட்ட டீச்சர் ஆக வேண்டும் தெரியுமா? டீச்சர் என்றால் இவரல்லவோ டீச்சர்! சுயநலமற்ற சேவாதாரி டீச்சர். பணிவு மற்றும் களங்கமில்லாத மனம். டீச்சர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் ஆனால் நீங்கள் சுயநலமற்ற டீச்சர் ஆக வேண்டும். அப்படி ஆவீர்கள் அல்லவா? ஆர்வம் நன்றாக இருக்கிறது. ஆர்வமிருக்கிறது, உற்சாகமிருக்கிறது. வெற்றியடையவார்கள் என்பதல்ல, வெற்றி ஏற்கனவே நிச்சயமாகி விட்டது. நன்று.

இப்போது ஒரு நொடியில் ஞான சூரிய ஸ்திதியில் நிலைத்திருந்து நாலா பக்கமும், பயபீதியில் கலவரமடைந்துள்ள ஆத்மாக்களுக்கு சர்வ

சக்திகளின் கிரணங்களைப் பரப்புங்கள். ரெம்பவும் பயந்து போய் பீதியடைந்திருக்கிறார்கள் சக்தி கொடுங்கள்.

நாலா பக்கங்களிலிருந்தும், குழந்தைகளிடமிருந்து விதவிதமான சமாச்சாரம், அடங்கிய கடிதங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. ஒவ்வொருவரும் கூறியிருக்கின்றனர், எனது நினைவையும், கொடுங்கள், எனது நினைவையும் கொடுங்கள் என்று. இதற்கு பாப்தாதா கூறுகின்றார்: ஒவ்வொரு அன்பான குழந்தையிடமிருந்தும் நினைவு வந்து சேர்ந்து விட்டது. தூரமாக இருந்தாலும், பாப்தாதாவின் மனசிம்மாசனத்தில் அதிகாரிகளாக இருக்கின்றனர் ஆதலால் யாரெல்லாம் எனது நினைவையும் கூறுங்கள் என்று சொன்னார்களோ அவர்களிடம் பாபாவிடம் வந்து சேர்ந்து விட்டது என்று கூறி விடுங்கள். மேலும் தந்தையின் அன்பு, குழந்தைகளைப் பறக்கச் செய்து கொண்டிருக்கிறது. நன்று.

நாலா பக்கமுள்ள மிகவும் சிரேஷ்ட பாக்கியவான், கோடியில் சிலராக இருக்கின்ற விசேஷ ஆத்மாக்களுக்கு சதா சுவமானில் இருந்து கொண்டிருக்கின்ற, மரியாதை கொடுக்கின்ற, சேவாதாரி குழந்தைகளுக்கு சதா ஸ்மிருதி சொரூபம் மற்றும் சக்தி சொரூப ஆத்மாக்களுக்கு சதா நிலையாகவும், உறுதியாகவும் உள்ள ஸ்திதி என்னும் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் சர்வ சக்தி சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 17.10.2003 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முழு ஆண்டும் சந்துஷ்டமணியாகி எப்பொழுதும் திருப்தியாக இருக்க வேண்டும். அனைவரையும் திருப்தி படுத்த வேண்டும்!

இன்று திலாராம் பாப்தாதா தன்னுடைய நாலாபுறமும் உள்ளவர்களையும், எதிரில் இருப்பவர்களையும், மேலும் தூரத்தில் இருந்தாலும் அருகாமையில் இருக்கும் ஒவ்வொரு ராஜா போன்ற செல்லக் குழந்தைகளையும், மிகவும் அன்பான குழந்தைகளையும் பார்த்து சந்தோஷம் அடைந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் ராஜா, ஆகையால் அவர்கள் ராஜா போன்ற செல்லக் குழந்தைகள் ஆவார்கள். இந்த பரமாத்மா அன்பு மற்றும் அன்புமிக்க பாலனை உலகத்தில் மிகவும் கொஞ்சம் ஆன்மாக்களுக்கே கிடைத்திருக்கின்றது. இருந்தாலும் நீங்கள் அனைவரும் பரமாத்மா அன்பு, பரமாத்மா பாலனைக்கு அதிகாரி யாவீர்கள் உலகத்தில் உள்ளவர்கள் அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாருங்கள். வாருங்கள் என்று ஆனால் நீங்கள் அனைவரும் பரமாத்ம அன்பை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள் பரமாத்மா பராமரிப்பில் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். இதேபோல் தன்னுடைய பாக்கியத்தை அனுபவம் செய்கிறீர்களா? பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் இரட்டை இராஜ்ய அதிகாரிகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது கூட சுயராஜ்ய அதிகாரி இராஜாக்கள் ஆகிறீர்கள். எதிர்காலத்தில் இராஜ்யம் உங்களுடைய பிறப்புரிமை அதிகாரமாகும். எனவே இரட்டை இராஜாக்கள் ஆகிறீர்கள். அனைவரும் ராஜாக்கள் தானே! பிரஜைகள் அல்லவே! இராஜயோகிகளா? அல்லது யாரேனும் பிரஜா யோகிகள் இருக்கிறீர்களா? யாரேனும் பிரஜா யோகி இருக்கிறீர்களா? பின்னால் இருப்பவர்கள் இராஜயோகிகள் தானே!

பிரஜாயோகி யாரும் இல்லை தானே! நிச்சயமாக! சரியாக சிந்தித்து சொல்லுங்கள். இராஜ்ய அதிகாரி என்றால் அனைத்து சூட்சும மற்றும் ஸ்தூலமான கர்ம இந்திரியங்களுக்கு அதிகாரி. ஏனெனில் சுயராஜ்யம் இல்லையா! அவ்வப்போது இராஜாவாக ஆகிறீர்களா, அல்லது எப்போதும் இராஜாக்களாக இருக்கிறீர்களா? முக்கியமாக தன்னுடைய மனம், புத்தி, சமஸ்காரங்களுக்கு கூட அதிகாரியாகிறீர்களா? எப்போதும் அதிகாரிகளா? அல்லது அவ்வப்போதா? சுயராஜ்யம் என்றால் எப்போதும் சுயராஜ்யமா அல்லது ஒரு நாள் இருந்து மறு நாள் இல்லாமல் இருக்கிறதா. இராஜ்யம் என்றால் எப்பொழுதும் இருக்கிறது தானே! எனவே எப்பொழுதுமே சுயராஜ்ய அதிகாரி எனில், எப்பொழுதும் மனம், புத்தி, சம்ஸ்காரங்களின் மீது அதிகாரிமுடையவர்கள் எப்பொழுதும் இருக்கிறதா? எப்பொழுதும் இருக்கிறது என சொல்வதில்லையே! சில நேரங்களில் மன வசப்பட்டு நடக்கிறீர்களா? அல்லது மனத்தை உங்கள் வசத்தில் வைத்திருக்கிறீர்களா? சில நேரங்களில் மனம் அதிகாரியாகிறதா? அப்படித்தானே! எனவே எப்பொழுதும் சுய ராஜ்ய அதிகாரியிலிருந்து விஷ்வ இராஜ்ய அதிகாரி ஆகுங்கள். எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். எவ்வளவு நேரம், எவ்வளவு சக்தியோடு தன்னுடைய கர்ம இந்திரியங்கள், மனம், புத்தி, சம்ஸ்காரங்கள் மீது இப்போது அதிகாரியாகியிருக்கிறீர்களோ, அவ்வளவு காலம் எதிர்காலத்தில் இராஜ்ய அதிகாரம் கிடைக்கிறது. ஒருவேளை இப்போது பரமாத்ம வளர்ப்பு, பரமாத்ம படிப்பு, பரமாத்மா ஸ்ரீமத் ஆகியவைகளின் ஆதாரப்படி இந்த ஒரு சங்கமயுக ஜன்மத்தில் இப்பொழுதும் அதிகாரியாகவில்லையெனில் 21-ஜன்மங்களுக்கு எப்படி இராஜ்ய அதிகாரியாகப் போகிறீர்கள்? கணக்கு இருக்கிறது அல்லவா? இந்த சமயத்தில் சுயராஜ்யம் அதாவது தன் மீது இராஜா ஆவதின் மூலமே 21-ஜன்மத்திற்கு உத்திரவாதம் ஆகிறது நான் யார்? என்ன ஆகப்போகிறேன்? தன்னுடைய எதிர்காலத்தை தற்காலத்தின் அதிகாரத்தின் மூலமாகவே தானே அறிந்து கொள்ள முடியும். சிந்தியுங்கள். விசேஷ ஆத்மாக்களான உங்களுடைய அனாதி, ஆதி பெர்ஸனாலிட்டி (மேலாண்மை) மற்றும் ராயல்டி (மேன்மை) எவ்வளவு உயர்வாக உள்ளன! அனாதி ரூபத்தில் கூட பாருங்கள், எப்பொழுது ஆன்மாக்கள் பரந்தாமத்தில் இருந்தனவோ, அப்பொழுது எவ்வளவு பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆன்மாக்களாக காணப்படுகின்றன. அந்த பிரகாரசத்தின் ராயல்டி மற்றும் பெர்ஸனாலிட்டி எவ்வளவு

உயர்வானது. உங்களால் பார்க்க முடிகிறதா? எப்பொழுது தந்தையின் கூடவே ஆத்ம ரூபத்தில் இருந்தீர்களோ, அப்பொழுது அருகாமையில் இருந்தீர்கள் எப்படி ஆகாயத்தில் ஏதேனும் நட்சத்திரங்கள் மிகவும் அதிகமாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன அல்லவா. அதே போன்றே ஆத்மாக்களாகிய நீங்கள் குறிப்பாக பாபாவுடன் விசேஷமான பிரகாசித்துக் கொண்டிருக்கக் கூடிய நட்சத்திரங் களாவீர்கள் பரந்தாமத்தில் கூட நீங்கள் தந்தைக்கு அருகாமையில் இருந்தீர்கள். மேலும் அடுத்தப்படியாக ஆதி சத்யுகத்தில் கூட தேவ ஆத்மாக்களாகிய உங்களுடைய பெர்ஸனாலிட்டி, ராயல்டி எவ்வளவு உயர்வானது. முழு கல்பத்தையும் சுற்றி வாருங்கள். அவர்கள் தர்மாத்மாக்களாக இருக்கட்டும், மகான் ஆத்மாக்களாக இருக்கட்டும், தர்ம பிதாக்களாக இருக்கட்டும், தலைவர்களாக இருக்கட்டும், நடிகர்களாக இருக்கட்டும், யாராக இருந்தாலும் இந்த மாதிரி பெர்ஸனாலிட்டி யாருக்காவது இருந்திருக்கிறதா? சத்யுகத்தில் தேவ ஆத்மாக்களுக்கு எப்படி உள்ளதோ அதைப் போன்று? கண் முன் வருகிறது அல்லவா? உங்களுடைய தேவ சுய சொரூபம் வருகிறதா? அல்லது நாம் ஆவோமா! மாட்டோமா! அப்படியா? உறுதி தானே! பின்னால் உள்ளவர்கள் உறுதி தானே? தன்னுடைய தேவ ரூபத்தை கண் முன், கொண்டு வாருங்கள். மேலும் பாருங்கள். பெர்ஸனாலிட்டி கண் முன் தெரிகிறதா? எவ்வளவு ராயல்டி! இயற்கை கூட அப்போது பெர்ஸனாலிட்டி கொண்டிருந்தது. பறவைகளும், மரங்களும், மலர்களும் அனைத்தும் பெர்ஸனாலிட்டி மற்றும் ராயல்டி கொண்டிருந்தன. நல்லது. கீழே வாருங்கள் தன்னுடைய பூஜ்ஜிக்கத்தக்க ரூபத்தை பார்த்திருக்கிறீர்களா? உங்களுடைய பூஜை நடக்கிறது. இரட்டை வெளிநாட்டுக்காரர்கள் பூஜிக்கத்தக்கவர்களாவீர்களா? அல்லது இந்தியர்கள் ஆவார்களா? நீங்கள் அனைவரும் தேவிகளாகவும், தேவர்களாகவும் ஆவீர்கள் அல்லவா? அல்லது துதிக்கை உடையவர்கள் அல்ல, வால் உடைவர்கள் அல்ல, தேவியர்களில் கூட காளி ரூபத்தில் அல்ல ஆனால் தேவதைகளினுடைய கோவிலில் பாருங்கள். உங்களுடைய பூஜிக்கத்தக்க சுய சொரூபம் எவ்வளவு ராயல்டி மிக்கதாகவும், எவ்வளவு பெர்ஸனாலிட்டி உள்ளதாகவும் இருக்கிறது. மூர்த்திகள் 4-அடி அல்லது 5-அடி உயரத்தில் இருக்கின்றன ஆனால் கோவில் எவ்வளவு பெரியதாக அமைக்கிறார்கள். இது தான் ராயல்டி மற்றும்

பெர்ஸனாலிட்டி ஆகும். தற்போதுள்ள பிரதம மந்திரியாகட்டும், அல்லது இராஜாவாகட்டும் பாவம் அவர்களுடைய சிலைகளை சூரிய ஒளி படும்படி வெட்டவெளியில் வைத்திருக்கிறார்கள். சிலைகளின் நிலையைப் பாருங்கள்! மேலும் உங்களுடைய பூஜிக்கத்தக்க சுய சொரூபத்தினுடைய பெர்ஸனாலிட்டி எவ்வளவு உயர்வானது? உயர்வாகத்தானே இருக்கிறது? குமாரிகள் அமர்ந்திருக்கிறார்கள் அல்லவா? உங்களுடையது ராயல்டி மிக்கது தானே! கடைசியில் சங்கமயுகத்தில் கூட உங்கள் அனைவரின் ராயல்டி எவ்வளவு உயர்வாக உள்ளது. பிராமண வாழ்க்கையில் பெர்ஸனாலிட்டி எவ்வளவு உயர்வானது. பகவான் நேராகவே உங்களுடைய பிராமண வாழ்க்கையில் பெர்ஸனாலிட்டி மற்றும் ராயல்டியை ஏற்படுத்தியுள்ளார். பிராமண வாழ்க்கையை உருவாக்கிய கலைஞர் யார்? சுயம் தந்தை ஆவார். பிராமண வாழ்க்கையின் பெர்ஸனாலிட்டி, ராயல்டி எதுவாக இருக்கிறது? பியூரிட்டி (தூய்மை). தூய்மை தான் ராயல்டி ஆகும். அப்படித் தானே! பிராமண ஆன்மாக்கள் யாரெல்லாம் அமர்ந்திருக்கிறீர்களோ அனைவருக்கும் தூய்மை தான் ராயல்டி ஆகும் அல்லவா? ஆமாம். தலையாட்டுங்கள்? பின்னால் இருப்பவர்கள் கைகளை உயர்த்திக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் பின்னால் இல்லை, முன்னால் இருக்கிறீர்கள்? பாருங்கள் எப்பொழுதும் பார்வை பின்பக்கமாகவே செல்கிறது. முன்னால் பார்க்க வேண்டுமென்றால் குனிய வேண்டிய இருக்கிறது. பின்னால் தானாகவே பார்வை செல்கிறது.

ஆகவே சோதனை செய்யுங்கள் -தூய்மையினுடைய பெர்ஸனாலிட்டி எப்பொழுதும் இருக்கிறதா? மனம், சொல் செயல், விருத்தி (உள் உணர்வு) திருஷ்டி (பார்வை) மற்றும் கிருத்தி, அனைத்திலும் தூய்மை இருக்கிறதா? மனதில் தூய்மை எனில் எப்பொழுதும் அனைவருக்காவும் சுப பாவனை, சுப ஆசைகள் கொண்டிருப்பது, அனைவருக்காவும். அந்த ஆத்மா எப்படிபட்டதாக இருந்தாலும், தூய்மையின் ராயல்டி உடைய மனம் அனைவருக்காவும், சுப பாவனை, சுப விருப்பம், நன்மைக்கான பாவனை, இரக்க பாவனை, கொடுக்கும் பாவனை உடையதாக இருக்கும். மேலும் திருஷ்டியில் எப்பொழுதும் ஒவ்வொருவரையும் பார்க்கும்போது அவர்களின் ஆத்மா சொரூபம் பார்வைக்கு வர வேண்டும். சூட்சும தேவதா (பரிஸ்தா) ரூபம் தெரிய

வேண்டும். அவர்கள் சூட்சும தேவதாவாக ஆகாமல் இருக்கலாம். ஆனாலும் நம்முடைய பார்வையில் சூட்சும தேவதா ரூபம், ஆத்ம ரூபமே தெரிய வேண்டும். கிருத்தி என்றால் தொடர்பு மற்றும் உறவில் காரியத்தில் வருவது அதில் எப்போதும் அனைவருக்கும் அன்பு கொடுக்க வேண்டும். சுகம் கொடுக்க வேண்டும், பிறர் நமக்கு அன்பு கொடுக்கிறார்களா, கொடுக்கவில்லையா என்பதல்ல? ஆனால் என்னுடைய கடமையே அன்பு கொடுப்பதாகும். அன்பானவர்களாக மாற்றுவதாகும். சுகம் கொடுக்க வேண்டும். சுலோகன் இருக்கிறது அல்லவா? துக்கம் கொடுக்காதீர்கள், துக்கம் எடுத்துக் கொள்ளாதீர்கள்? கொடுக்கவும் கூடாது, எடுக்கவும் கூடாது? கொடுப்பவர்கள் உங்களுக்கு எப்பொழுதாவது துக்கம் கொடுத்தால் கூட நீங்கள் அவர்களை சுகம் கொடுக்கும் உணர்விலேயே பாருங்கள். விழுந்து விட்டவர்களை மேலும் விழ வைக்கலாகாது. விழுந்து விட்டவர்களை உயர்வாக தூக்கி விட வேண்டும். எதிலேயோ மாட்டிக் கொண்டு துக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? விழுந்து விட்டவர்கள் அல்லவா? அவர்களை மேலும் விழ வைக்காதீர்கள்? பாவம் அவர்களுக்கு அடியும் கொடுக்காதீர்கள்? அவர்களை அன்பு கொண்டு தூக்கி விடுங்கள். அதில் தான் இருக்கிறது உங்களிடமிருந்து தான் முதலாவதாக தர்மம் வர வேண்டும். (Charity begins at Home) முதலாவதாக தர்மம் தன் வீட்டிலிருந்து தான் உருவாகிறது அல்லவா! தன்னுடைய அனைத்து நண்பர்கள், சேவையில் உடனிருப்பவர்கள், பிராமண பரிவாரத்தில் கூட இருப்பவர்கள், ஒவ்வொருவரையும் தூக்கி விடுங்கள். அவர்கள் தங்களுடைய கெட்டவைகளை வெளிப்படுத்தினாலும் நீங்கள் அவர்களின் சிறப்பு அம்சங்களைப் பாருங்கள். அனைவரும் வரிசைக்கிரமத்தில் தானே இருக்கிறார்கள். உங்களுடைய நினைவு சின்னமாக இருக்கக்கூடிய மாலையைக் கூட பாருங்கள். அதில் அனைத்தும் ஒரே தரத்தில் இருக்கவில்லையே! 108-எண்களில் தானே உள்ளன. எனவே வரிசைக்கிரமத்தில் இருக்கிறார்கள் அல்லவா? அப்படித் தான் இருப்பார்கள் ஆனால் என்னுடைய கடமை என்ன? நான் 8-ல் இல்லாமல் இருக்கிறேனே! 108ல் வந்தாலும் வருவேன், வந்து விடுவேன், இப்படி எண்ணிக் கொண்டிருக்காதீர்கள். 108ல் கடைசி மணியாக கூட இருக்கலாம் என்றாலும் சிறிதளவு சம்ஸ்காரமாவாது இருக்குமல்லவா! பிறருக்கு சுகத்தை கொடுத்துக் கொடுத்து அன்பை கொடுத்து கொடுத்து உங்களுடைய சம்ஸ்காரம் அன்பு மிக்கதாகவும்,

சுகம் மிக்கதாகவும் ஆகி விடும். இதுகூட சேவை ஆகும். இந்தச் சேவையை முதலாவதாக உங்களுடைய வீடுகளில் கொண்டு வர வேண்டும்.

பாப்தாதாவிற்கு இன்று ஒரு விஷயத்தை நினைக்கும் பொழுது சிரிப்பு வந்து கொண்டிருந்தது. சொல்லட்டுமா? கேள்விபட்டால் உங்களுக்கும் சிரிப்பு வரும்? பாப்தாதா குழந்தைகளினுடைய விளையாட்டை பார்த்து கொண்டு தான் இருக்கிறார் அல்லவா! பாப்தாதா தேவைப்படும் பொழுதெல்லம் ஒரு நொடியில் ஒரு சென்டரின் விவரங்களை டி.வியை திறந்து பார்க்கிறார். சில நேரங்களில் சென்டர், சில நேரங்களில் வெளி நாடு, சில நேரங்களில் இந்தியா சுவிட்சை போட்டதும் தெரிந்து விடுகிறது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று ஏனென்றால் குழந்தைகள் மீது தந்தைக்கு அன்பு இருக்கிறது அல்லவா? குழந்தைகள் கூட கூறுகிறார்கள் சமமாக ஆகியே தீரு வேண்டும் தானே! உறுதியாகத்தானே! சமமாக ஆகியே தீர வேண்டுமல்லவா? குமாரிகள் சமமாக ஆக வேண்டும் தானே! அல்லது சில பேர் ஆகி விட்டார்கள், டிராமாவில் இருக்கிறது அப்படியா? அப்படியல்ல, சமம் ஆவது எனில் எல்லா குமாரிகளும் ஆகியே தீர வேண்டும். இதற்காக இறக்க வேண்டி வரும், ஏதேனும் செய்ய வேண்டி வரும், சிந்தித்துப் பார்த்து கைகளைத் தூக்குங்கள் சரி. இறக்க வேண்டி இருந்தாலும், தலைகுனிய வேண்டி இருந்தாலும், தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தாலும் கேட்க வேண்டியது இருந்தாலும் நான் தயார் என்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் கைகளை உயர்த்துங்கள். குமாரிகள் சிந்தித்து பார்த்து கைகளை உயர்த்த வேண்டும். இவர்களுடைய புகைப்படத்தை எடுங்கள். குமாரிகள்அதிகம் பேர் இருக்கிறார்கள். இறக்க வேண்டியது வரலாம், தலைகுனிய நேரிடலாம். பாண்டவர்கள் கைகளை உயர்த்துங்கள். கேட்டீர்கள் அல்லவா! எப்படியாயினும் சமமாக ஆகி விட வேண்டும். சமமாக ஆகவில்லையென்றால் சந்தோஷம் வராது. பரந்தாமத்திலும் அருகில் இருக்க மாட்டீர்கள். பூஜையில் கூட வித்தியாசம் வந்து விடும். சத்யுகத்தில் இராஜ்ய பாக்கியத்தில் கூட வித்தியாசம் வந்து விடும். பிரம்மாபாபாவுடன் உங்களுக்கு அன்பு இருக்கிறது அல்லவா? இரட்டை வெளிநாட்டுகாரர்களுக்கு அனைவரையும் விட அதிக அன்பு இருக்கிறது. யாருக்கு பிரம்மாபாபாவுடன் ஆழமான இதயப் பூர்வமான

அன்பு இருக்கிறதோ அவர்கள் கைகளை தூக்குங்கள். இதயப்பூர்வமான அன்பு தானே வெளிநாட்டுகாரர்களே? நல்லது உறுதியான அன்பு தானே! இப்போது கேள்வி கேட்கிறேன்? அன்பு யாருடன் இருக்கும்? அன்பின் அடையாளம் அவர்களை பிடித்திருப்பது தான். அன்பு செய்பவர்களுக்கு யார் மீது அன்பு செலுத்துகிறார்களோ அவர்களை பிடித்திருக்கும். அவர்கள் இருவருடைய சம்ஸ்கார, சங்கல்பம், சுபாவங்கள் ஒத்துப் போவதால், அப்பொழுது தான் பிடித்திருக்கும். ஆகவே பிரம்மாபாபாவிடம் அன்பு இருக்கிறது என்றால் 21-ஜென்மங்களிலேயும், முதலாவது ஜென்மத்திலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது மூன்றாவதில் வருவது கூட சரி அல்ல ஆனால் முதல் ஜென்மத்தில் இருந்து இறுதி ஜெனமம் வரை கூடவே இருப்பார்கள். வேறு வேறு ரூபத்தில் உடன் இருப்பார்கள். எனவே யார் உடன் இருக்க முடியும் யார் சாமாக இருக்கிறார்களோ அவர் நம்பர் ஒன் ஆத்மா. அவரோடு கூடவே எப்படி இருக்க முடியும்? எப்போது இருக்க முடியும்? எப்போது நம்பர் ஒன் ஆகிறீர்களோ அப்போது உடன் இருப்பீர்கள். அனைத்திலும் நம்பர் ஒன் ஆக வேண்டும். அதாவது மனத்தில் சொல்லில், கர்மத்தில், விருத்தியில், திருஷ்டியில், கிருத்தியில் அனைத்திலும் ஆக வேண்டும் நம்பர் ஒன்னாக இருக்கிறீர்களா, அல்லது வரிசைக்கிரமத்தில் இருக்கிறீர்களா? அன்பு இருக்கிறது எனில் அன்புக்காக அர்ப்பணிப்பதில் ஒன்றும் கஷ்டம் இருப்பதில்லை. கடைசி ஜென்மத்தில் கலியுகத்தின் இறுதியில் கூட தேக அபிமானத்தில் இருப்பவர்கள் அன்பிற்காக உயிரையும் அர்பணித்து விடுகிறார்கள். ஆகையினால் நீங்கள் பிரம்மாபாபாவின் அன்பில் தன்னுடைய சம்ஸ்காரங்களை மாற்றி அமைத்துக் கொள்வது பெரிய விஷயமா என்ன? பெரிய விஷயமா என்ன? இல்லை? இன்றிலிருந்து உங்கள் அனைவரின் சம்ஸ்காரங்கள் மாறி விட்டன. உறுதி தானே! ரிப்போர்ட் (தகவல்) வரும்! உங்களுடன் இருப்பவர்கள் எழுதுவார்கள். சரி தானே! தாதிமார்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா? சம்ஸ்காரங்கள் மாறி விட்டன என்கிறார்கள், அல்லது நேரம் எடுத்துக் கொள்வார்களா? என்ன? மோகினி (அமெரிக்கா பொறுப்பு சகோதரி) சொல்ல வேண்டும். மாறுவார்கள் அல்லவா? இவர்கள் அனைவரும் மாறுவார்கள் அல்லவா! அமெரிக்காவை சார்ந்தவர்கள் மாறி விடுவார்கள். சிரிப்புக்கான விஷயத்தை இன்னும் கூறவில்லை.

சிரிப்புக்கான விஷயம் இது தான். அனைவரும் கூறுகிறார்கள் முயற்சி அதிகமாக செய்கிறோம் என்று மேலும் இதைப் பார்க்கும் பொழுது பாப்தாதாவுக்கு இரக்கம் வருகிறது. முயற்சி அதிகமாக செய்து கொண்டிருக்கிறார்கள், அவ்வப்போது உழைப்பும் அதிகமாக உள்ளது, ஆனால் என்ன சொல்கிறார்கள், என்ன செய்வேன் என்னுடைய சமஸ்காரம் இப்படி இருக்கிறது, சம்ஸ்காரத்தை சொல்லி தன்னுடைய சுமையைக் குறைத்துக் கொள்கிறார்கள் ஆனால் பாப்தாதா இன்று பார்க்கிறார் எதை உங்களுடைய சம்ஸ்காரம் என்று கூறுகிறீர்களோ அது உங்களுடைய சம்ஸ்காரம்தானா? நீங்கள் ஆன்மாக்கள் ஆன்மாக்கள் தானே! சரீரம் இல்லை தானே! ஆத்மாவின் சம்ஸ்காரம் என்ன? அதாவது உங்களுடைய ஓரிஜினல் (உண்மையான) சம்ஸ்காரம் என்ன? இன்று எதை உங்களுடையது என கூறுகிறீர்களோ அது உங்களுடையதா? அல்லது இராவணுடையதா? யாருடையது? உங்களுடையது இல்லையல்லவா? பின் என்னுடையது என்று ஏன் கூறுகிறீர்கள்! என்னுடைய சம்ஸ்காரம் இப்படி இருக்கிறது என்று கூறுகிறீர்கள் அல்லவா? இன்றிலிருந்து இது என்னுடைய சம்ஸ்காரம் என்று கூறாதீர்கள். இங்கும் அங்கும் சில நேரங்களில் குப்பை வெளிப்பட்டு விடுகிறது அல்லவா? இது இராவணனுடைய பொருள் வெளி வந்து விடுகிறது. அது எப்படி என்னுடையது என்று கூறுவீர்கள்? என்னுடையது தானா? இல்லையல்லவா? இதை எப்பொழுதும் கூறக் கூடாது. எப்பொழுது என்னுடையது என்ற வார்த்தையைக் கூறுகிறீர்களோ, நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நான் யார்? என்னுடைய சம்ஸ்காரம் என்ன? தேக அபிமானத்தில் கூறியது தான் என்னுடைய சம்ஸ்காரம் என்று. ஆத்மா அபிமானத்தில் இந்த சம்ஸ்காரம் இல்லை. இப்பொழுது இந்த வாக்கியத்தை மாற்றி அமைத்து கொள்ள வேண்டும். என்னுடைய சம்ஸ்காரம் என்று கூறிக் கொண்டு கவனமற்றவர்களாகி விடுகிறீர்கள். அர்த்தம் அதுவல்ல, சம்ஸ்காரம் என்று சொல்கிறீர்கள். நல்லது. இரண்டாவது வார்த்தை என்ன கூறுகிறீர்கள் என்னுடைய தபாவம் என்கிறீர்கள். இப்பொழுது சுபாவம் என்ற வார்த்தை எவ்வளவு நன்றாக இருக்கிறது. சுவ என்ற வார்த்தை நன்றாக இருக்கிறது. என்னுடைய சுபாவம் அதாவது சுவத்தின் பாவனை நன்றாக இருக்கிறது. கெட்டதல்ல, எனவே இந்த வார்த்தைகளை பயன்படுத்துகிறீர்கள் அல்லவா? என்னுடைய சுபாவம், என்னுடைய சம்ஸ்காரம். இப்பொழுது இந்த வார்த்தையை மாற்றி

அமைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதெல்லாம். என்னுடையது என்ற வார்த்தை வருகின்றதோ அப்பொழுது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்னுடைய உண்மையான சம்ஸ்காரம் என்ன? இதை யார் கூறுகிறார்கள்? ஆத்மா கூறுகிறது. இது என்னுடைய சம்ஸ்காரம் என்று. எப்பொழுதெல்லாம் இதை நினைத்துப் பார்த்து கொள்கிறீர்களோ அப்பொழுது தன்மீது சிரிப்பு வரும்? சிரிப்பு வருகிறதா இல்லையா? சிரிப்பு வருகிறது என்றால் சின்ன சின்ன தவறுகள் நீங்கி போய் விடும். இதற்கு தான் கூறுவது வார்த்தைகளை மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள் என்பது. அதாவது ஒவ்வொரு ஆத்மாவோடும் சுவமான் மற்றும் சம்மான் (சுயமரியாதை மற்றும் மரியாதை) உடன் இருப்பது. தானும் எப்பொழுதும் சுய மரியாதையில் இருக்க வேண்டும். மற்றவர்களையும் சுய மரியாதையோடு பார்க்க வேண்டும். சுவமானத்தில் இருந்து பார்க்கின்ற பொழுது எந்த விஷயங்கள் வந்தாலும் அவைகள் உங்களுக்கு பிடித்தமானவைகளாக இருக்காது. எப்போதும், ஏதேனும் மோதல்கள் வருவதை விரும்புகிறீர்களா? விரும்பவில்லைதானே? ஆகையினால் ஒருவரை ஒருவர் சுயமரியாதையோடு பாருங்கள். இவர் விசேஷமான ஆத்மா! இவர் தந்தையினால் பராமரிக்கப்பட்டு வரும் பிராமண ஆத்மா! இவர் கோடியில் சிறிதாகவும், சிறிதிலும் சிறிதாக விளங்கும் ஆத்மா! இந்த ஒரே ஒரு விஷயத்தை செய்யுங்கள். தன்னுடைய கண்களில் புள்ளியை வைத்துக் கொள்ளுங்கள். இது போதும். ஒன்று புள்ளியை பார்க்கிறீர்கள், மற்றொன்று புள்ளியை ஐக்கியப்படுத்திக் கொள்கிறீர்கள். எனவே ஒன்றும் நடந்தேறி விடாது, உழைக்க வேண்டியிராது. எப்படி ஒரு ஆத்மா பிரிதொரு ஆத்மாவை பார்த்துக் கொண்டிருக்கிறது, ஒரு ஆத்மா பிரிதொரு ஆத்மாவோடு பேசிக் கொண்டிருக்கிறது. இந்த ஆத்மீக விருத்தியையும், ஆத்மீக திருஷ்டியையும் கொண்டு வாருங்கள். புரிந்ததா? என்ன செய்ய வேண்டும் என்று. இப்போது என்னுடைய சம்ஸ்காரம் என்று ஒரு போதும் கூறக் கூடாது. சுபாவம் என்று கூறும் பொழுது சுவத்தின் பாவனையில் இருங்கள். சரி தானே!

பாப்தாதா இந்த சீசனின் முதல் தடவை உங்களுடையது தானே. எப்பொழுது முதலிடத்தை எடுத்திருக்கிறீர்களோ, முதலாம் நம்பரில் ரிட்டன் (திருப்பி கொடுப்பது) கூட கொடுக்க வேண்டும் அல்லவா? இரட்டை வெளிநாட்டுக்காரர்களுக்கு இந்த சிறப்பு தன்மை

பிறப்பிலேயே இருக்கிறது. எதை செய்தாலும் உறுதிபட செய்வார்கள், பாதியில் விட்டு விட மாட்டார்கள், முழுமையாக செய்வார்கள், சரியா அல்லது தவறா? சரி என்று கூறி விட்டு மத்தியில் விட்டு விட மாட்டீர்களே! பிரதி உபகாரம் (ரிட்டன்) செய்ய வேண்டுமல்லவா? போதும் இந்த சீசனில் அல்லது முழு சீசனிலும் இன்றிலிருந்து முதல் வாய்ப்பு இருக்கிறது. முழு ஆண்டிலேயும் சீசன் என்னவோ 6-மாதம் தான் நடக்கிறது ஆனால் முழு ஆண்டிலேயும் அனைவருக்கும் எப்பொழுது பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் தங்களுக்குள்ளும், பிற ஆத்மாக்களுடனும் யாரை சந்தித்தாலும் அவர்களுக்கு திருப்தி என்ற உதவியைக் கொடுங்கள். தானும் திருப்தியோடு இருங்கள். பிறரையும் திருப்திப்படுத்துங்கள். இந்த சீசனுடைய சுவமானம் சந்துஷ்டமணியாகும். எப்பொழுதுமே சந்துஷ்டமணியாக இருங்கள் சகோதரர்கள் கூட மணி தான். மறுக்க முடியாது. ஒவ்வொரு ஆத்மாவும், ஒவ்வொரு நேரமும் சந்துஷ்ட மணி தான். மேலும் தான் எப்போது திருப்தியாக இருக்கிறோமோ அப்போது பிறரையும் திருப்தியடைய செய்வோம். திருப்தியாக இருக்க வேண்டும் மற்றும் திருப்தி படுத்த வேண்டும். சரி தானே! விருப்பம் தானே! குமாரிகளுக்கு விருப்பம் தானே! யாருக்கு விருப்பம் இருக்கிறதோ அவர்கள் செய்வார்கள். கேட்பதில் மட்டும் விருப்பம் இருக்க கூடாது. நடைமுறையில் செய்வதிலேயும் விருப்பம் இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் கைகளை உயர்த்துங்கள். இந்த கைகளை பார்த்து பாப்தாதாவினுடைய மனம் சந்தோஷம் அடைந்து விட்டது. மிகவும் நல்லது. வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள். எது நடந்தாலும் தன்னுடைய சுய மரியாதை என்ற இருக்கையில் ஒருமித்து இருங்கள். ஆடாதீர்கள். சில நேரம் ஓர் இருக்கையில், மற்றொரு நேரம் இன்னொரு இருக்கையில் என்று இருக்கக் கூடாது. அப்படி அல்ல. தன்னுடைய சுய மரியாதை என்ற இருக்கையில் ஒருமித்து இருங்கள். மேலும் ஒருமைப்பாட்டு இருக்கையில் இருந்து கொண்டு ஏதாவது விஷயத்தை பார்ப்பீர்களானால் கேலிச்சித்திரக் காட்சி (Cartoon show) போன்று பாருங்கள். கார்டுன் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது அல்லவா? பிரச்சனைகள் அல்ல? கார்டுன் ஷோ ஓடிக் கொண்டிருக்கிறது. சிங்கம் வரலாம், வெள்ளாடு வரலாம், தேள் வரலாம், பல்லி வரலாம் இவைகளெல்லாம் கார்டுன் ஷோ போல். தன்னுடைய இருக்கையில் கவலையற்று இருங்கள். மகிழ்ச்சி வரும். நல்லது. சிங்கம் வந்தாலும்,

நாய் வந்தாலும், பூனை வந்தாலும் வரட்டும். பார்த்துக் கொண்டே இருங்கள். பாப்தாதா சொல்லி இருந்தார். அல்லவா! அனைவரும் தங்களுடைய சுவமானம் எனப்படுகின்ற பெருமைமிக்க இருக்கையில் அமர்ந்து கொண்டே இருங்கள், அப்பொழுது குழப்பம் இராது. எப்பொழுது பெருமை அதாவது சுவமானம் என்ற பெருமையில் இல்லாதிருக்கிறீர்களோ அப்பொழுது குழப்பம் ஏற்படுகிறது. சிறிய காகிதப் புலியைப் பார்த்தாலும் குழப்பம் அடைந்து விடுகிறீர்கள். எனவே இந்த ஆண்டு ஒருமனதோடு சுவமானம் என்ற இருக்கையில் இருக்க வேண்டும். இப்படி கூறக்கூடாது. நான் அறிந்திருக்கின்றேன், கேட்டுக்கூட இருக்கின்றேன். புரிந்து கூட இருக்கின்றேன் ஆனால் கூடாது. கேட்பது மற்றும் புரிதல் என்பது சரி தான் ஆனால் தன்னை ஏற்றுக் கொண்டு ஒரு மனதோடு இருக்கையில் அமர வேண்டும். ஏற்றுக் கொண்டு நடைமுறை படுத்தவிலை. புரிந்துள்ளீர்கள் மற்றும் கேட்கிறீர்கள் அவ்வளவு தான். இருக்கையில் சொரூபத்தில் நிலையாக இருந்து அமருங்கள். புரிந்ததா?

பாப்தாதாவிற்கு செய்திகள் கிடைத்தன. இது குமாரிகளினுடைய குழு (குரூப்) நான்கு குழுக்கள் உள்ளன. ஒன்று கம்ப்யூட்டர் குரூப், மற்றொன்று மேனேஜ்மெண்ட் குரூப் மற்றும் ஹெல்த் மேலும்.... நான்கு குரூப்களின் செய்திகள் கிடைத்தன. கம்ப்யூட்டர் இயக்குபவர் இருக்கையில் அமர வேண்டும். இருப்பினும் தன்னுடைய சுவமானம் என்ற இருக்கையையும் விட்டு விடக் கூடாது. இரண்டு இருக்கைகளில் அமர வேண்டும். கம்ப்யூட்டர் இருக்கையில் மாத்திரம் அல்ல. அப்பொழுது இரட்டை சேவையாகி விடும். அதிகமாக சேவை செய்ய முடியும். ஹெல்த் குரூப்பை சார்ந்தவர்கள் அதிக சேவை செய்ய முடியும். காட்டினீர்கள், புத்தகங்கள் தயாரித்தீர்கள், எல்லா செய்திகளும் கிடைத்தன. புத்தகத்தை யார் தயாரித்தது? நன்றாக செய்திருக்கிறீர்கள் ஆனால் ஹெல்த் கூடவே சுவமான் முதலாவதாக வர வேண்டும். சுவமானம் என்ற இருக்கையை விட்டு விடக்கூடாது. சில நேரங்களில் ஒரு இருக்கையில், மற்றொரு நேரத்தில் இன்னொரு இருக்கையில் அவ்வாறு இருக்கக் கூடாது. சிரேஷ்டமான சுவ சொரூபத்தின் நினைப்பு என்ற இருக்கையில் இருக்க வேண்டும். தன்னுடைய இருக்கையை விட்டு விடக் கூடாது. குமாரிகள் கூட உறுதிமொழி எடுத்துக் கொண்டீர்கள் அல்லவா? ரெம்ப நல்லது

செய்தீர்கள். பாப்தாதா இப்பொழுது உறுதி மொழிக்காக வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார். இருந்தாலும் வாழ்த்துக்கள் எதற்காகப் பெற வேண்டும்? நடைமுறைப் படுத்துவதற்காக. இன்று உறுதி மொழிக்கான வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார். பிறகு நடைமுறை படுத்துவதன் முடிவுக்கான வாழ்த்துக்களை கொடுப்போம். வாழ்த்துக்கள் பெற வேண்டுமல்லவா? நல்ல நல்ல குமாரிகள் அமர்ந்திருக்கிறார்கள். எனக்கு பார்வைக்கு வருகிறது. நல்ல சுவமானத்தில் இருக்கும் குமாரிகள் 10-ஆண்டு காலமாக ஞானத்தில் இருப்பவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். இது கூட மிகவும் ஆச்சரியமானதாகும். 10-ஆண்டு காலம் அமரர்களாக இருந்து கொண்டிருக்கிறீர்கள். அமரநாதனாக இருக்கக்கூடிய பாபாவிடமிருந்து அமர்பவ என்ற வரதானம் உள்ளது. 10-ஆண்டு காலமாக இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். ஆண்டி அங்கிளுக்கு அனேக வருடங்கள் விட்டன.

எனவே 10-ஆண்டு காலமாக இருப்பவர்களுக்கு பாப்தாத 9-இரத்தினங்களான மாலையை அணிவித்துக் கொண்டிருக்கிறார் 9-இரத்தினங்கள் நிர்விக்கனமாகி விடுகிறது. 8-சக்திகள் மேலும் தந்தை -இதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நல்லது. வெளிநாட்டில் இருந்து கொண்டே இப்பொழுது ஆண்டுகள் கடந்திருக்கிறீர்கள் எனில் நீங்கள் அமரர்களாகி விட்டீர்கள் அல்லவா? அல்லது எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்று தெரியவில்லையே என்று எண்ணுகிறீர்களா? நல்லது. 10 ஆண்டு இருப்பவர்கள் கைகளை உயர்த்தினீர்கள். அவர்களுக்கு தன்னுடைய எதிர்காலத்தில் நடக்க முடியுமா? அல்லது நடக்க முடியாதா? என்ற சந்தேகத்திலிருந்து விடுபட்டு எதிர்காலத்தின் நம்பிக்கை இருக்கிறதா? இது 10-ஆண்டுகாலமாக இருப்பவர் களுக்கு மட்டுல்ல, ஆனால் அனைவருக்கும் எது நடந்தாலும் கூடவே இருப்போம், கூடவே நடப்போம், கூடவே இராஜ்யத்தில் வருவோம் என்ற நிச்சயம் இருக்க வேண்டும். உறுதி தானே! கூடவே இருப்பீர்கள் அல்லவா! தந்தையை தனியாக விட்டுவிட்டு சென்று விட மாட்டீர்களே! தனியாக இருப்பது பிடிப்பதில்லை. உங்களுக்கும் பிடிக்கவில்லை, தந்தைக்கும் பிடிக்கவில்லை. ஆகையினால் விட்டு விடக்கூடாது. எந்த விஷயம் வந்தாலும், இதயப்பூர்வமாக கூறுங்கள், பாபா, என்னுடைய பாபா, அப்பொழுது பாபா வந்து விடுவார். உங்களுடைய பிரச்சனைகளை

விலக்கி விடுவார் ஆனால் இதயப்பூர்வமாக கூற வேண்டும். பாபா இது தான் விஷயம், பாபா இதை செய்யுங்கள், பாபா இது தான் அப்போது பாபா கட்டுப்பட்டுள்ளார். தேவைப்படுகின்ற போது நினைவு செய்கிறோம். பின் மறந்து போய் விடுகிறது அப்படியில்லாமல் மனப்பூர்வமாக நினைவு செய்ய வேண்டும்.

அனைத்து இரட்டை வெளிநாட்டுகாரர்கள் தங்களுடைய பாக்கியத்தை பார்த்து சந்தோஷம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். முதலாவது சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது, மேலும் சிறப்பான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்த முழு சீசனிலும் எதை கூறுகிறாரோ அவைகளை கடைப்பிடிப்பீர்கள் அல்லவா? சிந்திப்பவர்களாக மட்டும் இருந்து விடக்கூடாது, கடைப்பிடிப்பவர்களாக இருக்க வேண்டும். எப்போது என்னுடையவர் என்று கூறி விட்டீர்களோ என்னுடைய பாபா என்று அப்போது பாபா கூறுகிறார், என்னுடைய குழந்தைகள் என்று. உறுதியான வியாபாரம் ஆகி விட்டதல்லவா? தாதிமார்களே சரிதானே! வெளிநாட்டுகாரர்களைப் பார்த்து சந்தோஷம் அடைந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா! மிகவும் சந்தோஷம். தாதிக்கு மிகவும் உற்சாகம் வருகிறது. முடியுமானால் தாதி அனைவரையும் இங்கேயே வைத்துக் கொள்ளலாமே! அப்படி தானே! இவர்கள் எல்லாம் இங்கே இருந்து விட்டால் லண்டனில் உள்ள டைமன்ட் ஹாலின் நிலமை என்னவாகும் அப்படியா? இல்லையே! இவர்கள் எல்லாம் எதற்கும் தயாரானவர்கள் தானே! ஆனால் பாப்தாதா வாருங்கள் என்று கட்டளையிட்டதும் எதையுமே நினைக்காமல் சேவை, சென்டரை, உடன் இருப்பவர்களை நினைக்காமல் வாருங்கள் என்றால் வந்து விடுவீர்கள் அல்லவா. ஆமாம். நல்லது. அந்த நாளும் வரும். கட்டளை வரும் வந்து விடுங்கள்! ஏனென்றால் தந்தையின் அன்பு இருக்கிறது. அல்லவா! தனித்தனியாக செல்லமாட்டோம், ஒன்றாகச் செல்வோம். யார் உறுதியோடு இருக்கிறார்களோ அவர்கள் உடன் இருப்பார்கள். எல்லோரும் நிர்விக்னமானவர்களா அல்லது மூலையில் ஏதாவது தடைகள் இருக்கின்றனவா இல்லையல்லவா? ஏதவாது தடைகள் உள்ளே இருக்கின்றது, கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறது, இல்லையா? அனைவரும் தடைகளற்றவர்கள் தானே! இன்று அனைத்தையும் இங்கு விட்டுவிட்டுச் செல்லுங்கள். இது ஓம் சாந்தி பவன் தானே! ஓம் சாந்தி ஆகி விடுங்கள். என்ன செய்ய வேண்டும். முள்ளை உடனடியாக எடுத்து

விட வேண்டும். முள்ளை உடனடியாக எடுக்கவில்லை என்றால் காலையே வெட்ட வேண்டி வரும். எனவே தடையை நீக்கி விடுங்கள். தன்னுடைய உண்மையான சம்ஸ்காரத்தை வெளியில் கொண்டு வாருங்கள். நல்லது. எல்லா குரூப் நன்றாக இருக்கிறீர்களா? இப்பொழுது ஒவ்வொரு குரூப்பாக கைகளை உயர்த்துங்கள். இப்பொழுது குமாரிகள் கைகளை உயர்த்துங்கள். கம்ப்யூட்டர் குரூப் பின்னால் அமர்ந்திருக்கிறார்கள் ஹெல்த் குரூப், எஸ்.எம்.எல். குரூப், நான்கு குரூப்புகளின் செய்திகள் நன்றாகவே இருக்கின்றன. மிக நல்லது. முன்னால் கடிதங்கள் வைத்திருக்கின்றனர். நாலாபுறத்திலிருந்தும் கடிதங்களும் கார்டுகளும் வந்திருக்கின்றன. இதயத்தின் கடிதங்களும் வந்திருக்கின்றன, காகிதங்களின் கடிதங்களும் வந்திருக்கின்றன. இரண்டும் பாப்தாதாவை அடைந்திருக்கின்றன. பாப்தாதாவிற்கு தன்னுடைய இதயத்தின் அன்பைக் கூட அனுப்பி இருக்கிறார்கள். மேலும் கூடவே ஏதாவது சேவையினுடைய செய்திகளையும் நல்ல விதமாக அனுப்பியிருக்கிறார்கள். சிலர் கொஞ்சம் நினைவுகளுடன் சில வேண்டுதலையும் கொடுத்திருக்கின்றனர். பாபா இதை செய்ய வேண்டும், இதை செய்ய வேண்டும் என்று இருந்தாலும் நல்லது தான். எழுதினார்கள் என்றால் எழுதியவர்களுக்கு உதவிகள் கூட கிடைக்கின்றன. உண்மையான உள்ளம், சுத்தமான இதயம் இருந்தால் நமது லட்சியம் எல்லாம். பூர்த்தியாகி விடும். இப்போது கூட நாலா புறத்திலிருந்தும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், சிலர் பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள் ஆனால் கேட்பவர்கள் அதிகம். நீங்கள் இந்த ஹாலில் அமர்ந்திருக்கிறீர்கள், அவர்கள் தங்களுடைய தேசம் என்ற ஹாலில் அமர்ந்திருக்கிறார்கள். இந்த விஞ்ஞானத்தின் சாதனங்கள் பிராமணர்களாகிய உங்களுக்கு வந்திருக்கின்றன. நீங்கள் படைப்பிற்கான காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள் ஆனால் மற்றவர்கள் அழிவுக்கான காரியத்திற்கு ஈடுபடுத்துகிறார்கள் ஆனால் பாப்தாதா விஞ்ஞான குழந்தைகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். ஏனெனில் தூரத்தில் அமர்ந்திருந்தாலும் என்னுடைய குழந்தைகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நல்லது.

நாலாபுறத்திலிருக்கும் ராஜா போன்ற செல்லக் குழந்தைகளுக்கு, அனைவருக்கும் அன்புள்ள, உதவியாளர்களுக்கு, சமமாக ஆகும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தன்னுடைய சிரேஷ்டமான சுபாவம் மற்றும் சம்ஸ்காரங்களை சுவ சொரூபத்தில் வெளிப்படுத்தும் குழந்தைகளுக்கு எப்பொழுதும் சுகம் கொடுக்கும் அனைவருக்கும் அன்பு கொடுக்கும் குழந்தைகளுக்கு எப்பொழுதும் சந்துஷ்ட மணியாகி திருப்தியினுடைய கிரணங்களை பரப்பும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரங்களும்!

தாதியுடன்: மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள். வேறு எந்த விஷயமும் இல்லை. மற்றபடி எல்லாம் சரியாக நடக்கும். தான் கூட வரதானியாக இருக்கிறீர்கள். அதனால் வரதானம் உடனடியாக கிடைத்து விடுகிறது. அனைவருக்கும் உங்களிடம் மிகவும் அன்பு இருக்கிறது தந்தை உங்களை நிமித்தமானவர்களாக ஆக்கியதினால் அனைவருக்கும் அன்பு உள்ளது. தந்தை தான் அவ்யக்தமாகி விட்டார், ஆனால் சாகார ரூபத்தில் தங்களை நிமித்தமாக்கியிருக்கிறார். ஏன் இல்லை, சத்யுகத்தில் எவ்வளவு பேஷன்புள் (அலங்காரமிக்கவர்) ஆவீர்கள்.

**கங்கை தாதியிடம்:** மகாரதிகளினுடைய கூட்டம் நன்றாக இருக்கிறது. இப்பொழுது அனைத்து மகாரதிகளும் ஒன்று கூடியிருக்கிறீர்கள் இல்லையல்லவா? பாப்தாதாவுக்கு கூட இது மிகவும் பிடித்திருக்கிறது.

**ருக்மணி தாதியிடம்:** தற்காலமும், எதிர்காலத்தையும் நன்றாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

**வெளிநாட்டு மூத்த சகோதரிகளிடம்:** அனைவரும் நல்ல சேவையில் மூழ்கி இருக்கிறீர்கள். பாப்தாதா சந்தோஷம் அடைகிறார், ஏனெனில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நியமப்படி நடந்து கொண்டிருக்கிறீர்கள், நியமமும் இருக்கிறது முன்னேற்ற மும் இருக்கின்றது. அங்கும் இங்கும் நிகழ்ச்சிகள் மிகவும் நன்றாக நடந்து கொண்டிருக்கின்றன. தங்களுக்குள் ஒன்று சேர்ந்து உலகத்தில் செய்திகளை பரப்பும் திட்டத்தை உருவாக்கி கொண்டேயிருக்கிறீர்கள். (கம்ப்யூட்டர் சேவையின் திட்டம் உருவாக்கி கொண்டிருக்கிறார்கள்)

ஒவ்வொரு மூலையிலும் கம்ப்யூட்டர் இருக்கவே இருக்கிறது. நேரம் குறைவு, ஆனால் நாலாபுறமும் பரவிவிடுகிறது. நல்ல நல்ல குமாரிகள் இருக்கிறார்கள். நல்ல விதமாக திட்டம் தீட்டுகிறார்கள் பாப்தாதா சந்தோஷம் அடைகிறார். நாலா பக்கங்களிலும் உருவாக்கப்பட்ட ஹெல்த், கம்ப்யூட்டர், கோர்ஸ் குரூப் வந்திருக்கிறது.

வெளிநாட்டு முக்கிய சகோதரர்களிடம்: மிக நல்லது. பாண்டவ சேனை கூட குறைந்தது அல்ல. சக்திகள் சக்திகள் தான் என்றாலும் பாண்டவர்கள் அல்லாவிற்கு பிடித்தமானவர்கள் ஆவார்கள். பாண்டவர்களுடன் பாண்டவ பதி இருக்கிறார் இல்லையா? பாருங்கள் ஒவ்வொருத்தருக்கும் சிறப்பு அம்சம் இருக்கிறது. பாப்தாதா ஒவ்வொருவரின் சிறப்பு அம்சத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். மேலும் ஒவ்வொருவரும் சிறப்புத் தன்மையின் பாகத்தை நல்ல விதமாக நடித்துக் கொண்டிருக்கிறார்கள், அப்படித் தானே. அங்கிள் (வெளிநாட்டு சேவைக்கு நிமித்தமாக மூத்த சகோதரர்) கூட தன்னுடைய பாகத்தை நல்லபடியாக நடித்துக் கொண்டிருக்கிறார். ராபின் கூட நன்றாக நடிக்கிறார். கோபிந், நிஷார் நல்லபடியாக நடித்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல நல்ல பாண்டவர்களும் வெளிப்பட்டிருக்கிறார்கள். சக்திகளும் வெளிப்பட்டிருக்கிறார்கள். பாப்தாதாவிற்கு இரட்டை வெளிநாட்டுக்காரர்களுடைய சேவைக்காக மிகவும் நல்லபடியாக தயாராக இருப்பது கண்டு சந்தோஷம். அனைவரிடத்திலும் உற்சாகம் இருக்கிறது. உற்சாகம் இருக்கிறது அல்லவா? பவுண்டேஷன் அங்கிள் ஆவார். நல்லது. எப்பொழுதும் அமரர்களாக இருப்பீர்களாக! நினைவு மற்றும் சேவையில் அமர்களாக இருப்பீர்களாக! நல்லது.

இன்றிலிருந்து கேள்வி கேட்பது முடித்து விடுங்கள். மாயை வென்றவர்கள் இந்த மாதிரி கேட்கலாமா என்ன? மாயையை வென்றவர்கள் ஆகி விட்டீர்கள் அல்லவா? இப்போது யாரிடமும். நீங்கள் மாயை வென்று விட்டீர்களா என்று கேட்க கூடாது. மாயாயை வென்ற போதையில் மிகவும் பறந்து கொண்டிருக்கிறார்கள். பறக்கும் கலையைச் சார்ந்தவர்கள் யார் கேட்டாலும் சொல்ல வேண்டும் மனநிறைவோடு இருக்கும் சூட்சும தேவதை (பரிஸ்தா) மாயா என்ற பெயரையே எடுக்காதீர்கள். பெயரைக் கூட முடித்து விடுங்கள்.

ஏனெனில் கொஞ்ச காலம் மாயை வென்று விட்டு வாழ்வதற்கான பயிற்சி கண்டிப்பாக செய்ய வேண்டும். யார் நீண்ட கால மாயை வென்றவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு நீண்ட கால இராஜ்ய பாக்கியமானது கிடைக்கிறது. எனவே எப்பொழுதும் மாயா ஜீத். நீங்கள் மாயை வென்றவர்கள்தான். பாப்தாதாவின் பார்வை இருக்கிறது. எனவே கூட்டத்தை பார்வையின் மூலமாக திருப்திபடுத்துதல் கண்டிப்பாக நிகழும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 15.11.2003 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மனதை ஒரு நிலைப்படுத்தி, ஏகாக்ரதா சக்தியின் (ஒருமுகப்படுத்தும்) மூலம் பரிஸ்தா ஸ்திதியினை அனுபவம் செய்க!

இன்று அனைத்து கஜானாக்களின் எஜமானர் தனது நாலா புறங்களிலும் உள்ள சம்பன்ன குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தைக்கும் அனைத்து கஜானாக்களின் தந்தை, எஜமானர் ஆகியுள்ளார். வேறு எவருமே தர முடியாத கஜானா கிடைத்துள்ளது. ஆக, ஒவ்வொருவரும் தன்னை கஜானாக்களினால் நிரம்பிய அனுபவம் செய்கிறீர்களா? அனைத்திலும் சிரேஷ்ட கஜானா ஞான கஜானா, சக்திகளின் கஜானா, குணங்களின் கஜானா கூடவே பாபா மற்றும் சர்வ பிராமண ஆத்மாக்களின் ஆசீர்வாத கஜானா. ஆக, இந்த அனைத்து கஜானாக்களும் கிடைத்துள்ளனவா என சோதித்துப் பாருங்கள். அனைத்து கஜானாக்களினாலும் நிரம்பி இருக்கும் ஆத்மாக்களின் அடையாளம், சதா கண்களின் மூலம், முகத்தின் மூலம், நடத்தையின் மூலம் குஷி பிறருக்கும் அனுபவம் ஆகும். இந்த ஆத்மா அலௌகீக குஷியின் மூலம், அலௌகீக பற்றற்ற நிலை போன்றவை யார் தொடர்பில் வருகின்றனரோ அவர்களுக்கு அனுபவம் ஏற்படும். உங்களின் குஷியைப் பார்த்து பிற ஆத்மாக்கள் கூட சிறிது நேரம் குஷியை அனுபவம் செய்வர். எப்படி பிராமண ஆத்மாக்களாகிய உங்களின் வெள்ளை உடை அனைவருக்கும் எவ்வளவு அன்பாகவும், பற்றற்றும் விளங்குகிறது? தெளிவு, குளிர்ச்சி மற்றும் தூய்மை அனுபவம் ஆகிறது. இவர்கள் பிரம்மா குமார், குமாரிகள் என தூரத்திலிருந்தே புரிந்து கொள்கின்றனர். அது போன்றே பிராமண ஆத்மாக்களாகிய உங்களின் நடத்தை மற்றும் முகத்தின் மூலம் சதா குஷியின் மலர்ச்சி, குஷியின் அதிர்ஷ்டத்தின் ஜொலிப்பு தென்படுகின்றன. இன்று அனைத்து ஆத்மாக்களும் துக்கமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட ஆத்மாக்கள் உங்களின் குஷி நிறைந்த

முகத்தைப் பார்த்து, நடத்தையைப் பார்த்து, ஒரு கண நேரமாவது குஷியின் அனுபவத்தைச் செய்யட்டும். தாகமான ஆத்மாவுக்கு ஒரு சொட்டு நீர் கிடைத்து விட்டால் எவ்வளவு குஷி அடைகின்றன? இப்படி குஷியை வழங்குதல் ஆத்மாக்களுக்கு இப்போது மிக அவசியம்! இப்படி அனைத்து கஜானாக்களினாலும் சதா நிறைந்து விளங்க வேண்டும். அனைத்து பிராமண ஆத்மாக்களுக்கும் சுயம் தன்னை அனைத்து கஜானாக்களினாலும் சதா நிறைந்து அனுபவம் செய்கிறீர்களா? அல்லது அவ்வப்போது தானா? கஜானா அவினாசி, வழங்கும் வள்ளலும் அவினாசி, அப்படி இருக்க அது உங்களிடம் இருப்பதும் அவினாசியாக இருக்க வேண்டும். ஏனெனில், உங்களைப் போன்று அலௌகீக குஷி முழு கல்பத்தில் பிராமணர்களாகிய உங்களைத் தவிர வேறு எவருக்கும் கிடைப்பதில்லை. இந்த அலௌகீக குஷி அரை கல்பம் பிராப்தியின் ரூபத்தில் தொடர்கிறது. ஆக, குஷி தானே! அனைவருமே குஷியாய் இருக்கிறீர்களா? இதற்கு அனைவரும் கை தூக்கினார்கள், நல்லது. அனைவரும் சதா குஷியா? குஷி ஒருபோதும் போய் விடுவதில்லையே? அவ்வப்போது போய் விடுகிறது! குஷியாய் இருக்கிறீர்கள் ஆனால் சதா நிரந்தரமாய் என்பதில் தான் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. குஷியாய் இருக்கிறீர்கள் ஆனால் அதில் (எவ்வளவு முடியுமோ அவ்வளவு என்கிற) சதவீதம் வந்து விடுகிறது.

பாப்தாதா தானாகவே டி.வி. மூலம் அனைத்து குழந்தைகளின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். என்ன தென்பட்டது. ஒரு நாள் நீங்களும் உங்கள் குஷியின் சார்ட்டை சோதித்துப் பாருங்கள். சோதனை செய்வது வருகிறது அல்லவா? இன்றைய நாட்களில் விஞ்ஞானம் கூட சோதனையிடும் இயந்திரங்களின் வேகத்தை மிக அதிகமாக அதிகரித்துள்ளது. ஆக நீங்களும் சோதனை செய்யுங்கள், அழிவற்றதாக ஆக்கிக் கொள்ளுங்கள். அனைத்து குழந்தைகளின் தற்போதையை புருஷார்த்தத்தையும் பாப்தாதா பார்த்தார். புருஷார்த்தம் என்னவோ அனைவரும் செய்கின்றனர். சிலர் அவர்கள் சக்திக்கு ஏற்றாற்போல், சக்திசாலி புருஷார்த்தம் செய்கின்றனர். ஆக இன்று பாப்தாதா ஒரு அனைத்து குழந்தைகளின் ஸ்திதியை சோதனை செய்தார். சிலர் ஏனெனில் மூல ஆதாரமே "மன்மனாபவ". சேவையில் கூட பாருங்கள் மன சேவை சிரேஷ்ட சேவை! “மனதை வென்றவர்கள் உலகை வென்றவர்கள்" என்று கூறுகிறீர்கள். ஆக மனதின் நிலையை

சோதனை செய்தார். என்ன பார்த்தார்? மனதின் எஜமானர் ஆகி மனதை நடத்துகிறீர்களா? ஆனால் சில சமயம் மனது உங்களை நடத்துகிறது. மனம் பிறவற்றுக்கு திருப்பி அடிமையாக்குகிறது. மனதால் அன்பு ஆர்வத்தில் ஈடுபடுகின்றனர் ஆனால் மனதின் ஸ்திதி ஒருமித்த நிலையில் ஒருநிலைப்படுவதில்லை என்பதை பாப்தாதா பார்த்தார்.

தற்போதையை சமயத்தில் மனதின் ஒருமித்த நிலை (ஏகாக்ரதா) ஏக்ரஸ் -ஒரே ஒருவரின் ரசனையின் அனுபவத்தை செய்விக்கும். அதன் முடிவு நிலயைப் பார்த்தார். மனதை ஒரு நிலைப்படுத்த விரும்புகின்றனர் ஆனால் இடையிடையே அலை மோதுகிறது. ஏகாக்ரதாவின் சக்தி அவ்யக்த பரிஸ்தா ஸ்திதியினை எளிதாக அனுபவம் செய்விக்கிறது. மனம் இங்கங்கு அலை மோதுகிறது, வியர்த்த விஷயங்களிலோ, வியர்த்த சங்கல்பங்களிலோ, வியர்த்த விவகாரங்களிலோ செல்கிறது, எப்படி ஒரு சிலருக்கு தம் உடம்பைக் கூட ஒர நிலையில் வைத்திருக்க பழக்கம் இராது: ஒரு சிலருக்கு இருக்கும், ஆக மனதை எங்கு விருப்பமோ, எவ்வளவு நேரம் விருப்பமோ, அவ்வளவு அப்படி ஒரு நிலைப்படுத்துவது தான் மனதை தன் வசத்தில் வைத்திருப்பது என்பதாகும். ஒரு நிலைப்படுத்தும் சக்தி எஜமான நிலையின் சக்தி எளிதில் தடையை வென்று நிற்பவர்களாக ஆக்குகிறது. யுத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒருமித்த நிலையின் சக்தியின் மூலம் தானாகவே ஒரே ஒரு பாபா, அவரைத் தவிர வேறு எவரும் இல்லை இந்த அனுபவம் ஏற்படுகிறது. தானாகவே ஏற்படும். எவ்வித முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. ஒருமித்த நிலையின் (ஏகாக்ரதா -Power of Concentration) மூலம் தானாகவே ஏக்ரஸ் பரிஸ்தா சொரூபத்தின் அனுபவம் ஏற்படுகிறது. பிரம்மாபாபாவோடு அன்பு உள்ளதல்லவா? ஆக, பிரம்மாபாபா சமமாக ஆக வேண்டும், அதாவது பரிஸ்தா ஆக வேண்டும். ஏகாக்ரதாவின் சக்தி மூலம் தானாகவே அனைவரோடும் சினேகம், மங்களம், மரியாதை ஆகியவைகளின் எண்ணம் உள்ளது. ஏனெனில் ஏகாக்ரதா அதாவது சுவமானின் ஸ்திதி! பரிஸ்தா நிலை சுவமான் நிலை. எப்படி பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள், அதை வர்ணனையும் செய்கிறீர்கள். சம்பன்ன நிலை சமயம் அருகில் வர வர அவரிடம் என்ன பார்த்தீர்கள்? நடமாடும் பரிஸ்தா! தேகத்தின் உணர்வு தென்பட்டதா? அல்லது பரிஸ்தா ரூபத்தின் அனுபவம் ஏற்பட்டதா? கர்மம் செய்து கொண்டே,

பேசிக் கொண்டே பிறருக்கு வழிகாட்டியபடி, உற்சாகம் ஆர்வத்தை அதிகப்படுத்திக் கொண்டே அதே சமயத்தில் தேகத்திலிருந்து நியாரா மற்றும் சூட்சும ஒளிப்பிரகாசத்தின் அனுபவம் ஏற்பட்டது. பிரம்மாபாபாவைப் பற்றி கூறுகிறீர்கள் இல்லையா? பேசிக் கொண்டு இருக்கும்போதே அவர் அங்கு இல்லை, பார்க்கிறார், ஆனால் திருஷ்டி அலௌகீகமாய் இருக்கும், அப்பார்வை ஸ்தூலப் பார்வை அல்ல, தேக உணர்விலிருந்து அப்பாற்பட்டது. பிறருக்கும் கூட தேகத்தின் உணர்வு வரக்கூடாது. நியாரா ரூபம் தென்படட்டும், இதனையே தேத்திலிருந்தாலும் பரிஸ்தா சொரூபம்! ஒவ்வொரு விஷயத்திலும் விருத்தியில், திருஷ்டியில், கர்மத்தில் நியாரா நிலை அனுபவம் இருக்கும். இவர் பேசுகிறார், ஆனால் நியாரா அப்பாற்பட்ட நிலையில், அன்பான நிலையில் இருப்பது. அதுவும் ஆன்மிக அன்பு. இப்படிப்பட்ட பரிஸ்தா நிலையின் அனுபவத்தை சுயம் தானும் செய்ய வேண்டும். பிறருக்கும் செய்விக்க வேண்டும். ஏனெனில், பரிஸ்தா ஆகாமல் தேவதை ஆக முடியாது. பரிஸ்தாவிலிருந்து தான் தேவதை. ஆக நம்பர்-1 பிரம்மாவின் ஆத்மா வெளிப்படையாக சாகார ரூபத்திலும் பரிஸ்தா வாழ்க்கையின் அனுபவத்தை செய்வித்தார். மேலும் பரிஸ்தா சொரூபமாகவே ஆகி விட்டார். அதே பரிஸ்தா ரூபத்தின் கூடவே நீங்கள் அனைவரும் கூட பரிஸ்தாவாகி பரந்தாமத்திற்குச் செல்ல வேண்டும். அதற்கு மனதின் ஏகாக்ரதா மீது கவனம் கொள்ளுங்கள். உங்கள் கட்டளைப்படி மனதை நடத்துங்கள். செய்ய வேண்டுமெனில் மனதின் மூலம் கர்மங்கள் செய்யப்பட வேண்டும். ஒரு காரியத்தை செய்ய வேண்டாதபோது, மனம் செய் என்று சொன்னால் இது எஜமான நிலை ஆகாது. நான் விரும்பவில்லை ஆனால் அப்படி ஆகி விட்டது என அனேக குழந்தைகள் கூறுகின்றனர். நாங்கள் நினைக்கவே இல்லை ஆனால் அப்படி ஆகவிட்டது. செய்திருக்கக் கூடாது ஆனால் ஆகி விட்டது இதுவே மனதிற்கு அடிமைப்பட்ட நிலை. இந்த நிலை நன்றாகவா இருக்கிறது? பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள். பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள், எதிரில் நின்றபடியே என்ன அனுபவம் ஏற்பட்டது? பரிஸ்தா நிற்கிறார். பரிஸ்தா திருஷ்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்கிற அனுபவம். ஆக மனதின் ஏகாக்ரதாவின் சக்தி எளிதில் பரிஸ்தா ஆக்கி விடும். பிரம்மாபாபாவும் கூட குழந்தைகளுக்கு இதையே கூறுகிறார் -சமமாக ஆகுங்கள்! சிவபாபா கூறுகிறார்: நிராகாரி ஆகுங்கள். பிரம்மாபாபா கூறுகிறார் பரிஸ்தா

ஆகுங்கள். ஆக என்ன புரிந்து கொண்டீர்கள்? ரிஸல்ட்டில் என்ன பார்த்தார்? மனதின் ஒருமித்த நிலை (ஏகாக்ரதா) குறைவாக உள்ளது! இடையிடையே மனம் இங்கங்கு சுற்றி வருகிறது, அலைபாய்கின்றது. எங்கு செல்லக் கூடாதோ அங்கு செல்கின்றது என்றால் அதனை என்னவென்று கூறுவது? அலைபாய்தல் என்று தானே சொல்வோம். ஆக ஏகாக்ரதாவின் சக்தியை அதிகரியுங்கள். எஜமான நிலையின் சீட்டில் பொருந்தியிருங்கள். அவ்வாறு செட் ஆகும் போது அப்ஸெட் (நிலை குலைந்து) ஆக மாட்டீர்கள். செட் ஆகவில்லையெனில் அப்ஸெட் ஆகி விடுகிறீர்கள். ஆக, விதவிதமான சிரேஷ்ட ஸ்திதியின் சீட்டில் செட் ஆகுங்கள். இதுவே ஏகாக்ரதாவின் சக்தி ஆகும். சரியா?

பிரம்மாபாபா மீது அன்பு உள்ளதல்லவா? எவ்வளவு அன்பு? நிறைய! மிக அதிகம் அன்பிருக்கிறது! ஆக அந்த அன்பிற்கு கைமாறாக என்ன திருப்பிக் கொடுத்துள்ளீர்கள்? பாபாவிற்கும் அன்பு உள்ளது, எனவே தான் உங்களிடமும் அன்பு உள்ளது. ஆக திரும்பி என்ன கொடுத்தீர்கள்? சமமாக ஆக வேண்டும் -இதுவே திரும்பச் செலுத்துதல். நல்லது!

இது இந்த சீசனில் முதல் முறை ஆக முதலில் முதல் நம்பரில் வந்து விட்டீர்கள். பாப்தாதாவிற்கும் கூட இவ்வளவு அதிகம் குழந்தைகள் வருவதைப் பார்த்து மகிழ்ச்சி! எவ்வளவு பேருக்கு ஹால் கட்டினீர்களோ அவ்வளவு பேர் வந்துள்ளனர். இன்னும் பெரிய ஹால் கட்டினால் இன்னும் அதிகம் பேர் வருவர். இப்போது பாருங்கள், நிரம்பி விட்டதல்லவா? நிரம்பி வழிகிறது என்றால் இன்னும் பெரிதாய்க் கட்டுங்கள் என்பதை நினைவூட்டுகிறது. ஹாலுக்கே ஓர் அலங்காரமாகி விடுகிறது. இப்படி சிரேஷ்ட ஆத்மாக்களினால் ஹால் அலங்கரிக்கப்படுகிறது என்றால் எவ்வளவு நன்றாயிருக்கிறது! மதுபன் வாசிகள், பாண்டவ பவனைச் சார்ந்தவர்களாயிலும் சரி, சாந்திவனத்தைச் சார்ந்தவர்களாயினும் சரி, காலியாக இருந்தால் நன்றாகவே இராது இல்லையா? நிறைந்து வழிந்தால் நன்றாயிருக்கிறது, அல்லது மதுபன் வாசிகளுக்கு தனிமை தான் வேண்டுமா? அல்லது கூட்டாக இருப்பது, குதூகலமாயிருப்பது நன்றாயிருக்கிறதா? பிறகும் இடையிடையே தனிமை (ஏகாந்த்) கிடைக்கத்தான் செய்கிறது. நல்லது.

இரட்டை வெளிநாட்டினரும் வந்துள்ளனர். இரட்டை வெளிநாட்டினராலும் மதுபன் அலங்காரமாகி விடுகிறது. இன்டர்நேஷனல் ஆகி விடுகிறதல்லவா? நல்லது, பாப்தாதா தாதியின் சங்கல்பத்தைக் கூறினார். இன்று காலை வகுப்பில் தாதிஜி உள்நாடு, வெளிநாடுகளில் சேவையில் தூள் கிளப்ப வேண்டுமெனக் கூறினார். பாரத தேசத்தின் எந்த கிராமமும், எந்த நாடும் இந்த ஆண்டில் பாபாவின் செய்தி கிடைக்காது வஞ்சிக்கப்பட்டு விடக் கூடாது. இப்படி திட்டம் தீட்டுங்கள் என்றார். சங்கல்பம் தந்தார் இல்லையா? மிக நல்லது வெளிநாடுகள் இதனை பூர்த்தி செய்யப் போகின்றனவா? அல்லது பாரத தேசமா என்று பார்ப்போம். செய்தி கிடைக்க வேண்டும். அவ்வளவு பிராப்தி உங்களுக்குக் கிடைத்துள்ளது, பாலனை கிடைத்துள்ளது. அப்படியிருக்க, குறைந்தபட்சம் உங்கள் சகோதர சகோதரிகளுக்கு செய்தியையாவது தர வேண்டாமா? அப்போது தான் உங்கள் மீது புகார் கூற மாட்டார்கள் இல்லையா? எங்களுக்கு தெரியாதே! ஆக செய்தியைக் கட்டாயம் கூற வேண்டும். இதில் கஷ்டம் என்ன? ஒவ்வொரு மண்டலமும் (Zone) தம் தம் மண்டலத்தின் பகுதிகளுக்குப் பிரித்துக் கொடுங்கள். வேறு என்ன? ஒவ்வொரு மண்டலத்திலும் எவ்வளவு சென்டர்கள் உள்ளன. ஒவ்வொரு சென்டருக்கும் பிரித்துக் கொடுத்து விட்டால் இது ஒரு பெரிய விஷயமா? மதுபனில் பல்துறைகளின் (Wing Service) சேவை நடைபெறுகிறது. அதன் மூலம் செய்தி நாலா புறமும் நன்கு பரவுகிறது. இந்த பல்துறையினருக்கான சேவை எப்போது ஆரம்பித்ததோ அதிலிருந்து முக்கிய நபர்கள் (IP's) தரத்தில் சேவை. ஒலி நன்கு பரவியுள்ளது. மிக மிக முக்கியஸ்தர்களின் விஷயங்களை விட்டுவிடுங்கள். அவர்களுக்கு நேரம் எங்கிருக்கிறது? பெரிய பெரிய நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளீர்கள், அதன் மூலமாகவும் நன்கு பேரொலி பரவியுள்ளது. தற்போது டில்லியும், கல்கத்தாவும் செய்கின்றனர் இல்லையா? நல்ல திட்டம் தீட்டுகின்றனர். மிகுந்த முயற்சியும் செய்கின்றனர். பாப்தாதாவிடம் செய்திகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. டில்லியின் ஒலி வெளிநாடுகள் வரை கூட பரவ வேண்டும். மீடியாகாரர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர். பாரத தேசத்திற்கு மட்டும் டில்லியில் இந்த நிகழ்ச்சி நடந்தது, கல்கத்தாவில் இம்மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்றது என வெளிநாடுகளிலிருந்து பேச்சு இந்தியா வர வேண்டும். இந்தியாவின் கும்பகர்ணர்களை வெளிநாட்டிலிருந்து தானே எழுப்ப வேண்டும். ஆக

வெளிநாட்டு செய்திகளுக்கு மதிப்பு உள்ளது. நிகழ்ச்சி பாரதத்தில் நடந்தாலும் வெளிநாட்டு செய்தித்தாட்களிலிருந்து செய்தி வந்தால் நன்கு பரவும். பாரதத்தின் ஒலி வெளிநாடுகளில் பரவ வேண்டும். வெளிநாடுகளின் செய்தி பாரதத்திற்கு வந்தடைய வேண்டும். அதன் பிரபாவமே தனி! நல்லது! திட்டங்கள் தீட்டுகின்றனர். நன்றாகவே தயாரிக்கின்றனர். பாப்தாதா டில்லி வாசிகளுக்கும் அன்பின் முயற்சிக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். கல்கத்தாகாரர்களுக்கும் சற்று முன் கூட்டியே வாழ்த்துக்கள். ஏனெனில் ஒத்துழைப்பு, சினேகம் மற்றும் தைரியம் இம்மூன்றும் கிடைத்து விட்டதென்றால், (சேவையின்) பேரொலி எதிரொலிக்கும். சேவையின் பேரொலி ஏன் பரவாது? இப்போது மீடியாக்காரர்கள் இந்த அற்புதத்தை செய்து காண்பிக்க வேண்டும். அனைவரும் டிவி யில் பார்த்தனர். இந்த டி.வியில் (TV) வந்தது! அந்த டி.வியில் வந்தது! இப்படியல்ல! அது பாரதத்தில் மட்டும் தானே வருகிறது! அது போதாது, வெளிநாடுகள் வரை சென்றடைய வேண்டும். இந்த ஆண்டு ஒலியை பரவச் செய்வதற்கு எவ்வளவு தைரியம், வேகமாய் கொண்டு வருகிறீர்கள் மற்றும் கொண்டாடுகிறீர்கள் என்று பார்ப்போம். வெளிநாட்டினருக்கு இதில் மிகுந்த ஆர்வம் உள்ளது என பாப்தாதாவிற்கு செய்தி வந்துள்ளது. ஒருத்தர் பிறரைப் பார்த்து மேலும் உற்சாகம் வருகிறது. அதில் யார் முன் வருகிறாரோ அவர் பிரம்மா சமம்! நல்லது! ஆக தாதிக்கும் கூட சங்கல்பம் வருகிறது. பிறரை பிஸியாக ஆக்குவதற்கான முறை நன்றாக வந்துள்ளது. நல்லது! நிமித்தமாய் உள்ளார் இல்லையா?

நல்லது. அனைவரும் பறக்கும் கலையுடையவர்கள் தானே? பறக்கும் கலை வேகமானது, நடக்கும் கலை, ஏறும் கலை இவை வேகமான கலை அல்ல, பறக்கும் கலை வேகமானதும் கூட, முதலில் கொண்டு வருவதும் கூட! நல்லது. தாய்மார்கள் என்ன செய்வீர்கள்? தாய்மார்கள் உங்களது சந்ததியினரை தட்டி எழுப்புங்கள். குறைந்தது எமக்கு செய்தி கிடைக்கவில்லை என்று புகார் கூறும் ஒரு மாதா கூட இருந்து விடக்கூடாது. தாய்மார்களின் எண்ணிக்கை எப்போதும் அதிகமாகவே உள்ளது. பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது. இந்த குரூப்பில் அனைத்து (குமார், குமாரி, மாதா) பிரிவினரும் நன்றாக வந்துள்ளனர். குமாரிகளின் எண்ணிக் கையும் அதிகம் வந்துள்ளது. குமார்கள் உங்களின் இனத்தவரை (குமார்களை) எழுப்புங்கள் நல்லது. சொப்பனத்தில் கூட

தூய்மையில் பரிபக்குவமாய் இருக்கிறோம் என்னும் அற்புதத்தை செய்து காண்பியுங்கள். பிரம்மா குமார் -இளைஞர் குமார், டபுள் குமார்கள் இல்லையா? இதனை உலகிற்கு பாப்தாதா சாவல் விட்டு கூற வேண்டும். பிரம்மா குமார்களும் கூட, சரீத்தாலும் குமார்களாய் உள்ளனர். ஆக பவித்திரத்தின் சூத்திரம் நடை முறையில் இருக்க வேண்டும். உங்களை சோதிப்பதற்கு கட்டளை இடட்டுமா? செய்யட்டுமா? இதில் கை தூக்கவில்லையே! அவ்வாறு சோதனை செய்வதற்கு இயந்திரங்கள் உள்ளன. சொப்பனத்தில் கூட அபவித்திரத்திற்கு தைரியம் வரக்கூடாது. குமாரிகளுக்கும் கூட இதுபோலவே! குமாரி என்றாலே பூஜ்ய பவித்திர குமாரி! நாங்கள் இத்தனை குமார்கள் குமாரிகள் இருக்கிறோம். சொப்பனத்தில் கூட எங்களுக்கு சங்கல்பம் வராது என்று பாப்தாதாவிற்கு உறுதியளிக்க வேண்டும். அப்போதே குமார் குமாரிகளின் தூய்மையின் விழாவைக் கொண்டாடுவோம் ஆனால் இப்போது கொஞ்சம் கொஞ்சம் (அபவித்திரம்) இருக்கிறது. பாப்தாதாவிற்குத் தெரியும். அபவித்திரதா என்பதே தெரியாமலிருக்க வேண்டும். ஏனெனில், புதிய பிறவி எடுத்துள்ளீர்கள். அபவித்திரதா உங்களது கடந்த பிறவியின் விஷயம்! மறுபிறவி, பிறவியே பிரம்மாவின் வாய் வழியான பவித்திர பிறவி! பவித்திர பிறவியின் மரியாதை மிக மிக அவசியம்! குமார் குமாரிகள் இந்த வெற்றிக் கொடியை பறக்க விட வேண்டும். பவித்திரமாய் இருப்போம், பவித்திர சம்ஸ்காரத்தை உலகெங்கும் பரப்புவோம். இந்த பேரொலியை, கோஷத்தை எழுப்புவோம்!! குமார் குமாரிகள் கேட்டீர்களா? குமாரிகள் எவ்வளவு பேர் இருக்கின்றனர். யார் இந்த வெற்றிக் கோஷத்தை எழுப்பப் போகிறார்கள் என்று பார்ப்போம்! குமாரிகளா? அல்லது குமார்களா? பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள். அபவித்திரதாவின் பெயர், அடையாளமே கிடையாது. பிராமண வாழ்க்கை என்றாலே இது தான்! மாதாக்களிடம் கூட மோகம் இருந்தால் அபவித்திரதா தான்! தாய்மார்களும் பிராமணர்கள் தானே! தாய்மார்களிடமும் கூடாது. குமார், குமாரி அதர் குமார் யாரிடமும் இல்லை. பிராமணர்கள் என்றாலே பவித்திர ஆத்மா! அபவித்திரத்தின் ஏதேனும் காரியம் ஏற்பட்டாலும் அது பெரிய பாவம். இப்பாவத்திற்கான தண்டனை மிகக் கடுமையானது. இது இப்படி இருக்கத்தான் செய்யும் என்று சாதாரணமாய் புரிந்து கொள்ளாதீர்கள். கொஞ்சம் கொஞ்சம் இருக்கத்தான் செய்யும்... அப்படி கிடையாது! இதுவே முதலான பாடம்

புதுமையே பவித்திரதா தான்! பிரம்மாபாபா மிகவும் தூற்றப்பட்டார் என்றால் தூய்மைக்காகத்தான். ஆகி விட்டது. அப்படி விலகிக் கொள்ளக்கூடாது, இதில் சோம்பேறித்தனம் கூடாது எந்த பிராமணராயும் இருக்கட்டும் முழு சமர்ப்பணமாகியிருந்தாலும் சரி, சேவாதாரியாக இருந்தாலும் சரி, இல்லறத்தில் இருப்போராய் (பிரவிருத்தி) இருந்தாலும் சரி, இவ்விஷயத்தில் தர்மராஜரும் விட மாட்டார், பிரம்மாபாபாவுடம் கூட தர்மராஜரின் கூடவே இருப்பார். எனவே குமார், குமாரிகள் எங்கிருந்தாலும் சரி, மதுபனில் இருந்தாலும் சரி, சென்டரில் இருந்தாலும் சரி, இதன் (அபவித்திரதா) அடி, சங்கல்பத்திலான அடி கூட பெரிய அடி தான். பாடல் பாடுகிறீர்கள் இல்லையா? பவித்திர மனம் வையுங்கள், பவித்திர உடலைப் பேணுங்கள்... ஆக மனம் பவித்திரமாயிருந்தால் வாழ்க்கையும் தூய்மையாக இருக்கும். இதை லேசாக எடுத்துக் கொள்ளக் கூடாது. சிறிது தவறி விட்டோம் அதற்கென்ன? அப்படியல்ல. சிறிதானாலும் மிக அதிகம். பாப்தாதா நேரடியாக சைகை காட்டுகிறார். இதிலிருந்து தப்பிக்கவே முடியாது. இதற்கான கணக்கு வழக்கை நன்கு கவனிப்போம். அது யாராயிருந்தாலும் சரி! எனவே ஜாக்கிரதை, கவனம்! அனைவரும் கவனமாய்க் கேட்டீர்களா? இரண்டு காதுகளையும் திறந்து கொண்டு கேளுங்கள். விருத்தியாலும் கூடத் தொடக்கூடாது. பார்வையிலும் தொடக்கூடாது, சங்கல்பத்தில் இல்லையெனில் விருத்தி-திருஷ்டி என்பதென்ன. ஏனெனில் சமயம் சம்பன்னதாவின் (முழுமை) சமீபம் வந்து கொண்டிருக்கிறது. முற்றிலும் அடைய வேண்டிய நேரம்! அதில் இந்த விஷயம் முற்றிலும் வெண்மையான பேப்பரில் கறும்புள்ளி போன்றது. நல்லது. எல்லோரும் எங்கிருந்தெல்லாமோ வந்துள்ளீர்கள், அனைத்து தரப்பிலிருந்தும் வந்துள்ள குழந்தைகளுக்கு நல்வாழ்த்துக்கள்.

கர்நாடக சேவாதாரிகரிளுடன்: சேவாதாரிகளைப் பார்த்து, சேவைக்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. கர்னாடக சேவாதாரிகள் எழுந்து நிற்கவும் என்று பாப்தாதா கூறினார். அதிகமான சேவாதாரிகள் வந்துள்ளனர். மிகவும் நல்லது. (2500- பேர்) நல்லது. விருத்தி நன்றாக இருக்கின்றது. விதி மேலும் விருத்தி இரண்டும் சமதினையின் வைப்பவர்கள். இப்பொழுது கர்நாடகம் நாடகத்தில் ஹீரோ பார்ட் பண்ணவில்லை. கர்நாடகம் என்றாலே நாடகத்தில் நடிப்பவர்கள்.

ஹீரோ பார்ட் பண்ணக்கூடியவர்கள் ஆனால் ஹீரோ பார்ட் (பங்கு) பண்ணவில்லை. எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது! அதற்கு வாழ்த்துக்கள். வேறு எந்த மண்டலமும் செய்யாத ஹீரோ பார்ட்டை செய்து காட்டவும். லட்சக்கணக்கான வரை ஒன்று சேர்ப்பது பொதுவான விசயம் ஆகி விட்டது. அதில் புதுமையை செய்து காட்டவும். இங்கு இங்கு என்று அனைவரும் காட்ட வேண்டும். உங்களால் செய்ய முடியும் ஆனால் இப்பொழுது ரகசியமாக இருக்கின்றது. பிரத்யட்சம் ஆகவில்லை. அதனால் ஆசிரியர்கள் (டீச்சர்ஸ்) செய்ய வேண்டும் அல்லவா? ஏதாவது ஹீரோ பார்ட் செய்து காட்டவும், சென்டர் திறப்பது, சீதா பாடசாலை திறப்பது இது எல்லாம் பொதுவான விசயமாகி விட்டது. புது விசயத்தை செய்து காட்டுங்கள். புது விதமாக பாண்டவர்கள் செய்வீர்கள் அல்லவா? மிகவும் பழமையான சேவாதாரிகள் இருக்கிறார்கள். அதிசயத்தை செய்து காட்டுங்கள். அதைப் பார்த்து அனைத்து மண்டலமும் கை தட்ட வேண்டும் பாப்தாதாவிற்கு கர்நாடகத்தின் மீது நம்பிக்கை அதிகமாக இருக்கின்றது. இப்பொழுது நம்பிக்கையின் நட்சத்திரமாய் இருக்கின்றீர்கள். மேலும் நம்பிக்கையின் நட்சத்திரமாய் இருந்து வெற்றியின் நட்சத்திரமாக பிரத்யட்சம் ஆகுங்கள். ஆக வேண்டும். சரிதானே! ஆசிரியர்கள் கூட அதிகமாக இருக்கிறார்கள். ஆசிரியர்கள் மட்டும் கைதூக்குங்கள். பாருங்கள் எத்தனை ஆசிரியர்கள். பாண்டவர்கள் கூட இருக்கிறார்கள். மண்டல பொறுப்பாளி (தலைமை) கூட கையை தூக்குங்கள். பாருங்கள் எத்தனை தலைவர்கள். ரெம்ப நல்ல நல்ல தலைவர்கள். இப்பொழுது திரைக்குப் பின் இருக்கிறார்கள். மேடையில் வரவில்லை. நல்லது. வாழ்த்துக்கள்.

இந்தூர் கன்யா ஹாஸ்டல் குமாரிகளுடன்: குமாரிகள் இப்பொழுது அதிசயம் செய்வீர்களா? அல்லது நடனம் மட்டும் தான் ஆடுவீர்களா? இப்பொழுது இவ்வளவு சிறியவர்கள் இவ்வளவு அதிசயம் செய்து காட்டுங்கள். சிறிய குமாரிகள் சவால் செய்ய வேண்டும். அனுபவத்தின் ஆதாரத்தில் சவால் விட வேண்டும். அப்பொழுது தான் அனைவரும் பிரமித்துப் போவார்கள். நல்லது, உங்கள் வாழ்க்கையை பாதுகாப்பானதாக செய்து விட்டீர்கள். உலகத்தின் தொடர்பில் இருந்து தப்பித்துக் கொண்டீர்கள். இப்பொழுது உங்களுக்குள் அப்படிப்பட்ட ஒரு புதுமை சேவையைப் பற்றிய திட்டம் போடுங்கள். சிறியவர்களாக

இருந்தாலும் அதிசயமான திட்டம் போடுங்கள். உங்களால் செய்ய முடியும், பாருங்கள் எப்பொழுது ஸ்தாபனை ஆகியதோ சிறுசிறு குமாரிகள் தான் அதிசயம் செய்தார்கள் இல்லையா? நீங்கள் கூட ஏதாவது அதிசயத்தின் திட்டம் தீட்டுங்கள். நல்லது. தொடர்பு நன்றாக இருக்கின்றது சூழ்நிலை நன்றாக இருக்கின்றது. பாதுகாப்பு கூட இருக்கிறது. சமயம் கூட இருக்கிறது. இப்பொழுது திட்டம் போடுங்கள். சரிதானே! திட்டம் போடுவீர்கள் தானே! மிகப் பெரியவர்கள் இருந்தாலும் சிறியவர்கள் பெரியவர்களுக்குச் சமமாக பெரிய காரியத்தை செய்து காட்டும்படியான திட்டத்தைப் போடுங்கள்.

நல்லது. மனதை ஆர்டர் (கட்டளை) படி நடத்துங்கள். ஒரு வினாடியில் எங்கு மனம் லயிக்க வேண்டுமோ அங்கு லயிக்க வேண்டும். இந்த பயிற்சியை செய்யவும்! நல்லது பல இடங்களில் குழந்தைகள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள், நினைவு கூட செய்து கொண்டு இருக்கிறார்கள். கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். இதை கேட்டு கொண்டு குஷியாகக் கூட இருக்கிறார்கள். விஞ்ஞானத்தின் சாதனம் வாஸ்தவத்தில் குழந்தைகளுக்காக சுகம் கொடுக்கக் கூடியதாக உள்ளது.

நாலாபுறத்தில் அனைத்து பொக்கிஷங்களினால் சதா நிறைந்து இருக்கும் குழந்தைகளுக்கு, சதா குஷிக்கு அதிகாரியான பாக்கியத்தை அடைந்த குஷி நிறைந்த முகம் மற்றும் நடத்தையினால் குஷியின் அஞ்சலி கொடுக்கக்கூடிய விஷ்வ கல்யாணகாரி குழந்தைகளுக்கு, சதா மனதின் அதிகாரியாகி ஏகாக்கிரதா (ஒருநிலை) சக்தியின் மூலம் மனதை கட்டுப்படுத்தக்கூடிய மனதை வென்றவர்கள், உலகத்தை வென்ற குழந்தைகளுக்கு சதா பிராமண வாழ்க்கையின் விசேஷதா பவித்திரதாவின் தோற்றத்தில் இருக்கக் கூடிய தூய்மையான பிராமண ஆத்மாக்களுக்கு சதா இரட்டை ஒளி ஆகி பரிஸ்தா வாழ்க்கையில் பிரம்மாபாபாவை பின்பற்றக்கூடிய, பிரம்மாபாபாவிற்கு சமமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மேலும் நமஸ்தே! நாலா புறமும் கேட்கக்கூடிய நினைவு கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும் மிகமிக மனதின் ஆசீர்வாதங்களோடு அன்பு நினைவுகள் அனைவருக்கும் நமஸ்தே!

தாதிகளுடன்: நாடகத்தில் ஒவ்வொருவருக்கும் நல்ல பங்கு கிடைத்துள்ளது. உங்களுடைய பங்கு நன்றாக இருக்கின்றது அல்லவா. பாப்தாதா கூட குஷி அடைகிறார். உங்களுடைய (தாதிகளின்) நல்ல சகயோகிகள் இருக்கிறார்கள், வலது கரமாக இருக்கிறார்கள் வலது கரம் தானே! பாருங்கள் இந்த முழு குழுவும் உங்கள் வலது கரமாக இருக்கிறார்கள். எவ்வளவு நல்ல வலது கரங்கள் இருக்கிறார்கள். ஜானகி தாதியைப் பார்த்து, பாருங்கள் உங்களின் வலது கரங்கள் கூட இருக்கிறார்கள். அயல் நாட்டு சேவைக்குக் கூட நல்ல நல்ல வலது கரங்கள் உள்ளார்கள். (மூன்று நான்கு பேரை கூப்பிடுங்கள்) உங்களின் மீது வலது கரங்கள் மீது பொறுப்பு இருக்கின்றது. நிமித்தமானவர்கள் இவர்கள் ஆனால் பொறுப்பு என்பது (அயல் நாட்டு சகோதரிகளிடம்) ஏனெனில் கைகள் தானே காரியம் செய்கிறது இல்லையா? நீங்கள் பாருங்கள் சரீரத்தில் அனைத்தையும் விட அதிகமாக வேலை செய்வது கை தானே! அதனால் நீங்கள் அனைவரும் வலது கரங்கள். மேலும் கரங்கள் என்ன விரும்பினாலும் அதனை செய்ய முடியும். தாதிகளின் வேலை நெற்றியின் மூலமாக வேலை செய்வது. உங்களுடையது கைகள் மூலமாக செய்வது. இவர்கள் பிரேரணை கொடுப்பார்கள், வழி காட்டுவார்கள். கட்டளை இடுவார்கள் ஆனால் செய்வது நீங்கள் தான். இவர்கள் இப்பொழுது போய் கோர்ஸ் எடுக்க மாட்டார்கள். இப்பொழுது பெரிய சகோதரிகள் கோர்ஸ் எடுக்கும் பங்கும் முடிந்து விட்டது. மதுபனில் வலது கரங்களும் நல்லவர்களாக இருக்கின்றார்கள். அயல்நாடுகளின் வலது கரங்களும், நல்லவர்களாக இருக்கிறார் மேலும் அதிசயம் செய்யக்கூடியவர்கள். ஒவ்வொரு ரத்தினமும் எத்தனை நல்ல ரத்தினமாக இருக்கின்றது என்று பாப்தாதா குஷி அடைகிறார்.

சபையிடம்: வலது கரம் என்றால் சதா சரியான காரியம் செய்யக் கூடியவர்கள். ஒருபொழுதும் வீணான காரியம் செய்யாதவர்கள் சரியான காரியம் செய்பவர்கள். பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்திருக்கின்றது. நீங்கள் அனைவரும் அலங்கரமாக இருக்கிறீர்கள். நிமித்தமாக இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள் ஆனால் அனைவரும் ஒருவர் மற்றொருவருக்கு சகயோகி ஆகி நல்ல காரியம் செய்து கொண்டு இருப்பதைப் பாப்தாதா பார்த்து குஷி அடைகிறார். நிமித்தமானவர்களின் ஒற்றுமை மேலும் தூய்மை இரண்டும் முழு

பரிவாரத்திற்கும் தைரியம் கொடுக்கின்றது. பாண்டவர்கள் கூட இருக்கிறார்கள். பாண்டவர்களை மேடையில் அழைக்கவில்லை. இருந்தாலும் அவர்களும் கூடவே. இருக்கிறார்கள். எவ்வளவு நல்ல வாய்ப்பு அனைவருக்கும் கிடைத்துள்ளது. இங்கு வந்து சேர்ந்து விட்டீர்கள் என்றாலே அடைந்து விட்டீர்கள். பாருங்கள் பாபா ஒவ்வொருத்தரையும் பார்க்கும்பொழுது இவர்களை அழைத்து பேசலாம் என்று யோசிப்பார் ஆனால் சாகார சரீரத்தில் சந்திப்பது என்றால் பந்தனம். சாகார சரீரத்தின் பந்தனத்தில் வந்து விட்டீர்கள். சாகார சரீரத்தின் பந்தனத்தில் இவ்வளவு செய்ய முடியாது ஆனால் வதனத்தில் பாப்தாதாவை சந்தித்துப் பேச முடியும். அதனால் பந்தன முக்த் ஆகி விட்டீர்கள் அல்லவா! இங்கு இடத்தின் கேள்வி இல்லை? சமயத்திற்கு கேள்வி இல்லை, ஆனால் உங்களுக்குத் தெரியும் ஒரு ரகசியமான விசயம் சொல்கிறார் பாப்தாதா வதனத்தில் ஒவ்வொரு குழுவாக அழைக்கிறார். மேலும் அவர்களோடு ஆன்மீக உரையாடல் செய்கிறார். உங்களுக்கு நினைவு இருக்கின்றதா? சாகாரத்தில் பிரம்மாபாபா ஒவ்வொரு குழுவையும் தன்னிடம் (போஜனம்) சாப்பிடும் சமயம் அழைத்தார் (கில்ஃப்டன் கடற்கரை). இல்லையா? நினைவிருக்கின்றதா? அதேபோல் பாப்தாதா வதனத்தில் கண்டிப்பாக அழைப்பார் ஆனால் சாகாரத்தில் அப்படி செய்ய முடியாது. நல்லது. மதுபனில் எவ்வளவு நல்ல சேவாதாரிகள் அமர்ந்துள்ளனர். பல துறையை சேர்ந்தவர்கள் (Departments) அமர்ந்துள்ளனர். இரட்டை அயல் நாட்டவர் எத்தனை நல்லவர்கள். மாதாக்களைப் பாருங்கள். அனைவரும் மிகவும் நல்லவர்கள் ஆனால் அனைவரையும் எப்படி அழைப்பது. மேடை மீது அனைவரும் வர முடியுமா? வர முடியாது. நல்லது. மதுபனின் கவர்ச்சி அனைவரையும் குடை நிழலின் வேலையை செய்விக்கிறது. எப்பொழுது இங்கு வந்து சேர்ந்து விட்டீர்களோ அவ்வளவு அனுபவம் செய்கிறீர்கள். ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 30.11.2003 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சீசன் நான்கு பாடங்களின் அனுபவத்தின் ஆதாரத்தில் அதிகாரியாகி பிரச்சினைகளை சமாதானமாக மாற்றுங்கள்!

இன்று, பிராமண உலகைப் படைப்பவர், நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய பிராமண குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த பிராமண உலகம் மிகச் சிறிய உலகம் என்றாலும் அதி சிரேஷ்டமானது. அதிக அன்பான உலகம். இந்த பிராமண உலகம் முழு உலகத்திலும் உள்ள விசேஷ ஆத்மாக்களின் உலகமாகும். ஒவ்வொரு பிராமணரும் கோடியில் சிலராக இருக்கின்ற, அந்த ஒரு சிலரில் ஒருவராக இருக்கின்றார். ஏனெனில் தங்களுடைய தந்தையை அடையாளம் கண்டு கொண்டனர். தந்தையின் ஆஸ்திக்கு அதிகாரியாகவும் ஆகி விட்டனர். எப்படி தந்தை உயர்ந்ததிலும், உயர்ந்தவராக இருக்கின்றாரோ அப்படிப்பட்ட தந்தையை அறிந்து, அவருடையவராகவும் ஆகி விட்ட விசேஷ ஆத்மாக்கள். ஒவ்வொரு பிராமண ஆத்மாவிலும் பிறந்தது முதலே பாக்கிய விதாதாவான தந்தை, அதன் நெற்றியில் பாக்கிய ரேகையை வரைந்து விட்டார். இப்படிப்பட்ட சிரேஷ்ட பாக்கியவான் ஆத்மா. ஆதலால் அப்படிப்பட்ட பாக்கியவான் என்று தன்னைப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா? இவ்வளவு அதிகமான ஆன்மீக நஷா அனுபவம் ஆகிறதா? ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் உள்ளத்திலும் திலாராம், உளமார, தனது உள்ளத்தின் அன்பை வழங்கிக் கொண்டிருக்கின்றார். இந்த பரமாத்ம அன்பு முழு கல்பத்திலும், ஒருவர் மூலமாக, ஒரே ஒரு முறை தான் பிராப்தி ஆகிறது. இந்த ஆன்மீக போதை சதா ஒவ்வொரு கர்மத்திலும் இருக்கிறதா? ஏனெனில், நீங்கள் உங்களை, கர்மயோகி வாழ்க்கை வாழுகின்ற விசேஷ ஆத்மாக்கள் என்று உலகத்திற்கு சவால்

விடுகின்றீர்கள். வெறும் யோகம் செய்யும் யோகி அல்ல. யோகி வாழ்க்கை வாழ்பவர்கள் வாழ்க்கை என்றால், சதா காலத்திற்கும் இருப்பதாகும். இயற்கையாகவும், நிரந்தரமாக இருப்பது. 8-மணி நேரம் அல்லது 6-மணி நேரம் மட்டும், வாழும் வாழ்க்கை அல்ல. யோகம் என்றாலே நினைவு. இந்த பிராமண வாழ்க்கையின் இலக்ஷியம். வாழ்க்கையின் இலக்ஷியம் இயல்பாகவே நினைவிலிருக்கும். மேலும் இலக்ஷியம் எப்படி இருக்கிறதோ, அதுபோல இலக்ஷணமும் இயல்பாகவே வந்து விடும்.

பாப்தாதா ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் நெற்றியிலும், ஒளி வீசிக் கொண்டிருக்கின்ற பாக்கிய நட்சத்திரத்தைப் பார்க்கின்றார். பாப்தாதா, எப்போதும் ஒவ்வொரு குழந்தை யையும், சிரேஷ்ட சுவமான்தாரியாக, ஸ்வராஜ்யதாரியாகப் பார்க்கின்றார். ஆதலால் நீங்கள் எல்லோரும் கூட, உங்களை ஸ்வமான்தாரி ஆத்மா, ஸ்வராஜ்யதாரி ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? ஒருவேளை, ஒரு நொடி நான் ஸ்வமான்தாரி ஆத்மா என்று நினைவுக்கு கொண்டு வந்தால் அந்த நொடியில் ஸ்வமான் பற்றிய எண்ணிக்கை எவ்வளவோ வரும் அல்லவா? இப்போதும் கூட, உங்களுடைய ஸ்வமான் என்ற லிஸ்ட் நினைவில் வந்ததா? மிக நீளமான லிஸ்ட் அல்லவா? ஸ்வமான், அபிமானத்தை இல்லாமல் செய்து விடும். ஏனெனில் ஸ்வமான், சிரேஷ்ட அபிமானம் ஆகும். ஆதலால் சிரேஷ்ட அபிமானம், அசுத்த விதவிதமான தேக அபிமானத்தை இல்லாமல் முடித்து விடும். எப்படி ஒரு வினாடியில் லைட் ஸ்விட்ச் ஆன் செய்ததும், இருள் விலகி ஓடி விடுகிறது. இருளை ஓடும்படி யாரும் விரட்டவில்லை இருளை விலக்குவதற்காக முயற்சி எதுவும் செய்ய வேண்டியிருக்கவில்லை ஆனால் ஸ்விட்ச் ஆன் செய்ததுமே, இருள் தானாகவே இல்லாமல் மறைந்து விடுகிறது. இது போல ஸ்வமான் நினைவின் ஸ்விட்ச் ஆன் செய்தால், பல விதமான தேக அபிமானத்தை விலக்குவதற்கு முயற்சி எதுவும் செய்ய வேண்டியதில்லை. இதற்கான முயற்சி, எதுவரை செய்ய வேண்டியிருக்கும் என்றால், எதுவரையிலும் ஸ்வமான் நினைவு சொரூபமாக ஆகவில்லையோ, அதுவரை பாப்தாதா குழந்தைகளின் விளையாட்டைப் பார்க்கின்றார். ஸ்வமானை உள்ளத்தில் வர்ணனை செய்கின்றார். நான் பாப்தாதாவின் மன சிம்மாசனத்திற்கு அதிகாரியாக இருக்கின்றேன், இப்படி வர்ணனையும்

செய்கின்றார்கள். நினைக்கவும் செய்கின்றார்கள் ஆனால், அனுபவம் என்ற சீட்டில் அமருவதில்லை. எதை நினைக்கிறார்களோ, அது அவசியம் அனுபவம் ஆகத்தான் வேண்டும். ஏனெனில் எல்லாவற்றிலும் சிரேஷ்டமான ஆதாரம், அனுபவத்தின் அதிகாரம். மிக நன்றாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்க்கின்றார். நல்ல விதமாக சிந்திக்கவும் செய்கிறார்கள், ஆனால் கேட்பதும், சிந்திப்பதும் வெவ்வேறானது. அனுபவ சொரூபமாவது தான் பிராமண வாழ்க்கையின் சிரேஷ்ட அதிகாரம். இது தான் பக்திக்கும், ஞானத்திற்குமுள்ள வேறுபாடு. பக்தியிலும் கூட, கேட்க வேண்டுமென்ற போதை அதிகமாகவே இருக்கிறது. இது பற்றி சிந்திக்கிறார்கள் ஆனால் அனுபவம் செய்ய முடிவதில்லை, ஞானம் என்பதின் பொருள் ஞானி தூ ஆத்மா என்பதாகும். அதாவது ஒவ்வொரு ஸ்வமானிலும் அனுபவஸ்தர் ஆவதாகும். அனுபவ சொரூபம் ருஹானி நஷாவை உண்டாக்குகிறது. அனுபவம் என்பது வாழ்க்கையில் மறக்காது. கேட்பதும், நினைப்பதும் மறந்து விடும் ஆனால், அனுபவத்தின் ஆதாரம் குறையாது.

ஆதலால் இதைத்தான் பாப்தாதா குழந்தைகளின் நினைவுக்குக் கொண்டு வருகிறார். பகவானாகிய தந்தையிடம் கேட்ட ஒவ்வொன்றிலும் அனுபவி மூர்த்தி ஆகுங்கள். அனுபவத்தில் உள்ள ஒரு விஷயத்தை, ஆயிரம் பேர்கள் நீக்க முயற்சி செய்தாலும், அது நீங்காது. மாயையும் கூட அனுபவத்தை நீக்க முடியாது. எப்படி சரீரத்தை தரித்துக் கொண்டதும், நான் இத்தகைய ஆத்மா என்பது எவ்வளவு பக்காவாகி விடுகிறதோ, அதுபோல. தன்னுடைய தேகத்தின் பெயர் மறந்து போகிறதா? எப்போதாவது யாராவது நீங்கள் அவரல்ல என்று சொன்னால், ஒத்துக் கொள்வீர்களா? ஆதலால் ஒவ்வொரு ஸ்வமான் பற்றிய லிஸ்ட், அனுபவம் செய்திருந்தால் ஒருபோதும் ஸ்வமான் மறக்காது ஆனால், ஒவ்வொரு ஸ்வமான் மற்றும் ஒவ்வொரு பாயிண்டின் (கருத்து) அனுபவத்தில், அனுபவசாலியாக இருப்பதில் நம்பர் வாராக இருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்க்கின்றார். எப்போது, நான் ஆத்மா என்று அனுபவம் செய்து விட்டீர்களோ, இதன் பிறகு வேறு ஏதோ ஒன்றாக கருதுவதற்கு, என்ன இருக்கிறது? தேகத்தை நான் என்று சொல்கிறீர்கள் ஆனால் நானோ, ஒரு ஆத்மாவாக இருக்கிறேன். இவ்வாறு நான் ஆத்மா என்பது

உறுதியாக இருந்தால், தேகபான் (தேக சம்மந்தத்தின் அபிமானம்) எங்கிருந்து வந்தது? ஏன் வந்தது? காரணம், 63-ஜென்மங்களாக, நான் தேகம் என்பது அப்பியாசமாகி விட்டது. இந்த மாறுபட்ட (உல்ட்டா) அப்பியாசம் பக்காவாகி விட்டது ஆனால் யதார்த்தமான அனுபவம் மறந்து போகிறது. குழந்தை கடும் முயற்சி செய்வதைப் பார்த்து, பாப்தாதாவுக்கு அன்பு பிறக்கிறது. பரமாத்மாவின் குழந்தை மற்றும் கடும் முயற்சி! காரணம்? அனுபவி மூர்த்தி ஆவதில் குறை இருக்கிறது. எப்போது தேக அபிமானத்தின் அனுபவம் கொஞ்சமிருந்தாலும், என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும், அது மறந்து போகிறதா? ஆதலால் பிராமண வாழ்க்கை என்றால் கர்ம யோகி வாழ்க்கை. யோகி வாழ்க்கையின் அனுபவம்.

ஆதலால் சோதியுங்கள். ஒவ்வொரு பாடத்தையும் அனுபவத்தில் கொண்டு வந்திருக்கிறீர்களா? ஞானம் கேட்பது, சொல்வது, சுலபம் ஆனால் ஞான சொரூபமாக வேண்டும். ஞானத்தை சொரூபத்தில் கொண்டு வந்து விட்டால், இயல்பாகவே ஒவ்வொரு கர்மமும், ஞான பூர்வமாகி விடும். அதாவது ஞானத்தின் ஒளியும் சக்தியும் உடையதாக ஆகி விடும். ஞானம் ஒளியும், சக்தியுமுடையது என்று கூறுகின்றார்கள். இதே போலவே யோகி சொரூபம், யோக யுக்த் யுக்தியுக்த் சொரூபமாகும். தாரணை சொரூபம் என்றால் ஒவ்வொரு கர்மமும், ஒவ்வொரு கர்மேந்திரியமும், ஒவ்வொரு குணத்தின் தாரணை சொரூபமாக இருக்கும் சேவையின் அனுபவி மூரத் சேவாதாரி என்றால், இயல்பாகவே, நிரந்தர, சேவாதாரி. மனம் மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ, கர்மத்தின் மூலமாகவோ, சம்மந்தம் மற்றும் தொடர்பில் ஒவ்வொரு கர்மத்திலும் சேவை இயற்கையாகவே நடந்து கொண்டிருக்க வேண்டும். இதற்குத்தான் நான்கு பாடங்களிலும் அனுபவ சொரூபம் என்று சொல்லப்படுகிறது. ஆதலால் எது வரையிலும் அனுபவ சொரூபமாகியிருக்கிறோம் என்பதை எல்லோரும் சோதித்துப் பாருங்கள். ஒவ்வொரு குணத்திலும் அனுபவம், ஒவ்வொரு சக்தியிலும் அனுபவம். அனுபவம், உரிய நேரத்தில் அதிகம் உதவியாயிருக்கும் என்ற பழமொழி உண்டு. ஆதலால் அனுபவி மூரத்தின் அனுபவமானது, எப்படிப்பட்ட பிரச்சினை வந்தாலும், அனுபவி மூரத், அனுபவத்தின் ஆதாரத்தில், அதிகாரத்துடன்

பிரச்சினையை ஒரு வினாடியில் சமாதான ரூபத்தில் மாற்றி விடுவார். பிரச்சனை பிரச்சனையாக இருக்காது. சமாதானமாகி விடும். புரிந்ததா?

இப்போது சமயம் நெருங்கி கொண்டிருக்கிறது. பாபா சமானமாக ஆவதில் நெருங்கி வந்து விட்டோம் என்ற சமாதான சொரூபத்தின் அனுபவம் உண்டாகட்டும். வெகு நாளாக பிரச்சனைகள் வருவது, அதை சமாதானமாக்குவது என்று நிறைய முயற்சி செய்து விட்டீர்கள். இப்போது பாப்தாதா, ஒவ்வொரு குழந்தையையும், ஸ்வமான்தாரி, ஸ்வராஜ்ய அதிகாரி, சமாதான சொரூபம் என்று பார்க்க விரும்புகின்றார். அனுபவி மூரத் ஒரு பரிவர்த்தனை செய்ய முடியும். நன்று.

எல்லா பக்கங்களிலிருந்தும், வந்து சேர்ந்து விட்டனர். டபுள் பாரினர்ஸ் ஒவ்வொரு குரூப்பிலும் தங்களுடைய சான்ஸ் நன்றாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்லது. இந்த குரூப்பில் பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல பாண்டவர்கள் எல்லோரும் கையை உயர்த்துங்கள். மாதாக்கள், குமாரிகள், டீச்சர்ஸ் கை உயர்த்துங்கள். முதலாவது குரூப்பில் மாதாக்கள் நிறையப் பேர் இருந்தனர் ஆனால் இந்த குரூப்பில் பாண்டவர்களும்அதிகமாக போட்டியிட்டிருக்கிறார்கள். பாண்டவர்களுடைய நஷா (குஷி), மற்றும் நிச்சயம் இன்று வரையிலும் கூட மகிமை செய்யப் படுகிறது. எப்படிப்பட்ட மகிமை? தெரியுமா? 5-பாண்டவர்கள், ஆனால் நஷா மற்றும் நிச்சயத்தின் ஆதாரத்தில் வெற்றியடைந்தார்கள். இந்த மகிமை இன்று வரை உள்ளது. ஆகையால் நீங்கள் அப்படிப்பட்ட பாண்டவர்கள்! நல்லது. நஷா உள்ளதா? எப்போது உங்களை, நீங்கள் பாண்டவர்கள் என்று அழைக்கப்படுவதைக் கேட்கின்றீர்களோ, அப்போது பாண்டவபதி மறப்பதில்லையல்லவா? சில சமயங்களில் மறந்து போகிறதா? பாண்டவர்கள் மற்றும் பாண்டவபதி, பாண்டவர்களுக்கு நஷா இருக்க வேண்டும். ஞாபகார்த்தத்தில், பாண்டவர்கள் பெயரும் குறைந்ததல்ல. பாண்டவர்கள், பாண்டவபதிக்கு அன்பானவர்கள் என்று பாண்டவர்களுக்கு நஷா இருக்க வேண்டும். ஞாபகார்த்தத்தில், பாண்டவர்கள் பெயரும் குறைந்ததல்ல. பாண்டவர்களின் டைட்டில், விஜயி பாண்டவர்கள் என்பதாகும். ஆகவே, நீங்கள் அந்தப் பாண்டவர்கள் தானே! போதும். நாங்கள் விஜயி பாண்டவர்கள். வெறும்

பாண்டவர்கள் அல்ல. விஜயி பாண்டவர்கள். விஜய திலகம் அழிவற்றதாக, நெற்றியில் இருந்து கொண்டிருக்கிறது.

மாதாக்களுக்கு என்ன நஷா இருக்கிறது? அதிகமான நஷா இருக்கிறது! மாதாக்கள் நஷாவில் கூறுகிறார்கள். பாபா வந்திருப்பதே எங்களுக்காகவே தான் என்கிறார்கள். அப்படித்தானே! ஏனெனில், அரைக்கல்பம் மாதாக்களுக்கு அதிகாரம் கிடைக்கவில்லை. இப்போது சங்கமயுகத்தில், அரசியலிலும் கூட, மாதாக்களுக்கு அதிகாரம் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு துறையிலும் சக்திகளாகிய உங்களை தந்தை முன்னே வைத்திருக்கிறார் அல்லவா? ஆகையால் உலகிலும் கூட, ஒவ்வொரு துறையிலும் இப்போது மாதாக்களுக்கு அதிகாரம் கிடைக்கிறது. மாதாக்கள் இல்லாத துறையே இல்லை எனலாம். இது சங்மயுகத்தின் பதவி. ஆகவே தான் மாதாக்கள் எங்களுடைய பாபா என்கின்றார்கள். மேரா பாபா போதையில் கூறுகிறார்கள். மாதாக்கள் கை அசைக்கிறார்கள். நன்றாயிருக்கிறது. பகவானை தங்களுடையவராக்கி விட்டார்கள். ஆதலால் மந்திரக்காரி மாதாக்கள் ஆகி விட்டனர். பாப்தாதா பார்க்கின்றார். மாதாக்கள் ஆனாலும் சரி, பாண்டவர்கள் ஆனாலும் சரி, பாப்தாதாவிடம் சர்வ சம்மந்தத்திலும் அன்பு இருக்கிறது ஆனால் யாருக்கு, எந்த சம்மந்தத்தில் விசேஷமான அன்பு இருக்கிறது என்பதையும் பாப்தாதா பார்க்கின்றார். அநேக குழந்தைகளுக்கு பகவானை நண்பனாக ஆக்குவது (குதா தோஸ்த்) மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது. ஆகவே தான் குதா தோஸ்த் பற்றிய கதை உள்ளது. பாப்தாதா இதைத்தான் கூறுகின்றார். எந்த சமயத்தில், எந்த சம்மந்தத்தின் அவசியம் இருக்கிறதோ, பகவானை அந்த சம்மந்தத்தில் தன்னுடையவராக ஆக்கிக் கொள்ள முடியும். சர்வ சம்மந்தத்தில் இருக்க முடியும். குழந்தைகள் பாபா மேரா (பாபா என்னுடையவர்) என்று சொன்னால் பாபா என்ன சொன்னார்? நான் உங்களுடையவன்.

மதுபன் பூமியின் அழகு மிகவும் பிரியமானதாக இருக்கிறது. வேண்டுமானால் வெகு தூரத்திலிருந்தவாறே கேட்க முடியும், பார்க்க முடியலாம், ஆனால் மதுபன்னுடைய நேர்த்தி அலாதியானது. மதுபனில் பாப்தாதா சந்திக்கின்றார் ஆனால் எவ்வளவு பிராப்திகள் கிடைக்கின்றன? ஒருக்கால் லிஸ்ட் தயாரித்தால் எவ்வளவோ

இருக்குமல்லவா? எல்லாவற்றிலும் மிகப் பெரிய பிராப்தி சகஜயோகம். இயல்பாகவே யோகம் இருக்கிறது. முயற்சி செய்ய வேண்டிதில்லை. மதுபனுடைய வாயுமண்டலத்திற்கு மகத்துவம் வைத்திருப்பார்களேயானால், மதுபனுடைய வாயுமண்டலம் மதுபனுடைய தினசரி அட்டவணை, சகஜயோகியை இயல்பான யோகியாக்கக்கூடியதாக இருக்கிறது. ஏன் மதுபனில் இருக்கும்போது, புத்திக்கு ஒரே ஒரு வேலை தான் இருக்கிறது. சேவாதாரி குரூப் வருகிறது. அது தனிப்பட்டது ஆனால் யார், தங்களை மேம்படுத்திக் கொள்ள (refresh) வருகின்றார்களோ, அவர்களுக்கு மதுபனில் வேறு என்ன வேலை? ஏதாவது பொறுப்பு இருக்கிறதா? சாப்பிடுவது, அருந்துவது, படிப்பது, சந்தோஷமாக இருப்பது ஆதலால் மதுபன் என்றால் மதுபன் தான். வெளிநாட்டில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இப்படி கேட்பதற்கும், மதுபன் வருவதற்கும் இரவு பகல் வித்தியாசம் உள்ளது. பாப்தாதா சாதனங்கள் மூலமாக கேட்பவர்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் கூட அன்பு நினைவுகளைத் தருகின்றார். சில குழந்தைகள் இரவு விழித்திருந்து கேட்கிறார்கள். ஒன்றும் இல்லாமிலிருப்பதை விட, இது நல்லது தான் ஆனால் நல்லதிலும், நன்றாக இருப்பது மதுபன் தான் பிரியமானது. மதுபன் வருவது நன்றாக இருக்கிறதா? அல்லது அங்கே இருந்து கொண்டு முரளி கேட்டால் போதுமானதா? எது நன்றாக இருக்கிறது? அங்கேயும் கூட முரளி கேட்க முடியுமல்லவா? இங்கேயும் கூட பின்னால் அமர்ந்திருப்பவர்கள் டி.வி.'யைத்தான் பார்க்கின்றார்கள். மதுபன் வருவது தான் நல்லது என்று நினைக்கிறவர்கள் கை உயாத்துங்கள். எல்லோரும் கையை உயர்த்தி விட்டார்கள். இருந்தாலும் பக்தியிலும் கூட மகிமை எதற்கு இருக்கிறது? நல்லது மதுபனில் முரளி சொல்லப்படுகிறது. லண்டனில் அல்ல எங்கே இருந்தாலும் சரி, மதுபன் மகிமையின் மகத்துவத்தை அறிவது என்பது தன்னை மகான் ஆக்குவதாகும்.

நன்று. இங்கு வந்திருக்கின்ற எல்லோரும் யோகி ஜீவன், ஞானி தூ ஆத்மா ஜீவன், தாரணை சொரூபத்தை அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது முதல் தவணையில், இந்த சீரனில் விசேஷ கவனம் கொடுக்கப்பட்டது. அதாவது இந்த முழு சீசனிலும் திருப்தியுடன் (சந்துஷ்டம்) இருக்க வேண்டும். மற்றும் திருப்திப்படுத்த

வேண்டும் என்பதாகும். தான் இருப்பது மட்டுமல்ல, மற்றவரையும் இருக்கச் செய்ய வேண்டும். இதன் கூடவே, இன்றைய நேரப் பிரமாணமாக, எந்த சமயத்திலும், எதுவும் நடக்கலாம். ஆதலால் எப்போது நடக்கும் ஒரு ஆண்டில் என்ன நடக்கும், 6-மாதங்களில் என்ன நடக்கும் என்று எந்த ஒரு கேள்வியும் கேட்கக் கூடாது. திடீரென எதுவும், எந்த சமயத்திலும் நடக்கும். ஆதலால் உங்களுடைய நினைவு என்னும் ஸ்விட்சை மிகவும் சக்திசாலியாக (பவர்புல்) வைத்திருங்கள். ஒரு வினாடியில் ஸ்விட்ச் ஆன் செய்த உடனே அனுபவ சொரூபமாகி விட வேண்டும். ஸ்விட்ச் சரியில்லாது போனால், அடிக்கடி ஆன், ஆஃப், ஆகிக் கொண்டேயிருந்தால் சரியாவதில் தாமதமாகி விடும் ஆனால் ஒரு வினாடியில், ஸ்வமான், சுய இராஜ்ய அதிகாரி ஸ்விட்ச் ஆன் செய்து, அந்தர்முகியாகி அனுபவம் செய்து கொண்டேயிருங்கள். அனுபவ சாகரத்தில் மூழ்கியிருங்கள். அனுபவ ஆதாரத்தின் அதிகாரத்தை யாராலும் வெல்ல முடியாது. புரிந்ததா? என்ன செய்ய வேண்டும்? பாப்தாதா ஜாடையாகச் சொல்லி விடுகிறார். ஆதலால் எதிர்பார்த்திருக்காதீர்கள். எப்போது எப்போது எப்போது அல்ல. இப்போதே, எவர்ரெடி. ஒரு செகண்டில் நினைவு எனும் ஸ்விட்ச்சை ஆன் செய்ய முடியுமா? செய்ய முடியுமா? எப்படிப்பட்ட சூழ்நிலையானாலும் சரி, எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் சரி, ஸ்மிருதி (நினைவு) ஸ்விட்ச்சை ஆன் செய்து விடுங்கள். இந்த அப்பியாசம் செய்யுங்கள். ஏனெனில் பைனல் பேப்பர் (கடைசிப்பரிட்சை) ஒரு வினாடிக்கானது தானே! ஒரு நிமிடம் கூட அல்ல. யோசிப்பவர்கள் பாஸாக முடியாது. அனுபவஸ்தர்கள் பாஸாகி விடுவார்கள். ஆதலால் இப்போது எல்லோரும் ஒரு செகண்டில், நான் பரந்தாம் நிவாசி சிரேஷ்ட ஆத்மா என்ற ஸ்விட்சை ஆன் செய்யுங்கள் வேறு எந்த ஒரு நினைவும் கூடாது. புத்தியில் எந்த ஒரு குழப்பம் கூடாது. உறுதியான நிலையில் இருக்க வேண்டும். (டிரில்) நல்லது.

நாலா பக்கங்களிலுமுள்ள சிரேஷ்ட ஸ்வமான்தாரி அனுபவி ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு பாடத்திலும் அனுபவசாலியாகி, சதா யோகி வாழ்க்கையிலிருக்கும் நிரந்தர யோகி ஆத்மாக்களுக்கு, சதா தன்னுடைய விசேஷ பாக்கியத்தை, கர்மத்தில் எமர்ஜ் சொரூபத்தில் வைத்திருக்கும் கோடியில் சிலர், அந்தச் சிலரிலும் சிலராக இருக்கின்ற

விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

பஞ்சாப் சேவாதாரிகளுடன்: பஞ்சாப்காரர்கள் எத்தனை பேர் வந்திருக்கிறீர்கள்? எழுந்திருங்கள். டீச்சர்ஸ் நிறைய பேர் வந்திருக்கிறார்கள். பாண்டவர்களும் இருக்கிறார்கள் யக்ஞ சேவைக்கான வாய்ப்பு எவ்வளவு சிரேஷ்ட அனுபவமாக இருக்கிறது! ஏனெனில் யக்ஞம் சிரேஷ்டமானது. யக்ஞ சேவை செய்வது என்பது, புண்ணியக் கணக்கை, தனது கணக்கில் சேமிப்பதாகும். ஆகவே, ஒவ்வொருவரும் எவ்வளவு புண்ணியம் சேமித்திருக்கிறீர்கள்? மனப்பூர்வமாக சேவை செய்திருந்தால், ஒன்றுக்கு நூறு மடங்கு புண்ணியம் சேமிப்பாகியிருக்கும். நல்லது. பஞ்சாப் கூட ஒன்றும் குறைந்ததல்ல. கெட்டிக்காரர்கள். பஞ்சாப்பின் விசேஷம் என்ன வென்றால், பஞ்சாபினுடைய வாயுமண்டலத்தை சாந்தமாக்கி விட்டார்கள். இப்போது சண்டை, சச்சரவு நடக்கிறதா? இல்லையல்லவா? பொதுவான விஷயம் வேறு. விசேஷமாக தீவிர வாதம் இல்லை தானே! மேலும் சேவையும் முன்னேறிக் கொண்டேயிருக்கிறது. சேவையில் விருத்தி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் நன்றாக இருக்கிறது. பாண்டவர்களும் நிர்விக்னமாக இருக்கிறார்கள் அல்லவா? நிர்விக்னம். மாயை வருவது அதனுடைய வேலை, வெற்றி பெறுவது நமது வேலை என்று நினைப்பவர்கள் உயர்த்துங்கள். கை மாதாக்கள், டீச்சர் முன்னேற வேண்டுமானால் மாயை வர வேண்டுமல்லவா? நல்லது. இந்த சேவைக்கான சான்ஸ் உங்களுடைய புண்ணியக் கணக்கை அதிகப்படுத்துகிறது. மேலும் எவ்வளவு ஆசீர்வாதம் கிடைக்கிறது! திருப்தியோடு செல்ல வேண்டும். அதாவது ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும். பஞ்சாப் ஆசீர்வாதக் கணக்கை சேமித்து விட்டது. நல்லது ஆனால் எந்த ஒரு பிரசித்தி பெற்ற (மைக்) ஆத்மாவோ, வாரிஸோ கிடைக்கவில்லை. எல்லோருக்கும் பாப்தாதா சொன்னார் ஆனால் யாரும் மைக் வாரிஸ் ஆத்மா கொண்டு வரவில்லை. மேடையில் கொண்டு வந்தார்கள். பஞ்சாப் கெட்டிக்காரர்கள். வாரிஸ் கண்டு பிடிப்பதில் மைக் தயா செய்வதில் கெட்டிக்காரர்கள். பஞ்சாபில் பொதுவான கோஷம் என்ன சொல்கிறார்கள் என்றால், என்ன சொல்கிறாரோ அது நடந்து விடும். ஆகவே பஞ்சாப்காரர்கள் கொண்டு வந்தால், அவர்கள் விருப்பம்

நிறைவேறி விடும். கொண்டு வர வேண்டும். கொண்டு வரத்தான் வேண்டும். எந்த ஜோன் முதலில் கொண்டு வருகிறது என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். இதற்கு மகத்துவம் இருக்கிறதல்லவா? இதுவரை யாரும் அழைத்துக் கொண்டு வரவில்லை முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டினரும் மிகுந்த முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். கொண்டு வருவார்கள். டபுள் விதேஷி, வாரிஸ் கொண்டு வர வேண்டுமல்லவா? எங்கே இருக்கிறார்கள், டபுள் விதேஷி? (வெளி நாட்டுக்காரர்கள்) கை உயர்த்துங்கள். இனி பார்க்கலாம். டபுள் விதேஷி முதலில் கொண்டு வருகிறார்களா? என்று பார்ப்போம். அல்லது பாரதம் முதல் நம்பரில் வருமா? (முதலில் மைக் கொண்டு வருவது) யார் முதலில் வந்தாலும். சரி. பாப்தாதா இப்போது விரும்புவது என்னவென்றால் பிரம்மாகுமாரிகளின் அறிமுகம் மற்றும் அவர்களுடைய சம்மந்தம் (பாபா) எப்படிப்பட்டது என்பதைப் பற்றி உண்மை, பிரசித்தி பெற்ற, விசேஷமான ஆத்மா (மைக்) மூலம் நடக்க வேண்டும் என்பது தான். நீங்கள் நிறைய செய்து விட்டீர்கள். இப்போது நீங்கள் திருஷ்டி கொடுங்கள். மைக் பேசட்டும். இப்படியும் நடக்கத்தான் போகிறது. ஆதலால் பஞ்சாப்காரர்களுக்கு நல் வாழ்த்துக்கள், நல்வாழ்த்துக்கள் நல்வாழ்த்துக்கள். நல்லது.

தாதிமார்களுடன்: எல்லோரையும் ஆர்வம், உற்சாகத்தில் கொண்டு வரக் கூடிய நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள். கோடி என்ன? முழு உலகிலுள்ள ஆத்மாக்களுக்கும் செய்தி கிடைக்க வேண்டும். ஆஹா! பிரபு! என்று சொல்வார்கள் அல்லவா ஆஹா! பிரபு என்று சொல்வதற்கும் கூட தயார் செய்ய வேண்டியதாயிருக்கிறது. இவரும் கூட, சகயோகம் தருகின்றார். நல்லது. மதுபனை பாலனை செய்து கொண்டிருக்கின்றார். நல்ல சகயோகி குரூப் கிடைத்திருக்கிறதல்லவா? ஒவ்வொருவரிடமும் ஒரு விசேஷம் உள்ளது. இருந்தாலும் ஆதி ரத்தினங்களின் பிரபாவம் தனிப்பட்டதாக இருக்கிறது எத்தனை வயதாகியிருந்தாலும் சரி, புதுப்புது ஆத்மாக்களும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் ஆதி ரத்தினங்களினுடைய பாலனை தனிப்பட்டதாக இருக்கிறது. ஆதலால் குரூப்பாக இருப்பது நல்லது. (மோகினி சகோதரியைப் பார்த்து) இங்கு கூட ஆதி ரத்தினத்தில் இருக்கிறார் அல்லவா! நல்லது. சேவை நாலா பக்கங்களிலும் நன்றாக நடக்கிறது. இரத்தன் மோகினி தாதி ஓரிஸ்ஸா

சேவை பற்றிய சமாச்சாரம் கூறினார். மோகினி சகோதரி, அஸ்ஸாமி சேவை பற்றிய சமாச்சாரம் கூறினார். எல்லோரும் தங்களுக்கு நிறைய அன்பு நினைவுகளை அளித்தார்கள். அவர்களுக்கு நினைவைக் கொடுங்கள். சேவை அதிகமாகத்தான் வேண்டும். ஏனெனில், இப்போது எல்லோருக்கும் அவசியமாயிருக்கிறது. நல்லது.

நளினி சகோதரி, சந்தோஷ் சகோதரி, சரளா சகோதரி, அச்சல் சகோதரி, பிரேம் சகோதரி, ஆகிய பழைய மூத்த சகோதரிகளுடன்: எல்லோரும் உங்களை பொறுப்பாளிகள் என்று நினைக்கிறீர்களா? உங்கள் எல்லோர் மீதும் பேகத் பொறுப்பு உள்ளது. பஞ்சாப், குஜராத், பம்பாய் மட்டுமல்ல. எல்லையற்ற (பேகத்) தாதிகளுடன் இருக்கிறீர்கள் என்றால் பேகத்தில் இருக்கிறீர்கள் தானே! இப்படி நிமித்தமானர்கள் எங்கிருந்தாலும் சரி, சதா பேகத் பொறுப்பு தன் மீது உள்ளது என்று புரிந்து கொள்ளுங்கள். எந்த சமயத்திலும், எங்கே செல்ல வேண்டுமானாலும், எவர்ரெடியாக இருங்கள். எப்படி தாதிகள் இருக்கிறார்களோ, அப்படி உங்களிடமும் குரூப் உள்ளது. இப்போது அப்படி இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம் ஆனால் அப்படி இரண்டாவது குரூப் கூட நிறைய புத்திவானாக, சர்வீஸபுள் ஆக இருக்கிறார்கள். நிறைய சேவை செய்ய முடியும். ஆகையால், நாங்கள் எல்லையற்றவர்கள், எல்லைக்குட்பட்டவர்கள் அல்ல என்று சதா நினையுங்கள். அப்படியானால் எவர் ரெடி தானே! எப்போது அழைத்தாலும் வந்து விடுவீர்கள்! அல்லது ஜோன் சேவை அதிகமாக உள்ளது. உடம்பு சரியில்லை என்று சொல்வீர்களா! இல்லை. உடம்பை பாப்தாதா தானாகவே நடத்துவார். எந்த ஒரு பொறுப்பாக இருந்தாலும் சரி, பாப்தாதாவின் பார்வையில் இருப்பதால் அழைக்கப்பட்டார். விசேஷ ஆசை என்ன இருக்கிறது? ஆலோசித்து நடத்துங்கள். என்னென்ன இருக்க வேண்டும். எப்படி தாதிக்கு வருகிறதல்லவா? அப்படி நீங்களும் கூட எங்களுக்கும் கூட பொறுப்பு இருக்கிறது என்று நினையுங்கள். என்ன செய்ய வேண்டும், எப்படி இருக்க வேண்டும் என்று யோசித்துப் பாருங்கள். எப்படி சமீபத்தில் வர முடியும்? வாரிஸ் தயாராக வேண்டும். மைக் வரவேண்டும் என்று யோசித்துப் பாருங்கள். சேவையில் கொஞ்சம் புதுமை வர வேண்டும். இது பற்றி யோசியுங்கள். நல்லது.

தில்லி, கல்கத்தாவில் பெரிய புரோகிராம் நடக்கப் போகிறது: பாப்தாதா விசேஷமாக டெல்லி, கல்கத்தாக்காரர்களை நினைவு செய்தார். இரு இடங்களிலும், காரியத்திற்கான முன்னேற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. சாராருமே நல்ல முயற்சி செய்து கொண்டிருப்பதை பாப்தாதா பார்த்தார். எல்லோரும் சேர்ந்து மனப்பூர்வமாக சேவையில் உற்சாகமாக பங்கெடுத்து செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால், பாப்தாதா யாரெல்லாம் நிமித்தமாயிருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருக்கும் பெயர் குறிப்பிடவில்லை. எனினும் ஒவ்வொருவருடைய பெயர் சகிதம் அவரவருடைய விசேஷத்திற்கும் அன்பு நினைவுகளைத்து தருகின்றார். வெற்றி ஏற்கனவே நிச்சயமாகி விட்டது. மேலும் வெற்றி நமது ஜன்மசித்த அதிகாரம். இந்த நிச்சயம் மற்றும் நஷாவுடன் கூடிய வெற்றியானது, பிரத்யக்ஷம் ஆகியே தீரும். இந்த செய்தி எல்லோருக்கும் தெரிவித்துக் கொண்டேயிருக்க வேண்டும். நல்லது.

நல்லது. ஆஸ்திரேலியாவுக்கு அன்பு நினைவுகளைக் கொடுத்திருந்தார். ஏனெனில் ஜானகி குழந்தை அங்கே இருக்கின்றார். ஆதலால் அவரையும் சேர்த்து, ஆஸ்திரேலியாகாரர்களுக்கு விசேஷமாக நினைவுகளைத் தந்தார். அங்கு மூன்று ரிட்ரீட் ஹவுஸ் இருப்பதைப்போல வேறு இடத்தில் இல்லை. ஏனெனில், விசேஷ ஆத்மாக்கள் இருக்கின்றனர். விசேஷம் இருக்கின்றது. எனினும் குப்தமாக இருக்கிறார்கள். இவர்கள் மேடையில் தங்களுடைய பார்ட்டை செய்தார்களேயானால் சேவையில் நிறைய சகயோகம் கிடைக்கும். மேலும் அந்த ஆத்மாக்களுக்கு, யார் நிமித்தமாகின்றார்களோ அவர்களுக்கும் கூட, விசேஷ ஆசிகள் கிடைக்கும். ஆதலால் ஆஸ்திரேலியாக்காரர்கள் நிறைய செய்ய முடியும் ஆனால் குப்தத்திலிருந்து மேடைக்கு வர வேண்டும். நல்லது ஜானகி குழந்தைக்கு உயர்தரமான நினைவுகள், பொதுவாக எல்லோருக்கும் அவரவர் பெயருடன் நினைவு இருக்கிறது. எத்தனை பெயர்களைச் சொல்வது! ஆதலால் முக்கியமான ஒருத்தருக்குக் கொடுத்தால் எல்லோருக்கும் கொடுத்த மாதிரி.

பரதாதிக்கு நினைவு அளித்தார். (நிர்மல் சாந்தா ஜி கல்கத்தா) நல்லது. கல்கத்தா வரை தயாராகி விடும். நல்லது. ஒரு சாம்பிள் (மாதிரி)

இருக்கிறாரல்லவா? பிரம்மாபாபாவினுடைய சாம்பிள். பாருங்கள் எல்லோரும் பெயர் கூட பரதாதி என்று வைத்திருக்கிறார்கள். தாதி கூட அல்ல, பரதாதி. விசேஷமிருக்கிறதல்லவா? நல்லது. உடல் நலம் சரியாகிக் கொண்டிருக்கிறது. சரியாகி விடும். நாராயண் தாதா கூட நினைவுகளைத் தந்தார். அவருக்கும் ஆபரேஷன் நடந்திருக்கிறது. அவருக்கு நினைவைத் தரவும். நினைவு செய்பவர்களுக்கு, நினைவுக்குப் பதில் நினைவு அவசியம் தர வேண்டும். உங்கள் எல்லோருக்கும் நினைவிற்குப் பதில் நினைவு கிடைக்கிறதல்லவா? உங்களுக்கு நேர்முகமாகவே கிடைக்கிறது. அவர்களுக்கும் மைக் மூலமாக கிடைத்துக் கொண்டிருக்கிறது. நன்று.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.12.2003 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாபாவை பிரத்யட்சம் (வெளிப்படுத்த) செய்ய சாதாரணத்தன்மையை அலௌகீகத்தில் மாற்றம் செய்து தரிசனமளிக்கும் மூர்த்தி ஆகுங்கள்!

இன்று பாப்தாதா தனது நாலாபுறமும் உள்ள பிராமண குழந்தைகளின் நெற்றியின் நடுவில் பாக்கியத்தின் மூன்று நட்சத்திரங்கள் பிரகாசிப்பதை பார்த்துக் கொண்டிருக்கிறார். எவ்வளவு சிரேஷ்ட பாக்கியம் மற்றும் எவ்வளவு எளிமையாக கிடைத்துள்ளது ஒன்று அலௌகீக சிரேஷ்ட பிறவியின் பாக்கியம், இரண்டாவது சிரேஷ்ட சம்பந்தத்தின் பாக்கியம், மூன்றாவது சர்வ பிராப்திகளின் பாக்கியம். மூன்று பாக்கியங்களின் பிரகாசிக்கும் நட்சத்திரங்களைப் பார்த்து பாப்தாதா புன்சிரிப்பு கொண்டிருக்கிறார். ஜென்மத்தின் பாக்கியத்தை பாருங்கள் சுயம் பாக்கிய வள்ளல் தந்தை மூலம் உங்கள் அனைவருக்கும் ஜென்மம் கிடைத்துள்ளது. எப்போது பிறப்பு வழங்குபவரே பாக்கியத்தின் வள்ளலோ அப்போது அப்பிறவி எவ்வளவு அலௌகிகம் மற்றும் சிரேஷ்டமானது! உங்கள் அனைவருக்கும் உங்களது இந்த பாக்கியமான பிறவியின் போதை மற்றும் குஷி உள்ளது தானே!

கூட கூடவே சம்பந்தத்தின் விசேஷத்தன்மையைப் பாருங்கள். முழு கல்பத்திலும் இப்படிப்பட்ட சம்பந்தம் எந்த ஆத்மாவிற்கும் கிடைக்கவில்லை. விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுக்குத் தான் ஒருவர் மூலம் மூன்று சம்பந்தங்கள் பிராப்தியாகி உள்ளன. ஒருவரே தந்தையாகவும், ஆசரியராகவும், சத்குருவாகவும் உள்ளார். இப்படி ஒருவர் மூலம் மூன்று சம்பந்தங்கள் பிராமண ஆத்மாக்களை தவிர வேறு யாருக்கும் கிடையாது. அனுபவம் உள்ளது தானே! தந்தை என்ற

சம்பந்தத்தில் ஆஸ்தியும், வழங்குகிறார், பாலனையும் செய்கின்றார். எவ்வளவு உயர்ந்த மற்றும் அழிவற்ற ஆஸ்தியும் வழங்குகிறார். உலகில் உள்ளவர்கள் எங்களை பாலனை செய்பவர் பகவான் என்கின்றனர், ஆனால் குழந்தைகளாகிய நீங்கள் நிச்சயம் மற்றும் போதையோடு (நஷா) எங்களை வளர்ப்பவர் சுயம் பகவான் என்கின்றீர்கள். இப்படிப்பட்ட பாலனை, பரமாத்ம பாலனை, பரமாத்ம அன்பு, பரமாத்ம ஆஸ்தி, யாருக்கு கிடைத்துள்ளது. ஒருவரே தான் தந்தை, வளர்ப்பவர் மற்றும் ஆசிரியர். ஒருவரை நினைவு செய்வது எளிது. மூன்று பேரை தனித்தனியாக நினைவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதனால் நீங்கள் அனைவரும் ஒரு பாபாவைத் தவிர இரண்டாவது யாரும் இல்லை என்று கூறுகின்றீர்கள். இது எளிமையானது. ஏனென்றால் ஒருவரிடமே விசேஷ சம்பந்தங்கள் வந்து விடுகின்றன. அதனால் பாக்கியத்தின் நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது ஏனென்றால் பாபா மூலம் அனைத்து பிராப்திகளும் இருக்கவே இருக்கின்றது.

மூன்றாவது பாக்கியத்தின் நட்சத்திரமானது அனைத்து பிராப்திகள். பிராமணர்களது பொக்கிஷத்தில் அபிராப்தி (கிடைக்கவில்லை) என்று எந்த பொருளும் கிடையாது என்ற புகழ் உள்ளது. உங்களது பொக்கிஷங்களை நினைவு செய்யுங்கள். இப்படிப்பட்ட பொக்கிஷங்கள் அல்லது அனைத்து பிராப்திகள் வேறு யார் மூலமாவது கிடைக்குமா? மனதார "என்னுடைய பாபா" என்று கூறினால் பொக்கிஷங்கள் ஆஜராகி விடும். அதனால் இதில் தான் வரிசைகிரமம் வருகின்றது. இப்பொழுது பாப்தாதா விரும்புவது என்ன வென்றால் எப்பொழுது என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் கோடியில் ஒருவரோ அப்போது அனைத்து குழந்தைகளும் வரிசை கிரமத்தில் அல்ல, ஆனால் நம்பர் ஒன் (முதல் நம்பர்) ஆக வேண்டும் என்பது தான். ஆகையால் உங்களிடம் நீங்களே கேளுங்கள். நம்பர் வாரில் (வரிசைக் கிரமம்) உள்ளோமோ அல்லது நம்பர் ஒன்றில் உள்ளோமோ? என்னவாக உள்ளீர்கள்? டீச்சர் நம்பர் ஒன், அல்லது நம்பர்வார். எதில் உள்ளீர்கள்? பாண்டவர்கள் நம்பர் ஒன் அல்லது நம்பா வார் எதில் உள்ளீர்கள்? யார் நான் நம்பர் ஒன்றாக உள்ளேன் மற்றும் இருப்பேன் என்று புரிந்துள்ளீர்களோ, இவ்வாறில்லை இன்று நம்பர் ஒன் நாளை நம்பர் வார் அப்படியில்லை, யார் நாங்கள் சதா பிரம்மாபாபாவிற்குச் சமமாக நம்பர் ஒன் என்று அந்தளவிற்கு

நிச்சயபுத்தி உடையவர்களோ, அப்படி பிரம்மாபாபாவைப் பின்பற்றி நம்பர் ஒன் ஆக இருக்கின்றோம் மற்றும் இருப்போம் என்கின்றீர்களோ அவர்கள் கை தூக்குங்கள். அப்படியே கை தூக்கி விடக் கூடாது. யோசித்து புரிந்து தூக்க வேண்டும். நன்றாக கை தூக்குங்கள் பாதி தூக்கினால் பாதி தான். கை நிறைய பேர் தூக்கியுள்ளனர். பார்த்தீர்களா, தாதி பார்த்தீர்களா? நம்பர் ஒன்றில் கை தூக்கியவர்களிடம் கணக்கு கேட்க வேண்டும். ஜனக் (ஜானகி தாதி) கணக்கு பார்க்க வேண்டும். இரட்டை வெளி நாட்டினர் கை தூக்கினார்களா? கை தூக்குங்கள். பாப்தாதாவை கை தூக்கி, மனதை குஷி படுத்தி விட்டீர்கள், வாழ்த்துக்கள். நல்லது. நீங்கள் கை தூக்கியது உங்களுக்கு உங்கள் மீதே தைரியம் உள்ளது என்பதன் அடையாளம். மேலும் தைரியமிருந்தால் பாப்தாதாவும் உதவி செய்வார் ஆனால் இப்போது பாப்தாதா என்ன விரும்புகிறார்? நம்பர் ஒன் ஆக வேண்டும் என்பது குஷிக்கான விசயம். ஆனால்.. ஆனால்.. என்ன என்று கூறட்டுமா? அல்லது ஆனால் என்பதே இல்லையா? பாப்தாதாவிடம் ஆனால் உள்ளது.

பாப்தாதா பார்த்தார் மனதில் அனைத்தும் உள்ளது ஆனால் மனம் வரைக்கும் தான் உள்ளது. முகம் மற்றும் நட வடிக்கையில் வெளிப்பட்ட நிலையில் இல்லை. இப்போது பாப்தாதா 'நம்பர் ஒன்' நிலையின் நடவடிக்கை மற்றும் முகத்தை பார்க்க விரும்புகிறார். இப்போது சமயத்திற்கு தக்கவாறு 'நம்பர் ஒன்' என்று கூறுபவரின் ஒவ்வொரு நடிவடிக்கையிலும் தரிசன மூர்த்தி என்று கூற வேண்டும். உங்களது ஜட சித்திரங்கள் இக்கடைசி பிறவி வரை, கடைசி சமயம் வரை தரிசன மூர்த்தியாக அனுபவம் ஆகின்றது. எப்படி சைதன்யத்தில் அதாவது சாகார ரூபத்தில் பிரம்மாபாபாவை பார்த்தீர்கள், பரிஸ்தாவாக பின்னால் மாறினார், ஆனால் சாகார ரூபத்தில் இருந்தாலும் உங்கள் அனைவருக்கும் என்ன தெரிந்தது? சாதாரணமாக தெரிந்தாரா? கடைசி 84வது பிறவி, பழைய பிறவி, 60-வருடங்களுக்கு மேற்பட்ட வயது ஆனாலும் ஆதியிலிருந்து அந்திமம் வரை தரிசனமூர்த்தி என அனுபவம் ஆகியது இல்லையா? அதே போல யாரெல்லாம் நம்பர் ஒன்றில் கை தூக்கினீர்களோ, டி.வி.யில் அவர்களை எடுத்துள்ளீர்கள் இல்லையா? பாப்தாதா அவர்களது ஃபைலை பார்ப்பார், பாப்தாதாவிடம் ஃபைல் உள்ளது தானே? அதனால் இப்போதிலிருந்து உங்களது ஒவ்வொரு நடிவடிக்கையிலிருந்து அனுபவம் ஆகட்டும், செயல்

சாதாரணமாக இருக்கலாம். எந்த வேலை வேண்டுமனாலும் செய்து கொண்டிருக்கலாம், வியாபரமோ, டாக்டரோ, வழக்கறிஞர் (வக்கீல்) வேலையோ என்ன செய்தாலும் எந்த இடத்தில் சம்பந்தம், தொடர்பில் வருகின்றீர்களோ அங்கு அவர்கள் உங்களது முகம் மற்றும் நடத்தை மூலம் இவர் தனிப்பட்டவர் மற்றும் அலௌகீகமானவர் என்று உணருகின்றார்களா? அல்லது சாதாரணமாக புரிந்து கொள்கின்றார்களா? காரியத்தில் (செய்யும் தொழில்) விசேஷமானவர் அல்ல, இது போன்றவர்களும் உலகதில் (லௌகீகத்தில்) உள்ளனர். காரியத்தின் விசேஷம் அல்ல, ஆனால் நடைமுறை வாழ்க்கையின் விசேஷத்தன்மை. மிக நல்ல வியாபாரி, மிக நல்ல வழக்கறிஞர், மிக நல்ல டைரக்டர்... இப்படிப்பட்டவர்கள் நிறைய உள்ளனர். விசேஷ ஆத்மாக்களின் பெயர் உள்ள ஒரு புத்தகம் உள்ளது. எத்தனை பேருடைய பெயர் அதில் வருகின்றது. நிறைய பேர் உள்ளனர். இவர் இந்த விசேஷ காரியம் செய்தார், இவர் இந்த விசேஷ காரியம் செய்தார் உடனே பெயர் வந்து விடுகிறது ஆனால் யாரெல்லாம் கை தூக்கினீர்களோ.. பார்க்கப்போனால் அனைவருமே கை தூக்க வேண்டும், கை தூக்கியே ஆக வேண்டும். அதனால் உங்கள் நடைமுறை வாழ்க்கையில் நடவடிக்கையில் மாற்றம் பார்க்க வேண்டும். இந்த சப்தம் இன்னும் வெளிவரவில்லை. தொழிற்சாலையிலோ அல்லது எங்கு நீங்கள் வேலை செய்தாலும் ஒவ்வொரு ஆத்மாவும் செய்கின்றீர்களோ அப்போது விசேஷ கவனம் வைக்கின்றபோது சரியாக இருக்கின்றது ஆனால் உங்களுக்கு பாபாவிடம் அன்பு இருக்கின்றது? பாபாவிடம் அன்பு இருக்கின்றதில்லையா? எவ்வளவு சதவிகிதம்? டீச்சர்கள் கை தூக்குங்கள். நிறைய டீச்சர்கள் வந்துள்ளனர். முடியுமா? அல்லது அவ்வப்போது சாதாரணம், அவ்வப்போது விசேஷம், அப்படியா? வெளிவரும் சொல், எந்த காரியம் செய்தாலும் அலௌகீகமாக இருக்க வேண்டும். சாதாரணமான பேச்சாக (பாஷை) அல்ல.

இப்பொழுது பாப்தாதா அனைத்து குழந்தைகளிடம் இந்த சிரேஷ்ட ஆசை வைத்துள்ளார். பின்னர் பாபா பிரத்யட்சம் ஆவார், உங்களது செயல், நடவடிக்கை, முகம் தானாகவே நிரூபிக்கும். பாஷையால் நிரூபிக்க முடியாது. சொற்பொழிவு ஒரு அம்பு போடுதல் போலாகும் ஆனால் இவர்களை இவ்வாறு மாற்றியவர் யார் என்று கேட்கும் போது

தான் பாபா பிரத்யட்சம் ஆவார். தானாகவே தேடுவார்கள், தானாகவே கேட்பார்கள் அதாவது உங்களை இவ்வாறு செய்பவர் யார்? படைப்பு, படைப்பவரை பிரத்யட்சம் செய்வார்கள்.

இந்த வருடம் என்ன செய்வீர்கள்? கிராமங்களில் சேவை செய்ய வேண்டும் என்று தாதி கூறியுள்ளார். அதை தாராளமாக செய்யுங்கள் ஆனால் பாப்தாதா இப்போது இந்த மாற்றத்தை பார்க்க விரும்புகிறார். ஒரு வருடத்தில் முடியுமா? ஒரு வருடம்? அடுத்த முறை சீசன் ஆரம்பிக்கும்போது இந்த வேறுபாடு தெரிய வேண்டும். அனைத்து சென்டர்களிலிருந்தும் பெரிய மாற்றம் வந்து விட்டது என்று சப்தம் வெளி வர வேண்டும். பிறகு பரிவர்த்தன் (மாற்றம்) பரிவர்த்தன்.... பரிவர்த்தன்... என்று பாட்டு பாடுவோம். சாதாரணமான சொற்கள் உங்களது பாக்கியத்திற்கு முன்னால் நன்றாக இல்லை. இதற்கு காரணம் "நான்" இந்த "நான்" "நான்" என்ற தன்மை, “நான்” என்ன நினைத்தேனோ, "நான்" என்ன சொன்னேனோ, "நான்" என்ன செய்கின்றேனோ அது தான் சரி என்கின்றனர். இந்த “நான்" என்ற தன்மையினால் அபிமானம் வந்து விடுகிறது. கோபம் வந்து விடுகிறது. இரண்டும் தனது வேலையை செய்து விடுகிறது. பாபாவின் பிரசாதம், நான் எங்கிருந்து வந்தது. பிரசாதத்தை யாரும் நான் என்பதில் கொண்டு வரமுடியுமா என்ன? புத்தியுள்ளது, ஏதேனும் கலையுள்ளது, ஏதேனும் விசேஷத் தன்மை உள்ளது, பாப்தாதா விசேஷத் தன்மைக்கு, புத்திக்கு பரிசு கொடுக்கின்றார் ஆனால் "நான்" என்பதை கொண்டு வராதீர்கள். இந்த “நான்” என்பதை சமாப்தி செய்து விடுங்கள். இது சூட்சுமமான “நான்” என்ற தன்மை அலௌகீக வாழ்வில் இந்த "நான்" தரிசன மூர்த்தியாக விடாது. தாதிகள் என்ன நினைக்கின்றீர்கள்? மாற்றம் கொண்டு வர முடியுமா? முடியுமா? மூன்று பாண்டவர்களும் கூறுங்கள். மூவரும் விசேஷமானவர்கள் இல்லையா? மூவரும் சொல்லுங்கள். முடியுமா? முடியுமா? முடியுமா? நல்லது. இப்போது இதற்கு கமாண்டர் ஆகவும். வேறு விசயங்களில் கமாண்டர் ஆக வேண்டாம். மாற்றத்தில் கமாண்டர் ஆகவும் என்ன? மதுபன் வாசிகள் ஆவீர்களா? மாறுவீர்களா? மதுபன் வாசிகள் கை தூக்குங்கள். நல்லது. மாறுவீர்களா, மும்பையை சார்ந்தவர்கள் கை தூக்கவும். மும்பை வாசிகள் ஆவீர்களா? ஆவீர்கள் என்றால் கையசைக்கவும். நல்லது. டில்லியை சேர்ந்தவர்கள் கை தூக்கவும். தில்லி வாசிகள் செய்வீர்களா?

டீச்சர்கள் கூறுங்கள். பாருங்கள், ஒவ்வொரு மாதமும் பாப்தாதா ரிப்போர்ட் கேட்பார். தைரியம் உள்ளதா? வாழ்த்துக்கள்

நல்லது. இந்தூர் வாசிகள் கை தூக்குங்கள். சேவையின் முறை உங்களுடையது. இந்தூர் டிச்சர்கள் கை தூக்கவும் டீச்சர்கள் செய்வீர்களா? இந்தூர் செய்யுமா? கையசையுங்கள் முழு கைகளும் அசையவில்லை. செய்வீர்களா? செய்ய வைப்பீர்களா? தாதிகள் பாருங்கள் (டி.வியில் பார்க்கின்றனர்). குஜராத் கை தூக்கவும், குஜராத் செய்யுமா? கையசைப்பதும் எளிது. இப்போது மனதை அசைக்க வேண்டும். ஏன் உங்களுக்கு உலகில் இவ்வளவு துக்கத்தை பார்த்து உலகத்தார் மீது கருணை வரவில்லையா? இப்போது மாற்றம் ஏற்பட்டால் நல்லது தானே! இப்போது பிரத்யட்சம் செய்வதற்கான திட்டமே நடைமுறை வாழ்க்கை தான். நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது உங்களை சுறுசுறுப்பாக மற்றபடி (பிஸியாக) வைப்பதற்கான நல்ல விசயம். மற்றபடி உங்கள் முகம் மற்றும் நடவடிக்கை மூலம் தான் பிரத்யட்சம் ஆகும். வேறு எந்த மண்டலம் மீதி உள்ளதா? உ.பி. சேர்ந்தவர்கள் கை தூக்குங்கள் உயரத் தூக்குங்கள். நல்லது. மகாராஷ்டிரா செய்யுமா? வாழ்த்துக்கள். ராஜஸ்தான் தூக்குங்கள். டீச்சர்கள் கை அசையுங்கள் கர்நாடகம் தூக்குங்கள், நல்லது -கர்நாடகம் செய்யுமா? ஆந்திர பிரதேசம் கை தூக்குங்கள். நல்லது. உரையாடல் செய்தோம். இரட்டை அயல் நாட்டவர்கள் கை தூக்குங்கள். ஜெயந்தி எங்கே? இரட்டை அயல் நாட்டவர்கள் செய்வீர்கள் இல்லையா? இப்போது பாருங்கள் சபைக்கு நடுவில் தூக்கினீர்கள். அனைவரும் நன்கு தைரியம் வைத்துள்ளீர்கள். இதற்கு கோடி மடங்கு வாழ்த்துக்கள். வெளியிலும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவரவரது தேசங்களில் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களும் கை தூக்குகின்றனர்.

யார் சிரேஷ்ட ஆத்மாக்களோ அவர்களது ஒவ்வொரு வாக்கியமும் சத்திய வாக்கு என்று கூறுகின்றார்கள். சத்வச்சன் மகராஜ் என்று கூறுகின்றனர். நீங்கள் மகாராஜ். உங்கள் அனைவரது ஒவ்வொரு சொல்லை யார் கேட்டாலும் இது சத்திய வாக்கு என மனதில் அனுபவம் செய்யட்டும். உங்கள் மனதில் நிறைய நிரம்பி உள்ளது. பாப்தாதாவிடம் மனதை பார்க்கும் டி.வி. உள்ளது. இங்கு உள்ள டி.வி. வெளி முகத்தைத் தான் காண்பிக்கும் ஆனால் பாப்தாதாவிடம் ஒவ்வொருவரின்

ஒவ்வொரு சமயத்திற்கான மனதின் நிலையை அறிந்து கொள்ளும் இயந்திரம் உள்ளது. மனதில் நிறைய தெரிகின்றது. மனதின் டி.வி. யை பார்கின்றபோது குஷியாகி விடுகிறார்கள். நிறைய பொக்கிஷங்கள், நிறைய சக்திகள் உள்ளன ஆனால் செயலில் சக்திக்கு தகுந்தவாறு தான் கொண்டு வருகின்றனர். இப்போது செயல் வரை கொண்டு வாருங்கள், சொல் வரை கொண்டு வாருங்கள், முகம் வரை, நடவடிக்கை வரை கொண்டு வாருங்கள். அப்போது அனைவரும் சக்திகள் வந்து விட்டனர். என்று கூறுவார்கள், பாடல் கூட உள்ளது இல்லையா! அனைவரும் சிவசக்திகள். பாண்டவர்கள் கூட சக்திகள் தான். பிறகு சக்திகள் சிவ தந்தையை பிரத்யட்சம் செய்வார்கள். இப்போது சிறுசிறு விளையாட்டுகளை முடித்து விடுங்கள். வானப்பிரஸ்த நிலையை வெளிப்படுத்துங்கள். இப்போது அதனால் பாப்தாதா அனைத்து குழந்தைகளையும், இச்சமயத்தில் பாப்தாதாவின் ஆசைகைள பூர்த்தி செய்யும் ஆசைகளின் நட்சத்திரங்களாக பார்க்கின்றார். எவ்விசயம் வந்தாலும் பரிவர்த்தன், பரிவர்த்தன், பரிவர்த்தன் என்ற சுலோகனை நினைவில் கொள்ளுங்கள்.

நல்லது. தில்லியைச் சேர்ந்தவர்கள் நல்ல சேவையின் சான்று வழங்கியுள்ளீர்கள். ஏன்னென்றால், பாப்தாதா சேவையில் எதை சேர்க்க விரும்பினாரோ அதை ஆரம்பித்து விட்டீர்கள். ஏனென்றால் யாரெல்லாம் உங்கள் சம்பந்தம் தொடர்பில் வந்தார்களோ அவர்கள் இதுவரை உங்கள் காரியம் நன்றாக உள்ளது என்று தான் கூறியுள்ளார்கள் ஆனால் நன்றாக விளம்பரப்படுத்தவில்லை. குப்தமாக (மறைமுகமாக) இருந்தார்கள். அதனால் தந்தை பிரத்யட்சம் ஆகவில்லை. அதனால் இந்த முறை மீடியா (செய்தித்துறை) மூலம் சேவை நடந்துள்ளது, அதை ஆரம்பித்துள்ளீர்கள், பிரம்மா குமாரிகளது பெரிய நிகழ்ச்சி நடந்தது என்ற நல்ல பெயர் வெளி வந்தள்ளது. அதனால் தில்லியை சேர்ந்தவர்களுக்கு வாழ்த்துக்கள், தில்லியிலிருந்து வந்தவர்கள் முன்னால் வாருங்கள், நில்லுங்கள், மிகப் பெரிய குரூப் வந்துள்ளார்கள். ஏறக்குறைய 900-பேர் கொண்ட குரூப் தில்லியிலிருந்து வந்தள்ளது. பாருங்கள் யார் மேடை மீதுள்ளார்களோ அவர்களை பாபா பார்ப்பதில்லை, முன்னால் இருக்கக்கூடிய உங்களை பார்க்கின்றார். அதனால் உங்களது பெயர் அனைவரையும் விட முன்னால் உள்ளது என புரிந்து கொள்ளவும். ஒவ்வொருவரும் புரிந்து

கொள்ளுங்கள். பாப்தாதா எனக்கு முதல் நம்பர் வழங்கியுள்ளார், நிறைய பேர் சேவையில் வந்துள்ளதால் அனைவரையும் மேடை மீது கூப்பிட முடியாது. சூட்சம வதனத்திற்கு வர வேண்டுமென்றால் வரலாம். பின்னால் உள்ளவர்கள் நாம் பின்னால் உள்ளோம் என்று நினைக்க வேண்டாம். அனைவரையும் விட நீங்கள் முன்னால் உள்ளீர்கள். டீச்சர்கள் யாரெல்லாம் உள்ளீர்களோ அவர்கள் ஒவ்வொருவருக்கும் பெயர் உட்பட பாப்தாதா அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள் வழங்குகிறார். பெயரின் மாலையை ஜபிப்பதில்லை, ஆனால் மனதில் பாப்தாதா ஒவ்வொருவரின் மாலையை ஜெபிக்கின்றார். எங்களுடைய பெயர் வரவில்லை என்று ஒருபோதும் யோசிக்காதீர்கள். அனைவரது பெயர் உள்ளது. சாகார வதனம் அல்லவா, அதனால் சாகாரத்தில் சாகாரத்திற்கு சமமாக விதிகளை உருவாக்க வேண்டியுள்ளது. இத்தனை பேரை எவ்வாறு மேடையில் அழைப்பது, மேடையே அமுங்கி விடும். யார் பின்னால் உள்ளீர்களோ அவர்கள் கை தூக்குங்கள். நீங்கள் மனதில் உள்ளீர்கள். இவர்கள் மேடையில் உள்ளார்கள். பாப்தாதா என்ன விசேஷத்தன்மையை பார்த்தார். ஒன்று ஒற்றுமை, இந்த ஒற்றுமையின் சக்தி ஹான்ஜி (சரி ஐயா) சரி, எனக் கூறுதல், கருத்து கூறினீர்கள், பிறகு ஒற்றுமை என்ற பந்தனத்தில் கட்டுப்பட்டு இருந்தீர்கள். அதனால் ஒற்றுமை தான் வெற்றிக்கு சாதனம். நீங்கள் ஒவ்வொருவரும் வெற்றி நட்சத்திரங்கள். குறிப்பாக பின்னால் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தந்தைக்கு எதிரில் உள்ளீர்கள். இப்போது குஷியாகி விட்டீர்களா, அல்லது எங்களது பெயர் கூறப்படவில்லை என்று சொல்வீர்களா? அனைவரும் முயற்சி செய்தீர்கள், சிறுசிறு டீச்சர்கள் அதிகமாக செய்தார்கள். சகோதரர்களும் மிகுந்த முயற்சி செய்தனர். யாரெல்லாம் சேவையின் பொறுப்பு எடுத்தார்களோ அவர்களெல்லாம் வெற்றிகரமாக செய்தனர். அதனால் தான் வெற்றி. தில்லி பாப்தாதாவின் இதயம். பின்னால் இருப்பவர்கள் முன்னால் வந்தீர்களா? அல்லது பின்னால் இருந்து விட்டீர்களா? எங்களை அழைக்கவில்லை. எங்களை அழைக்கவில்லை என்று முறையிடக் கூடாது. இல்லை அனைவரும் பாபாவின் கண்களில் உள்ளீர்கள். பாபாவிற்கு எதிரில் உள்ளீர்கள். சிறிய டீச்சர்களுக்கு இரட்டை வாழ்த்துக்கள். மேலும் பாண்டவர்களுடன் சதா பாபாவின் துணை

இருக்கும். நல்லது. சரி, அனைவரும் குஷி தானே? சதா குஷியாக இருக்க வேண்டும்.

இப்போது வெளிநாடு அற்புதம் செய்ய வேண்டும். வெளிநாட்டில் நிகழ்ச்சி நடக்க வேண்டும். பாரதத்தில் அது தெரிய வேண்டும். பெரிய விசயம் கிடையாது. லட்சக்கணக்கானோர் கூட வேண்டும் என்பதில்லை, அந்த விசயம் இல்லை, ஆனால் மீடியாவின் பங்கு நன்றாக இருக்க வேண்டும். லட்சக்கணக்கானோர் அங்கு கூடுவது வேறு விசயம் ஆனால் மீடியா மூலம் பாரதத்தில் தெரிய வேண்டும். அப்போது தான் கும்பகர்ணர்கள் எழுந்திருப்பார்கள். நல்லது.

இப்போது கல்கத்தாவைச் சேர்ந்தவர்களும் அன்பு நினைவுகளை அனுப்பி உள்ளனர். ஒவ்வொரு இடத்திற்கும் அதனதன் பிரபாவம் உள்ளது. தில்லி சர்வதேச இடம். கல்கத்தாவின் விசேஷம் வேறாக இருக்கும். கல்கத்தாவும் குறைந்தது கிடையாது. நல்ல முயற்சி செய்கின்றனர். மேலும் யார் முயற்சி செய்வார்களோ அவர்களுக்கு முயற்சியின் பலன் கிடைக்கவே செய்கிறது. மேலும் வெற்றி குழந்தைகளுடைய பிறப்புரிமை. அதனால் கல்கத்தாவைச் சேர்ந்தவர்களும் நன்றாக சப்தத்தை பரப்புகின்றார்கள். மேலும் நன்றாக பரப்பிக் கொண்டே இருப்பார்கள். அதனால் கல்கத்தா, தில்லியை விட குறைந்தது என்பது கிடையாது. அவர்களும் முன்னால் செல்வார்கள். ஒவ்வொரு இடத்திற்கும் அதனதன் மகிமை உள்ளது. இப்போது பாப்தாதா வெளிநாட்டுக்கு கூறுகின்றார், வெளிநாட்டில் நிகழ்ச்சி நடக்க வேண்டும். மேலும் பாரதம் பார்க்க வேண்டும். போபாலும் செய்கின்றது. ஆக்ரா மியூசிம் இல்லையா, அது நிரந்தரமாகி விடும்.

ஆஸ்திரேலியாவின் ராபின் சகோதரரிடம்: இப்போது பாப்தாதா என்ன கூறுகின்றார் என்றால், மீடியா மூலம் பாரதத்திற்கு தெரியுமளவு வெளிநாட்டில் நிகழ்ச்சி நடக்க வேண்டும். முடியும் தானே? அதனால் இப்போது நிமித்தமாகுங்கள். செய்ய முடியுமா? வெளி நாட்டில் நல்ல சப்தம் உள்ளது. வெளிநாடு எதில் குறைவாக உள்ளது! கை தட்டினால் எல்லாம் முன்னால் இருக்கும். நடந்தே தான் தீர வேண்டும். நடந்தே ஆக வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் ஊக்கம்-உற்சாகம் இருக்கின்றது. ஒருவர் பின் ஒருவர் வரிசைப்படி செய்கின்றனர்.

யாருடைய நிகழ்ச்சி நடக்கின்றதோ அவர்களது நிகழ்ச்சி அனைவருக்கும் தென்படுகிறது. பிறர் அனைவரும் நல்ல முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். போபாலோ, ஆக்ராவோ, அனைவரும் முயற்சி செய்கின்றனர். மேலும் செய்யத் தான் வேண்டும். மேலும் வெற்றி இருக்கவே இருக்கின்றது. சரி தானே! நல்லது. யாரெல்லாம் துறைகளின் (விங்ஸ்) மீட்டிங்கிற்காக வந்துள்ளீர்களோ அவர்கள் கை தூக்குங்கள்.

பொறியாளர்-விஞ்ஞானிகள் துறை, மருத்துவத்துறை, சமூக சேவை துறை, இளைஞர் துறை மற்றும் கிராம சேவை நிமித்தமாக இராஜஸ்தானின் சகோதர, சகோதரிகள் மீட்டிங்கிற்காக வந்துள்ளனர்: நல்லது. இந்த துறைகளின் சேவையில் நல்ல ரிசல்ட் தெரிகின்றது. ஏனென்றால் ஒவ்வொரு துறையும் முயற்சி செய்கின்றனர், தொடர்பை அதிகரித்துக் கொண்டே செல்கின்றனர் ஆனால் பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்றால் எப்படி மருத்துவ துறையில் தியானம் மூலம் இதய நோய் சிகிச்சை பற்றி நடைமுறையில் செய்து காண்பித்துள்ளனர். தியானத்தால் இதயத்தின் கஷ்டம் சரியாகும் என்ற அத்தாட்சி வழங்கியுள்ளனர், நிரூபித்துள்ளனர். நிரூபித்துள்ளீர்கள் தானே! நீங்கள் அனைவரும் கேட்டுள்ளீர்கள் தானே! இவ்வாறு உலகில் உள்ள மக்கள் கண்கூடான சாட்சியம் விரும்புகின்றனர். இதேபோல எந்தெந்த துறை வந்துள்ளீர்களோ, நிகழ்ச்சிகள் செய்து தான் ஆக வேண்டும், செய்கின்றீர்கள், ஆனால் நடைமுறை ரிசல்ட் கிடைக்குமளவு ஏதேனும் திட்டம் போடுங்கள். அனைத்து துறைகளை சேர்ந்தவர்களுக்கும் பாப்தாதா கூறுகின்றார், அரசாங்கம் வரை சென்று சேருகின்றதில்லையா? மேலும் தியானம் மூலமாகவும் முடியும் என்பது இங்குமங்கும் பரவியுள்ளது. இப்போது இதை மேலும் அதிகரிக்க வேண்டும் ஆனால் இப்போது ஆரம்பித்து விட்டீர்கள் இல்லையா? டாக்டர் குப்தா எங்கே? மேலும் அதிகரிக்க வேண்டும் ஆனால் இதற்கு நடைமுறை விதியுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு துறையும் ஏதேனும் நடைமுறை அத்தாட்சி கொடுக்க வேண்டும். தொடர்புகள், அதிகப்படுத்தியுள்ளீர்கள், சப்தத்தை பரப்பியுள்ளீர்கள். அதற்கு பாப்தாதா வாழ்த்து தெரிவிக்கின்றார். மேலும் முயற்சியும் செய்கின்றனர், வெற்றியும் உள்ளது ஆனால் எப்படி பாப்தாதா சாகாரத்தில் பெரிய பெரிய சித்திரங்களில் எழுத வைப்பார், குருடர்களுக்கு முன் கண்ணாடி

என்று கூறுவார். அதுபோல திட்டம் போடுங்கள். இது இப்படி என்று விளக்கத்தை நடைமுறை மூலமாக கேட்டு தெரிந்து கொள்வார்கள். எந்தெந்த துறையில் இருந்து வந்துள்ளீர்களோ, யாரெல்லாம் வந்துள்ளீர்களோ, சமூகத் துறையாக இருந்தாலும், பொறியாளர்-விஞ்ஞான துறையாக இருந்தாலும், மருத்துவ துறை அல்லது இளைஞர் துறையாக இருந்தாலும் யாரெல்லாம் வந்துள்ளீர்களோ, அவர்களெல்லாம் அனைவரது கவனத்தையும் தியானத்தின் பக்கம், ஆன்மீகத்தின் பக்கம் கொண்டு வர வேண்டும். துறையின் தலைவர்கள் எழுந்திருக்கவும். இம்மாதிரி திட்டம் போடுங்கள். மருத்துவத்துறையை சேர்ந்தவர்களும் மேலும் பிற நோய்களுக்கும் செய்ய முடியும். இப்போது பயிற்சி (டிரயல்) செய்து கொண்டே இருந்தால் ஆகிக் கொண்டே இருக்கும் (ஆசீர்வாதங்களால் அனைத்தும் செய்ய முடியும், இதை பிரத்யட்சம் செய்யுங்கள்) சரியா? மிக நன்றாக செய்தீர்கள்.

**இந்தூர் சேவாதாரிகளுடன் நேர்முகம்:** நல்லது. வாய்ப்பு கிடைப்பது தலைவன் ஆவதற்காக. தலைவன் என்ற பதவி முன்னால் உள்ளது இல்லையா? என்னென்ன வாய்ப்பு கிடைக்கிறதோ அதில் உங்களது நிகழ் காலமும் உருவாகின்றது மற்றும் சமீபத்திலும் வந்து விடுகின்றீர்கள். ஒவ்வொரு மண்டலமும் அனைவரது பார்வையில் வந்து விடுகின்றன. சேவை செய்தால் தானாகவே அனைவரது பார்வையில் வருவீர்கள் பிராமண குடும்பத்தின் தொடர்பு மிக நன்றாக உள்ளது. பங்கை செய்தீர்கள் ரிசல்ட் பார்த்தால் எந்தெந்த ஜோன் இதுவரை சேவையின் பொறுப்பு எடுத்ததோ அனைவரும் நன்றாகவே பார்ட் செய்தனர். ஒத்துழைப்பிற்கு ஒத்துழைப்பு, நெருக்கத்திற்கு நெருக்கம் ஏற்பட்டு விடுகிறது. தாதிகளது பார்வையில் வந்து விடுகிறீர்கள். அதனால் வாழ்த்துக்கள். இந்தூர் சேவாதாரிகள் அல்லது யார் நிமித்தமாகினீர்களோ, எத்தனை ஆத்மாக்கள் உங்கள் சேவையை எடுத்துள்ளார்கள். மேலும் எவ்வளவு பேர் லாபம் எடுத்தார்கள் அந்த லாபத்தின் பங்கு குறைவோ அல்லது அதிகமோ உங்களது கணக்கில் பங்கு சேர்ந்து விட்டது. அதனால் மிக நல்ல வாய்ப்பு எடுத்துள்ளீர்கள். மிக நல்லது. நல்லது.

இன்று பாப்தாதாவின் வாக்கியங்களில் ஒரு சொல்லை மறந்து விடக்கூடாது. அது என்ன? பரிவர்த்தன். 'நான் மாற வேண்டும். பிறரை மாற்றி நான் மாறுவேன் என்பது இல்லை. நான் மாறி பிறரை மாற்ற வேண்டும். பிறர் மாறினால் நான் மாறுவேன் என்பது கூடாது'. நான் நிமித்தமாக வேண்டும். நான் அர்ஜுனன் ஆக வேண்டும். அப்போது பிரம்மாபாபாவிற்குச் சமமாக நம்பர் ஒன் வாங்குவீர்கள். (பின்னால் இருப்பவர்கள் கை தூக்குங்கள்) பின்னால் இருப்பவர்களுக்கு பாப்தாதா முதல் நம்பர் அன்பு நினைவுகளை வழங்குகின்றார். நல்லது.

நாலாபுறமும் உள்ள மிக மிக மிக பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, முழு உலகின் நடுவில் கோடியில் ஒருவர், ஒருவரிலும் ஒருவரான விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா தனது நடவடிக்கை மற்றும் முகம் மூலம் பாப்தாதாவை பிரத்யட்சம் செய்யும் விசேஷ குழந்தைகளுக்கு, சதா சகயோகம் (ஒத்துழைப்பு) மற்றும் அன்பின் பந்தனத்தில் இருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஒவ்வொரு கர்மாவையும் அலௌகீக கர்மாவாக செய்யக்கூடிய அலௌகீக ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 31.12.2003 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த ஆண்டு நிமித்தம் மற்றும் பணிவுடையவராகி, சேமிப்புக் கணக்கை அதிகரியுங்கள் மேலும் அகண்ட மகாதானி ஆகுங்கள்!

இன்று அநேக புஜாதாரியான (கைகள்) பாப்தாதா, நாலா பக்கங்களிலுமுள்ள, தன்னுடைய புஜங்களைப் பார்க்கின்றார். சில கைகள் (புஜங்கள்) ஸ்தூலமாக எதிரில் உள்ளனர். இன்னும் அநேக கைகள் சூட்சும ரூபத்தில் இருப்பது தென்படுகிறது. பாப்தாதா தன்னுடைய அநேக கைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். எல்லா கைகளும் நம்பர்வராக, மிகவும் ஆல்ரவுண்டர், எவர்ரெடி, ஆக்ஞாக்காரி கைகளாக உள்ளனர். பாப்தாதா குறிப்பாகச் சொல்லாமல், சிறிது ஜாடை காட்டினாலும் கூட, வலது கரங்களாக (ரைட் ஹேண்ட்ஸ்) இருப்பவர்கள் - ஆம் பாபா, ஆஜர் பாபா, இப்போதே பாபா என்று கூறுகின்றார்கள். இப்படிப்பட்ட இனிமையான குழந்தைகளைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கின்றது என்கின்றார். பாப்தாதாவைத் தவிர, வேறு எந்த ஒரு தர்ம ஆத்மா, மகான் ஆத்மாவுக்கும் இவ்வளவு உதவும் கைகள் இல்லை என்பதை நினைத்து ஆன்மீக ரீதியாக, பெருமைப்படுகின்றார். முழு கல்பத்தைச் சுற்றி வந்தாலும் கூட இப்படிப்பட்ட கைகள் யாருக்குக் கிடைத்திருக்கின்றது! ஆதலால் பாப்தாதா ஒவ்வொரு கையின் விசேஷத்தைப் பார்க்கின்றார். முழு உலகத்திலிருந்தும், தேர்ந்தெடுக்கப்பட்ட விசேஷ கைகள். பரமாத்மா சகயோகி கைகள். பாருங்கள்! இந்த ஹாலிலும் கூட எத்தனை கைகள் வந்து சேர்ந்திருக்கின்றனர். (இன்று ஹாலில் 18-ஆயிரத்திற்கும் அதிகமாக சகோதர சகோதரிகள் அமர்ந்திருக்கின்றனர்). எல்லோரும் உங்களை பரமாத்மாவின் கைகள் என்று அனுபவம் செய்கிறீர்களா? பெருமையாக நினைக்கிறீர்கள் அல்லவா?

நாலா பக்கங்களிலிருந்தும், புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக வந்து சேர்ந்திருப்பதைப் பார்த்து பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது ஆனால் புது வருடம் எதை நினைவூட்டுகிறது? புது யுகம், புது ஜன்மம், எவ்வளவு பழமையான கடைசி ஜன்மமோ, அவ்வளவு புதிய முதலாவது ஜன்மம் எவ்வளவு அழகாக இருக்கின்றது! இது கறுமை, அது அழகிய வெண்மை. இன்றைய தினம் பழைய ஆண்டு தெளிவாக இருப்பதைப் போலவே, புதிய ஆண்டும் கூட எதிரில் தெளிவாக இருக்கிறது. இவ்வாறு உங்களுக்கு புதிய யுகமும், புதிய ஜன்மமும் எதிரில் தெரிகிறதா? இன்று கடைசி ஜன்மத்தில் இருக்கின்றீர்கள். நாளை முதலாவது ஜன்மத்தில் இருப்பீர்கள். தெளிவாக இருக்கிறது. எதிரில் தென்படுகிறதா? யார், யக்ஞ ஆரம்பத்திலேயே வந்தார்களோ, அந்த ஆதி குழந்தைகளுக்கு, பிரம்மாபாபாவைப் பற்றிய அனுபவம் இருக்கிறது. பிரம்மாபாபாவுக்கு, தன்னுடைய புதிய ஜன்மம், புதிய ஜன்மத்தில் தன்னுடைய இராஜ்யம், புதிய சரீரமாகிய வஸ்திரம் எதிரில் தொங்க விடப்பட்டிருக்கும் சித்திரம் போல காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. ஆதி குழந்தைகளில் யாராவது பிரம்மாபாபாவைச் சந்திக்கும் போது, பிரம்மாபாபா இப்படிக் கூறுகின்றார் என்று அவர்களுடைய அனுபவத்தைக் கூறுகின்றார்கள். அதாவது நான் இன்று கிழவனாக இருக்கின்றேன், நாளை நான் சிறு குழந்தையாகி விடுவேன் என்பது. ஆகவே, இதெல்லாம் இன்று, நாளை என்ற ஒரு விளையாட்டு. இப்படி இவ்வளவு தெளிவாக அனுபவம் ஆக வேண்டும். இன்றைக்கு சுய இராஜ்ய அதிகாரியாக இருக்கின்றேன். நாளை நான் விஷ்வ இராஜ்ய அதிகாரியாகி விடுவேன். இப்படிப்பட்ட நஷா (ஆன்மீக போதை) இருக்கிறதா? கிரீடம் அணிவதால், எப்படிப்பட்ட நஷா இருக்கிறது? இவர்கள் குழந்தைகள் பாபா எதிரில் கிரீடம் அணிந்து அமர்ந்திருக்கிறார்கள். பாருங்கள் இன்று குழந்தைகள் கிரீடம் அணிந்து அமர்ந்திருக்கிறார்கள். (டபுள் விதேஷி சிறு குழந்தைகள் ரிட்ரீட்டில் வந்திருக்கிறார்கள்) ஆதலால் எப்படிப்பட்ட நஷா இருக்கிறது? கிரீடம் அணிவதால் எப்படிப்பட்ட நஷா இருக்கிறது? இவர்கள் பரிஷ்தா. நஷாவில் இருக்கின்றனர். நாங்கள் நஷாவில் இருக்கிறோம் என்று. கையசைத்துக் காண்பிக்கின்றார்கள்.

ஆகவே, இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? புதிய ஆண்டில் புதிதாக என்ன செய்யப் போகிறீர்கள்? ஏதாவது புதிய திட்டம் (பிளான்)

போட்டிருக்கிறீர்களா? புதிதாக என்ன செய்யப் போகிறீர்கள்? புரோகிராம் செய்து கொண்டேயிருக்கிறீர்கள். ஒரு லக்ஷம், இரண்டு லக்ஷம் என்ற புரோகிராமும் செய்து விட்டீர்கள் புதிதாக என்ன செய்யப் போகிறீர்கள்? இந்தக் காலத்து ஜனங்கள் ஒரு பக்கம், சுய பிராப்தியில் விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் ஆனால் பலவீனமாக இருக்கிறார்கள் தைரியம் இல்லை. கேட்க விரும்புகிறார்கள் ஆனால் ஆவதற்கான தைரியம் இல்லை. இப்படிப்பட்ட ஆத்மாக்களை பரிவர்த்தனை செய்வதற்காக, முதலில் தைரியம் என்ற இறக்கைகளை மாட்டி விடுங்கள். தைரியம் என்ற இறக்கைக்கு ஆதாரம் அனுபவம். அனுபவம் செய்வியுங்கள். அனுபவம் எப்படிப்பட்ட பொருள் என்றால், ஒரு சிறு துளி அளவு அனுபவம் செய்தாலும் கூட, அந்த அனுபவம் என்ற இறக்கைகள் மூலம் தைரியமாக முன்னேறிச் செல்ல முடியும். இதற்காக, இந்த ஆண்டு நிரந்தரமாக அகண்ட மகாதானி ஆக வேண்டியதிருக்கும். மனதின் மூலமாக சக்தி சொரூபமாக்குங்கள். மகாதானியாகி, நிரந்தரமாக சக்திகளின் அனுபவத்தைச் செய்வியுங்கள். மனம் மூலம் எண்ண அலைகள் (வைப்ரேஷன்), வாய்மொழி மூலம் ஞானம் கொடுங்கள். காமங்கள் மூலமாக குணங்களைத் தானம் செய்யுங்கள் முழு நாளும், மனம் மூலமாகவோ, சொல் மூலமாகவோ, கர்மம் மூலமாகவோ அகண்ட மகாதானி ஆகுங்கள். தேவை அனுசரித்து தானம் செய்தோம், அவ்வப்போது தானம் செய்தோம் என்பதாக இல்லாமல் நிரந்தரமாகத் தொடர்ந்து (அகண்ட தானம்) செய்து கொண்டேயிருக்கும் மகாதானி ஆகுங்கள். ஏனெனில் ஆத்மாக்களுக்கு இப்போது, இது அவசியமாயிருக்கிறது. ஆதலால் மகாதானி ஆவதற்காக முதலில் தன்னுடைய சேமிப்புக் கணக்கை சோதியுங்கள். நான்கு பாடங்களிலும், சேமிப்புக் கணக்கு எத்தனை சதவிகிதமாக உள்ளது? தன்னிடம் சேமிப்புக்கணக்கு இல்லையேல், மகாதானி எப்படி ஆக முடியும்? சரி. சேமிப்புக் கணக்கைப் பற்றி சோதித்துத் தெரிந்து கொள்வது எப்படி? மனம், சொல், செயல் மூலமாக சேவை செய்தோம் ஆனால் சேமிப்பு ஆகியிருக்கிறதா? என்று தெரிந்து கொள்வதெப்படி? சேவை செய்யும்போது முதலில் தனக்கு ஏற்படும் திருப்தி. இத்துடன் யாருக்குச் சேவை செய்தோமோ, அவர்களுக்கு குஷியுடன் கூடிய திருப்தி உண்டானதா? ஒருக்கால் இரு சாராருக்குமே திருப்தி ஏற்படவில்லையென்றால், உங்களுடைய சேவைக்கணக்கில், சேவையின் பலன் சேமிப்பாகவில்லை என்று புரிந்து கொள்ள

வேண்டும். பாப்தாதா அவ்வப்போது குழந்தைகளின் சேமிப்புக் கணக்கைப் பார்க்கின்றார். சில இடங்களில் உழைப்பு (முயற்சி) அதிகமாக இருக்கிறது ஆனால் சேமிப்பின் பலன் குறைவாக இருக்கிறது. காரணம் என்ன? இரு சாராருக்குமே, திருப்தியில் குறைவு இருப்பதுதான். ஒருக்கால் திருப்தியின் அனுபவம் செய்யவில்லையென்றால், அதாவது தனக்கோ அல்லது மற்றவருக்கோ திருப்தி இல்லை என்றால் சேமிப்புக் கணக்கு குறைந்து விடுகிறது. பாப்தாதா சேமிப்புக் கணக்கை மிகவும் சுலபமாகவே அதிகப்படுத்திக் கொள்வதற்கான கோல்டன் சாவியை குழந்தைகளுக்குக் கொடுத்திருக்கின்றார். சாவி கிடைத்திருக்கிறது அல்லவா? சகஜமாக சேமிப்புக் கணக்கை நிரப்பிக் கொள்வதற்கான கோல்டன் சாவி -எந்த ஒரு விதத்திலும் மனம், சொல், செயல் மூலமாக சேவை செய்யும் சமயத்தில் ஒன்று தன்னிடம் நிமித்த பாவனையின் நினைவு (ஸ்மிருதி) இருக்க வேண்டும். நிமித்த பாவனை, நிர்மாண் பாவனை (பணிவு) சுப பாவனை, ஆத்மீக சிநேக பாவனை வேண்டும். இந்த பாவனை ஸ்திதியில் நிலைத்திருந்து சேவை செய்தால், சுலபமாக இந்த பாவனை மூலம் ஆத்மாக்களினுடைய பாவனை பூர்த்தியாகி விடும். இக்காலத்து மக்கள், ஒவ்வொருவருடைய பாவனையையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நிமித்த பாவனையுடன் செய்கிறார்களா? அல்லது அபிமான பாவனையுடன் செய்கிறார்களா? என்று கவனிக்கின்றனர். எங்கே நிமித்த பாவனை இருக்கிறதோ, அங்கு பணிவு என்ற பாவனை தானாகவே வந்து விடுகிறது. ஆதலால் சோதியுங்கள். சேமிப்பாகியிருக்கிறதா? எவ்வளவு சேமிப்பாகியிருக்கிறது? ஏனென்றால், இந்த சமயமான சங்கமயுகம் சேமிப்பு செய்வதற்கான யுகம். பிறகு, முழு கல்பமும் சேமிப்பின் பாக்கியம் (பிராலப்த்) ஆகும். ஆதலால் இந்த ஆண்டு, விசேஷமாக எந்த விஷயத்தில் கவனம் இருக்க வேண்டும்? தத்தமுடைய சேமிப்பை சோதித்துப் பார்க்க வேண்டும். சோதிப்பவர்களாயும் இருங்கள். குறைவை, நிறைவு செய்பவர்களாகவும் இருங்கள். ஏனெனில் நேரம் நெருங்கி வந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றீர்கள். மேலும் நாங்கள் சமானமாக ஆவோம் என்று எல்லோரும் பாப்தாதாவுக்கு வாக்கும் கொடுத்திருக் கிறீர்கள். என்ன! வாக்கு கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா? யார், வாக்கு கொடுத்திருக்கிறீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். பக்காவாக செய்திருக்கிறீர்களா? அல்லது சதவீதத்தில்

செய்திருக்கிறீர்களா? பக்கவாக செய்திருக்கிறீர்கள்தானே? அப்படியானால் பிரம்மாவைப் போலவே, சேமிப்பும் செய்ய வேண்டுமல்லவா? பிரம்மாபாபாவுக்குச் சமமாக ஆக வேண்டுமானால், பிரம்மாபாபாவிடம் என்ன விசேஷ குணத்தைப் பார்த்தீர்கள்? ஆதி முதல் கடைசி வரையிலும், ஒவ்வொரு விஷயத்திலும், நான் என்று சொன்னாரா? அல்லது பாபா என்று சொன்னாரா? நான் செய்து கொண்டிருக்கிறேன், பாபா செய்வித்துக் கொண்டிருக்கின்றார். யாரைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறீர்கள்? பாபாவைச் சந்திக்க வந்திருக்கிறீர்கள். நான் என்ற பாவனையற்ற அறியாத நிலையைப் பார்த்தீர்கள் அல்லவா? பார்த்தீர்களா? ஒவ்வொரு முாளியிலும் பாபா, பாபா என்று எத்தனை முறை நினைவூட்டினார் ஆதலால் சமான் ஆவதற்கான முதற்படி, அல்லது சமானமாவது என்பதன் பொருள் முதலாவது நான் என்ற பாவனையே இல்லாதிருப்பதாகும். முதலிலேயே கூறியிருக்கிறோம் பிராமணர்களுடைய நான் என்பது மிகவும் ராயலானது. நினைவிருக்கிறதா? கூறியிருக்கிறோமல்லவா? பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்வோம். இப்படி பிளான் நிறைய செய்கிறீர்கள். நல்ல விதமாக பிளான் செய்கிறீர்கள். இது பற்றி பாப்தாதாவுக்கும் மகழ்ச்சி தான் ஆனால் பிளானில் நான் என்பது ராயலாக மறைந்திருப்பதன் காரணமாக வெற்றியின் சதவீதத்தைக் குறைத்து விடுகிறது. இயற்கையான சங்கல்பத்தில், வாய்மொழியில், செயலில், ஒவ்வொரு எண்ணத்திலும் பாபா, பாபா என்ற ஸ்மிருதி (நினைவு) இருக்க வேண்டும். நான் என்பது கூடாது. செய்விப்பவரான பாப்தாதா செய்வித்துக் கொண்டிருக்கின்றார். ஜகதம்பாவிடம் இப்படிப்பட்ட விசேஷ தாரணை இருந்தது. ஜகதம்பாவின் சுலோகம் நினைவிருக்கிறதா? ஆதி குழந்தைகளுக்கு நினைவிருக்கும்; இருக்கிறதா நினைவு? சொல்லுங்கள். கட்டளையிடும் அதிகாரி நடத்திக் கொண்டேயிருக்கின்றார். (ஹுூக்மி, ஹுகம் சலா ரஹே) இந்த விசேஷம் ஜகதம்பாவிடம் இருந்தது. நம்பர் வரவேண்டுமென்றால் சமான் ஆக வேண்டுமென்றால், நான் என்பது இல்லாமல் முடிந்து விட வேண்டும். இயற்கையாகவே, வாய்மொழியாக, பாபா பாபா என்ற சொல் வெளி வரட்டும். செயலில், உங்கள் தோற்றத்தில், பாபாவின் அழகு தெரியட்டும். அப்போது தான் பிரத்யக்ஷம் ஆகும்.

பாப்தாதா ராயல் ரூபத்தில் வரும் நான், நான் என்ற பாட்டை அதிகமாகக் கேட்டுக் கொண்டே இருக்கின்றார். நான் என்ன செய்தேனோ, அது தான் சரி, நான் என்ன நினைத்தேனோ அது தான் சரி. இப்படித்தான் நடக்க வேண்டும். இந்த நான் ஏமாற்றம் அளிக்கக்கூடியது. யோசனை செய்யலாம். சொல்லவும் செய்யலாம் ஆனால் நிமித்த பாவனையோடு, நிர்மாண் (பணிவு) பாவனையோடு இருக்க வேண்டும். பாப்தாதா, இதற்கு முன்னரும் கூட ஒரு ஆன்மீக டிரில் கற்றுக் கொடுத்திருக்கின்றார். என்ன டிரில்? அவ்வப்போது மாலிக் அவ்வப்போது பாலக், ஆலோசனை வழங்கும்போது மாலிக் (அதிகாரி), மெஜாரிட்டி முடிவு ஆகிய பின்னர் பாலக் (குழந்தை). மாலிக் மற்றும் பாலக் என்ற ருஹானி டிரில் மிக மிக அவசியம். பாப்தாதாவின் மூன்று வார்த்தைகள் அடங்கிய அறிவுரையை நினைவில் வைத்திருங்கள். எல்லோருக்கும் -நினைவிருக்கிறதா? மனதில் நிராகாரி, வாய் மொழியில் நிரஹங்காரி, செயலில் நிர்விகாரி. எந்த ஒரு எண்ணம் வந்தாலும், நிராகாரி ஸ்திதியில் நிலைத்திருந்து எண்ணுங்கள். மற்றதெல்லாம் மறந்து விடட்டும் ஆனால் மூன்று வார்த்தைகள் மறந்து விடாதீர்கள். சாகார ரூபத்தில் சொன்ன மூன்று வார்த்தைகள் அடங்கிய அறிவுரை, அன்பளிப்பாக ஏற்றுக் கொள்ளுங்கள். பிரம்மாபாபாவின் சாகார ரூபத்திலும் கூட அன்பு இருந்திருக்கிறது. பிரம்மாபாபாவிடம் மிகுந்த அன்பு இருக்கிறது என்று இரட்டை வெளி நாட்டுக் (டபுள் ஃபாரினர்ஸ்) குழந்தைகள் தங்கள் அனுபவத்தைக் கூறுகின்றார்கள் பார்க்கவில்லையென்றாலும் கூட அன்பு இருக்கிறது. இருக்கிறதா? டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு, பிரம்மாபாபாவிடம் அன்பு அதிகமாக இருக்கிறது அல்லவா? அப்படித் தானே? யாரிடம் அன்பு அதிகமாக இருக்கிறதோ, அவர்களிடமிருந்து கிடைக்கும் அன்பளிப்பை மிகவும் பத்திரமாக வைத்திருப்பார்கள். அன்பளிப்பு மிகச் சிறியதாக இருப்பினும், அன்பானவரிடமிருந்து பெற்ற அன்பளிப்பை மறைத்து வைத்துக் கொள்வார்கள், பாதுகாப்பாக வைப்பார்கள். ஆகவே, பிரம்மாபாபாவிடம் அன்பு இருப்பதன் அடையாளம், அவர் அளித்த மூன்று வார்த்தைகள் அடங்கிய அறிவுரையின் மீது அன்பு வைத்திருப்பதாகும். இதில் சம்பன்னமாவது அல்லது சமான் ஆவது மிக எளிதாகி விடும். பிரம்மாபாபா என்ன சொன்னார் என்பதை நினைவில் வையுங்கள்.

ஆகவே, புது வருடத்தில் வாய் மூலமான சேவை செய்யுங்கள். விமரிசையாகவும் செய்யலாம் ஆனால் அனுபவம் செய்விப்பதற்கான சேவையில் சதா கவனம் வையுங்கள். எல்லோருக்கும் அனுபவம் ஆகட்டும். இந்த சகோதரி மூலமாக சக்தியின் அனுபவம் ஆனது, இந்த சகோதரர் மூலமாக சாந்தியின் அனுபவம் ஆனது என்பதாக இருக்க வேண்டும். ஏனெனில் அனுபவம் ஒருபோதும் மறக்காது. காதால் கேட்பது மறந்து விடும். கேட்கும் போது நன்றாக இருக்கும் ஆனால் மறந்து விடும் ஆனால் அனுபவம் எப்படிப்பட்ட, ஒரு விஷயம் என்றால், அது உங்களிடம் அவர்களை இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தி விடும். தொடர்பில் இருந்தவர்கள். சம்மந்தத்தில் வந்து கொண்டே இருப்பார்கள் ஏனெனில் சம்மந்தமில்லாமல் ஆஸ்திக்கு அதிகாரி ஆக முடியாது. ஆதலால் அனுபவம் சம்மந்தத்தில் கொண்டு வருவதாக இருக்கிறது. நன்று.

புரிந்ததா? என்ன செய்ய வேண்டும்? சோதியுங்கள். சோதிப்பவராகவும் இருங்கள். செய்விப்பவராகவும் ஆகுங்கள். அனுபவம் செய்விப்பவர் ஆகுங்கள். சேமிப்பின் கணக்கை, சோதிக்கும், சோதனை செய்பவர் ஆகுங்கள். நன்று. எல்லோரும் வந்து சேர்ந்து விட்டார்கள் ஆதலால் பாப்தாதா எல்லோருக்கும் மனப்பூர்வமான ஆசிகளுடன், பதம் குணா (நூறு மடங்கு) நல்வாழ்த்துக்களையும் அளிக்கின்றார். பட்ராணிகளைப் பாருங்கள். பட்ராணி ஆகி விட்டீர்கள் (தரையில் படுத்திருப்போர்) அல்லவா? குர்ஸி ராணா என்று சொல்வதில்லை. பட்ராணா என்று சொல்வதுண்டு. இன்று, முழு சபையில், மெஜாரிட்டி பட்ராணி, பட்ராணா ஆகியிருக்கிறார்கள். உட்கார்ந்து, உட்கார்ந்து, களைப்படைந்து விடவில்லைதானே! குர்ஸியில் (நாற்காலி) அமருபவர்களுக்கு பட் (தரைவிரிப்பு) கிடைத்து விட்டது. இதனால் களைப்பு இல்லை தானே! வலி உண்டாகிறதா? குஷியில் எல்லாம் மறந்து விடுகிறது. நன்று. இன்று செய்தியில் கேட்டோம், முதலில் வெளிநாட்டு குழந்தைகளின் குரூப் ஒன்று வந்துள்ளதாம்! குழந்தைகள் அனைவரும் எழுந்து நில்லுங்கள், அனைவருக்கும் கிரீடம் தென்படுகிறது. ஆக முடி சூடியுள்ள குழந்தைகள்! கொடிகளைக் கூட அசைக்கின்றனர். நல்லது! குழந்தைகளைப் பார்த்து குஷி ஏற்படுகிறது. குழந்தைகள் கூட பட்டி செய்துள்ளதாகக் கேள்விப்பட்டோம் நல்லது, மொத்தம் எத்தனை குழந்தைகள்? (பட்டிக்காக 11-நாடுகளிலிருந்து

26-குழந்தைகள் வந்துள்ளனர்) யார் பட்டி செய்துள்ளனரோ அவர்கள் தம்தம் நாடுகளுக்குத் திரும்பியவுடன் பிறருக்கு பட்டி செய்விப்பர் இல்லையா? ஆம் என்று கொடியசைக்கின்றனர். மறந்து விட வேண்டாம். ஆஹா! என்ன அருமையான குழந்தைகள்! என கூறும்படி முன்மாதிரியாகத் திகழ வேண்டும். எல்லா நாடுகளிலிருந்தும் அம்மாதிரி ரிஸல்ட் வருமில்லையா? என்ன பாடத்தைப் படித்தீர்களோ அது செயலில் வர வேண்டும். வெறும் காதுவரை மட்டுமல்ல, கர்மத்திலும் வர வேண்டும். நல்லது. குழந்தைகளுக்கு எம்மாதிரி துணை கிடைக்கிறதோ அம்மாதிரி கலர் (குணம்) சேர்ந்து விடுகிறது. ஆக குழந்தைகளைக் கண்டு பாப்தாதா மிகுந்த குஷி அடைகிறார். குறிப்பாக நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறார். முதலில் கிரீடம் அணிந்துள்ளமைக்கு வாழ்த்துக்கள். அலங்கரித்து வந்துள்ளனர். நீங்கள் இங்கே அமர்ந்துள்ளீர்கள், ஆனால் அனைத்து நாட்டினரும் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர், அமெரிக்காவும் பார்க்கிறது.... லண்டனும் பார்க்கிறது... ஆஸ்திரேலியாவும் பார்க்கிறது... உங்களை அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். எவ்வளவு பாக்கியவான்கள்!

அடுத்த குரூப் இளைஞர்கள் குரூப்: இரட்டை வெளி நாட்டினர் குரூப் குரூப்பாக பட்டி மிக அழகாக செய்கின்றனர். இரட்டை நன்மை எடுத்துக் கொள்கின்றனர். பாப்தாதாவையும் சந்தித்துக் கொள்கின்றனர், பட்டியும் செய்து கொள்கின்றனர். (26-நாடுகளிலிருந்து 160-இளைஞர்கள் வந்துள்ளனர்) 26ஐ இரட்டிப்பு ஆக்கினால் என்னவாகும்? நீங்கள் சேவையில் நிறைய செய்து காண்பிக்க வேண்டும். அகில உலக இளைஞர் குரூப் அமைத்துள்ளீர்கள். இதில் அகில உலகத்தினரும் உள்ளனர் இல்லையா? மிக நல்ல டீச்சர்! மூன்று டீச்சர்களும் இணைந்துள்ளனர், திரிமூர்த்தி! நல்லது, பாப்தாதா செய்திகளைக் கேட்டனர், மேலும் இளைஞர் குரூப்பின் ரிஸல்டையும் கேட்டனர், அனைவருக்கும் மிக நல்லதான ஒரு விஷயம் பாப்தாதாவிற்கும் மிகவும் நல்லதாய்ப்பட்டது. அது “ஆத்ம அபிமானி நிலையை அதிகம் பயிற்சி செய்வோம்" என இளைஞர்கள் முடிவெடுத்துள்ளதுதான்! ஆத்மா பாடத்தை மிக உறுதியாகச் செய்துள்ளனர்! உறுதியாக்கியுள்ளீர்கள் இல்லையா? கை அசையுங்கள். மதுபன் வரைக்கும் தான் இருக்குமா? அல்லது அங்கு வரைக்கும் இருக்குமா?

பாப்தாதா முதன் முதலில் குழந்தைகளுக்கான விடுதி ஆரம்பித்தபோது ஆத்மா பாடத்தை உறுதி படுத்தினார், அதே போல இளைஞர்கள் தேக அபிமானத்தில் வரமாட்டோம். ஆத்ம அபிமானிகளாய் இருப்போம் என லட்சியம் வைத்துள்ளனர், உறுதி தானே? உறுதி தான் அல்லது அதில் முழுமை இல்லை என்பதை எப்படி அறிவது? டீச்சர்கள் இது பற்றிய கருத்தை எழுதுவார்களா? நாலா புறங்களிலிருந்தும் குறிப்பை (ரிப்போர்ட்) தன்னிடம் வரவழைத்து பிறகு அதனை மதுபனுக்கு அனுப்புங்கள். தாதி, தீதியின் பெயரில் அனுப்ப வேண்டாம். அவர்களுக்கு நிறைய வேலைப்பளு இருக்கும். அலுவலகத்திற்கு அனுப்புங்கள். மற்றபடி, கடிதங்கள் எழுதும் போது இது எந்த இலாகாவிற்கு என குறிப்பிட்டு எழுதுங்கள். இது இளைஞர் குரூப்பின் ரிட்போர்ட் என எழுதுக. எதுவரை நடைமுறையில் கொண்டு வந்துள்ளீர்கள் என அப்போது தெரியும். நீங்கள் அப்படிச் செய்யும்போது அனைவருக்கும் ஆர்வம் ஏற்படும். உற்சாகம் அதிகரிக்கும். நல்ல தலைப்பை வைத்துள்ளீர்கள். என்ன நேர்ந்தாலும் சரி, ஒருபோதும் தேக அபிமானத்தில் வரக்கூடாது. பாப்தாதாவிற்கு பிடித்தமாயிருந்தது. ரிப்போர்ட் நன்றாக உள்ளது; இம்மாதிரியே ஒவ்வொரு தேசத்திலும் இந்த குரூப்பின் எண்ணிக்கையை அதிகரியுங்கள். அவர்களையும் ஆர்வம், உற்சாகத்தில் கொண்டு வாருங்கள். இளைஞர் குழு ஆத்ம அபிமானி நிலையில் பாஸ் (வெற்றி) ஆகி விட்டால், அரசாங்கமும் வெகுமதி தரும். இந்த ஜனாதிபதி வெகுமதி தருவார் நல்லவர், அவருக்குத் தெரியும். உங்களுக்கு வெகுமதி தேவையில்லைதான் ஆனால் இதன் மூலம் சேவை அதிகரிக்கும் டிவியில், ரேடியோவில் விஷயம் பரவும். இல்லையா? பிரம்மா குமார், குமாரிகள் உறுதி மொழி எடுத்துக் கொண்டு அதன்படி நடைமுறையில் நடந்து வருகின்றனர் என்று பரவும். அப்படிச் செய்வீர்கள் இல்லையா? நல்லது, பெரியவர்கள் ஒரு பக்கம் இருக்கின்றனர், இளைஞர்கள் நம்பர் ஒன் ஆக வேண்டும். பாப்தாதா முன்னதாகவே அனைத்து இளைஞர்களுக்கும் ஆசீர்வாதம் அளிக்கிறார். ஆக பாபாவின் ஆசீர்வாதத்தை சதா கூடவே வைத்திருங்கள். இரட்டை லாபம் எடுத்துக் கொள்கிறீர்கள், இது மிக நல்லது!

**இம்முறை சேவை குஜராத்:** குஜராத்தின் அனைத்து டீச்சர்களும் எழுந்திருங்கள். டீச்சர்களே அதிகம் பேர் உள்ளனர். டீச்சர்கள்

எண்ணிக்கை அதிகம் உள்ள மண்டலம் எது? (முதலில் மகாராஷ்டிரா, அடுத்தது குஜராத் முதல் நம்பர் மகாராஷ்டாவில். மகாராஷ்ட்ராவில் கூட ஆந்திர பிரதேசமும் உள்ளது. ஆந்திர பிரதேசம் சிறியது அல்ல! பெரிது தான். இரண்டும் சேர்ந்து நம்பர் ஒன் ஆகிறது நீங்களோ குஜராத் மட்டும். வாழ்த்துக்கள், அவ்வளவு தடைகளற்ற சேவை! எவ்வளவு டீச்சர்கள் உள்ளனர், சேவையில் எவ்வளவு முன்னணியில் உள்ளீர்கள், அவ்வளவு தடைகளற்ற நிலையிலும் நம்பர் ஒன், இந்த ஆண்டு சேவையின் பொன்னான வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆக, உங்கள் சேவையிலும் புத்தாண்டு தொடங்கி விடும். இந்த நவீனத்தை குஜராத் செய்து காண்பிக்க வேண்டும். முழு ஆண்டு முழு நிர்விக்ன (தடைகளற்ற) நம்பர் ஒன். நடக்கக் கூடியது தானா? அப்படியானால் பாப்தாதா அனைத்து மண்டலங்களுக்கும் முன்மாதிரியாக எடுத்துரைப்பார். பெரியதுமானது, நிர்விக்னமாகவும் உள்ளது. இரண்டிலும் நம்பர் ஒன் சரியா? அனைத்து டீச்சர்களும் கை தூக்கினீர்களா? திரும்பவும் கை தூக்குங்கள். வெறும் கை மட்டுமல்ல, மனதைத் தூக்க வேண்டும். மனதோடு சேர்ந்துள்ளதா கை? சரியா? அப்படியானால் வாழ்த்துக்கள். முன்னதாகவே வாழ்த்துக்களும் ஆசீர்வாதமும்! தாதிகளின் ஆசீர்வாதமும் கூட ஜனக் குழந்தையும் (ஜானகி தாதி) கூட படுக்கையில் இருந்தபடியே ஆசீர்வாதங்களை தந்து கொண்டிருக்கிறார். எத்தனை அற்புதம்? என்ன விஷயமாய் இருந்தாலும் தன்னுள் அடக்கிக் கொள்ள வேண்டும். உள் மனதில் பாப்தாதாவிற்குத் தந்து அடக்கிக் கொள்ள வேண்டும். ஒன்று பொறுமை சக்தி, அடுத்தது, தன்னடக்கிக் கொள்ளும் சக்தி. இந்த இரு விசேஷ சக்திகளும் உங்களிடமிருந்தால் தகுதியுடன் தேர்ச்சி பெற்றவர்களாவீர்கள். இதனை தயாராக வைத்திருங்கள். அதே சமயத்தில் நோய்வாய்ப்படும் அளவுக்கு உள்ளடக்கிக் கொள்ளாதீர்கள். அப்படி அல்ல, அனேக உள்ளடக்கிக் கொள்ள முயற்சித்து நோய்வாய்ப்பட்டு விடுகின்றனர். புத்தி கெட்டுப் போய் விடுகிறது. அம்மாதிரி உள்ளடக்கிக் கொள்ளக்கூடாது. தன் அடக்கிக் கொள்ளும் சக்தியின் மூலம் தன்னடக்கிக் கொள்ளுங்கள், நல்லது, குஜராத் செய்ய முடியும். செய்தே ஆக வேண்டும் சரி தானே என்ன? செய்தே ஆக வேண்டும் என சொல்லுங்கள். பாப்தாதாவும் கூறுகிறார். நடந்து முடிந்தே உள்ளது. நல்லது. குஜராத் சேவாதாரிகள் நிறைய உள்ளனர். எனவே கை தூக்குவதில்லை, எண்ணிக்கை அதிகம். பறக்க

விரும்புகின்றனர், பறந்து செல்லுங்கள், நல்லது, அதில் பாருங்கள் குஜராத்துக்கு பிற அனைத்து மண்டலங்களையும் விட ஒரு வரதானம் அதிகம் உண்டு. எது என்ன அதிகம்? குஜராத் பூமியில் பாக்கியவிதாதா (வள்ளல்) பிரம்மாவின் பார்வை பட்டது. பாக்கிய விதாதா பிரம்மாவின் பார்வையில் பிறந்தது குஜராத், ஆக இந்த விசேஷ வரதானம். குஜராத் தானாகவே கிளைகளைத் திறக்கவில்லை, பாப்தாதா திறக்கச் செய்தார். எனவே குஜராத்துக்கு விசேஷ லிப்ட் இப்போது இந்த லிப்ட்'ன் கிப்ட் மூலம் சகஜமாய் நிர்விக்னமாகி விடுங்கள். நல்லது. நல்ல சேவை செய்துள்ளீர்கள் குஜராத்தின் உள்ளம் விசாலமானது, ஆக உங்கள் குழுவும் பெரிதாய் உள்ளது. நல்லது.

**நீதித்துறையினர் வந்துள்ளனர்:** அனைவரும் பார்த்தனர். உங்களது பிராமண குடும்பத்தில் ஒரே குரூப்பில் எவ்வளவு வழக்கறிஞர்கள்? எவ்வளவு நீதிபதிகள்? பார்த்தீர்களா? இப்போது நீங்கள் பாப்தாதாவின் ஒரு ஆசையைப் பூர்த்தி செய்யவில்லை! வக்கீல், நீதிபதிகள் கை அசையுங்கள். மக்களுக்கு (ஞானம் தந்து) அசைத்து காண்பியுங்கள், கீதையின் பகவான் விஷயத்தில் அசைத்துக் காண்பியுங்கள், அம்மாதிரி திட்டம் ஏதும் தீட்டவில்லையா? சரி, கொஞ்சம் கொஞ்சமாக விஷயத்தைப் பரப்புங்கள் தனித்தனியாக முயற்சி செய்து அசைத்துப் பாருங்களேன்! இந்த தவறின் காரணமாக பரமாத்மாவின் ஆஸ்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டுள்ளனர். அம்மாதிரி வஞ்சிக்கப்பட்டவர்களுக்கு ஆஸ்தி கிடைப்பதற்கு நிமித்தமாகுங்கள். சரிதானே! ஏதேனும் திட்டம் தீட்டுங்கள். சிறிது சிறிதாவது ஒத்திகை பாருங்கள். என்ன சொல்கிறார்கள் என்று அசைத்துப் பாருங்கள் உதாரணமாக அறிவியல்: (Science) மற்றும் அமைதி (Silience) இரண்டும் சந்திக்க வேண்டும் என இக்கால உலகம் விரும்புகிறது. இதேபோன்று மருத்துவம் (Medicine) மற்றும் தியானம் (Meditation) இரண்டும் கலக்க வேண்டும் எனவும் கூறுகின்றனர். இம்மாதிரி நீதித்துறையினர் என்ன நிரூபிக்கப் போகிறீர்கள்? ஒவ்வொரு வர்க்கத்தினரும் (பிரிவு) அம்மாதிரி நல்ல ஒரு சுலோகனை தயார் செய்ய வேண்டும் என பாப்தாதா ஏற்கனவே கூறியுள்ளார். அறிவியலும் ஆன்மீகமும் -இம்மாதிரி நடைமுறையான சுலோகன் தயார் செய்யுங்கள். அந்தக் காலத்தில் கண்காட்சிகளின்போது அருங்கருத்துக்களை எழுதி வைத்தோம். தற்போது கண்காட்சிகளில் இல்லையெனில்

தனித்தனியாகவாவது செய்யலாமே! வழக்கு (சம்பந்தமாய் பாப்தாதாவும் கூறவில்லை, முதலில் தயாராகட்டுமே) முதலில் சிலவற்றை சேர்த்துத்துதான் பாருங்களேன்! சிலரை சந்திக்க வையுங்கள். உங்கள் சார்பில் அவர்கள் தயாராகட்டும். நல்லது. நீங்களே உங்களுக்கு நீதிபதி (Self Judge) எனவே Judge your self இந்த தலைப்பை அடுத்து இன்னும் சற்று ஆழமாகச் செல்லுங்கள் நீதிபதிகளுக்குக் கூறுங்கள். சுயம் தான் தனக்கு நீதிபதியாகி உலக சிருஷ்டியை மாற்றுங்கள். வழக்கைத் தீர்ப்பளிக்கும் நீதிபதியும் அவர்கள், தனக்குத் தான் தீர்பளிக்கும் நீதிபதியும் கூட இரண்டும் ஆவர். இம்மாதிரி சில கண்டுபிடிப்புகளைக் காணுங்கள். சுலோகன் தயாரியுங்கள், இரண்டிரண்டு வார்த்தைகள் சேர்ந்து வருகிற மாதிரி. வாழ்த்துக்கள். பட்டி பண்ணுகிறீர்கள், கூடுகிறீர்கள், சிந்தித்தீர்கள், இதற்கெல்லாம் வாழ்த்துக்கள். (மாநாடுகள் நிறைய அமைக்கின்றனர்) நன்றாகச் செய்யுங்கள், நல்லது. மைக் யார் வெளி வந்துள்ளார். அவர்கள் பாபாவிற்கு முன் வரவில்லை. மைக் என்றால் அவர்களது வார்த்தைகளில் சக்தி நிறைந்திருக்க வேண்டும். அது ஜனாதிபதியாய் இருந்தாலும் சரி, பிரதம மந்திரியாக இருந்தாலும் சரி, ஆனால் வார்த்தைகளில் சக்தி இல்லையெனில் மைக் இல்லை. மைக் என்றால் அவர்களது வார்த்தைகளில் சக்தி வேண்டும். அப்படிப்பட்ட மைக் எம்முறையாவது மைக் ஆகி ஒலி எழுப்பட்டும். அப்படிப்பட்ட மைக் வேண்டும். தங்களது பகுதியினருக்கு மட்டும் செய்தால் போதாது. பல ஒலியுடைய மைக் வேண்டும். நல்லது. மேலும் யார்?

கலாச்சாரத் துறை: கலாச்சாரத்துறை என்ன புது திட்டம் தீட்டியுள்ளது? (பேரணி நடத்தவும், மாநாடு கூட்டவும் திட்டம் தீட்டியுள்ளது) அது சரி, புதிதாய் என்ன செய்துள்ளீர்கள்? இது நல்லது தான், ஆனால் புதுமையாக ஏதேனும் செய்யுங்கள். (கண்காட்சி படங்கள்) தயார் செய்துள்ளோம். இம்முறையில் பாபாவை வெளிப்படுத்துவோம். ஒவ்வொரு துறையும் (Wing) ஏதேனும் புதிதாய்ச் செய்ய வேண்டும். மாநாடுகள் தான் ஏற்கவே செய்துள்ளீர்கள். நிறைய ஆண்டுகள் ஆகி விட்டதா? பேரணி -இது செய்து கொண்டே இருக்கிறீர்கள். இப்போது ஏதேனும் புது திட்டம் தீட்டுங்கள். நல்லது மேலும் ஏதேனும் திட்டம் தீட்டுங்கள். (கலாச்சார விழா - Cultural Carnival) செய்வதற்கான திட்டம் உள்ளது. திட்டம் தீட்டுங்கள். நல்லது மேலும் ஏதேனும் புதுத் திட்டம்

தீட்டுங்கள். அனைத்து துறையினருக்கும் (wing) புதுத் திட்டம் தீட்ட பாபா கூறுகின்றார். பிரம்மா குமாரிகள் மாநாடுகள், பேரணிகள் நடத்துகின்றனர் என்று அனைவருக்கும் தெரிந்து விட்டது. இதைக் கட்டாயம் பார்க்க வேண்டும் என அனைவரும் விரும்பும் அளவு புதிதாகச் செய்யுங்கள். ஏனெனில் தற்போதெல்லாம் ஏதேனும் புதுமையை விரும்புகின்றனர். யோசியுங்கள், புத்தியில் டச் ஆகும். பெரிய விஷயமன்று. எந்தத் துறை நவீனத்தைக் கொண்டு வரப் போகிறது என பார்ப்போம். ஏதேனும் ஒன்று நம்பர் ஒன் ஆகத் தானே செய்யும். அப்படியானால் செய்யுங்கள். அமிர்தவேளை யோகத்திற்குப் பிறகு யோகத்தின் போது அல்ல, யோகத்திற்கு பிறகு நிறைய சக்தி இருக்கும். அச்சமயத்தில் புத்தியால் யோசியுங்கள், டச் ஆகி விடும். மற்றபடி என்ன செய்தீர்களோ அதற்கு வாழ்த்துக்கள்! என்ன திட்டம் தீட்டினீர்களோ அதையும் செய்யுங்கள், ஆனால் ஏதேனும் புதிதாய்ச் செய்ய வேண்டும் யோசியுங்கள். மிகவும் நல்லது?

உபி. மற்றும் இராஜஸ்தானில் மேளா (பெரும் கண்காட்சி) ஏற்பாடு செய்ய தாதிஜிக்கு சுப எண்ணம் எழுகின்றது செய்ய வேண்டும். ஏனெனில் இராஜஸ்தான் மற்றும் உபியில் அவ்வாறு பெருவிழா செய்து நாளாகி விட்டது. தற்போது இராஜஸ்தானின் மைக் மிகவும் உற்சாகமாக உள்ளார். (உப ஜனாதிபதி) அவரது வார்த்தைகள் உதவி செய்யக்கூடும் ஏனெனில் பதவியிலிருக்கிறார். அப்படியானால் அதன் பயனை எடுத்துக் கொள்ள வேண்டும். பதவியிலிருக்கும் ஆத்மாவின் வார்த்தைகள் சற்று பேரொலியாய் ஒலிக்கும். விளம்பரம் ஆகி விடுகிறது. செய்ய வேண்டும். இந்த சுப எண்ணம் (தாதியின்) சரியே! உதவி வேண்டும். பிறரது உதவியுடன் செய்ய வேண்டும்.

கல்கத்தாவில் மிகப் பெரிய நிகழ்ச்சி நடந்தேறியது. போபாலில் பெரிய விழா நடைபெற உள்ளது. ஒவ்வொரு இடத்திலும் இதுவரை நடந்தேறிய பெரிய விழாக்கள் அந்தந்த இடத்திற்கேற்ப விசேஷத்துடன் நடந்தேறியது. எவ்வளவு கூட்டமோ அவ்வளவு விளம்பரம் ஆல்ரவுண்ட் ஆகியுள்ளது. எப்படி டில்லியில் நடந்ததன் எதிரொலி வெளிநாடு வரை சென்றது. கல்கத்தாவில் 2-லட்சம் ஆனது. தனித்தனி விசேஷம் தானே இது. இவ்வாறே குஜராத் முதல் நம்பர் எடுத்தது. புதுக் கண்டுபிடிப்பு செய்ததில்லையா? மும்பையிலும் நன்கு செய்தி

பரவியது. சென்னையிலோ மூன்று தாதிகளின் படம் அச்சிட்டனர். அது அனைத்து இடங்களிலும் சென்றது. (முதலில் குஜராத் செய்தது) சென்னை சற்று அழகாகச் செய்தது, நன்றாயிருந்தது. அனைத்து இடங்களிலும் நன்றாய் இருந்தது. பாப்தாதா குழந்தைகளின் ஒற்றுமை, கூட்டு மற்றும் ஒருமித்த நிலைக்கு ஆசீர்வாதம் வழங்குகிறார். எண்ணிக்கை எவ்வளவு தான் வந்தாலும் பெயர் ஆனதில்லையா? பிரம்மா குமாரிகள் (சேவை) மைதானத்தில் வந்தார்கள், இல்லையா? எனவே அனைத்து இடங்களுக்கும் அதனதன் விசேஷம் உள்ளது. அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டாக செய்தனர், இதற்கு முதலில் வாழ்த்துக்கள் நல்லது. போபாலும் கூட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் புத்திசாலியானது தான்! அவர்களும் அற்புதம் செய்வர் ஏனெனில், போபாலில் முக்கியஸ்தர்களின் தொடர்பு நன்றாக உள்ளது. இப்போது அவர்களை காரியத்தில் எவ்வளவு ஈடுபடுத்து வது அந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருப்பீர்கள். மற்றபடி அவர்களும் புத்திசாலிகள் தாம்! செய்து முடிப்பர். மிக நன்றாக ஆகி விடும்!

நல்லது, இப்போது அனைவரும் என்ன செய்ய போகிறீர்கள்? பாப்தாதாவிற்குப் புத்தாண்டில் பரிசு ஏதேனும் தருவீர்களா இல்லையா? புதிய ஆண்டில் என்ன செய்கிறீர்கள்? ஒருவர் பிறருக்கு பரிசு வழங்குகிறீர்கள் இல்லையா? ஒன்று (கார்டு) வாழ்த்து மடல் தருகிறீர்கள், அடுத்து பரிசு. ஆக பாப்தாதாவிற்கு வாழ்த்துமடல் (கார்டு) தேவையில்லை, ரிக்கார்டு (நல்ல புருஷார்த்த அட்டவணை) வேண்டும். அனைத்து குழந்தைகளின் ரிக்கார்டும் நம்பர் ஒன் ஆக இருக்கட்டும். இந்த ரிக்கார்டு வேண்டும். தடைகளற்றவர்களாய் இருக்க வேண்டும். தற்போது ஒரு சில தடைகள் பற்றிய விஷயத்தைக் கேள்விப்படுகிறோம் இல்லையா? பாப்தாதாவிற்கு சிரிப்பான ஒரு விளையாட்டு நினைவிற்கு வருகிறது. அந்த சிரிப்புக் கதை என்னவென்று தெரிகிறதா? வயதானவர்கள் பொம்மை விளையாட்டு விளையாடுகின்றனர், வயதானவர்கள் ஆனால் விளையாடுவதோ பொம்மை விளையாட்டு. அப்படியானால் அது சிரிப்பு விளையாட்டு தானே! இப்போது கேள்விப்படுகிறோமே சிறுசிறு விளையாட்டு. இருப்பவர்களோ வானபிரஸ்த நிலையினர், ஆனால் விஷயங்களோ எவ்வளவு சிறிதானது, இந்த ரிக்கார்டு பாப்தாதாவிற்கு நன்றாக இல்லை. இதற்குப் பதிலாக வாழ்த்துக் கார்டுகள் தருவதற்குப் பதில்,

தடைகளற்ற ரிக்கார்டைத் தாருங்கள். சிறு சிறு விஷயங்கள் இனிமேல் வேண்டாம். பெரிய விஷயங்களை சிறிதாக்கிக் கொள்ள கற்றுக் கொள்ளுங்கள். சிறு விஷயங்களை இல்லாமல் செய்து விட கற்றுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழந்தையின் முகமும் பாப்தாதாவின் முகத்தை காட்டும் கண்ணாடியாக விளங்க வேண்டும் என பாப்தாதா விரும்புகின்றார். இப்படிப்பட்ட விசித்திர கண்ணாடியை பாப்தாதாவிற்குப் பரிசாகத் தாருங்கள். உங்களது கண்ணாடியில் பாப்தாதா தென்படட்டும். பரமாத்மா தென்படும் கண்ணாடி உலகத்தில் இல்லை. நீங்கள் இந்த புதிய வருஷத்தில், விசித்திர கண்ணாடியாக ஆகி அப்படிப்பட்ட பரிசை பாபாவிற்கு வழங்குங்கள். யார் உங்களிடம் கேட்டாலும், யார் உங்களைப் பார்த்தாலும், அவர்களுக்குப் பாப்தாதாவே தென்படட்டும். யார் கொடுப்பதற்கான திட சங்கல்பத்தை செய்கிறார்களோ அவர்கள் கை தூக்குங்கள். திட சங்கல்பத்தின் கை தூக்குங்கள் இரட்டை வெளி நாட்டினரும் கை தூக்குகின்றனர். சிந்தி குரூப்பினரும் கை தூக்குகின்றனர், யோசித்து கை தூக்குகிறீர்களா? நல்லது. தற்போது அனைவருக்கும் புரிகிறதா? பாப்தாதாவிற்கு என்ன தர வேண்டும்? பரிசு மற்றும் ரிக்கார்டு. கண்ணாடி ஆகி விட்டீர்கள் என்றால் ரிக்கார்டு வந்து விடும். தற்போது பாப்தாதா கஷ்டப்பட்டு புருஷார்த்தம் செய்வதைப் பார்க்க விரும்பவில்லை. சிறு சிறு விஷயங்களிலெல்லாம் கஷ்டப்பட்டு முயற்சி செய்வதை தவிருங்கள். பறந்து செல்லுங்கள், மேலேயே இருந்தீர்களானால் பிற அனைத்தும் கீழேயே தங்கி விடும். நல்லது மதுபன் வாசிகள், சாந்திவன், ஞானசரோவர், பாண்டவ பவன், ஹாஸ்பிட்டலில் இருப்பவர்கள், ஆக அனைவருக்கும் பாப்தாதா மனப்பூர்வமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். யார் வந்தாலும் சரி, அவர்களுக்கு நல்ல சேவை செய்கின்றனர். சேவை புரிவதில் முதல் நம்பரில் உள்ளனர். மற்றதை பிறகு கூறுவோம். மற்றபடி சேவையில் நம்பர் முதலாவதாக நன்றாக உள்ளது. களைப்பில்லாது சேவை புரிவதில் இயற்கையாகவே ஒரு பழக்கம் ஏற்பட்டுவிட்டது. பிறகும் பாருங்கள், எவ்வளவு கூட்டம்? இப்போது எவ்வளவு எண்ணிக்கை இருக்கும்? 15-16 ஆயிரம் பேரை உபசரிக்கின்றனர். வந்திருக்கக்கூடிய உள்நாட்டினரானாலும் சரி, வெளிநாட்டினரானாலும் சரி, அனைவரும் நலம் தானே? உணவு சரியாகக் கிடைக்கிறதா? சரியாகத் தங்கி உள்ளீர்களா? குளிர் இல்லையே? கம்பளி கிடைத்ததா? தாய்மார்கள் சுகமாக தங்கி

உள்ளீர்களா? சுகமாய் இருக்கிறீர்களா? நல்லது. ஆக புதிய வருடத்தில் புதுமையைக் காண்பிக்க வேண்டும், நினைவில் கொள்ளுங்கள். வெளியே அமர்ந்து கொண்டிருக்கின்றனரே, அவர்களும் கேட்டு கேட்டு குஷி அடைந்து கொண்டிருக்கின்றனர். கேட்போர், அதிகம் உள்ளனர். பார்ப்பவர்கள் (எதிரில்) குறைவே. தூரமாய் இருந்தாலும் எதிரில் அமர்ந்திருப்பது போன்று ஆர்வத்தோடு அமர்ந்துள்ளனர். இதைப் பார்த்து பாப்தாதா மிகுந்த குஷி அடைகின்றார். நேரம் வித்தியாசம், அதிகம் ஆனாலும் தைரியத்தோடும், உற்சாகத்தோடும் அமர்ந்துள்ளனர்.

மற்றபடி அனைத்து பகுதியிலிருந்தும் வாழ்த்துக் கார்டு நிறைய பார்த்தோம். இங்கே வைக்கப்பட்டிருக்கிறது இல்லையா? கார்டு அனுப்பியவர்களுக்கு பாப்தாதா பதிலாக அன்பு நினைவுகள், ஆசீர்வாதங்களை வழங்குவதோடு ரிக்கார்டை காண்பியுங்கள் என்று கூறுகின்றார். கார்டு அனுப்பியதற்கு வாழ்த்துக்கள், ஆனால் ரிக்கார்டு காண்பீத்தீர்களானால் மிக, மிக, மிக, மிக அதிகமான நல் வாழ்த்துக்கள் கிடைக்கும். பொம்மைகள் கூட அனுப்புகின்றனர். கடிதங்களும் அனுப்புகின்றனர். இரட்டை வெளிநாட்டினரில் பெரும்பாலோரின் இந்த விசேட தன்மை பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்தமாய் உள்ளது. ஜனக் (ஜானகி தாதி) குழந்தையும் கேட்டுக் கொண்டிருக்கிறது. வெளிநாட்டு ரிஸல்டைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். குஷி அடைகிறார். அந்த ஒரு விசேஷம், அவர்கள் உண்மை பேசுகின்றனர். உண்மையான உள்ளம் படைத்தோரிடமே பாபாவும் திருப்தி அடைகிறார். அசைக்கிறார்கள், ஆடுகிறார்கள் ஆனாலும் உண்மையே பேசுகின்றனர், எவர்கள் உண்மை பேசுகின்றனரோ அவர்களது பாதி தவறுகள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. எனவே பாப்தாதாவிற்கு இந்த விசேஷம் மிகவும் பிடித்திருக்கிறது. ஏனெனில் பொய் கூறுவது என்பது உள்ளத்தை அரித்துக் கொண்டே இருக்கும், காலில் முள் குத்தி விட்டதென்றால் என்ன நடக்கும்? உள்ளுக்குள்ளேயே இருந்து வலித்துக் கொண்டே இருக்கும் இல்லையா? பொய் பேசுபவர்களுக்கு உள்ளே குஷி ஒருபோதும் இருக்காது. ஏதேனும் பிரச்சனைக்கு மேல் பிரச்சனை இருந்து கொண்டே இருக்கும். எனவே தெளிவான உண்மையான, ஆத்மாவாக ஆகும்போது அத்தெளிவு சிரேஷ்டமாக்கி விடும். உதவி கிடைத்து விடுகிறது. லிப்ட் கிடைத்து விடுகிறது. எனவே உங்கள்

விசேஷத்தை ஒரு போதும் குறைய விடக்கூடாது. இந்த விசேஷத்தன்மையே உங்களுக்கு உதவி அளிப்பதாகும். நல்லது.

நாலா புறங்களிலுமுள்ள சதா அகண்ட மகாதானி குழந்தைகளுக்கு, நாலா புறங்களிலுமுள்ள பாபாவின் வலது கரமான, கட்டளைக்கு கீழ்ப்படிதலுள்ள புஜங்களுக்கு, நாலாபுறங்களிலுமுள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும் தைரியம் என்னும் சிறகை வழங்கக்கூடிய தைரியமுள்ள ஆத்மாக்களுக்கு நாலா புறங்களையும் சார்ந்த சதா பாபா சமமாய் ஒவ்வொரு கர்மத்திலும் பின்பற்றக்கூடிய பிரம்மாபாபா மற்றும் ஜெகதம்பாவின் மகாவாக்கியங்களை சதா நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வரக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் மிக மிக அன்பு நினையுங்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் நமஸ்காரம்!

**நள்ளிரவு 12-மணிக்குப் பிறகு அன்பு பாப்தாதா 2004-புத்தாண்டு நல்வாழ்த்துக்களை அனைத்து குழந்தைகளுக்கும் அளித்தார்!**

இச்சமயம் சங்கமயுகம். பழைய ஆண்டு புத்தாண்டு, இரண்டிற்கும் இடையேயான சங்கமயுகம். இந்த புதிய ஆண்டு மற்றும் பழைய ஆண்டின் சங்கம் சமயத்தில் பாப்தாதா அனைத்து உலகின் மிகப்பெரிய, அதி அற்புதமான அருமையான குழந்தைகளுக்கு மிக மிக உளப் பூர்வமான ஆசீர்வாதத்துடன் கூடிய அன்பு நினைவுகள், வாழ்த்துக்களை தட்டு நிறைய நிரப்பி வழங்குகிறார். முழு ஆண்டும் குஷியாய் இருக்க வேண்டும். தனது குஷி நிறைந்த பாக்கியத்தை சதா நினைவிற் கொண்டு மாஸ்டர் பாக்கிய விதாதா ஆக வேண்டும். தற்போது சங்கமயுகத்தின் அன்பு நினைவுகள்!!!

இரட்டை வெளிநாட்டினருக்காகவும். பாரதத்தின் குழந்தைகளுக்காவும் டபுள் குட்நைட் மற்றும் குட்மார்னிங் இரண்டையும் வழங்குகின்றார். தற்போது எப்படி குஷி அடைந்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அம்மாதிரி ஏதேனும் விஷயம் வந்தால் இன்றைய நன்னாளை நினைவு செய்து குஷியில் ஆடுங்கள். குஷி எனும் ஊஞ்சலில் சதா ஆடிக் கொண்டிருங்கள். ஒருபோதும் துக்கத்தின் அலையே வரக்கூடாது. துக்கத்தைப் பார்க்கக்கூடிய ஆத்மாக்கள் உலகில் அனேகர் உள்ளனர். நீங்கள் சுகத்தைப் பார்க்கக் கூடிய, சுகத்தை வழங்கக்கூடிய குழந்தைகள் சுக சொரூபமானவர்கள். சில சமயம் சுக உஞ்சலிலும், சில

சமயம் அன்பு எனும் ஊஞ்சலிலும், சில சமயம் சாந்தியின் ஊஞ்சலிலும் ஆடுங்கள் ஆடிக் கொண்டே இருங்கள். கீழே மண்ணில் காலை வைக்கக் கூடாது. ஊஞ்சலிலேயே ஆடுங்கள். குஷியாய் இருங்கள், அனைவரையும் குஷியில் ஆழ்த்துங்கள். பிறருக்கு குஷியை விநியோகியுங்கள்! நல்லது,

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂